வெளியீடு 06-03-2000 Issued 06-03-2000

403
2000

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

C

திங்கட்கிழமை, மே 3, 1999 - தொகுதி 77 - எண் 2

Monday, 3rd May, 1999—Volume 77 - No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
Legislative Assembly Secretariat, Fort St. George,
Chennai - 600 009

D
V211,31'N99.
N99.77.2 1
221807

[Price Rs. 3.00

403
2000.

## 3-5-1999

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள்-விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 261--303 |
| 2. கவன ஈர்ப்பு— | |
| சேலம் மாவட்டம் எடப்பாடி தொகுதி மகுடஞ்சாவடியில் இரயில்வே மேம்பாலம் கட்டுதல் | 304--307 |
| 3. அறிவிப்பு— | |
| கவனஈர்ப்பு அறிவிப்பு கொடுத்த உறுப்பினர்கள் அவையில் இல்லாததால் ஒரு கவன ஈர்ப்பு எடுத்துக் கொள்ளப்படாதது | 307 |
| 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)— | |
| (அ) தமிழ்நாடு பிழைப்பூதியப் படித்தொகை வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 | 307--308 |
| (ஆ) தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 | 308--309 |
| 5. மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி | 309--365<br>366--405 |
| கோரிக்கை எண் 29-சமூக நலன் | |
| திரு. சி. ஞானசேகரன் | 313--320, 339<br>368 |
| திருமதி ஆர். சரஸ்வதி | 321--326 |
| திரு. ஜி.கே. மணி | 327--331 |


53-71-1

5. மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி


| | பக்கங்கள் |
|---|---|
| கோரிக்கை எண் 29-சமூக நலன்—தொடர்ச்சி. | |
| *திரு. த. நடராஜன் | 331--336 |
| திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் | 337--338<br>340--343 |
| திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில் | 343--349 |
| *திரு. சி. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி | 349--352 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 352--358 |
| டாக்டர் காஞ்சனா கமலநாதன் | 358--365 |
| திரு. சி. வேலாயுதன் | 366--367 |
| *திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் | 370--373<br>373--381 |
| மாண்புமிகு திருமதி எஸ்.பி சற்குணபாண்டியன் | 309, 313, 329-330, 334-335, 338-339,354-355, 363, 367, 368, 369, 371-373 381--403 |
| 6. விதி 110-ன்கீழ் அறிக்கை— | |
| 1989-90-க்குப்பின் மூடப்பட்ட நிறுவனங்களைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு உதவித் தொகை ரூ.250 அளிப்பது குறித்து முதலமைச்சரின் அறிக்கை | 365 |
| 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— | 405--406 |


221807

D 21.5.1 71.2

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**சித்திரை 20, பிரமாதி-திருவள்ளுவர் ஆண்டு 2030**
**1999 மே 3, திங்கட்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்*
*சேரா தியல்வது நாடு."*

பசியும், பிணியும், பகையுமற்ற நாடுதான் சிறந்த நாடு எனப் பாராட்டப்படும்.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: வினா எண் 581, திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**581—**

**தாமாகவே ஓய்வு பெறும் அரசு ஊழியர்களுக்கு ஓய்வூதியம்**

***18437—திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாமாகவே முன்வந்து அரசுப் பணியிலிருந்து ஓய்வுபெறும் அரசு ஊழியர்களுக்கு மற்ற அரசு ஊழியர்களைப் போலவே ஓய்வூதியம் வழங்கப்படுகிறதா?

[1999 மே 3

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

தாமாகவே முன்வந்து அரசுப் பணியிலிருந்து ஓய்வுபெறும் அரசுப் பணியாளர்களுக்கு மற்ற அரசுப் பணியாளர்களைப் போலவே அனைத்து ஓய்வூதியச் சலுகைகளும் வழங்கப்படுகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன், இருக்கையில் இல்லை. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாமாகவே முன்வந்து ஓய்வு பெறக்கூடியவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு வேலை கொடுப்பதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா? அதைப்போல இறந்தவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையிலே வேலை கொடுக்கிறபோது கல்வித் துறை போன்றவற்றிலே பல ஆண்டுகளாகின்றன. இறந்தவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு உடனடியாக வேலை கொடுப்பதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் எல்லாத் துறைகளிலும் இதனை ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வாரிசுதாரர்களுக்கு பணிகள் வழங்குவதில் சில நேரங்களில் தாமதம் ஏற்படுவதற்குக் காரணம் அந்த வாரிசுதாரர்களுடைய தகுதி, உண்மை நிலை ஆகியவற்றை அறிந்துகொள்ள வேண்டிய சூழல் இருக்கிறது. அவற்றையெல்லாம் பார்த்துத்தான் அந்தப் பணியை அவர்களுக்கு வழங்க முடிகிறது. அதைப்போலவே இந்தக் கேள்வியினுடைய அடிப்படையில் இன்னொரு வினாவை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியுள்ளார்கள். இவர்களுக்கு வழங்கப்படுகின்ற சலுகைகளுடன் அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு வேலையும் வழங்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். தாமாகவே முன்வந்து பல சலுகைகளைப் பெறுகின்றவர்கள், வாரிசுதாரர்களுக்கும் வேலை என்கின்ற சலுகையைப் பெறுவது நியாயமாக இருக்க முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஓய்வு பெறுவதற்கு பணியாற்ற வேண்டிய ஆண்டு 35 என்றிருந்தாலும்கூட, 25, 30 ஆண்டுகளில் இப்படி



1999 மே 3]

தாமாகவே முன்வந்து பணியிலிருந்து ஓய்வு பெறுகின்றவர்களுக்கு எல்லாச் சலுகைகளும் அளிக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இந்தச் சலுகைகளைக்கூட—இந்த ஆண்டு கணக்கைக் கொஞ்சம் தளர்த்தி, 15 அல்லது 20 ஆண்டுகளில் ஓய்வுபெற முன்வருபவர்களுக்குக்கூட, இந்தச் சலுகை வழங்கப்படும் என்று அறிவித்தால் மற்றவர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கக்கூடிய, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிற காரணத்தினால் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே இது ஒரு சிக்கலான பிரச்சினை. இப்படி அவையிலே ஒரு கேள்வி கேட்டு, அதற்குப் பதில் அளித்து உடனடியாக விளங்கிக்கொள்ள முடியாது. நான்கு பேர் உட்கார்ந்து பேசினால்தான் இதுபற்றிப் புரிந்துகொள்ள முடியும். அவர்கள் கேட்டார்கள். இப்போது இதற்கு என்ன தகுதி என்றால், 50 வயது நிறைவு செய்திருந்தாலும் அல்லது அந்த அரசுப் பணியாளர் 20 ஆண்டுகள் தகுதிவாய்ந்த பணிக் காலத்தை நிறைவு செய்திருந்தாலும் 3 மாத காலத்திற்குக் குறையாத முன்னறிவிப்பு—Notice—கொடுத்துவிட்டு தாமாகவே விருப்பப்படி ஓய்வு பெறலாம். அதற்குச் சில நிபந்தனைகள் இருக்கின்றன. அவர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் எண்ணம் அல்லது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையிலே இருத்தல் கூடாது. அவருக்கு எதிராக நீதிமன்ற வழக்கு எதுவும் நிலுவையிலோ அல்லது வழக்குப் போடும் எண்ணமோ இருத்தல் கூடாது. அவர்மீது விழிப்புப் பணி மற்றும் ஒழுக்கக் கண்காணிப்பு இயக்ககத்தினரின் விசாரணை எதுவும் நிலுவையிலோ அல்லது அத்தகைய நடவடிக்கை எடுக்கும் எண்ணமோ இருத்தல் கூடாது, அவர் அரசுக்குச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை எதுவும் இருத்தல் கூடாது. அவர் அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெறும்வரை அரசுப் பணியிலே தொடர்ந்து பணியாற்ற வேண்டும் எனும் ஒப்பந்தக் கட்டுப்பாடு எதுவும் அவருக்கு இருத்தல் கூடாது. இந்த வயதைத் தளர்த்துவதுபற்றிச் சொன்னார்கள். ஏற்கெனவே, இத்தகைய ஓய்வு பெறுகின்றவர்களுக்கு 33 ஆண்டுகளுக்குத் தகுதிவாய்ந்த பணிபுரிந்த அரசுப் பணியாளர்களாக இருந்தால்தான் அவர்களுக்கு முழு ஓய்வூதியம் கிடைக்கும் என்று இருந்தது. ஆனால் இந்த ஆட்சியிலே, 1996 ஆம் ஆண்டு அது திருத்தப்பட்டு 33 ஆண்டுகள் என்பது 30 ஆண்டுகள் என்று குறைக்கப்பட்டிருக்கிறது.

[1999 மே 3

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர் ஒருவர் பணியில் இருக்கும்போது இறந்துவிட்டால், அவருடைய வாரிசுதாரர், இன்னொரு துறைக்காக அவர் படித்திருந்தால், அவர்களுக்கு அந்தத் துறையிலே வேலை அளிப்பதிலே காலதாமதம் ஏற்படுகிறது, அனுமதிக்கப்படுவதில்லை. ஆகையால், கருணை அடிப்படையில், அவருடைய கல்வித் தகுதிக்கு ஏற்றவாறு அந்த வாரிசுதாரருக்கு வேறு பணிக்கு மாற்றி அளிக்க அரசு பரிசீலிக்குமா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அது விதிமுறைப்படி இயலாது. ஏதாவது சிறப்பு நேர்வுகளாக இருந்தால் அதைப்பற்றி அரசு அந்த நேரத்திலே பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வ. அன்பழகன்.

**திரு. வ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரும்பாலும் பணியில் இருந்து தாமாக முன்வந்து ஓய்வு பெறக்கூடியவர்கள், அப்போது கிடைக்கிற அந்தத் தொகையிலிருந்து ஏதாவது தொழில் செய்ய வேண்டுமென்கிற எண்ணத்தில்தான் பெரும்பாலும் voluntary retirement கொடுக்கிறார்கள். எனவே, அப்படித் தாமாகவே முன்வந்து ஓய்வு பெறுகிறவர்கள் தொழில் தொடங்க முன்வந்தால் அவர்களுக்குக் கடன் வசதி மற்றும் பிற வசதிகள் செய்வதிலே நம்முடைய அரசு முன்னுரிமை அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, தொழில் தொடங்குபவர்கள் அரசு ஊழியர்களாக இருந்து தாமாகவே முன்வந்து ஓய்வு பெற வேண்டும் என்று இல்லை. தொழில் தொடங்குவோர் எப்போது வேண்டுமானாலும் தொடங்கலாம். அரசே அவர்களுக்கு வங்கியில் கடன் பெற்றுத்தரக் கூடுமானால், அவர்கள் தகுதி உடையவர்களாக இருந்தால் அதற்கான உதவியை முடிந்தவரையிலே செய்யும்.



1999 மே 3]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓய்வு பெற்றதற்குப் பிறகு மாதம் 20 ரூபாய் என்று அரசாங்கம் பிடித்தம் செய்து கடைசி செலவுக்காக 25,000 ரூபாய் கொடுக்கக்கூடிய அந்தத் திட்டத்தின்கீழ் பலருக்கு பணம் கிடைப்பதில் காலதாமதம் ஆகின்றது என்று சொல்கிறார்கள். அது உரிய நேரத்திலே கிடைக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட காலதாமதம் இருந்தால் அது தவிர்க்கப்படுவதற்கு எல்லாவிதமான ஏற்பாடுகளையும் இந்த அரசு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சொக்கர்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாதச் சம்பளத்தை மட்டுமே தங்களுடைய வாழ்க்கையின் ஆதாரமாகக் கொண்டு அவர்கள் ஓய்வு பெறுகிறபோது எஞ்சியுள்ள வாழ்க்கையைச் சிறப்பாக அச்சமின்றி நடத்துவதற்காக இந்த ஓய்வு ஊதியத் திட்டம் என்பது ஒரு சிறந்த வரப்பிரசாதமாக இருக்கிறது. பல தனியார் தொழில் நிறுவனங்களில் பணிபுரியக்கூடிய தொழிலாளர்கள் மற்றும் சிப்பந்திகள் போன்றவர்களுக்கு இந்தத் திட்டத்தை இதுபோன்று அமல்படுத்த முடியும். மாதச் சம்பளத்தில் அவர்கள் சேர்ந்ததிலிருந்து 1 சதவீதம் மட்டும் பிடித்தம் செய்துவிட்டால் அவர்களும் ஓய்வு பெறுகிறபோது அரசாங்கச் சிப்பந்திகள் போலவே இந்தப் பலனை அவர்கள் அனுபவிக்க முடியும் என்ற காரணத்தால் இதை ஒரு சமூக நலத் திட்டமாகக் கருதி இந்த அரசு நடைமுறைப்படுத்த முன்வருமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, தனியார் நிறுவனங்களால் செய்யப்பட வேண்டிய ஒரு நல்ல கருத்தினை மாண்புமிகு சொக்கர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். தனியார் நிறுவனத்தினர் பலர் சொக்கர் அவர்களுக்கு மிகவும் நெருக்கமானவர்கள். இந்த அரிய யோசனையை அவர்களுக்குச் சொல்லி இதை அமல்படுத்தினால் அரசு மகிழ்ச்சியடையும்.

[1999 மே 3

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தானாகவே முன்வந்து அரசு ஊழியர்கள் பணியிலிருந்து ஓய்வு பெறுகின்ற நிலையிலே ஓய்வு ஊதியம் வழங்கப்படுவதற்கு தற்போதுள்ள வயது வரம்பை இன்னும் குறைப்பதற்கு அரசு முன்வருமா? அதே நேரத்திலே நிரந்தரப் பணி மற்றும் எந்த வகைப் பணியாக இருந்தாலும், consolidated சம்பளம் என்று சொல்லுகிறார்களே அந்த வகையிலேயிருந்து ஓய்வு பெறுகிறவர்களும் தொழிலைத் தொடங்குவதற்கு, அவர்களுக்கு எல்லா உதவிகளையும் செய்வதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களில் 20 ஆண்டுகள் முதல் 25 ஆண்டுகள் வரை தகுதிவாயந்த பணிபுரிந்துள்ள ஒருவர், தான் விருப்ப ஓய்வில் சென்றால் தகுதியுடைய பணிக்காலம் 30 ஆண்டுகளுக்கு மிகாத வகையில் அவர்களுக்கு 5 ஆண்டுகள் கூடுதல் பணிச் சலுகை வழங்கப்படும். உதாரணமாக அவர்கள் 26 ஆண்டுகள் பணி புரிந்திருந்தால், 4 ஆண்டுகள் பணிச் சலுகை அவர்களுக்கு வழங்கப்படும். இதுதான் இப்போதுள்ள நியதி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.ஆர்.ஜி. தனபாலன்.

**திரு. கே.ஆர்.ஜி. தனபாலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்கள் ஓய்வு பெற்றால் மாதம் 20 ரூபாய் பிடித்துக் கொண்டு அவர்கள் இறந்துவிட்டால் 25,000 ரூபாய் கொடுக்கப்படுகிறது. அதுபோல உள்ளாட்சித் துறையிலே பணியாற்றுகின்ற அனைவரும் அரசு ஊழியர்கள்தான் என்று அறிவித்திருக்கிற காரணத்தால், உள்ளாட்சித் துறையிலே பணியாற்றி ஓய்வு பெற்றவர்களுக்கு இந்தச் சலுகையை வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இது குறித்த விவரம் என்னிடத்திலே இல்லை. இருந்தாலும் அதைப்பற்றிப் பிறகுதான் பரிசீலிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 582, திரு. க. மணிவர்மா, மாண்புமிகு கல்வி அமைச்சர்.



1999 மே 3]

**582—**

### ஆரம்ப உருதுப் பள்ளி

***14050—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டு தொகுதி, திருவடத்தனூர் ஆரம்ப உருதுப் பள்ளியில் மாணவர்கள் வருகை குறைவாகவுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) உருது மொழிப் பள்ளியானதால் உருது மொழி வாயிலாக மாணவர்கள் கற்பதை ஆர்வத்தோடு விரும்புவதில்லை. எனினும், தமிழ் மொழி மூலம் பாடம் கற்க அந்த மாணவர்கள் விரும்புகிறார்கள். எனவேதான் மாணவர் வருகை மிகக் குறைவாக உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா, இருக்கையில் இல்லை.

வினா எண் 583, திரு. கு. மனோகரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

முற்பகல் 9-40

**583—**

### சூரியகாந்தி எண்ணெய் உற்பத்தி

***14027—திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு வேளாண்மைத் தொழில் கழகம் மூலம் நடத்தப்படும் போச்சம்பள்ளி சூரியகாந்தி எண்ணெய் தயாரிக்கும்

[1999 மே 3

தொழிற்சாலையின் வளர்ச்சிக்காகப் புதிய திட்டங்கள் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

(இ) இவ்வாலையின் 1995-96 ஆம் ஆண்டு நிகர இலாபம் என்ன?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ரூ. 25 இலட்சம் செலவில் ஒரு புதிய எண்ணெய் பிழியும் இயந்திரம் வாங்க கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(இ) 1995-96-ல் இவ்வாலை இலாபம் ஏதும் ஈட்டவில்லை.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நட்டத்தில் இயங்கி வந்த தொழில்கள் எல்லாம் இலாபத்திலே இயங்குவதும் தமிழகம் தொழில் துறையில் முதலிடம் வகிப்பதுமான தலைவர் கலைஞர் ஆட்சியிலே 'சனோலா' எனப்படும் சூரியகாந்தி எண்ணெயை தருமபுரி மாவட்டம், போச்சம்பள்ளியிலே இருக்கும் தொழிற்சாலை மூலமாகத் தயாரிக்கும் அந்த ஆலை இப்போது நட்டத்திலே இயங்கிவரும் நிலையில் அதை விரிவுபடுத்த ரூ. 25 இலட்சம் அனுமதித்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், விவசாயத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கும் இந்த நேரத்திலே, அந்தப் பணத்தை உடனடியாகச் செலவிட்டு ஆலையை விரிவுபடுத்த இவ்வாண்டு அரசு முயற்சி மேற்கொள்ளுமா என்பதுடன், 'சனோலா' எண்ணெய் விற்பனையை அதிகப்படுத்த, விற்பனைக் கடையைத் தமிழ்நாட்டில் ஏற்படுத்த அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆம் ஆண்டில் இந்த 25 இலட்சம் ரூபாயை அந்த ஆலைக்கு வழங்கி, கூடுதலாக எண்ணெய் தயாரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட இருக்கிறது. மேலும், சூரியகாந்தி எண்ணெய்யை வெளிநாடுகளிலிருந்து தனியார்களால் நிறைய இறக்குமதி செய்யப்படுகிறது. நாம் உற்பத்தி செய்வதைவிட, அவர்கள் இறக்குமதி செய்து, சுத்திகரித்து அவர்கள் தருகின்ற விலை கொஞ்சம்



1999 மே 3]

குறைவாக இருக்கிறது. நம்முடைய விலை கொஞ்சம் கூடுதலாக இருக்கக்கூடிய காரணத்தினாலே நட்டம் ஏற்படக்கூடிய அந்த வாய்ப்பு தொடர்ந்து இருந்து வருகிறது. இருந்தாலும், தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழகம், 'தாய்' நிறுவனத்தின் மூலம் தொடர்ந்து இப்போது ஆலையை நடத்தி வருகிறது. இன்னொன்று, சூரியகாந்தி விதை, இந்த எண்ணெய்க்குத் தேவையான விதை நம்முடைய தமிழகத்திலே போதுமான அளவுக்குக் கிடைக்கவில்லை. கர்நாடக மாநிலம், மகாராஷ்டிர மாநிலம் போன்ற வேறு மாநிலங்களுக்குச் சென்று நாம் கொள்முதல் செய்ய வேண்டிய நிலை இருக்கிறது. அப்படி கொள்முதல் செய்கின்றபோது, விலையும் கொஞ்சம் கூடுதலாகக் கொடுத்து நாம் வாங்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. இதனாலேதான் இந்த நட்டம் தொடர்ந்து ஏற்பட்டு வருகிறது என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். எனினும், இந்த ஆலையை நவீனப்படுத்தி - தொடர்ந்து நடத்த—பணியாளர்கள்கூட அதிக அளவிலே இருந்தார்கள். அவர்களும் குறைக்கப்பட்டு இதைத் தொடர்ந்து இலாபகரமாக நடத்த — முடியும் என்ற அந்த நம்பிக்கையோடு நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குழந்தை தமிழரசன்.

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருத்தாசலத்திலே மூடிக்கிடந்த சூரியகாந்தி எண்ணெய் பிழியும் ஆலையை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவுரைப்படி, நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டிலே ரூபாய் 5 இலட்சம் நிதியுதவி கொடுத்து, அதைத் திறந்து வைத்தார்கள். திறந்து வைத்ததற்குப் பின்னால், அது மிக இலாபத்திலே நல்ல முறையிலே இயங்கி வந்து கொண்டிருக்கிறது. இந்த வருடம் மணிலாப் பயிறு போன்றவைகள் வாங்குவதற்கு அவர்கள் நிதி ஒதுக்கம் இன்னும் வரவில்லையென்று என்னிடம் தெரிவித்துள்ளார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நல்ல இலாபத்திலே இயங்கி வருகின்ற அந்த ஆலைக்கு நிதி ஒதுக்கம் இந்த ஆண்டு தருவதற்கு முன்வர வேண்டும். அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதிலே பணியாற்றக்கூடிய தொழிலாளர்களுக்கு இப்போதுள்ள நிதிக் குழுவின் பரிந்துரைப்படி அவர்களுக்கு இன்னும் சம்பளம் வழங்கவில்லையென்று சொன்னார்கள் அதையும் வழங்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[1999 மே 3

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருத்தாசலத்திலே கட்டப்பட்ட அந்த எண்ணெய் பிழியும் ஆலை, கடந்த ஆட்சிக் காலத்திலே கட்டப்பட்டு, அரைவைக்குக் கொண்டு வராத நிலை ஏற்பட்டு, அது ஒரு பெரிய நட்டத்திலே இருக்க வேண்டிய நிலை இருந்தது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு அவரோடு கலந்துபேசி, அந்த ஆலையை எப்படியும் திறக்க வேண்டும்—ஏன் என்றால் 4 கோடி ரூபாய்க்கு மேல் செலவழித்துக் கட்டப்பட்டது அந்த ஆலை—நம்முடைய அரசும் மானியம் வழங்கி அந்த எண்ணெய் பிழியும் ஆலையை நடத்தலாம், இலாபகரமாக இருக்கும் என்ற கருத்து எடுத்துச்சொல்லப்பட்டு, முதலமைச்சரும் ஏற்றுக்கொண்டு அந்த ஆலை இப்போது திறக்கப்பட்டு இயங்கிக் கொண்டிருக்கிறது. தற்போது 2 ஆண்டுகாலமாக இலாபத்தில் நடந்து கொண்டிருக்கிறது. தொடர்ந்து அந்த ஆலை நடத்தப்படும் அரசாங்கத்தினுடைய நிதிநிலைக்கு ஏற்ப நிதி உதவி வழங்குவதற்கும் பரிசீலிக்கப்படும்.

முற்பகல 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 584, திரு. ச.க. வெங்கடேசன் மற்றும் திரு. ந. கருப்பண்ண உடையார். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**584—**

**சொட்டு நீர்ப் பாசன முகாம்கள்**

***18668—திரு. ச.க. வெங்கடேசன்:**

**திரு. ந. கருப்பண்ண உடையார்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சொட்டுநீர்ப் பாசனத் திட்டத்தினை நாடு முழுவதும் விவசாயிகள் நன்கு அறிந்துகொள்ளும் வகையில் சொட்டுநீர்ப் பாசனத் தொழில் நுட்ப அலுவலர்கள் மூலம் அவ்வப்போது முகாம்கள் நடத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.



1999 மே 3]

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொட்டுநீர்ப் பாசனத் திட்டத்தில் ஆண்டுக்கு எவ்வளவு பேருக்கு உதவி வழங்கப்படுகிறது? எவ்வளவு மானியம் வழங்கப்படுகிறது? மகளிர் போன்றவர்களுக்கு அது கொடுக்கப்படுமா? சிறு விவசாயிகளுக்கு எவ்வளவு மானியம் கொடுக்கப்படுகிறது என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது காஞ்சிபுரம் மாவட்டத்தையொட்டிய கேள்வியாக இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கக் கூடிய காரணத்தினாலே சில விவரங்களைத் தர விரும்புகிறேன். 1985-86 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்தச் சொட்டுநீர்ப் பாசனத் திட்டம்—Drip Irrigation—இவையெல்லாம் அப்போதே தொடங்கப்பட்டாலும் அதனுடைய பயனை நம்முடைய தமிழகத்தில் இருக்கக்கூடிய விவசாயிகள் அறிந்துகொள்வதற்கு தாமதமாக முன்வந்தார்கள். இன்னொன்று, அரசும் அதைப்பற்றி முனைப்பாக விவசாயிகள் மத்தியிலே எடுத்துச் சொல்லாத நிலை இருந்தது. பிறகு, 1991-92 ஆம் ஆண்டு முதல் மத்திய அரசு மற்றும் மாநில அரசு இணைந்து இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தத் தொடங்கின. இவ்வளவு என்ற குறியீடு இல்லை; எவ்வளவு வேண்டுமானாலும் இதற்கு மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கமும் நிதி உதவி அளிக்கத் தயாராக இருக்கின்றன.

1996-97 ஆம் ஆண்டு 5933 ஹெக்டேர் பரப்பில் 7 கோடியே 58 இலட்சத்து 33 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கி சொட்டுநீர்ப் பாசனம் செயல்படுத்தப்பட்டது. 1997-98 ஆம் ஆண்டில் 10 ஆயிரத்து 490 ஹெக்டேரில் 12 கோடியே 48 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கி இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

1998-99 ஆம் ஆண்டு 9 ஆயிரத்து 111 ஹெக்டேரில் 11 கோடியே 77 இலட்சத்து 87 ஆயிரம் ரூபாய் மானியமாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. 1999-2000 ஆம் ஆண்டில் சொட்டுநீர்ப் பாசனத் திட்டம் 8 ஆயிரம் ஹெக்டேர் நிலப் பரப்பில் 18 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்த மத்திய அரசாங்கத்தினுடைய ஒப்புதலை எதிர்நோக்கி அரசு இருக்கிறது. சொட்டுநீர்ப் பாசனம் அமைக்க மானியமாக சிறு, மிகச் சிறு, இந்து ஆதிதிராவிடர், பழங்குடியினர்

மற்றும் பெண் விவசாயிகளுக்கு மொத்தச் செலவில் ஒரு ஹெக்டேருக்கு 90 சதவீதமாகவும், அதிகபட்சமாக ஒரு ஹெக்டேருக்கு ரூ.25 ஆயிரமாகவும் தற்போது வழங்கப்படுகிறது. இதர விவசாயிகளுக்கு ஒரு ஹெக்டேருக்கு சொட்டுநீர்ப் பாசனம் அமைக்க மொத்தச் செலவில் 70 சதவீதமாகவும், அதிகபட்சமாக ரூ.25 ஆயிரம் வரையும் வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொட்டுநீர்ப் பாசனத்திற்கு மத்திய அரசு மானியம் எவ்வளவு? மாநில அரசு மானியம் எவ்வளவு? எங்கே இந்த மானியங்களுக்கெல்லாம் விண்ணப்பிக்க வேண்டும் என்ற கேள்விக்கு நம்முடைய அமைச்சர் விளக்கம் அளிப்பதோடு, (குறுக்கீடு) இதில் விற்பனை வரி விலக்கு அளித்து இருப்பதாகச் சொல்கிறார்கள்; அது முறையாக 11-லிருந்து 4 சதவீதமாகக் குறைத்து இருப்பதாகவும், அதே நேரத்தில் அது அந்த சொட்டு நீர்ப் பாசன விவசாயிகளுக்கு நேரடியாகப் போய்ச்சேரவில்லை என்ற ஒரு கருத்தையும் நம்முடைய சொக்கர் அவர்கள் சொல்கிறார்கள். தயவுசெய்து அதற்கும் அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவருக்குத்தான் நான் துணை வினா கேட்க அனுமதியளித்தேன்; திரு. சொக்கருக்கு அல்ல.

முற்பகல் 9-50

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொட்டுநீர்ப் பாசனம், தெளிப்புநீர்ப் பாசனம் ஆகிய இவற்றிற்கான இந்தப் பம்புகளை வாங்குவதற்கான—அந்தப் பம்புகளுக்கு 12 சதவீதம் விற்பனை வரி இருந்தது. விவசாயிகள் சார்பிலே நம்முடைய முதலமைச்சரிடத்திலே அதை எடுத்து வைத்து—விற்பனை வரியை 4 சதவீதமாகக் குறைத்து இருக்கிறோம். விவசாயிகள் தரப்பிலே சொல்வது, குறிப்பிட்ட அந்தப் பம்புகளைக் கடைகளிலே வாங்குகிறபோது, அந்தக் கடைக்காரர்கள் இதுபோன்ற சில தவறுகளைச் செய்வதாகச் சொல்கிறார்கள். அந்தப் பம்புகளை வாங்குகிறபோது, அதிகமாக, கூடுதலாக அந்த வரியைப் போடக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. குறைக்கப்பட்ட அந்த வரிச் சலுகை நேரடியாக





விவசாயிகளுக்கு வந்து சேரவில்லை என்கிறார்கள். அதைப்போன்று "ஏதாவது ஆதாரமிருந்தால், அதுபற்றி நீங்கள் கொடுத்தால் அதற்குரிய நடவடிக்கை எடுக்கிறோம், விசாரிக்கிறோம்" என்று விவசாயிகள் தரப்பிலிருந்து இதுபற்றி வந்து சொன்னவர்களிடத்திலேகூட நாங்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால், இந்தப் பம்புகளை விற்பனை செய்யக்கூடிய கடைக்காரர்களை அழைத்து, 'இப்படி ஒரு நிலை இருந்தால் அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுக்கும்; குறைக்கப்பட்ட இந்த வரியைக் குறைத்துத்தான் நீங்கள் விவசாயிகளுக்கு அந்தப் பம்புகளை வழங்க வேண்டும்' என்றும் அரசின் சார்பிலே கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இதில் 75 சதவீதம் மைய அரசும், 25 சதவீதம் மாநில அரசும் மானியமாக வழங்குகின்றன. எங்கே வழங்குகிறார்கள் என்று கேட்டிருக்கிறார்கள். வேளாண்மைப் பொறியியல் துறை ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கின்றது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மத்திய அரசாங்கம் ஒதுக்குகின்ற அந்த நிதியோடு, மாநில அரசாங்கத்தின் 25 சதவீத மானிய நிதியையும் சேர்த்து, அந்த அந்தந்த மாவட்டங்களில் தேவைக்கேற்ப நிதி ஒதுக்கப்பட்டு, அந்த மாவட்டத்திலே உள்ள வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் இந்தத் திட்டத்தினைச் செயல்படுத்துகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. சண்முகம்.

**திரு. ம. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்திலே கிட்டத்தட்ட ஒரு கோடி தென்னை மரங்கள் பயிரிடப்படுகின்றன. நிலத்தடி நீர் இல்லாத காரணத்தால் சொட்டுநீர்ப் பாசனத்தை நம்பித்தான் விவசாயிகள் இருக்கிறார்கள். அந்த வகையிலே சொட்டுநீர்ப் பாசனம் அமைக்கின்ற அத்தனை விவசாயிகளுக்கும் மானியம் கிடைக்கின்ற அளவுக்குக் கோவை மாவட்டத்திற்கு அதிக நிதியை ஒதுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிந்துகொள்வதோடு, 4 சதவீத வரி விதிப்பின் மூலம் அரசிற்கு மிகச் சொற்பமான அளவிற்கு, 1 கோடி ரூபாய் அளவிற்கு மட்டும்தான் வருமானம் கிடைக்கிறது. ஆகவே இந்த 4 சதவீத வரியை இரத்து செய்வதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலும் வரிக் குறைப்பைப் பற்றி முதலமைச்சரிடம்தான் கேட்க வேண்டும். இப்போது விவசாயிகளினுடைய வேண்டுகோளை ஏற்றுத்தான் இந்த அரசு, சென்ற ஆண்டு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 12 சதவீதமாக

[1999 மே 3

இருந்த வரியை 4 சதவீதமாகக் குறைத்திருக்கிறார்கள். இதனை கோவை மாவட்டத்திலே இருக்கக்கூடிய தென்னை மரம் பயிரிடக்கூடியவர்கள் அதிகமான அளவிலே பயன்படுத்துகிறார்கள் என்பது உண்மை. மாவட்டத்தின் தேவையை அடிப்படையாக வைத்துத்தான் நாம் நிதியொதுக்குகிறோம். இன்னொரு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட இந்த நிதி செலவழிக்கப்படாமல், பயன்படுத்திக்கொள்ள விவசாயிகள் முன்வராமல் இருந்தாலும்கூட, கூடுதலாகக் கோவை மாவட்டத்திற்குத் தேவைப்படுகிறது என்று சொன்னால் அந்த மாவட்டத்திற்கு, செலவழிக்கப்படாத நிதியைக் கொடுங்கள் என்று துறைக்கு அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. கோவை மாவட்டத்தின் விவசாயிகள்தான் இந்த சொட்டுநீர்ப் பாசனத்தை அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள் என்பது நாடறிந்த ஒன்று.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சொட்டுநீர்ப் பாசனத்திற்கு உபயோகப்படுத்தப்படுகின்ற பிளாஸ்டிக் பைப்புகள் தரமற்ற பைப்புகளாக இருக்கின்றன என்று நிறைய புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. இதற்காக மானியம் கொடுத்தும் பிரயோசனம் இல்லை, தனியாரிடத்திலிருந்து வாங்குவதைப் போல, இந்தப் பைப்புகள் தரமானவை அல்ல என்ற கருத்து விவசாயிகள் மத்தியிலே இருக்கிறது. என்னுடைய பகுதியிலேயிருந்து Sample எல்லாம்கூடக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, இந்தத் தரமற்ற பைப்புகளை சப்ளை செய்கின்ற அந்தக் கம்பெனிகளை மாற்றி, நீக்கி, தரமான பைப்புகளை சப்ளை செய்து கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா? அதைப்போல, என்னுடைய நாமக்கல் மாவட்டத்திலே நிலத்தடி நீர் கீழே சென்றுவிட்ட காரணத்தால், தேவைகள் அதிகமாக இருக்கின்றன. ஆகவே, அதிகமாக, அந்த மானியத்தைக் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பைப்புகள் I.S.I. முத்திரை பெற்றபெற்ற கம்பெனிகளிடமிருந்துதான் வாங்கப்படுகின்றன. இன்னும்கூட, எந்தெந்தக் கம்பெனி தரம் உள்ளவை என்று பொறியியல் துறை பரிந்துரை செய்து, அரசின் சார்பிலே, இந்தக் கம்பெனி பைப்புகள்தான் தரம் உள்ளவை; அவற்றைத்தான் வாங்க வேண்டுமென்றுகூட, நாம் உறுதியாகத் தெரிவித்திருக்கிறோம். அதிலே தரமில்லை என்பதாக



1999 மே 3]

எந்தவிதமான புகாரும், வரவில்லை. மாவட்டத்திற்குக் கூடுதலாக நிதி வேண்டுமென்று கோரிக்கை இங்கே வைக்கப்பட்டது. ஆனால், சேலம் மாவட்டமோ, நாமக்கல் மாவட்டமோ, அந்த மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியைக்கூட இன்னும் முழுமையாகப் பயன்படுத்தவில்லை என்ற தகவல்தான் எனக்கு வந்திருக்கிறது.

முற்பகல் 9-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சொட்டுநீர்ப் பாசனத்தை நான்கூடப் போட்டிருக்கிறேன். சொட்டுநீர்ப் பாசனத்திலே, அதிலே சிறிய, பெரிய என்ற நிலைகளையெல்லாம் மாற்றி, அதில் இதர சாதி, அரிசனங்கள் என்ற அந்த நிலைகளையெல்லாம் மாற்றி, எங்கெல்லாம் கிணற்றிலே தண்ணீர்ப் பற்றாக்குறை இருக்கிறதோ, எந்த விவசாயியாக இருந்தாலும் சரி, எந்தச் சமுதாயமாக இருந்தாலும் சரி, அத்தனை பேர்களுக்கும்—இப்பொழுது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையிலே 75 சதவிகிதம்தான் மற்றவர்களுக்கு என்று சொன்னார்கள். அரிசனங்களுக்கு, பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சார்ந்தவர்களுக்கு எல்லாம் 90 சதவிகிதம் என்று சொன்னார்கள்—அதை மாற்றி தண்ணீர்ப் பற்றாக்குறை இருப்பதால்தான் சொட்டுநீர்ப் பாசனமே போடுகிறோம். ஆகையால், எல்லோருக்கும் 90 சதவிகிதம் மானியத்திலே இந்தச் சொட்டுநீர்ப் பாசனத்தை அமைத்துக் கொடுக்க வழிவகை செய்வதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் வழிகாட்டுதலின் பேரில்தான் இந்தத் திட்டத்தை நாம் செயல்படுத்துகிறோம். வேண்டுமானால் மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்வியைப் பயன்படுத்தி, அனைத்து விவசாயிகளுக்கும் ஒரே மாதிரியாக அந்த மானியம் வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை எடுத்துவைக்க இந்த அரசைப் பொறுத்தவரைக்கும் தயக்கம் ஒன்றும் இல்லை. ஆனால், இதர விவசாயிகளுக்கு ஒரு ஹெக்டேருக்கு சொட்டுநீர்ப் பாசனம் அமைக்க மொத்தச் செலவில் 70 சதவிகிதம் அவர்களுக்கும் தருகிறோம். அதையே நம்முடைய விவசாயிகள் முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டால், கிணற்றிலே இருக்கக்கூடிய அந்தக் குறைந்த அளவு தண்ணீரைக்

[1999 மே 3

கொண்டு, அவர்கள் அதிக அளவில் பாசனத்தைப் பயன்படுத்தி, உற்பத்தியைப் பெருக்குவதற்கு வழி ஏற்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சொக்கருக்கு இரண்டாவது வினா, கேளுங்கள். (குறுக்கீடு) ஏற்கெனவே எதிர்க்கட்சித் தலைவர் மூலமாக ஒன்று கேட்டுவிட்டீர்களே?

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் மானியத்தைப் பற்றி விளக்கம் அளிக்கிறபோது, மத்திய அரசு மூலமாக 75 சதவிகிதம் என்றும் மாநில அரசு மூலம் 25 சதவிகிதம் என்றும் சொன்னார்கள். அப்படியானால் 100-க்கு 100 மானியமாக வருகிறதா என்பதை விளக்குவதோடு, விற்பனை வரியைப் பொறுத்தவரையில் இந்தச் சொட்டுநீர்ப் பாசனத்தினுடைய முக்கியத்துவத்தைப் புரிந்துகொண்டு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் 11 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதம் ஆகக் குறைத்திருக்கிறார்கள். ஆனால், சொட்டுநீர்ப் பாசன இயந்திரம் என்பது ஒரு குறிப்பிட்ட இயந்திரம் அல்ல. PVC Pipe, Flexibile hose, Pump போன்ற பல உதிரி பாகங்களை இணைத்து அது சொட்டுநீர்ப் பாசன இயந்திரமாகப் பயன்படுத்தப்படுகிறது. ஆகவே, விற்பனை வரித் துறையில் என்ன குழப்பம் இருக்கிறது என்றால் PVC Pipe-க்கு 11 சதவிகிதம் இருக்கிறது. Pump-க்கு வேறு வரி விகிதம் இருக்கிறது. ஆனால், சொட்டுநீர்ப் பாசனமாக ஒன்றாகச் சேரும்பொழுது 4 சதவிகிதம் என்று எங்களால் வரி விதிப்பு செய்ய முடியுமா என்ற நியாயமான கேள்வியை அதிகாரிகள் எழுப்புகிறார்கள். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதிகாரிகளோடு கலந்து பேசி, உரிய விளக்கத்தை Commissioner of Commercial Taxes மூலம் விளக்கம் அளிக்கச் செய்தால்தான், 4 சதவிகிதம் வரிச் சலுகை உரியவர்களைச் சென்றடையும் என்பதற்கு அமைச்சர் அவர்கள் என்ன விளக்கம் அளிக்க இருக்கிறார் என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வரியைப் பொறுத்தவரைக்கும் தனிக் கேள்வியை முதல்வர் அவர்களிடத்திலே கேட்க வேண்டும். நான் பதில் அளிக்க இயலாது. அதாவது 75 சதவிகிதம் மத்திய அரசும், 25 சதவிகிதம் மாநில அரசும் தருகின்றன என்ற காரணத்தினாலே, 100-க்கு 100 மானியம் கிடைக்கிறதா என்று கேட்டார். அது அல்ல. மொத்த செலவில் இந்தச் சதவிகிதம், அதற்கு மேல் ஒரு ஹெக்டேருக்கு மத்திய அரசில் ஒரு வழிகாட்டுதலைச் செய்திருக்கிறார்கள். ஒரு ஹெக்டேருக்கு 90 சதவிகிதம் ஆக அதிகபட்சமாக ரூ. 25 ஆயிரம். ரூ. 25 ஆயிரம்தான் அதிகமாக ஒரு ஹெக்டேருக்கு. அதுபோன்று, 2 ஹெக்டேர் போடுகிறார்கள் என்று சொன்னால், அதிகம் வருவதை விவசாயிகள் எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த Subsidy அந்த அளவுக்குக் கிடைக்கும். அதுதான் நான் தந்த பதில்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 585, திரு. டி. அமரமூர்த்தி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**585—**

### திருமானூர் கொள்ளிடக் கரையைச் சீர்செய்தல்

***17271—திரு. டி. அமரமூர்த்தி:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரியலூர் தொகுதி, திருமானூர் கொள்ளிடக் கரையைச் சீர்செய்து வெள்ளப் பெருக்கினால் ஏற்படும் அபாயத்தைத் தடுக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நடவடிக்கை மேற்கொள்ளும் கருத்துரு எதுவும் தற்பொழுது அரசிடம் இல்லை.

**திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட 20 ஆண்டுகாலமாக அந்தக் கரைகள் பராமரிக்கப்படாமல், ஆடு, மாடுகள் வெட்டுவதற்கும், அங்கே கொட்டகை போட்டுக் குடும்பங்களை நடத்துவதற்கும் பயன்படுத்துகிறார்கள். காவிரியில் வெள்ளம் எடுத்தாலும் அந்த கொள்ளிடத்திற்குத்தான் வர வேண்டும்; காட்டாற்றிலே வெள்ளம் எடுத்தாலும் அந்த கொள்ளிடத்திற்குத்தான் வர வேண்டும். கடந்த ஆண்டுகூட வெள்ளத்தில் உடைப்பு எடுத்து விடுமோ என்ற பயம் இருந்தது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து உடனடியாக அந்தக் கரையைச் செப்பனிடுவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

[1999 மே 3

முற்பகல் 10-00

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக வெள்ளக் காலங்களில் உடைப்பு எடுக்கின்ற பகுதிகளைப் பராமரிப்புச் செலவின்கீழ் பொதுப்பணித் துறையினர் செப்பனிட்டு வருகிறார்கள். ஆனாலும், போதிய தொகை அரசாங்கத்திடம் இல்லாத காரணத்தால், பராமரிப்புக்கென்று அதிகத் தொகை ஒதுக்கப்படாத காரணத்தால், இப்படிப்பட்ட வேலைவாய்ப்பு உறுதி அளிப்புத் திட்டம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், அதன்கீழ் ஒதுக்கப்படுகின்ற பணம், பாராளுமன்ற உறுப்பினருக்கு ஒதுக்கப்படுகின்ற பணம் இவற்றின் மூலம் மாண்புமிகு உறுப்பினர்கள் பணம் தந்தால் அதை வைத்துக்கொண்டு பராமரிப்பு வேலைகளைச் செய்வதற்கு வாய்ப்பாக அமையும். ஆனால், உடைப்பு ஏற்படும் என்று கருதுகின்ற இடங்களில் பொதுப்பணித் துறையினர் அந்தப் பணிகளைச் செய்கின்றார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: வினா எண் 586, திரு. டி மணி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**586—**

**கிளைக் கால்வாய்களைச் சீரமைத்தல்**

***22723—திரு. டி. மணி:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெய்யார் இடதுகரைக் கால்வாயின் கிளைக் கால்வாய்களான கொல்லங்கோடு, வெங்கஞ்சி, மெதுகும்மல் ஆகியவற்றைச் சீரமைக்க அரசு அனுமதித்துள்ள நிதி எவ்வளவு?

(ஆ) அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) நெய்யார் இடது கரைக் கால்வாயின் கிளைக் கால்வாய்களான கொல்லங்கோடு, வெங்கஞ்சி, மெதுகும்மல் ஆகியவற்றைச் சீரமைக்க அரசு ரூ. 8,01,000/- அனுமதித்துள்ளது.



1999 மே 3]

(ஆ) இப்பணிகள் இந்த ஆண்டு இறுதிக்குள் செய்யப்படும்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கால்வாய்களைச் சீரமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிதி ஒதுக்கியதாகத் தெரிவித்துள்ள இந்தச் செய்திக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், இந்தப் பணம் முழுமையாகச் செலவிடப்படுகின்றதா என்பதைக் கண்காணிக்க வேண்டும். சமீபத்திலே 29, 30 ஆகிய தேதிகளில் மழை பெய்த நேரத்தில் தண்ணீர் கொஞ்சம் வந்த உடனே மண்வெட்டி வைத்து கலக்கிவிடப்பட்ட சம்பிரதாயம்தான் நடந்தது. அதனால் முழுமையாக லெவல் எடுத்து, எவ்வளவு மண் நிரம்பியிருக்கிறது என்று லெவல் எடுத்து, அதன் அடிப்படையில் இந்தப் பணியைச் செய்தால்தான், நாம் ஒதுக்குகின்ற பணத்தில் 80 சதவிகிதம் மக்களுக்குச் சென்றடைய வாய்ப்பு உள்ளது. இந்த அடிப்படையிலே நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பணி மட்டுமல்ல; எந்தப் பணியானாலும் அரசு ஒதுக்குகின்ற பணம் சரியான முறையிலே செலவு செய்யப்பட வேண்டும். அதைப் பொதுப் பணித் துறையில் இருக்கின்ற மேல் அதிகாரிகள் சென்று பார்வையிடுகிறார்கள். சமயம் கிடைக்கின்றபோது செயலாளர் சென்று பார்க்கிறார். வாய்ப்புக் கிடைக்கின்றபோது நானும் சென்று பார்க்கிறேன். இருந்தாலும், தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதிகளில் நடைபெறும் இந்தப் பணிகளைப் பார்வையிட்டு எனக்குத் தெரிவிக்க வேண்டும். உங்கள் தொகுதியிலே எந்தெந்தப் பணிகள் பொதுப்பணித் துறையின் மூலம் நடைபெறுகின்றன, அவற்றை அருள் கூர்ந்து சென்று பார்த்துவிட்டு, பணியினுடைய தரம் குறித்தும், சரியாக வேலைகள் நடைபெறுகின்றனவா, இல்லையா என்பது குறித்தும் எனக்கு எழுதினால் உடனடியாக அந்தக் குறிப்பிட்ட பகுதியிலே நடவடிக்கை எடுப்பதற்கு நான் தயாராக இருக்கறேன் என்று ஒவ்வொரு சட்டமன்ற உறுபபினருக்கும் கடிதம் எழுதினேன். திரு. சொக்கர் அவர்களைப் போன்ற ஐந்தாறு சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டும்தான் அதறகு பதில் எழுதினார்களே தவிர இதுவரையில் மற்றவர்கள் எழுதவில்லை. எழுதப்பட்ட கடிதங்கள் உடனடியாக மண்டலத்தினுடைய தலைமைப் பொறியாளருக்கு அனுப்பப்பட்டு, இந்த இடம் குறித்து இப்படி ஒரு சட்டமன்ற உறுப்பினர் எழுதியிருக்கிறார், அது குறித்து நீங்கள் நடவடிக்கை

[1999 மே 3

எடுக்க வேண்டுமென்று தெரிவித்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் தெரிவித்த கருத்து இந்த அரசுக்கு உடன்பாடானது. செய்வது திருந்தச் செய்யப்பட வேண்டும்; அது முழுமையாகச் செய்யப்பட வேண்டும் என்பதிலே இந்த அரசுக்கு மாறுபட்ட கருத்து கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கடிதம் எழுதினீர்களா?

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தொகுதிக்கு ஒரு குளம் என்ற ஏற்பாட்டின்கீழ் முதலில் எங்களது விளவங்கோடு பகுதியில் இருக்கின்ற ஒரு கிராமத்தில் பாலக்குளம் என்ற ஒரு குளத்தை எடுத்தார்கள். அந்த வேலை சரிவர இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் கடிதம் எழுதினேன். அது குறித்து சமீபத்திலே, அந்தப் பகுதிக்கு வருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், நேரடியாக வருகிறேன் என்று கூறினார்கள். ஆனால், எனக்கு பதில் வரவில்லை. என்னைப் பொறுத்தவரையில் அந்தத் தொகுதியில் எங்கே வேலை நடந்தாலும் சரி, 4, 5 தடவைகளாவது பார்க்காமல் இருப்பதில்லை. அந்த அடிப்படையில் அதிகாரிகள் எங்களுக்குத் தெரிவிப்பதில்லை. இங்கே கேள்வி கேட்டு நாங்கள் தெரிந்து கொள்கிறோமே தவிர, அதிகாரிகள் இந்த வேலை, இந்தப் பகுதியிலே நடக்கிறது என்று தெரிவிப்பதற்கு வாய்ப்பும் இல்லை. சொல்வதும் இல்லை. எனவே, அதற்கும் உரிய நடவடிக்கை மேற்கொண்டால் கொஞ்சம்கூட உதவிகரமாக இருக்கும் என்று கருதுகிறேன். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதியிலே நடைபெறுகின்ற வேலைகளைப் பார்க்க வேண்டும். தன் தொகுதியிலே என்ன வேலை நடக்கிறது என்று கேட்பதில் தவறு ஒன்றும் இல்லை. அதை அதிகாரிகள் சொல்ல வேண்டும் என்பதிலே எனக்கு மாறுபட்ட கருத்து கிடையாது. ஆனால் உறுப்பினர்கள் எழுதிய கடிதம் கிடைத்ததும் உடனடியாக நான் அதிகாரிகளுக்கு எழுதி அந்த வேலைகளைச் செய்யச் சொல்லியிருக்கிறேன். நானும் ஒரு list வைத்திருக்கிறேன். இப்போது மணி அவர்கள் கொடுத்த letter-ஐ நான் அனுப்பிவிட்டேனா என்று கேட்டால்; மணி அவர்கள் குறிப்பிட்ட அந்தப் புகார் மீது



1999 மே 3]

என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் என்று நான் இரண்டு மாதத்திற்கு ஒருமுறை review செய்கிறேன். இதற்கு மேற்கொண்டு, எங்கள் இலாகா எப்படி நடைபெறுகிறது; முன்னேற்றம் எந்த அளவிற்கு இருக்கிறது என்பதை; என்ன செலவினம் செய்யப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களிடம் ஒரு மாதம், இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை review நடத்துகிறார்கள். ஆக, ஒரு weekly test வைக்கிற மாதிரிதான் இந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே, இப்போதும் சொல்கிறேன்; தொகுதியிலே நடைபெறுகிற பணிகள் குறித்து திறந்த மனதோடு நிலைமைகளை எடுத்துச் சொன்னால், அந்த உறுப்பினருடைய செய்கையை நான் வரவேற்கக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 587, திரு. தங்கம் தென்னரசு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**587—**

**நகரப் பேருந்து இயக்குதல்**

***20230—திரு. தங்கம் தென்னரசு:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —

அருப்புக்கோட்டையிலிருந்து திருச்சுழி வழியே கம்பாலி கிராமம் வரை பேருந்து இயக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

24-12-1998 ஆம் நாள் திருச்சுழி-குண்டுகுளம் (வழி) மைலி, இடையன்குளம், கம்பாலி வழித்தடத்தில் நகரப் பேருந்து விடுபட்டது தொடங்கப்பட்டு, இயக்கப்பட்டு வருகின்றது.

**திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேருந்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இயக்கப்பட்டு, அதன் தொடக்க விழாவிலே நானும் கலந்துகொள்ளக்கூடிய வாய்ப்பினைப் பெற்றிருந்தேன். இதன்

வாயிலாக நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 588, திரு. கே. ரவி அருணன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**588—**

**போக்குவரத்து நெரிசலைத் தவிர்த்தல்**

***22962—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை நகராட்சிப் பேருந்து நிலையம் முன்பு அடிக்கடி போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதைத் தவிர்க்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை நகராட்சிப் பேருந்து நிலையத்திற்கு முன்னால் அடிக்கடி போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதைத் தவிர்க்க அதனைச் சுற்றியுள்ள சாலைகள் சீரமைக்கப்பட்டுள்ளன. தென்காசியில் இருந்து வரும் பேருந்துகள் ஒரு வழிப்பாதை வழியாகத்தான் செல்ல வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. பேருந்து நிலைய வாசலில் ஆட்டோக்கள், வாடகைக் கார்கள் நிறுத்தக்கூடாது என்ற முறை கொண்டுவரப்பட்டுள்ளது. ஆட்டோக்கள் நிறுத்த தனி இடம் ஒதுக்கப்படவுள்ளது.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கோட்டை பேருந்து நிலையத்திற்கு முன்பாக உள்ள சாலை தமிழகத்தை கேரள மாநிலத்தோடு இணைக்கக்கூடிய ஒரு முக்கியமான சாலையாகும். செங்கோட்டை நகராட்சிப் பகுதியில் அச்சாலையின் முகப்பிலே காவல் நிலையம் இருந்துங்கூட, அந்த ஒருவழிப்பாதை சரியாக அமல்படுத்தப்படுவதில்லை. மேலும், பேருந்து நிலையத்திற்கு முன்பாக பேருந்துகளும், ஆட்டோ, வேன் போன்ற வாகனங்களும் பயணிகளை ஏற்றிச் செல்வதாலும், லாரிகளில் அளவிற்கு அதிகமாக வைக்கோல் ஏற்றிச் செல்வதாலும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. ஆகவே, அதைத் தடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்துவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5-3-1999-லே செங்கோட்டையிலே, அங்குள்ள வருவாய்த் துறை அதிகாரிகளின் தலைமையிலே ஒரு கூட்டம் நடத்தப்பட்டிருக்கிறது. அதிலே காவல் துறை அதிகாரிகள், போக்குவரத்துத் துறை அதிகாரிகள், உள்ளாட்சித் துறை அதிகாரிகள் ஆகியோரெல்லாம் கலந்துகொண்டு, போக்குவரத்து பற்றி விவாதித்திருக்கிறார்கள். அதிலே சில தீர்மானங்களையெல்லாம் நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே 12-3-1999 முதல் நின்றுபோன பேருந்துகள்கூட ஓட்டப்பட்டிருக்கின்றன. பிறகு ரோட்டின் ஓரத்திலே சாக்கடை கட்டுகின்ற பணி நடைபெற்றுக் கொண்டிருந்ததால், அப்பேருந்துகள் நிறுத்தப்பட்டு, மீண்டும் இன்றுமுதல் அவை இயக்கப்பட்டு வருகின்றன. அதேபோல, ஆட்டோக்களை நிறுத்துவதற்காகத் தனி இடத்தையும் மேற்பார்வை செய்து, அவர்களுக்குத் தனி இடம் ஒதுக்குவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகின்றது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்துகளெல்லாம் கவனத்திலே கொள்ளப்பட்டு, அங்கே அதிகாரிகள் ஒரு கூட்டத்தையும் கூட்டி, அதற்கான தீர்மானங்களையெல்லாம் நிறைவேற்றி, நடைமுறைப்படுத்துவதிலே முழு முயற்சி எடுத்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புகை சோதனை மையங்களில் வாகனங்களுக்குப் புகை சோதனை செய்யாமலேயே சான்றிதழ்கள் வழங்கப்படுவதாகவும், சரியாக இல்லாத வாகனத்திற்கும் புகை சோதனைச் சான்றிதழ்கள் வழங்கப் பட்டிருப்பதாகவும் நேற்றையதினம் தினமணிப் பத்திரிகையிலே செய்தி வெளியாகியுள்ளது. அதுகுறித்து அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா? அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது என்ன துணை வினாவா? உட்காருங்கள். இதற்குத் தனி வினா கொடுக்க வேண்டும். இதை நான் அனுமதிக்க முடியாது.

வினா எண் 589, திரு. ம. முத்துராமலிங்கம், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

589—

## பாலங்களை அகலப்படுத்துதல்

***16812—திரு. ம. முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமங்கலம் தொகுதி, ஆலம்பட்டி அடுத்துள்ள ஓடுபாலம், டி. புதுப்பட்டி அடுத்துள்ள ஓடுபாலம் ஆகியவற்றை அகலப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இவ்வினாவில் குறிப்பிட்டுள்ள இருபாலங்களில் புதுப்பட்டி அருகிலுள்ள பாலத்தினைத் திரும்பக் கட்டும் பணியானது ரூ.389.52 இலட்சம் செலவில் ஹட்கோ உதவியுடன் 1998-99 ஆம் ஆண்டுத் திட்டத்தின்கீழ் எடுத்துச் செயல்படுத்தப்பட உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. முத்துராமலிங்கம், இருக்கையில் இல்லை.

வினா எண் 590, திரு. ஏ. ராசேந்திரன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

590- -

## பாலங்கள் அமைத்தல்

***16816—திரு. ஏ. ராசேந்திரன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் வட்டம், கணியம்பாடி ஒன்றியம், நாகநதி, நஞ்சுகொண்டபுரம் ஊராட்சிக்கு இடையே செல்லும் நாகநதியின் குறுக்கே மேம்பாலம் மற்றும் தரைப்பாலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



(அ) மற்றும் (ஆ) இல்லை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ. ராசேந்திரன், இருக்கையில் இல்லை.

வினா எண் 591, திரு. ந. கருப்பண்ண உடையார், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

591—

## கோயில் விடுதிக்கு அடிப்படை வசதிகள்

***18115—திரு. ந. கருப்பண்ண உடையார்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதி, சுவாமிமலை அருள்மிகு சுவாமிநாத சுவாமி திருக்கோயில் பக்தர்கள் தங்கும் விடுதியில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சுவாமிமலை அருள்மிகு சுவாமிநாத சுவாமி திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களின் வசதிக்காக 11 தங்கும் விடுதிகள், 4 சிறு குடில்கள், 2 சிறப்பு விருந்தினர் குடில்கள் மற்றும் நன்கொடையாளர் குடில் ஒன்று ஆகமொத்தம் 18 அறைகள் உள்ளன. இவற்றில், குளியல் அறை மற்றும் கழிவறை வசதிகள் உள்ளன. தற்போதுள்ள அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும், புதிதாக அனைத்து வசதிகளுடன் கூடிய அறைகள் கட்டவும், தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முற்பகல் 10-10

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுவாமிமலையில் பக்தர்கள் தங்குவதற்குள்ள விடுதிகள் பழுதடைந்த நிலையிலே எல்லோரும் தங்குவதற்கு ஏற்ற வகையிலே இல்லை என்ற காரணத்தால் இது இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கேட்கப்பட்ட வினா என்பதையும், இப்பொழுதும் அங்கு பக்தர்கள் தங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதாவது நிதியினைக்

[1999 மே 3

கொடுத்து விடுதிகள் கட்டுவதற்கு முன்வருவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கிருக்கிற அறங்காவலர் குழுவிலும், திருப்பணிக் குழுவிலும் இடம்பெற்ற அந்த வேலையைச் செய்வதற்குப் பொறுப்பு எடுத்துக்கொண்ட ஒருவரே 'அரசு உதவி செய்யுமா' என்று கேட்பது வியப்பாக இருக்கிறது. எனவே, அவரே அந்தப் பொறுப்பை எடுத்துக் கொண்டு அனைத்து வசதிகளையும் செய்வதற்கு அரசு அனுமதி அளிக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 592, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர்

**592—**

**சாமிநாத சர்மாவின் நூல்களை நாட்டுடைமையாக்குதல்**

***21485—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மறைந்த வெ. சாமிநாத சர்மாவின் நூல்களை நாட்டுடைமையாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சில மாதங்களுக்கு முன்னர்கூட பல்வேறு தமிழ் அறிஞர்களின் படைப்புகள் நாட்டுடைமையாக்கப்பட்டன. உண்மையிலேயே நாட்டுடைமையாக்கப்பட வேண்டிய மிக முக்கியமான படைப்பு சாமிநாத சர்மாவினுடையதாகும். பிற நாட்டு நல்லதோர் சாஸ்திரங்கள் தமிழ்மொழியில் மொழிபெயர்க்கப்பட வேண்டும் என்ற கனவை



1999 மே 3]

நனவாக்கி 80-க்கும் மேற்பட்ட நூல்களைத் தமிழில் படைத்து, கிரேக்க இலக்கியங்களிலிருந்தும், கிரேக்க வரலாற்று நாவல்களிலிருந்தும் பல்வேறு விஷயங்களைத் தமிழுக்குக் கொடுத்த அந்த அற்புதமான மேதையின் நூல்களை நாட்டுடைமையாக்க அரசு மறுசிந்தனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த முறை, தமிழ் அறிஞர்களுடைய நூல்கள் என்பதற்காக ஏற்கெனவே பல நாட்டுடைமையாக்கப்பட்டன. அமரர் கல்கி, திரு.வி.க., மறைமலையடிகள், தேவநேயப்பாவாணர், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், பாவேந்தர் பாரதிதாசன், பாரதியார் ஆகியோருடைய நூல்களுடன் அறிஞர் அண்ணா அவர்களுடைய நூல்களும் நாட்டுடைமையாக்கப்பட்டன. மற்றொரு கோணத்தில் கடந்த முறை விடுதலைப் பொன்விழாக் காலத்தில் ஏற்கெனவே தேசிய போராட்டத்தில் ஈடுபட்டு அதனடிப்படையில் எழுதியவர்களின் நூல்களில் சில நாட்டுடைமையாக்கப்பட்டன. அதிலே, கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை, இராஜாஜி, திரு. ஜீவானந்தம் போன்றவர்களுடைய நூல்கள் எல்லாம் இடம்பெறுகின்றன. எனினும் நாட்டுடைமையாக்கப்படுவதில் இன்னொரு பிரச்சினை; நாட்டுடைமையாக்கப்படுவதன் நோக்கம் அந்த நூல்கள் எல்லோராலும் பதிப்பிக்கப்படும் வகையில் யார் வேண்டுமானாலும் பதிப்பித்துக்கொள்ளலாம் என்ற உரிமையைத் தருவது. இப்போதும் அதற்கு எந்தத் தடையும் இல்லை. நமது மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் நிறையப் பதிப்பகங்களோடு தொடர்புடையவர். எனவே, சாமிநாத சர்மா அவர்களுடைய 80 நூல்களையும் அவரே பதிப்பித்து வெளியிட்டால் நாட்டுக்குப் பயன் தரும். அதைத்தான் இந்த நாட்டுடைமை தருகிறதே தவிர வேறு எதையும் தருவதில்லை.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டாவது துணை வினா கேட்க வேண்டுமென்பது கட்டாயமா? (குறுக்கீடு) அந்தப் பதிலைப் பொறுத்துத்தான் நான் அடுத்த கேள்விக்கு அனுமதி கொடுப்பேன். திரு. சுப்பராயன், நீங்கள் உட்காருங்கள், நான் பிறகு உங்களுக்கு அனுமதி தருகிறேன். திரு. ச. அழகுவேலு.

[1999 மே 3

**திரு. ச. அழகுவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிஞர் வே. சாமிநாத சர்மாவின் 80-க்கும் மேற்பட்ட நூல்களை 40 ஆண்டுகளுக்கு முன்னால் பிரபஞ்ச ஜோதி பிரசுராலயம் வெளியிட்டது. திரு. சர்மா அவர்களுடைய கடைசிக் காலம் கலாக்ஷேத்திரத்திலே முடிந்தது. மிகச் சிறந்த எழுத்தாளராக இருந்தும் கவனிப்பார் இன்றி, இருந்தார்கள். அவர் நூல்களுக்கு காப்பி ரைட்கூட யாருக்காவது கொடுத்திருக்கிறார்களா என்று தெரியவில்லை. இப்போது அந்த நூல்கள் பெரும்பாலும் கிடைப்பதில்லை. மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் சொன்னதைப்போல ஆங்கிலம் தெரிந்தவர்கள் அந்தக் காலத்தில் பிளேட்டோ, அரிஸ்டாட்டில், கார்ல் மார்க்ஸ், எமிலிஜோலா இப்படிப் புகழ்பெற்ற எழுத்தாளர்களின் நூல்களை ஆங்கிலம் படித்தவர்கள் படித்தார்கள். சுயமரியாதை இயக்கத்தினுடைய பேச்சாளர்களுக்கும், பொதுவுடைமை இயக்கக் கருத்துகளை அப்போது தமிழில் கொடுத்தவர் சர்மா அவர்கள்தான். அவர்களுடைய நூல்களை, 80-க்கும் மேற்பட்ட நூல்களை இல்லையென்றாலும்கூட, மிகச் சிறந்த நூல்கள் Books for ever என்று சொல்லக்கூடிய பிளேட்டோவினுடைய அரசியல் சமுதாய ஒப்பந்தம், கார்ல் மார்க்ஸினுடைய மூலதனம் இவற்றையாவது மலிவுப் பதிப்பிலே தமிழ் மக்களுக்குக் கிடைக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலிவுப் பதிப்புகளை வெளியிடுகிற பொறுப்பை அரசு ஏற்பதில்லை. காரணம், தமிழ்நாட்டில் இருக்கிற அனைத்துப் பதிப்பகங்களும் சிறந்த நூல்களைத் தெரிந்தெடுத்து, எந்தெந்த நூல்கள் மக்களிடத்திலே அதிகமாக விற்பனையாகும் என்று தெரிந்து, அவற்றை வெளியிடுகின்றன. அதற்காகத்தான் ஏராளமான பதிப்பகங்கள் இருக்கின்றன. அதேநேரத்தில், தமிழ் வளர்ச்சித் துறை, தற்போது நிதியுதவி வேண்டி வருகிற விண்ணப்பங்களை ஏற்றுக்கொண்டு முனைவர் பட்ட ஆய்வேடுகள், இப்போது அரிய நூல்களாக இருக்கின்ற சில நூல்களுக்கான உதவி என இரண்டு வகைகளிலும் அந்த உதவிகளைச் செய்கிறது. குறிப்பாக, 'வின்சுலாப்' அவர்களுடைய அகராதியை வெளியிட வேண்டுமென்று கருதினால், அதை அரசு வெளியிடுகிறது. அதேநேரத்தில், புதிதாக வருகிற புதிய நூல்களுக்கு, சிறந்த நூல்களுக்கு, உதவி செய்கிறது. எனினும், தமிழ்நாட்டில் இருக்கிற அத்தனை நூல்களையும் தொகுத்து, அத்தனை நூல்களையும மலிவுப்



1999 மே 3]

பதிப்பில் வெளியிடுகிற பொறுப்பை அரசு அப்படி ஏற்றுச் செயல்படுவதற்கான அமைப்பு இல்லை. அப்படி ஏற்க இயலாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிஞர் சாமிநாத சர்மா அவர்களுடைய நூல்கள், பெரும்பாலும் மொழி பெயர்ப்பு நூல்களாகும். மூல நூல்கள் எண்ணிக்கை குறைவு. இருந்தாலும், அவர்களுடைய மொழி பெயர்ப்பு நூல்கள், மூல நூல்களைப்போல நேரிலே படிக்கிற உணர்வை ஏற்படுத்தக்கூடிய சிறப்பு வாய்ந்தவை. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், கார்ல் மார்க்ஸ் அவர்களுடைய வாழ்க்கை வரலாற்று நூல். எனவே, அவர்களுடைய மொழி பெயர்ப்பு நடையை மற்றவர்கள் பின்பற்றக்கூடிய அளவுக்கு ஒரு வழிகாட்டி நூல் என்ற வகையிலாவது அவருடைய மொழி பெயர்ப்பு நூல்களை, அரசு ஏற்று அறிவிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவரே சொல்லிவிட்டார். அது மொழி பெயர்ப்பு நூல் என்று. எனவே, அதுவே ஓர் அடிப்படைச் சிக்கல்தான். ரூஸோ போன்றவர்களுடைய சமுதாய ஒப்பந்தத்தைக்கூட அவர்கள் சிறப்பாக எழுதி வெளியிட்டிருக்கிறார்கள் என்பதை நான் மறுக்கவில்லை. இன்னும் சொல்லப்போனால், அந்த ரூஸோ, நம்முடைய சாமிநாத சர்மா எழுதிய நூலைப் படித்து, சமுதாய ஒப்பந்தத்தைப் படித்த பிறகுதான், ரூஸோ தன்னை "தேன்மழைக்கே ரூஸோ" என்று சொன்னார் என்பதற்காக, அதை அடிப்படையாக வைத்து நான்கூட, தமிழ்க்குடிமகன் என்று என் பெயரை மாற்றிக்கொண்டேன். எனவே, அதனுடைய தாக்கத்தை நான் மறுக்கவில்லை. ஆனாலும், அவர் நூல்களை அரசுடைமையாக்கும் எண்ணம் அரசுக்கு இல்லை.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாமிநாத சர்மா அவர்களுடைய நூல்களை அரசுடைமையாக ஆக்குகின்ற எண்ணம் அரசுக்கு இல்லை என்று மாண்புமிகு தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே திட்டவட்டமாகக் கூறினாலும்கூட, அது இறுதியாக அறிவிக்கப்பட்ட முடிவு என்று மூலக் கேள்வி கேட்டவர்களும், துணைக் கேள்விகள் கேட்டவர்களும் எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். தொடர்ந்து பல பேரறிஞர்களுடைய நூல்களை

[1999 மே 3

இந்த அரசு நாட்டுடைமையாக ஆக்கிவருகிறது. அந்தப் பதிப்பகங்கள், அவர்கள் பெற்றிருக்கிற உரிமைகள், அதற்காகப் பணம் தர வேண்டியிருக்கிறது. அஃதன்னியில், அந்த நூல்களை எழுதிய குடும்பத்தார்க்கும் அரசின் சார்பிலே நிதி வழங்க வேண்டிய ஒரு கடமையை அரசு தொடர்ந்து செய்து வந்திருக்கிறது. அப்படித்தான் பல ஆசிரியர்களுடைய நூல்களுக்கு அவர்களுடைய குடும்பத்தார்க்கு இந்த அரசு நிதி வழங்கியிருக்கிறது. அந்த நூல்கள் அரசுடைமை என்று சொன்னதும், அரசாங்கமே அச்சிட்டு வெளியிட வேண்டும் என்றுகூட அல்ல; யாரும் சுதந்திரமாக அச்சிட்டு வெளியிடலாம் என்பதுதான். இதிலே சில நேரங்களிலே—நம்முடைய அமைச்சருக்கு ஏற்பட்ட சங்கடமே சில நேரங்களிலே — எல்லா பதிப்பகங்களும் அந்த நூல்களை அச்சிட்டு வெளியிடக்கூடிய உரிமை பெறுகிற காரணத்தினால், அவர்கள் இஷ்டத்திற்கு அவற்றை வெளியிட்டு, பிழை திருத்தாமலேகூட, அந்த அட்டையிலே அவர்களுடைய பெயர்களைப் போட்டு விற்கலாம் என்கிற அளவுக்கு சில நூல்கள் வெளிவந்து விடுகின்றன. எனவேதான், இந்த அரசுடைமையாக்குகின்ற விஷயத்தில் சற்று ஜாக்கிரதையாக, கவனம் செலுத்திச் செய்ய வேண்டியிருக்கிறது. அதனால், சாமிநாத சர்மா அவர்களுடைய நூல்கள் அரசுடைமையாக்குகின்ற பட்டியலிலே இருந்து ஒதுக்கப்பட்டு விட்டன என்று யாரும கருதத் தேவையில்லை. அந்தப் பட்டியல் வரிசையிலே, அந்தப் பிரபல எழுத்தாளருடைய நூல்கள் நிச்சயமாக எதிர்காலத்திலே இடம்பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் விளக்கம் வேண்டுமா?

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத தலைவர் அவர்களே, இதனுடைய அவசியம் கருதி நான் குறிப்பிட விரும்புகிறேன். சாமிநாத சர்மா அவர்களைக் கௌரவப்படுத்துவதற்காக, அவருடைய நூல்களை நாட்டுடைமையாக ஆக்க வேண்டுமென்று நான் வலியுறுத்தவில்லை. தமிழகம், தன்னைக் கௌரவப்படுத்திக் கொள்ள வேண்டுமானால், தமிழகம் தன்னுடைய அறிவுத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டுமானால், சாமிநாத சர்மா அவர்களின நூல்களைக் கட்டாயமாக நாட்டுடைமையாக்க வேண்டும் என்பதற்காகத்தான் மூலக் கேள்வி கேட்டேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மகிழத்தக்க பதிலை அளித்ததற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.



1999 மே 3]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 593, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

முற்பகல் 10-20

**593—**

## கைத்தறி நெசவாளர் சங்கங்கள்

***21698—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மொத்தம் எத்தனை கைத்தறி நெசவாளர் சங்கங்கள் உள்ளன?

(ஆ) கைத்தறி நெசவாளர் சங்கங்களில் மொத்தம் எத்தனை பேர் பணிபுரிந்து வருகிறார்கள்?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில் மொத்தம் 1533 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இவற்றில் பிரதம கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 1247, விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 140 மற்றும் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 146.

(ஆ) கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் மொத்தம் 5903 பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். மேற்படி பணியாளர்களில் 4128 பணியாளர்கள் நிரந்தரப் பணியாளர்களாகவும், 1775 பணியாளர்கள் தற்காலிக அடிப்படையிலும் பணிபுரிந்து வருகிறார்கள்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நெசவாளர்களுடைய வாழ்வினை உயர்த்துவதற்காக ஒரு காலத்தில் நெசவாளர்கள் தாழ்ந்த நிலையிலே இருந்தபோது, பேரறிஞர் அண்ணாவும், நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்களும், பேராசிரியர் அவர்களும் கைத்தறி நெசவுத் துணிகளைத் தோளிலே சுமந்து, நாட்டு மக்களிடத்திலே விற்று, அந்தப் பணத்தை நெசவாளர்களுக்கு அந்த ஏழைகளுக்கு வாரி வழங்கினார்கள். அவ்வளவு

[1999 மே 3

தூய்மையான நெஞ்சமுடைய, நம்முடைய முதலமைச்சர் ஆளக்கூடிய இந்தக் காலகட்டத்தில் நெசவாளர் குடும்பங்களின் தரத்தை உயர்த்துவதற்கு அரசிடம் என்னென்ன திட்டங்கள் இருக்கின்றன, மற்றும், தற்காலிகப் பணியாளர்களை நிரந்தரமாக்குவதற்கு எந்த வகையில் திட்டங்கள் அரசால் தீட்டப்படவுள்ளன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு கைத்தறித் துறையினுடைய நன்மையைக் கருதி கடந்த நிதிநிலை அறிக்கையின்போது, இந்த அவையிலே இருக்கின்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு பரிந்துரை செய்த அனைத்தையும் ஏற்றுக்கொண்டுள்ளது. கூட்டுறவு நெசவாளர் சங்கங்களில் 1996-97 ஆம் ஆண்டு தணிக்கையில், ஏறத்தாழ கடந்த காலத்திலே செய்யப்பட்ட முறைகேடுகள் எல்லாம் ஒழுங்கு செய்யப்பட்டு, 50.2 சதவிகித சங்கங்கள் இலாபத்திலே இயங்கி வருகின்றன அதேபோல, இந்த அரசு பொறுப்பு ஏற்ற பிறகுதான், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, தேர்தல் நடத்தப்பட்டு நிர்வாகம் செம்மையாக நடைபெற்று வருகிறது. எதிர்காலத்திலே அந்தந்த நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலே கிடைக்கின்ற , இலாபத்தை ஒட்டித்தான் அங்கேயிருக்கின்ற ஊழியர்களை நிரந்தரம் செய்கின்ற பணியும், ஊதிய உயர்வு கொடுக்கின்ற பணியும் செய்ய இயலும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி.ப. ஆறுமுகம்.

**திரு. தி.ப. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரும்பாலான கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் நஷ்டத்திலே இயங்கி வருகிறபோதும், அயல்பணிப் பணியாளர்கள் என்ற முறையில் துறையின் ஆய்வாளர்கள், சி.எஸ்.ஆர். மற்றும் டி.ஆர். ஆகியவர்களை நியமிப்பதன் காரணமாக பெருந்தொகை சம்பளமாகச் செல்கின்ற காரணத்தினால் பல சங்கங்கள் மூடுகின்ற நிலையிலே இருக்கின்றன. வருகின்ற காலத்தில் இதுபோன்ற அயல்பணி என்ற முறையிலே துறை அதிகாரிகளை நியமிக்க இந்த அரசு முயலக்கூடாது என்ற என்னுடைய வேண்டுகோள் குறித்து அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு அயல்பணியாளர்களை



1999 மே 3]

நியமிப்பதனைப் பொறுத்தவரையில், 40 இலட்சத்திற்கும் மேலாக Turn over இருக்கின்ற சங்கங்களுக்குத்தான் அயல்பணியாளர்களை நியமிப்பதற்கும், அதற்குக் குறைவாக வருமானமுள்ள சங்கங்களாக இருந்தால், அவர்கள் தேவையில்லை என்று தெரிவித்தால், அவர்களை விலக்கிக் கொள்வதற்கும் நாங்கள் தயாராக இருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. நஷ்டத்திலே ஓடுகின்ற சங்கங்களுக்கு அயல் பணியாளர்கள் எதற்கு என்பது கேள்வி.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அயல் பணி என்பது ஒரு பிரச்சினைக்குரியதாக இருந்தது. ஆனால், சென்ற காலத்தில், சங்கங்களை ஒழுங்குபடுத்துகின்ற முறையில், எடுக்கப்பட்ட முடிவின்படி 40 இலட்சத்திற்கும் மேற்பட்ட வருமானம் உடைய சங்கங்களாக இருந்தால் அவர்கள் அயல்பணியாளர்களை வைத்துக்கொள்ளலாம். 40 இலட்சத்திற்குக் குறைவாக வருமானம் உடைய சங்கங்களாக இருந்தால், அச்சங்கங்கள் விருப்பப்பட்டால் அயல்பணியாளர்களை வைத்துக்கொள்ளலாம், அப்படி விருப்பமில்லை என்று நிர்வாகக் குழு தெரிவித்தால், நாங்கள் அவர்களைத் திரும்பப் பெற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சிவானந்தம்.

**திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்தகால அ.தி.மு.க. ஆட்சியிலே பட்டு கூட்டுறவுக் கைத்தறி சங்கங்கள் கொள்ளையடிக்கப்பட்டு, அந்தச் சங்கங்கள் எல்லாம் மூடப்பட்டன. அப்படி கொள்ளையடித்தவர்கள் மீதும், மூடிய சங்கங்கள் மீதும் நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி நேரத்திலே குற்றச்சாட்டு சொல்லக்கூடாது. எதனால் நஷ்டம் ஏற்பட்டது என்பதை விசாரணை செய்யலாமா என்றுதான் கேட்கலாம்.

[1999 மே 3
முற்பகல் 10-25

**திரு. ஆர். சிவானந்தம்**: எனவே, பட்டு கூட்டுறவுச் சங்கங்கள் மூடப்பட்டுள்ளன. அவற்றின்மீது நடவடிக்கை எடுத்து, அவைகளின் தேக்கம் நீங்க ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களே தங்களுடைய ஆரணியைப் பற்றிப் பேசுகின்றபோது, இன்று எங்களுடைய பட்டுச் சேலைகள் மிகச்சிறப்பாக சந்தையிலே விற்கப்படுகின்ற ஒரு நிலை உருவாக்கப்பட்டுவிட்டது என்று சொல்லியிருக்கிறார். அதுவும் தரமான பட்டுச் சேலைகள் இன்று உற்பத்தி செய்யப்படுகின்றன என்பதையும் தெரிவித்து இருக்கின்றார். ஆகவே, எந்தப் பட்டுக் கூட்டுறவுச் சங்கங்களும் கடந்த காலத்திலே நலிந்திருந்தாலும், இன்று அவற்றுக்கு இந்த அரசால் அளிக்கப்பட்ட உதவியின் காரணமாக, மானியத்தின் காரணமாக இன்று ஒவ்வொரு சங்கமாகத் தன்னுடைய பணியிலே, பொருளாதாரத்திலே முன்னேற்றம் அடைந்து வருகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் எங்களுடைய தொகுதியிலே நஷ்டத்திலே இயங்கி வருகின்றன. இந்தச் சூழ்நிலையில் அங்கே பணியாற்றுகின்ற செயலர்களுக்கு அரசு ஊதியம் வழங்கிட ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெசவாளர் சங்கங்களிலே பணிபுரிகின்ற ஊழியர்களுக்கு ஊதிய சீரமைப்புக் குழுவினுடைய பரிந்துரையை ஏற்று, கூட்டுறவுச் சங்கத்தினுடைய பதிவாளருடைய ஒப்புதலைப் பெற்று, அந்த அடிப்படையிலே அவர்களுடைய ஊதிய விகிதம், உற்பத்தி அதிகப்படுத்துதல் ஆகியவை நிர்ணயிக்கப்படுகின்றன. ஆகவே, அது முறையாக நடைபெற்று வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.ஜி. தனபால்.

**திரு. வி.ஜி. தனபால்:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, கைத்தறி கூட்டுறவுச் சங்கங்களில் லுங்கி ரகம் எவ்வளவு தேக்கம் இருக்கிறது என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.



1999 மே 3]

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லுங்கி ரகம் ஏறத்தாழ 7 கோடி ரூபாய் அளவுக்குத் தேக்கம் இருந்ததால், அந்தத் தேக்கத்தைக் குறைப்பதற்குத்தான் நம்முடைய முதல்வர் அவர்கள் அதற்கு 10 பைசா கூட்டி 30 சதவிகித ரிபேட் அளித்தார்கள், அந்த அடிப்படையிலே இப்போது 2½ கோடியிலிருந்து 3 கோடி அளவிற்கு லுங்கி விற்பனை செய்யப்பட்டுள்ள நிலையில், மீதி தேங்கியிருக்கின்ற லுங்கிகளையும் விற்கக்கூடிய வாய்ப்பு நிச்சயம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 594, திரு. ஜி.கே. மணி மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோா நலத் துறை அமைச்சர்.

**594—**

**மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி**

***20881—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, டி. அக்ரஹாரம் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம், தொகுதி, டி. அக்ரஹாரம் மேல்நிலைப் பள்ளிக்கு மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி அமைப்பது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தட்டச்சுப் பிழை இருக்கிறது. பி. அக்ரஹாரம் என்பது டி. அக்ரஹாரம் எனக் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. ஆகவே, அதை முதலிலே

[1999 மே 3

தெரிவித்துக்கொண்டு, தருமபுரி மாவட்டத்திலே, பெண்ணாகரம் தொகுதியிலே பி. அக்ரஹாரம் என்பது ஒரு மையமான பகுதி. அதைச் சுற்றிலும் ஏராளமான கிராமங்கள் இருக்கின்றன. அங்கே பள்ளிக்கு வரக்கூடிய, அந்த அரசு மேல்நிலைப் பள்ளிக்கு வரக்கூடிய குழந்தைகள் எல்லாம் பேருந்து வசதி இல்லாமல் நடந்தே 5, 6 கிலோ மீட்டர் வர வேண்டிய நிலை எல்லாம் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட பஸ் போக்குவரத்து வசதி இல்லாமல், மின்சார வசதிகூட இல்லாத அந்தச் சுற்றுப்புற வட்டாரத்தில் இருக்கக்கூடிய அந்தக் குழந்தைகள் எல்லாம் படிப்பதற்கு அந்த அரசு மேல்நிலைப் பள்ளியிலே எப்படியாவது மறுபரிசீலனை செய்து அங்கே விடுதி ஒன்று தொடங்க வேண்டுமென்று அன்போடு சொல்கின்ற நேரத்திலே, என்னுடைய வேண்டுகோளை நிறைவேற்றுவார்களா என்பதை அறிய விரும்புவதோடு நடப்பு ஆண்டிலே எத்தனை விடுதிகள் தொடங்கவிருக்கிறார்கள் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? நீங்கள் எழுதிக் கொடுத்த பெயர்தான் இங்கே இருக்கிறது. டி. அக்ரஹாரம் என்றுதான் எழுதிக கொடுத்திருக்கிறீர்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பி. அக்ரஹாரம் என்பதை டி. அக்ரஹாரம் என்று அடித்துவிட்டார்கள். வேறு ஒன்றும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. நீங்கள் எழுதிக் கொடுத்த டி. அக்ரஹாரத்தைத்தான் அடித்திருக்கிறார்கள். நீங்கள் வந்து பாருங்கள். உங்களுடைய கேள்வியை இங்கே வைத்திருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு நிதியாண்டில் பள்ளி மாணவ மாணவிகளுக்கென விடுதிகள் தொடங்கும் திட்டம் பகுதி 2 திட்டங்களில் கொண்டுவரப்படவில்லை. எனவே. மாண்புமிகு உறுப்பினர் ஜி.கே. மணி அவர்கள கோரியுள்ள இடத்தில் புதிய விடுதி தொடங்கிட வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 595, திரு. செங்கை சிவம், மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர்



1999 மே 3]

**595—**

**பணியாளர்களுக்கு வாகனக் கடன்**

***17291—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம் நேரடியாகப் பிரதம கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தில் பணியாற்றும் பணியாளர்களுக்கு வாகனக் கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டு வசதித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இணையத்தின் துணை விதிகளின்படி வழிவகை இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 596, திரு. பி.என். வல்லரசு, மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.

**596—**

**கால்நடை மருத்துவமனை அமைத்தல்**

***15598—திரு. பி.என். வல்லரசு:**

மாண்புமிகு கால்நடைப பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தொகுதி, மேலப்பெருமாள்பட்டியில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[1999 மே 3

(அ) மற்றும் (ஆ) இது குறித்து செயற்குறிப்பு ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.என். வல்லரசு, இருக்கையில் இல்லை.

வினா எண் 597, திரு. மா. இராமச்சந்திரன், மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.

**597—**

**கால்நடை மருத்துவமனை அமைத்தல்**

***22123—திரு. மா. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், 'மருங்குளம் ஊராட்சியில் ஒரு கால்நடை மருத்துவமனை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-30

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருங்குளம் கிராமம் என்பது 4 ரோடுகள் சந்திக்கிற ஒரு இடமாக இருக்கிற காரணத்தினால், சுற்றி பல்வேறு கிராமங்களும் இருக்கின்றன அதுமட்டும் அல்ல, இன்றைக்கு பெரியார் நினைவு சமத்துவபுரம் கொடுங்குளத்திலே மாண்புமிகு நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் தொடங்க இருக்கிறார்கள். அதன் அருகாமையிலேயே இருக்கிற காரணத்தினாலே அங்கே ஒரு மருந்தகம் மிகவும் அவசியமாகக் கருதப்படுகிறது. அந்த மருந்தகத்தைத் தொடங்குவதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.



1999 மே 3]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருங்குளம் ஊராட்சி, தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியத்தில் வருகிறது. தஞ்சாவூரில் கால்நடைப் பொது மருத்துவமனையும் மற்றும் ஊராட்சி ஒன்றியத்தில் கள்ளப் பாம்பூர், அம்மன்பேட்டை, வல்லம், மேலமாத்தூர் ஆகிய இடங்களில் கால்நடை மருந்தகங்களும், நாஞ்சிக்கோட்டை, சூரக்கோட்டை, ஆலக்குடி, குலமங்களம், மேலவளி, சித்திரைக்குடி, கரந்தை, மாரியம்மன்கோயில், மாவாய்த் துறை, ஆகிய இடங்களில் காலநடைக் கிளை நிலையங்களும் இவற்றுக்கு முறையே மாதாக்கோட்டை, காட்டூர், வண்ணாரப்பேட்டை, நவரசநாயகபுரம், சக்கரசாமந்தம், ஐயாசாமிப்பட்டி, மானம்புச்சாவடி, வானமரக்கோட்டை, தாளக்குடி ஆகிய இடங்களில் பார்வைக் கிளை நிலையங்களும் தற்போது செயல்பட்டு வருகின்றன. எதிர்வரும் ஆண்டுகளில் நிதிநிலையைக் கருத்தில் கொண்டு பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 598, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**598—**

**ஆதிதிராவிடர் மாணவர் விடுதி**

***15264—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மீனம்பாக்கத்திலுள்ள ஆதிதிராவிட மாணவர்கள் தங்கும் விடுதிக்குத் தனியாக கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் தற்போதைய நிலை என்ன?

[1999 மே 3

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மீனம்பாக்கம் ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி, ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளிக்குச் சொந்தமான கட்டடத்தில் தற்போது இயங்கி வருகிறது. இவ்விடுதிக்குத் தனியாகக் கட்டடம் கட்டுவது குறித்து வரும் ஆண்டுகளில் நிதி நிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.

**திரு. மீ.அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆரம்பப் பள்ளி புதிய கட்டடத்தினைத் திறந்து வைக்க வந்தபோது, மாணவர் விடுதிக் கட்டடம் நலிவடைந்து இருக்கிற அந்தக் கட்டடத்திலே இயங்குகிறதைப் பார்வையிட்டார்கள். அதிலே சுகாதார வசதியோ, கழிப்பிட வசதியோ அல்லது சமையலறைக்குரிய வசதிகளோ இல்லாமல், படுக்கக்கூட இடம் இல்லாமல் அந்த மாணவர்கள் இருந்ததை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பார்வையிட்டு வந்திருக்கிறார்கள். எனவே, இந்த ஆண்டிலேயே புதிதாக ஒரு கட்டடம் கட்டித்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்று தங்கள் மூலம் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பள்ளியினுடைய பெற்றோர்-ஆசிரியர் சங்கத் தலைவராக இருந்து சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டு வருகிறார் என்பது நன்றாகத் தெரியும். அந்தப் பள்ளிக்கு என்னை மூன்று முறை அழைத்துச் சென்றிருக்கின்றார். நான் அந்தப் பள்ளியின் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டிருக்கிறேன். அந்தப் பள்ளியில் கூடுதலாக மாணவர் விடுதி அமைப்பதற்குக் கட்டடம் இல்லை என்பது உண்மை. ஆகவே, அந்தக் கட்டடத்தை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்றார்கள். வரும் ஆண்டில் நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



1999 மே 3]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 599, திரு. உ. திசைவீரன், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

221807

599—

### தாட்கோ மூலம் தொகுப்பு வீடுகள்

***15274—திரு. உ. திசைவீரன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தொகுப்பு வீடுகள் கட்டும் பணியை மீண்டும் தாட்கோ மூலமே செயல்படுத்தும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தாட்கோவின் பணியானது 1996-க்குப்பின் மிகச் சிறப்பானதாக அமைந்திருக்கிறது. புதிய தொழில் நுட்பத்துடன், நவீன வடிவமைப்புடன் தாட்கோ கட்டடங்கள் கட்டப்படுகின்றன. ஆனால், தொகுப்பு வீடுகள் தற்போது ஊராட்சிமன்றத் தலைவர் அல்லது வீட்டின் உரிமையாளர் மூலம் கட்டப்படுவதால் மிகவும் காலதாமதம் ஏற்படுகின்றது. 1996-லே ஆரம்பிக்கப்பட்ட வீடுகள்கூட இன்னும் முடிவுபெறவில்லை. எனவே, அதிக வேலைப்பளுவற்று இருக்கும் தாட்கோ மூலம் தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு மீண்டும் மறு பரிசீலனை செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

D
V211,31'N99 N99.77.2

[1999 மே 3

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு மைய அரசு நிதியை ஒதுக்கித் தந்து கொண்டிருக்கிறது. அதையும் ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாகத்தான் செயல்படுத்த வேண்டுமென்று விதி 51, பிரிவு (9) மற்றும் விதி 51, பிரிவு (10)-ன்படி கூறப்பட்டுள்ளது. ஆகவே, தொகுப்பு வீடுகளை இப்போது சிறப்பாக ஊரக வளர்ச்சித் துறை செயல்படுத்திக் கொண்டிருக்கின்றது. மேலும், தாட்கோ மூலமாகக் கட்டுவதற்கும் போதுமான பணியாளர்கள் இல்லை. ஆகவே ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாகத்தான் இந்தப் பணி எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 600, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

**600—**

## புயல் பாதுகாப்பு இல்லம்

***14953—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், மந்திரப்பட்டினம் ஊராட்சியில் புயல் பாதுகாப்பு இல்லம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணி தொகுதி, சேதுபாவாச்சத்திரம் ஒன்றியம், மந்திரப்பட்டினம் கிராமத்தில் ஏறக்குறைய 300 மீனவர் குடும்பங்கள் குடிசைகளில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள், மழை மற்றும்



1999 மே 3]

புயல் வெள்ளக் காலங்களில் தங்குவதற்கு இடமின்றிப் பல்வேறு இன்னல்களுக்கு உள்ளாகின்றார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து மந்திரப்பட்டினம் கிராமத்திலே புயல் பாதுகாப்பு இல்லம் கட்ட ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புயல் பாதுகாப்பு மையங்கள் 1988-89 ஆம் ஆண்டு ஐரோப்பிய பொருளாதாரக் கூட்டமைப்பு நிதியுதவியுடன் தமிழகத்தில் 8 மாவட்டங்களில் 124 இடங்களில் கட்டப்பட்டன. இது 344.2 சதுர மீட்டர் பரப்பளவு கொண்டது. இரண்டாவது, இது அடுக்குமாடிக் கட்டடம். இதன் விலை 8 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய். அப்பொழுதே, சேதுபாவாசத்திரம் ஒன்றியத்தில்கூட 4 இடங்களில் கட்டப்பட்டிருக்கின்றன. சேதுபாவாசத்திரம், அடைக்கத்தேவன், கணேசபுரம், செம்பிய மகாதேவப்பட்டினம் போன்ற இடங்களிலே கட்டப்பட்டன. ஆனால், தற்போது புயல் வரும் காலத்தில் பள்ளிக் கூடங்களிலும் மற்றும் சமூக நலக் கூடங்களிலும் மக்களைக் கொண்டுபோய் வைத்து பாதுகாக்கப்படுகிறது. அப்படி அவசியம் ஏற்படின் அங்குள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்தான் இதுபோன்ற பாதுகாப்பு மையங்களை ஏற்படுத்தி வருகிறார்கள். சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

---

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. கவன ஈர்ப்பு

### சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி மகுடஞ்சாவடியில் இரயில்வே மேம்பாலம் கட்டுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பேரவை விதி 55-ன்கீழ் ஓர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து திரு. ஐ. கணேசன் அவர்கள் மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்ப்பார்கள்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி இரயில்வே மேம்பாலம் கட்ட மத்திய அரசு அனுமதி அளித்த பின்பும் அப்பணி தொடங்கப்படாமல் உள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

### விவர அறிக்கை

கவன ஈர்ப்பு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள இரயில்வே மேம்பாலம் குறித்து, இரயில்வே துறையினர் 3/98-ல் 1 லட்சத்திற்கு மேல் போக்குவரத்து உள்ள கடவுகளை இனம் கண்டு, சாலைகள் மேம்பாலம் கட்டத் தகுதி உடையவை என்ற அடிப்படையில் ஒரு பட்டியலினை நெடுஞ்சாலைத் துறைக்கு அனுப்பியுள்ளனர். கடவு எண் 116, இரயில்வே கி.மீ. 353/32-34 எடப்பாடி-மகுடஞ்சாவடி சாலையில் கி.மீ.17/4-ல் உள்ளது. இக்கடவில் போக்குவரத்து எண்ணிக்கை 1,36,868. இந்தக் கடவு மேற்சொன்ன பட்டியலில் இடம் பெற்றுள்ளது. பட்டியலில் இடம் பெற்றிருந்தாலும் இரயில்வே துறையும் மாநில அரசும் நிதிநிலையைப் பொறுத்து, பட்டியலில் உள்ள வேலைகளை கொஞ்சம் கொஞ்சமாக, செயலாக்கத்திற்கு எடுத்துச் செய்கின்றன. 1998-99 ஆம் ஆண்டு இரயில்வே மேம்பாலத் திட்டத்தில் இரயில்வே துறை இப்பணியைச் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளவில்லை.

1999-2000 ஆண்டிற்கான இரயில்வே மேம்பாலத் திட்டத்தில் 12 வேலைகளை மட்டும் இரயில்வே துறையினர் சேர்த்துள்ளார்கள். இதிலும் எடப்பாடி மகுடஞ்சாவடி ரயில்வே மேம்பாலம் இடம் பெறவில்லை.







இரயில்வே துறையினர் இவ்வேலையை இரயில்வே வேலைத் திட்டத்தில் 50:50 என்ற விகிதத்தில் செலவைப் பகிர்ந்து கொள்ளுதல் அடிப்படையில் எடுத்துக் கொள்ள முன்வரும்போது மாநில அரசு எடுத்துச் செய்ய ஆவன செய்யும்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் பார்த்தேன்; படித்தேன்; வேதனையுற்றேன். பேரவைத் தலைவர் அவர்களே, மகுடஞ்சாவடி இரயில்வே கேட் மேம்பாலம் மூலம் போக்குவரத்து 1,36,868 என்று குறிப்பிட்டுள்ளீர்கள். மேம்பாலம் கட்டுவதற்கு ஒரு இலட்சம் அளவிற்கு போக்குவரத்து இருந்தால் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 1999-2000 ஆம் ஆண்டில் ஏதோ 12 மேம்பாலப் பணிகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். மகுடஞ்சாவடி காரணத்திற்காக என்னுடைய தொகுதியிலுள்ள மேம்பாலத்தை எடுத்துக் கொள்ளவில்லை. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நான் பணிவோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இடைப்பாடியிலிருந்து, தேவூரிலிருந்து மற்றும் ஜலகண்டாபுரத்திலிருந்து ஆயிரக்கணக்கான வாகனங்கள் ஒரு மணிக்கு சேலம் நோக்கிச் செல்கின்றன. குறுக்கே மகுடஞ்சாவடி என்ற இடத்தில் அந்த இரயில்வே பாலத்தில் ஒரு நாளைக்கு 120 முறைக்கு மேல் இரயில்வே கேட்டை மூடுகிறார்கள்; திறக்கிறார்கள். சிலசமயம் 4,5 வண்டிகள் வந்தால் திறப்பதுகூட இல்லை. ½ மணி, 1 மணி நேரத்திற்கு மேலே காலதாமதம் ஆகிறது. பிரசவக் கேஸ், ஆஸ்பத்திரி கேஸ், இன்டர்வியூ இதுபோன்ற நேரங்களிலே மிக மிக...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது என்ன சொற்பொழிவா? ஏன் கட்டவில்லை என்று கேளுங்கள்? அவர் அறிக்கை கொடுத்திருக்கிறார். அந்த அறிக்கையையொட்டி ஏதாவது கேள்வி கேட்காமல், நீங்கள் நீண்ட நேரம் பேசிக்கொண்டிருக்கிறீர்களே! இப்போது முதல்வருக்கும் போய்விட்டீர்களே?

**திரு. ஐ. கணேசன்:** கிட்டத்தட்ட 10 இலட்சம் மக்களுடைய வேதனைக்குரல். ஆகையாலே நம்முடைய அமைச்சர் அவர்கள் மத்திய அரசிடம் தொடர்பு கொண்டு இந்த ஆண்டு இதனுடைய முக்கியத்துவத்தைக் கருதி ஆவன செய்ய வேண்டும். மாண்புமிகு முதல்வர் என்று சொன்னதற்குக் காரணம், அவர் அந்த இடத்தினுடைய அமைப்பைத் தெரிந்தவர்; அந்த மண்ணினுடைய தன்மையைத் தெரிந்தவர்; அதற்காகத்தான் அவரைப்

பற்றிச் சொன்னேனேயொழிய வேறு எந்தக் காரணத்திற்காகவும் அல்ல. வேறு தடமே இல்லை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதல்வருக்கும் மகுடஞ்சாவடிக்கும என்ன தொடர்பு என்று நீங்கள் சொல்வதாக இருந்தால் அனுமதி கொடுக்கிறேன். (சிரிப்பு)

**திரு. ஐ. கணேசன்:** என்னுடைய நீண்டகால அனுபவத்தைவிட உங்களுடைய நீண்டகால அனுபவத்திலே, நம்முடைய கலைஞருக்கும் சேலத்திற்கும் உள்ள தொடர்பு, எந்தவொரு சரித்திரப் புருஷன் முதல்வரைப் பற்றி எழுதினாலும் சேலத்தினுடைய வரலாறு இல்லாமல் கலைஞருடைய வரலாறு தீட்டப்பட மாட்டாது. (மேசையைத் தட்டும் ஒலி) மந்திரி குமாரி காலத்திலிருந்து இன்றுவரை சேலத்திற்கும் அவருக்கும் தொடர்பு உண்டு. இருப்பினும், நான் வேதனையோடு இருக்கிறேன். எங்களை.... (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேதனையோடு இருக்கிற உறுப்பினர் சிரிக்கக்கூடாது (சிரிப்பு)

*முற்பகல் 10-40*

·**திரு. ஐ. கணேசன்:** வேதனைப் புன்முறுவலோடு, துன்பத்திலும் இன்பம் காண வேண்டுமென்ற பாரதியாரின் பாட்டுக்கு இணங்க (குறுக்கீடு) நம்முடைய (சிரிப்பு) பாரதிதாசன் (குறுக்கீடு) - ஏதோ ஒன்று - அந்தப் பாட்டுக்கு இணங்க (குறுக்கீடு) என்ன ஐயா, உட்கார். (சிரிப்பு) ஆகையாலே தயவுசெய்து இதை ஒரு கேலிக்கூத்தாக எண்ணவேண்டாம். இந்த அவையில் இது ஒரு மிகமிக முக்கியமான ஒரு கவன ஈர்ப்பு; என்னுடைய தொகுதி மக்கள் இதனால் மிகவும் பாதிப்பு அடைகிறார்கள். பக்கத்து தொகுதி சங்ககிரி, மேட்டூர் முதலிய 3 தொகுதி மக்களும் சேர்ந்து இந்தப் பாலத்தின் மீது செல்ல வேண்டிய மிகக் கொடூரமான சூழ்நிலை; மகுடஞ்சாவடியில் இறந்துவிட்டால்கூட, பாலத்தைத் தாண்டித்தான் சுடுகாடு இருக்கிறது; வேளாண்மைத்துறை அமைச்சரவர்களுக்கு நன்றாகத தெரியும். ஆகையாலே, சவத்தை மணிக்கணக்கிலே சுமக்க வேண்டிய கோரமான நிகழ்ச்சி அங்கே நடந்து கொண்டிருக்கிறது. இதை வேடிக்கைக்காகச் சொல்லவில்லை. வேதனையோடு சொல்கிறேன். இதனுடைய முக்கியத்துவத்தைக் கருதி, நீங்கள் இந்த ஆண்டு மத்திய அரசிடம் வற்புறுத்தி உங்களுடைய திறமையையெல்லாம் இதிலே காட்டி, எங்களுடைய ஊருக்கு அந்த மேம்பாலத்தைக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். நிச்சயமாக முதல்வர் நடவடிக்கை எடுப்பார் என்று எண்ணி....





***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இரயில்வே இலாகாவிற்கு, கணேசனின் இந்தக் கேள்விகளால் நாங்கள் துளைக்கப்படுகிற வேதனையை அறிவித்து, உடனடியாக நடவடிக்கை எடுத்து எங்களைக் காப்பாற்றுங்கள் என்று (சிரிப்பு) இரயில்வே இலாகாவிற்கு நிச்சயமாக எழுதுவோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் (குறுக்கீடு) (மணியடிக்கப்பெற்றது) இதிலே இன்னும் நான் அனுமதி கொடுக்கவில்லையே? அது முடிந்துபோய்விட்டது. அப்புறம் என்ன, நின்று பேசிக்கொண்டிருக்கிறீர்கள்?

**திரு. ஐ. கணேசன்:** நம்முடைய முதல்வர் அளித்த உறுதிமொழிக்கு நன்றி, நன்றி, நன்றி.

## 3. அறிவிப்பு

### கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்த உறுப்பினர்கள் அவையில் இல்லாததால் ஒரு கவன ஈர்ப்பு எடுத்துக்கொள்ளப்படாதது

**மாண்புமிகு பேரவைத் . தலைவர்:** அடுத்த கவன ஈர்ப்பு; இதற்கு அறிவிப்பு கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் இருவருமே அவையில் இல்லை. ஆகவே, அது எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது.

## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### *(அ) தமிழ்நாடு பிழைப்பூதியப் படித்தொகை வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு 1999*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, அரசினர் சட்டமுன்வடிவுகள், அறிமுகம் செய்தல். 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிழைப்பூதியப் படித்தொகை வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிழைப்பூதியப் படித்தொகை வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

[1999 மே 3

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**(ஆ) தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்



1999 மே 3]

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 5. மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### கோரிக்கை எண் 29—சமூக நலன்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 1999-2000 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 29—சமூக நலன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திருமதி எஸ்பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சமூக நலன் பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.558,57,58,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 4701, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மூவலூர் இராமாமிர்தம் திருமண நிதி உதவித் திட்டத்தில் 8 ஆம் வகுப்பு படித்தவர்களுக்கு பழையபடி நிதி உதவி அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.558,57,58,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2003, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "படித்த ஏழைப் பெண்களின் கல்வித் தகுதி எஸ்.எஸ்.எல்.சி. என்று உயர்த்தியதை மாற்றி பழையபடி எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்குத் திருமண உதவித்தொகை கிடைக்க வகைசெய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.558,57,58,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4324, திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.558,57,58,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4632, திரு. ப. ரங்கநாதன்.

***திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சத்துணவு மையங்களுக்கு தினசரி செலவிற்காக வழங்கப்படும் தொகையினை உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.558,57,58,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

முற்பகல் 10-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3347, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சத்துணவு மையங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்குச் சம்பளம் உயர்த்திக் கொடுக்கவும், அவர்களை நிரந்தர அரசு ஊழியர்களாக்கவும் வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.558,57,58,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3553, திரு. கே. தங்கமணி.



**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மூவலூர் இராமாமிர்தம் திருமண உதவித் திட்டத்தின்கீழ் ரூ.10,000 பெற, பெண்களுக்கு 8 ஆம் வகுப்பு படித்திருக்க வேண்டும் என்று இருந்ததை மாற்றி பத்தாம் வகுப்பு வரை படித்திருக்க வேண்டும் என்று நிர்ணயித்துள்ளதைப் பழையபடி 8 ஆம் வகுப்பு என்று மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.558,57,58,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2363, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பவானி தொகுதியில் உள்ள அரசு அங்கீகாரம் பெற்ற தையற்பயிற்சி பள்ளியில் பயின்ற தாழ்த்தப்பட்ட ஏழைப் பெண்களுக்கு தையல் இயந்திரங்கள் உடன் வழங்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.558,57,58,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2777, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தில் பயன்பெற கல்வித் தகுதி எட்டாம் வகுப்பு வரை என்பதை மாற்றம் செய்யாமல், தகுதி உள்ள அனைவருக்கும் நிதி உதவி அளித்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"சமூக நலன் பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.558,57,58,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4435, திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தற்போது ஊராட்சிப் பள்ளி சத்துணவு மையத்தில் பணிபுரியும் முன்னாள் மத்திய சமையற்கூட சமையலர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.558,57,58,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2966, திரு. ந. கருப்பண்ண உடையார்.

***திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாபநாசம் சட்டமன்றத் தொகுதியில் வசிக்கும் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள பெண்கள் சிறுதொழில்கள் தொடங்கக் கடன் வழங்கவேண்டியதன் அவசியம்பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.558,57,58,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 445, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.558,57,58,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3891, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின்படி மணப்பெண்ணிற்கான கல்வித் தகுதியை மீண்டும் எட்டாம் வகுப்பாக மாற்றப்பட வேண்டியதன் அவசியம்



குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.558,57,58,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3718, திரு. கே. ரவி அருணன்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நெல்லை மாவட்டத்தில், காத்திருப்போர் பட்டியலில் உள்ள ஊனமுற்றோருக்கு உதவித்தொகை மற்றும் கருவிகள் உடனடியாக வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிககையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.558,57,58,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கையும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலன் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்த அவையில் படித்ததாகக் கருதி அதைச் சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களின் அரிய கருத்துகளைத் தெரிவித்தபின்னர், என் பதிலுரையில் அவற்றுக்கான விளக்கத்தை அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள் விவாதத்தை தொடங்கி வைப்பார்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலன் மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பு நல்கிய தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக்

@ 407 முதல் 488 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

கடமைப்பட்டிருக்கிறேன். சத்துணவுப் பணியாளர்களை நிரந்தரப்படுத்துவதாக திராவிட முன்னேற்றக் கழகம் 1989 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் சொல்லி, பிறகு 1989 ஆம் ஆண்டு தேர்தலிலே வெற்றியும் பெற்று, அப்போது சத்துணவுப் பணியாளர்களை Part time permanent என்ற வகையில் மட்டுமே செய்து முடித்து இருக்கிறீர்கள். 16-4-1989 ஆம் தேதி அரசு ஆணை எண் 370-ன்படி அவர்களையெல்லாம் Part time permanent என்று ஆக்கியிருக்கக்கூடிய நிலையை மாற்றியமைத்து, தேர்தல் அறிக்கையில் சொன்னவாறு இந்தச் சத்துணவுப் பணியாளர்களை முழு நேரப் பணியாளர்களாக, நிரந்தரப் பணியாளர்களாக அரசு உடனடியாக அறிவிக்க வேண்டுமென்ற கோரிக்கையை நான் தமிழ் மாநிலக் காங்கிரஸ் சார்பாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

கர்மவீரர் காமராஜர் காலத்தில் உருவான மதிய உணவுத் திட்டத்திலே அன்று அவை பால்வாடிகளாகவும், பணியாற்றியோர் ஆயாக்களாகவும் இருந்து, அப்போது மாதச் சம்பளம் 20 ரூபாய் என்றும், ஆயாக்களுக்கு மாதச் சம்பளம் 10 ரூபாய் என்றும் ஆரம்பித்து, பிறகு அதிலே பரிணாம வளர்ச்சி பெற்று 1982 ஆம் ஆண்டு சத்துணவுத் திட்டமாக எம்.ஜி.ஆர் காலத்தில் உருவாக்கப்பட்ட பின்னாலே, அது மாற்றியமைக்கப்பட்டு இன்று அமைப்பாளர்களுக்கு 1000 ரூபாய் சம்பளம் என்றும், அதேபோல சமையலர்களுக்கு எல்லாம் 520 ரூபாய் சமபளம் என்றும், உதவியாளர்களுக்கு ரூ.420 சம்பளம் என்றும் அந்த அளவுக்கு இப்போது வளர்ச்சியைப் பெற்றிருந்தாலும்கூட, இன்று நாம் விவசாயக் கூலிகளுக்கு என்று இந்த அரசாங்கம் நிர்ணயித்த கூலியைப் போல, கோலப்பன் குழு நிர்ணயித்த கூலியைப் பார்த்தாலே தெரியும் - 45 ரூபாய் ஒரு பெண்ணுக்குக் கூலி, ஆடவர்களுக்குக் கூலி ரூ.54 என்ற கணக்குப்படி பார்த்தாலும்கூட, அந்தத் தொகை எங்கேயோ போகிறது. ஆனால் சத்துணவுப் பணியாளர்களுக்கு மாதம் ரூ.1000 என்பது நிச்சயமாகப் போதாத ஒன்று. அதையும் மாண்புமிகு முதலவர் அவர்கள் கருணையோடு இதைப் பரிசீலித்து அவர்களுக்கு முறையான அடிப்படைச் சம்பளத்தையும் கொடுத்து முழுநேர ஊழியர்களாக அவர்களை மாற்றியமைக்க வேண்டும் என்ற வேண்டுகோளை நான் பணிவோடு வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல, சத்துணவுப் பணியாளர்கள். அதிலே அமைப்பாளர்களை விட்டுவிட்டு, அங்கே இருக்கக்கூடிய சமையலர்கள்,



உதவியாளர்கள் என்று எடுத்துக்கொண்டால் இருவருமே ஓரளவுக்குச் சமமான பணியை ஆற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் செய்யக்கூடிய வேலைகள் ஒரு சம நிலையில் இருந்தாலும் கூட, அவர்களிடையே உதவியாளர்கள், சமையலர்கள் என்ற வேறுபாடு காரணமாக பிரச்சினைகள் எழுகின்றன. ஆகவே இவர்களையெல்லாம் சமப்படுத்தி, இவர்களைச் சத்துணவு உதவியாளர்கள் என்றே அரசு அறிவித்து அவர்களுக்குச் சமமான சம்பளத்தை வழங்கினால் பிரச்சினைகளைத் தவிர்க்கலாம் என்கிற ஓர் ஆலோசனையை நான் இங்கே வழங்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இப்போது குழந்தைகள் நல மையம், ஊட்டச்சத்து மையம், அங்கன்வாடி மையம் என்று மூன்று மையங்கள் இருக்கின்றன. இந்த மையங்களில் எல்லாம் இப்போது ஆட்குறைப்பு நடந்துகொண்டிருக்கிறது. இந்த ஆட்குறைப்பு காரணமாக சுமார் 30000 பேர் - இப்போது surplus staff என்று கணக்கிடப்பட்டு அவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டு வருகிறார்கள். இது அபாயகரமானது. இதனாலே 30,000 பேர் வேலை இழக்கக்கூடிய (மணியடிக்கப்பெற்றது).

முற்பகல் 10-50

*** மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 30 ஆயிரம் பேர் கூடுதலாக இருப்பது உண்மை. ஏற்கெனவே, ஒவ்வொரு மையத்திலும் ஒரு அமைப்பாளர் இருக்க வேண்டிய இடத்திலே இரண்டு பேர் முந்தைய அரசு காலத்திலே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படி 30 ஆயிரம் பேர் கூடுதலாக இருக்கின்றவர்களை கடந்த ஆறுமாத காலத்திற்கு முன்னால் தீக்கதிர் பத்திரிகையிலே "30 ஆயிரம் பேருக்கு வேலைக்கு ஆபத்து" என்ற தலைப்பிலே செய்தி வந்தவுடனே, மாண்புமிகு முதல்வரவர்கள், அப்படி எதுவும் நிகழ்வு இருக்கிறதா என்று எங்களை உடனே தொடர்புகொண்டு கேட்டவுடனே, அப்படி இல்லை என்று நாங்கள் தெரிவித்திருக்கின்றோம். அறிக்கையும் கொடுத்திருக்கின்றோம். ஏற்கெனவே பதவியில் இருக்கின்ற ஒருவருக்குக்கூட பதவி இழப்பை இந்த அரசு ஏற்படுத்தவில்லை. அது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே நன்றாகத் தெரியும்.

**திரு. சி. ஞானசேகரன்:** பதவி இழப்பு ஏற்படவில்லை என்றால் பரவாயில்லை. இருந்தாலும், வேலூர் போன்ற மாவட்டங்களிலே

இப்போதெல்லாம் ஆட்குறைப்பு என்ற பெயரால் அறிவிப்பு வந்து சில பேர் நீக்கப்பட்டு....

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக யாரையுமே பதவி இழப்புச் செய்யவில்லை இந்த அரசு.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பதவி இழப்பு என்று சொன்னால், அதாவது நீங்கள் அவர்களை இப்போது இருக்கக்கூடிய இடத்திலிருந்து வேறு இடத்திற்கு மாற்றுகிறீர்கள். ஆனால், புதியதாக வேலை வாய்ப்புப் பெறக்கூடியவர்களை, நீங்கள்–நிச்சயமாக ஏற்கெனவே surplus staff என்பதல்ல....

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கம், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு. இரண்டு பேர் வேலை பார்க்கின்ற ஓர் சத்துணவு மையத்திலே, ஒரு அமைப்பாளரே போதும். ஆனால், அருகிலே, 3 கிலோ மீட்டரில் இருக்கக்கூடிய ஏதாவது ஒரு சத்துணவு மையத்திலே காலியிடம் இருந்தால் அந்த இடத்திற்கு re-deployment செய்கிறோம். இப்படி பக்கத்திலே இருக்கக்கூடிய, 3 கிலோ மீட்டருக்குள்ளே இருக்கக்கூடிய மையத்திலே அவர்களுக்கு அதே வேலையைத்தான் கொடுக்கிறோம. ஆகவே, பதவி இழப்பு இல்லை. நிச்சயமாக தூரத்திற்கு அனுப்பவில்லை. அவர்கள் 3 கிலோ மீட்டருக்கு மேலே போக விரும்பினால்–சிலர் விரும்புகிறார்கள். அப்படி விரும்பினால்—இந்த அரசு அதையும் செய்து கொடுக்கிறது. 3 கிலோ மீட்டருக்குள்ளே போட வேண்டுமென்று வரைமுறை இருந்து, அந்த 3 கிலோ மீட்டருக்குள்தான் நாங்கள் மாறுதல் கொடுக்கின்றோம். இருக்கக்கூடிய அமைப்பாளர் இன்னும் தனக்கு வசதியான இடத்தைக் கேட்டால்கூட இந்த அரசு வழங்குகின்றது.

**திரு. சி. ஞானசேகரன்:** ஏற்கெனவே surplus staff என்ற பெயரால் நீங்கள் இப்படிச் செய்துவிடுகின்ற காரணத்தினாலே புதிதாக வேலை கோருபவர்களுக்குப் பதவி கிடைக்காத ஒரு நிலையும் இருந்து கொண்டிருப்பதை....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தான் சொன்னதைச் சாதிக்க வேண்டும்



என்பதற்காக திரு.ஞானசேகரன் அவர்கள் நீதிமன்றத்திலே வாதிடுவதைப்போல வாதாடிக் கொண்டிருக்கிறார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சரியான விளக்கம் தந்திருக்கிறார். யாரையும் பதவியைவிட்டு விலக்கவில்லை; பணி நீக்கம் செய்யப்படவில்லை என்று சொன்ன பிறகும், வேறு பொருள் கற்பிப்பது சரியல்ல.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதற்காக இந்தப் பிரச்சினையை நான் எழுப்புகிறேன் என்று சொன்னால், நீங்கள் ஒரு மையத்திலே ஒரு ஆளைப் போடுகின்றபோது வாரத்திற்கு ஒரு நாள் லீவு கொடுக்கிறீர்கள். ஏற்கனவே G.O. 502, தேதி 23-7-1992 பிரகாரம் பார்த்தால், அவர்களுக்கு நீங்கள் ஒரு நாள் விடுமுறை கொடுக்கிறபோது நாம் அவர்களுக்கு விடுமுறையே கொடுக்க முடியாத நிலைவந்துவிடும் என்கின்ற ஒரு நிலையும் இருக்கிறது. ஆகவே, இதையும் பரிசீலித்து நீங்கள் கூடிய விரைவில் surplus staff-ஐ மற்ற இடத்திற்கு மாற்றினாலும்கூட, புதியவர்களையும் வரவேற்பதற்கு நீங்கள் ஆட்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல பள்ளி மையங்களில் பணிபுரியும் சத்துணவுப் பணியாளர்களுக்கு இப்போதெல்லாம் treasury payment கொடுத்துவிட்டால் நன்றாக இருக்கும்; அங்கன்வாடி, அதேபோல மற்ற குழந்தைகள் நலமையம் இவைகளில் உள்ளவர்கள் எல்லாம் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், சத்துணவுப் பணியாளர்களுக்கு Collector Office-Director Office-லிருந்து Collector ஆபீசுக்குப் போய், பிறகு கருவூலத்திற்குப் லிருந்து B.D.O. ஆபீசுக்குப் போய், payment என்பது போகின்றபோது. அவர்களுக்குக் கிடைக்ககூடிய Pongal Bonus கிடைப்பதில்கூட காலதாமதம் ஆகக் கிடைக்கிறது. ஆகவே, treasury payment-க்கு நீங்கள் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே, கேட்டுக்கொள்ளக் ஆவன செய்ய வேண்டுமென்று கடமைப்பட்டிருக்கிறேன்.

சத்துணவு தயாரிப்பதற்காக [illegible] மற்றும் காய்கறி [illegible] இருந்தது. பொருட்கள் வாங்குவதற்காக 13 காசு என்று முதலிலே இந்த அரசு உயர்த்தித் பிறகு 1996 ஆம் ஆண்டு அதை 18 காசாக இந்த அரசு உயர்த்தித் தந்திருக்கிறது. இருந்தாலும்கூட, மாண்புமிகு முதல்வர் அவர்கள், அங்கே வாரத்திற்கு ஒரு முட்டை கொடுக்க வேண்டுமென்றெல்லாம் சொல்லி, 18 காசிலே இப்போது நிலையை மாற்றியமைத்த பின்னால்

விறகு, காய்கறி, மளிகைப் பொருட்கள் இவற்றையெல்லாம் வாங்குவது என்பது மிகவும் சிரமமான காரியம். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதைப் பரிசீலித்து, குறைந்தபட்சம் 35 காசாகவாவது அந்த செலவுத் தொகையை உயர்த்தித்தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10-55

அதேபோல, தமிழக முதல்வர் அவர்கள் ஏற்கெனவே, சென்ற ஆண்டு அறிவித்தார்கள்; G.P.F. எல்லாம் அந்தச் சத்துணவுப் பணியாளர்களுக்குப் பிடிக்கப்படும் என்று. ஆனால், இதுவரை அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதை நடைமுறைப்படுத்துவதற்கும் மாண்புமிகு முதல்வரவர்கள் ஆவன செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். சத்துணவு மையங்களுக்கு கட்டடங்கள் இல்லாத ஒரு பெரும் குறை பல இடங்களில் இருக்கிறது. பொதுவாக நகராட்சிகளை எடுத்துக் கொண்டாலும்கூட அங்கு இருக்கக்கூடிய கட்டடங்கள் எல்லாம் இடிபட்டு அங்கே உணவே சமைக்க முடியாத லாயக்கற்ற ஓர் இடமாக இருக்கிறது. சில இடங்களைப் பார்த்தால் கட்டடமே தரைமட்டமாகிவிட்டிருக்கிறது. சிலபேர் மரத்தடியிலே இப்போது சமையல செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு புதிய திட்டத்தை இதற்காக உருவாக்கி தமிழகத்திலே இருக்கக்கூடிய எல்லா சத்துணவு மையங்களுக்கும் கட்டடங்களை கட்டித் தந்து— ஏனென்றால் இப்போதெல்லாம் I.C.D.S. மானியமும் சரியாகக் கிடைப்பதில்லை. அப்படிக் கிடைத்தாலும் அது ஒருசில பகுதிகளுக்குத்தான் கிடைக்கிறது. மற்றப் பகுதிகளுக்குக் கிடைப்பதில்லை. ஆகவே, மத்திய அரசிலிருந்து பணம் வந்தாலும் சரி, வராவிட்டாலும் சரி, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழகத்திலே உள்ள எல்லா சத்துணவு மையங்களிலும் ஒரு பரந்த— ஏனென்றால் இப்போது இருக்கக்கூடியவற்றை குறுகலான இடத்தில் கட்டி விடுகிறார்கள், அது புகை மண்டலமாக இருக்கிறது. அந்த இடத்தில் சமையல் செய்ய முடியாத அளவிற்கும், சுகாதாரக் கேடு இருக்கக்கூடிய நிலையிலும் இப்போது சத்துணவு மையங்கள் இருந்து கொண்டிருக்கிற காரணத்தால் மாண்புமிகு முதல்வர் அவர்கள் எல்லா இடங்களிலும் சத்துணவு, மையங்களுக்கு (மணியடிக்கப்பெற்றது) உடனடியாக கட்டடங்கள் கட்டுவதற்கு ஆவன செய்ய வேண்டுமாய் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அதேபோல இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் சொல்கிறபோது, 8-வது வகுப்பு படித்த பெண்களுக்குக்கூட, நிதியுதவி வழங்கப்படும் என்று ஏற்கெனவே அறிவித்தார்கள், 10,000 ரூபாயைக் கொடுத்தார்கள். இப்போது 10-ஆம் வகுப்பு என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் உயர்த்தியிருக்கிற காரணத்தாலே தமிழகத்திலே இருக்கக்கூடிய ஏழையெளிய மக்கள், 8-ஆம் வகுப்போடு படிப்பை நிறுத்தி விடக்கூடிய நிலையில் இருக்கிற குடும்பத்தைச் சார்ந்தவர்கள் எல்லாம் மிக வருத்தத்தோடு இருந்து கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் பரிசிலனை செய்து, 10-ஆம் வகுப்பு என்று இருப்பதைத் தயவு செய்து அந்த உயர்வு வேண்டாம், அவர்கள் படித்துவிட்டு உயரட்டும், வேண்டாம் என்று சொல்லவில்லை. 8-ஆம் வகுப்பு படித்திருந்தாலே அவர்களுக்கு 10,000 ரூபாயைத் திருமண உதவித் திட்டத்தில் கொடுப்பதற்கு பழையபடியே மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட வேண்டும். இதுதான் தமிழகத்திலே இருக்கக்கூடிய அனைத்துத் தரப்பு மக்களுடைய எண்ணம் என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல முதியோர் உதவித் தொகையெல்லாம் நாம் நிறைய கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இதிலே சில அநாதைக் குழந்தைகள் இருக்கின்றன. முந்தின நாள் கருகம்புத்தூர் என்ற கிராமத்திற்கு நான் சென்றபோது, ஒரு குழந்தைக்குத் தாயும் இல்லை, தகப்பனாரும் இல்லை. அப்படி இருக்கிற அந்தக் குழந்தையை வயதான ஒரு மூதாட்டி பாதுகாக்கிறார்.

அநாதைக் குழந்தைகளுக்குக்கூட நாம் உதவித் தொகையை ஏற்படுத்துவதற்கோ, அதேபோல மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் அல்லது பைத்தியம் பிடித்த குழந்தைகள் போன்றவர்களைப் பாதுகாக்க முடியாத நிலை இருக்கிற காரணத்தால், இந்த உடல் ஊனமுற்றோர் அலுவலகத்திற்குச் சென்று சரியான, முறையான நிதி உதவி அவர்களாலே பெற முடியவில்லை. ஆகவே, ஒவ்வொரு கிராமத்திலும் V.A.O. மூலமாகவோ அல்லது R.D.O. மூலமாகவோ விசாரணை முடித்து, அந்த இடத்திலேயே அநாதைக் குழந்தைகளுக்கு, மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு நாம் உதவித் தொகையை வழங்குவதற்கு ஒரு புதிய திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் உருவாக்கித் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. சி. ஞானசேகரன்] [1999 மே 3

இங்கே மதுவிலக்குச் சட்டம் என்று ஏற்கெனவே நாம் அமல்படுத்திக் கொண்டிருந்தாலும் நிறைய இடங்களிலே கள்ளச்சாராயம் ஓடியவண்ணமாக இருந்து கொண்டிருக்கிற காரணத்தாலே குடிப்பவர்களுடைய எண்ணிக்கை தமிழகத்திலே அதிகரித்துக் கொண்டேதான் இருக்கிறது. அவர்கள் குடித்து குடித்துப் பழகியவர்கள் பின்னர் குடிக்காமலேயே இருந்துவிட்டால் அவர்களுடைய கை, கால்கள் எல்லாம் உதறல் எடுத்துக்கொள்கின்றன. ஆகவே, இவர்களையெல்லாம் திருத்துவதற்கு மது அடிமைகள் மறு வாழ்வு மையங்களை நாம் ஆங்காங்கே உருவாக்க வேண்டும். சில இடங்களிலே அலோபதி மருத்துவம் கொடுக்கிறார்கள், ஆனால் முறையாக யாரும் அதைக் கொடுக்காத காரணத்தாலே அவர்களில் சிலபேர் பாதிக்கப்பட்டு குடியை நிறுத்த மறுக்கிறார்கள். ஏனென்றால் குடியை விட்டுவிட்டால் கை, கால்கள் உதறல் எடுக்கின்றன என்ற காரணத்தைச் சொல்லி, மீண்டும் குடித்துக் கொண்டு இருக்கிறார்கள். என்னுடைய வாணியம்பாடியில்கூட டாக்டர் அக்பர் கவுஸர் என்ற மருத்துவர் புளியை வைத்து மிகச் சாதாரண முறையிலே வைத்திய முறையைக் கடைப்பிடிக்கிறார். புளியைத்தான் கரைத்துக் கொடுக்கிறார். ஏதோ இதுவொரு மிக எளிமையான வைத்திய முறை. இதுபோன்ற அவருடைய ஆலோசனையைப் பெற்று, அவருடைய உதவியைப் பெற்றும்கூட எல்லா மாவட்ட மையங்களிலும், அரசு மருத்துவமனைகளில்கூட இந்த மது அடிமைகள் மறுவாழ்வு மையத்தை எளிய முறையிலே அமைத்து, குடிகாரர்களுடைய வாழ்வைக் காப்பாற்றுவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல தையல் இயந்திரங்கள், கேட்கிறவர்களுக்கு எல்லாம் கொடுக்கக்கூடிய அளவிற்கு—ஏனென்றால் நிறைய பெண்கள் தையல் இயந்திரங்களுக்கு மனு போட்டுவிட்டு கிடைக்காமல் பல மாவட்டங்களிலே அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஒருமுறை எப்படியாவது நீங்கள் அவர்களுக்குப் போதிய அளவிற்குத் தையல் இயந்திரங்களைக் கொடுக்க வேண்டும். உடல் ஊனமுற்றவர்களுக்கு மூன்று சக்கர வாகனங்கள் இன்னும் பல மடங்கு தேவைப்படுகின்றன. அவற்றையெல்லாம் பெற்றுத் தருவதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு, நன்றி சொல்லி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி ஆர். சரஸ்வதி.



1999 மே 3]

**திருமதி ஆர். சரஸ்வதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை மானியத்தில் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு முதலமைச்சருக்கும், தங்களுக்கும் என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டம் என்பது பெண்கள் மற்றும் குழந்தைகளை மையமாகக் கொண்ட மானியமாகும். இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் பெண்களை முதன்மையாகக் கொண்டு ஆரம்பித்திருப்பதும், பெண்கள் நலனில் அதிகக் கவனம் செலுத்தும் நம்முடைய தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் துறைக்கு ஒரு பெண்ணை அமைச்சராக்கி சமூக நலத்தைக் காப்பதோடு பெண் இனத்திற்குப் பெருமை சேர்த்திருப்பது மிக மிகப் பொருத்தமானதாகும். கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்காகச் சேவை இல்லங்கள் 6 மாவட்டங்களில் நல்ல முறையில் நடைபெற்று வருகின்றன. இதுபோன்ற சேவை மையங்களை மாவட்டந்தோறும் அமைக்க வேண்டுமாய் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் — அந்த செல்விகள் - கணவனை இழந்த பெண்கள், போக வழி தெரியாமல் யார் ஆசை வார்த்தை சொன்னாலும் உடனே அவர்கள் பின்னால் பெட்டிகளைத் தூக்கிக்கொண்டு வண்டி ஏறிவிடுகின்றனர். இதனால், தான் கெடுவது மட்டுமல்லாமல், நாட்டையும் கெடுத்துவிடுகின்றனர். இந்த அபலைகளை எல்லாம் காப்பகத்தில் சேர்க்க நம்முடைய தலைவர் அவர்களால் மட்டுமே முடியும் என்பதால் இன்னும் அதிகப்படியான காப்பகங்கள் நிறுவ ஆவன செய்ய வேண்டுமாய் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-00

பெண்களுக்குச் சம உரிமை என்பது நமது கழக அரசின் இயல்பான நிலை. தொலைநோக்குப் பார்வையுடன் நல்ல பல திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. பெண் குழந்தைகள் இரண்டு பெற்றால் ரூபாய் 3,000 அந்தக் குழந்தைகளின் பெயரில் வைப்பு நிதியாகப் போடுவதும், வட்டந்தோறும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவியர் விடுதிகள் அமைத்து, அதில் பயிலும் அனைத்து மாணவியருக்கும் உணவு முதல் சீருடை வரை இலவசமாகத் தாயன்புடன் வழங்குவதும் நம்முடைய தலைவர் அவர்களின் மேலான திட்டம்—யாரோ பாராட்டு விழா டில்லியில் எடுக்க வேண்டும் என்பதற்காக இரவு 12-00 மணிக்கு கட்சிக்குள் 33 சதவீதம் பதவிகள் அளிக்கவில்லை, நம்முடைய தலைவர் அவர்கள்—

[திருமதி ஆர். சரஸ்வதி] [1999 மே 3

உள்ளாட்சி மன்றங்களில் பெண்களுக்கு 33 சதவீதம் இட ஒதுக்கீடு செய்து இன்று கிராமப்புறங்களில்-படிப்பறிவு இல்லாத பெண்கள்கூட தைரியமாகச் செயல்படும் அளவுக்குப் பெண்களின் தரத்தை இந்தச் சமுதாயத்தில உயர்த்தியவர் நம்முடைய தலைவர் அவர்கள். இந்த நிலையை வருங்காலத்தில் சட்டமன்றத்திலும், பாராளுமன்றத்திலும் கொண்டுவர நம்முடைய தலைவர் அவர்களால் மட்டுமே முடியும் என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பெண்களுக்கான முன்னேற்றம் என்பதும், சம உரிமை என்பதும், தெருவில் நடக்கும் பெண்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது என்பதும் பெண்களின் பொருளாதார முன்னேற்றத்தில்தான் உள்ளது என்பதை நன்கு புரிந்த தலைவர் அவர்களின் அரசு பெண்களுக்கு இலாபகரமான வேலைவாய்ப்பிற்காகப் பல்வேறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்துள்ளது. தற்பொழுது 136 சங்கங்கள் சிறப்பாக இப்படிப்பட்ட வேலைவாய்ப்பினை வழங்கிவருகின்றன. அதோடு இல்லாமல் சிறுதொழில் செய்வதற்காக காய்கறி வியாபாரம் முதல் பூ வியாபாரம் வரை பெண்களுக்கு அன்றாடம் கடன் தொகை வழங்குகிறது.

தையல சங்கங்கள் மூலம் சுமார் 63 இலட்சம் சீருடைகள் தைக்கப்பட்டு சத்துணவுத் திட்டத்தின்கீழ் பயன்பெறும் 1 முதல் 8-வது வகுப்பு வரை படிக்கும் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவியர்களுக்கு வழங்குவதன் மூலம் பல ஆயிரம் பெண்கள் வேலை வாய்ப்பினைப் பெறச் செய்கிறது நமது அரசு. ஆண்களால் முடிக்க முடியாத காரியத்தைக்கூட பெண்களால் முடிக்க முடியும். ஆனால் சொத்து சேர்ப்பது, நகை சேர்ப்பது, காலணிகள், புடவைகள், பங்களாக்கள் சேர்ப்பது, நாட்டைப் பிரித்து கட்சியைப் பிரித்து பின் முக்காடு போட்டுக்கொண்டு வருவதெல்லாம் பெண்களின் கடமை என்று இல்லாமல் அரசு அளித்திருக்கும் நல்ல திட்டங்களைச் செயல்படுத்தி தானும், தன் குடும்பமும் உயர்வதன் மூலம் நாட்டை உயர்த்துவதே பெண்களின் கடமையாகக்கொள்ள வேண்டும்.

தலைவர் அவாகளே. தாராபுரம் நகரில் பிளஸ் 2 வரை படித்த பெண்கள் அதிகமாக உள்ளார்கள். இவர்கள் மேல்படிப்பிற்காகவோ அல்லது வேலைக்குச் செல்வது என்றாலோ அது முடியாத நிலையாக உள்ளதால் அவர்கள் படித்துவிட்டு ஆடு மாடு மேய்த்துக் கொண்டிருக்கிறார்கள். பெண்கள் நலனில் அதிக அக்கறை உள்ள



1999 மே 3] [திருமதி ஆர். சரஸ்வதி]

நம்முடைய முதல்வர் அவர்கள் தாராபுரத்தில் பெண்களுக்குப் பயன்படும் வகையில் ஒரு தொழிற்சாலை அமைத்துக் கொடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தாராபுரம் நகரில் செல்லும் அமராவதி வாய்க்காலில் சுமார் 5 கி.மீ நீளத்திற்குச் சாக்கடை நீர் கலப்பதால் சுகாதாரக்கேடும், கொசுத் தொல்லையும் அதிகமாக உள்ளது. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் அந்த வாய்க்காலுக்கு சிமெண்ட் தளம் அமைத்துக் கொடுத்து, எங்கள் நகரைச் சுகாதாரக்கேட்டில் இருந்து காப்பாற்றிக் கொடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தாராபுரம் நகரில் 6 மாதங்கள் குடிநீர் கிடைப்பதும், மீதி 6 மாதங்கள் வறட்சியாக உள்ளதால் அமராவதி ஆற்றின் குறுக்கே ஒரு செக் டேம் கட்டி, தாராபுரம் மக்களின் குடிநீர் மற்றும் விவசாயிகளின் குறைகளை நீக்குமாறு மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். நகர்ப்புற பெண்களைப்போல் கிராமப்புற பெண்கள் விழிப்புணர்வு பெற வாய்ப்புகள் குறைவாக உள்ளதால் அன்றாடம் பார்க்கும் 'சக்தி' தொடர்போன்று தொலைக்காட்சியில் தொடராக அரசின் நலத் திட்டங்கள் மற்றும் அன்றாடம் அறிவிக்கப்படும் நல்ல திட்டங்களை கிராமப்புற மக்களும் காண ஒளிபரப்புச் செய்ய வேண்டுமாய் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

குழந்தை இல்லாதவாகள் குழந்தை பிறப்பதற்காக மருத்துவர்களைத் தேடி அலைவதும், அளவில்லாத துன்பப்படுவதும் இன்று அதிகமாக உள்ளதால் இது ஒரு குறை அல்ல என்று அவர்களுக்கு எடுத்து உரைக்கவும், அவர்கள் அனாதைக் குழந்தைகளைத் தத்து எடுக்க ஊக்குவிப்பதற்கும் அரசு தகுந்த திட்டங்களைத் தீட்ட வேண்டும். அதில் உள்ள சட்டச் சிக்கல்களை அரசு களைய முனைந்திருப்பது பாராட்டப்பட வேண்டிய ஒன்று. இதனால் காப்பகங்களில் குழந்தைகளின் சேர்க்கை குறையும். அரசு மருத்துவமனைகளைப் பெரிய நிறுவனங்கள தத்து எடுதது, மருத்துவமனைக்குத் தேவையான வசதிகள் செய்வது போன்று குழந்தைகள் காப்பகங்களையும் இதுபோன்ற நிறுவனங்கள் தத்து எடுக்க அரசு நடவடிக்கை எடுப்பதன் மூலம் குழந்தைகளின் பாதுகாப்பு நிலை உயரும். இதனால் அரசின் செலவுகள் குறையும் என்பதால் இதை நடைமுறைப்படுத்த ஆவன செய்யுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-05

வேலைக்குச் செல்லும் பெண்களின் நிலை அறிந்து அவர்களுக்குப் பாதுகாப்பளித்து அவர்களை ஊக்குவிக்கும்பொருட்டு வட்டங்கள்தோறும் சிறு குழந்தைகள் காப்பகம் அமைக்க ஆவன செய்யுமாறு வேண்டுகிறேன்.

கலப்புத் திருமணங்களை ஆதரிப்பதும், ஊக்குவிப்பதும் நம்முடைய கலைஞர் அரசுதான். கலப்பு மணங்களுக்கு இன்று மக்களிடையே நல்ல வரவேற்பும், ஓரளவு எதிர்ப்புகள் குறைந்தும் உள்ளன. சாதி அடிப்படையிலான குறைபாடுகள் முடிந்தவரை களையப்பட்டுவிட்டன. சாதி மற்றும் மத அடிப்படையிலான கட்சிகள்கூட தங்களுடைய முந்தைய நிலையைவிட்டு வெளிவந்திருப்பதை தெளிவுபடுத்திவிட்டன. இன்னும் குறுகிய வட்டத்திற்குள் நின்று சாதி பற்றிப் பேசி வருபவர்களை மக்கள் நம்பத் தயாராக இல்லை.

தாராபுரம் நகரில் வர இருக்கும் மூன்றாம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரைவில் ஆரம்பிக்க மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை ஆவன செய்யுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

தாராபுரத்தில் போக்குவரத்து ஆய்வாளர் அலுவலகம், கல்வித் துறை ஆய்வாளர் அலுவலகம், வேளாண்மைத் துறை ஆய்வாளர் அலுவலகம், பத்திரப்பதிவுத் துறை அலுவலகம் ஆகியவை தனியார் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இவற்றை ஒரே கட்டடத்தில் இயங்க அரசு கட்டடம் ஒன்றைக் கட்டித்தர ஆவன செய்யுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தாராபுரம் முதல் மடத்துக்குளம் வரை சாலை மிகவும் மோசமாக உள்ளது. அதில் பேருந்து செல்ல மிகவும் சிரமமாக உள்ளது. இந்தச் சாலையைச் சீர் செய்து அதனை இருவழிச் சாலையாக மாற்ற ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும், இந்த வழியில் செக்கான் ஓடை என்ற ஓடை ஒன்று உள்ளது. அது சாலையோடு சேர்ந்து இருப்பதால், மழைக்காலங்களில் பேருந்துகள் செல்ல முடியாமலும், மக்கள் நடக்க முடியாமலும், மழைநீர் அனைத்தும் வயலுக்குப் போய் பயிர்களை அழித்து விடுவதாலும், இதனைத் தவிர்க்கும்பொருட்டு நெடுஞ்சாலைத் துறை சிறு தரைப் பாலத்தை இந்த ஆண்டே அமைக்க ஆவன செய்யுமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.



வயதானவர்கள், பதவியில் இருந்து ஓய்வுபெற்ற பெரியவர்கள் தங்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்ற நிலை மாறி, பெற்ற குழந்தைகள் கைவிட்டாலும் அரசு காப்பகங்கள் உள்ளன என்று நிம்மதிப் பெருமூச்சுவிடும் அளவிற்குப் பல மாவட்டங்களிலும் உள்ள முதியோர் இல்லங்கள் போன்று எல்லா மாவட்டங்களிலும் நிறுவ அரசு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

வேலைவாய்ப்புகளில் வாரிசு அடிப்படையில் முன்னுரிமை வழங்குவதுபோன்று விதவைப்பெண், கணவனால் கைவிடப்பட்ட பெண்களின் பெண் குழந்தை ஒன்றுக்கு அரசுப் பணியில் முன்னுரிமை வழங்க பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

ஆரம்பப் பள்ளிகளே இல்லாத கிராமங்களே இல்லை என்ற நிலையை உருவாக்க வேண்டும் என்ற நம்முடைய தலைவர் அவர்களின் திட்டம் போன்று, ஊட்டச் சத்து மையங்கள் இல்லாத கிராமங்களே இல்லை என்ற நிலையை உருவாக்க, ஊட்டச் சத்து மையங்கள் இல்லாத கிராமங்களைக் கணக்கெடுத்து இதுபோன்ற மையங்களை உருவாக்க வேண்டுமாய் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

சத்துணவு மையங்களில் காலியிடங்களை நிரப்ப பெண்களை நியமிக்க வேண்டும் என்பது வரவேற்கத்தக்கது என்றாலும், படித்த இளைஞர்கள் வேலை இல்லாமல் அதிகமாக உள்ளதால் அவர்களையும் பணியில் அமர்த்த ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

முதியோர் உதவித் தொகை, தனியார் முதியோர் இல்லங்களில் தங்கியிருக்கும் முதியோருக்கு வழங்குவதில்லை. அவர்கள் தங்களுடைய சிறு சிறு தேவைகளுக்குப் பணம் இல்லாமல் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஒரு டீ சாப்பிட வேண்டும் என்று நினைத்தால்கூட அவர்களிடம் பணம் இல்லாமல் இருக்கும் நிலை மாற இவர்களுக்கும் உதவித் தொகை கிடைக்க ஆவன செய்யுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

சுயவேலைவாய்ப்புத் திட்டங்கள், பார்வையற்றோரைத் திருமணம் செய்துகொள்ளும் பார்வையுள்ளோருக்குச் சலுகைகள், ஊனமுற்றோரைத் திருமணம் செய்துகொள்ளும் ஊனம் இல்லாதவருக்குச் சலுகைகள், கடும் ஊனமுற்றோருக்கான பராமரிப்புகள், சட்டப் படிப்பு முடித்த ஊனமுற்றோருக்கு உதவித்தொகை, இதுபோன்ற நல்ல திட்டங்களை அரசு வருடா வருடம் நிறைவேற்றி வருகிறது. இதனைப் புத்தகமாக வெளியிட்டாலோ அல்லது

[திருமதி ஆர். சரஸ்வதி] [1999 மே 3

சுவரொட்டிகள் மூலம் தெரிவித்தாலோ தவிர, கிராம மக்களை இந்த விவரங்கள் சென்றடையாத நிலை உள்ளதால், அவற்றைத் தொடராகத் தயாரித்து தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பு செய்ய வேண்டுமாய் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாராபுரம் நகரில் தாழ்த்தப்பட்ட காட்டுநாயக்கர் இனத்தைச் சேர்ந்த சுரேஷ், நாட்ராயன், மனோகரன் என்ற மூன்று இளைஞர்கள் 2-5-1999 அன்று கழிவுநீர்த் தேக்கத் தொட்டியைச் சுத்தம் செய்யும்போது விஷ வாயு தாக்கி இறந்துவிட்டார்கள். இறந்தவர்களில் இருவர் நகராட்சியில் துப்புரவுப் பணியாளர்களாகப் பணியாற்றுகிறார்கள். இறந்தவர்களில் ஒருவரான நாட்ராயன் என்பவருக்குத் திருமணம் ஆகி 11 மாதங்களேதான் ஆகின்றன. சம்பவம் நடந்த அன்று காலை 5 மணிக்கு ஆண் குழந்தை பிறந்தது. 6 மணிக்கு குழந்தையின் தந்தை இறந்துவிட்டார். மனோகரன் என்பவருக்கு இரண்டு பெண் குழந்தைகள் உள்ளன. இரண்டு குழந்தைகளும் ஆரம்பப் பள்ளிக்கூடம் செல்லும் குழந்தைகள். சுரேஷ் இன்னும் திருமணம் ஆகாதவர். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் வாரிசு அடிப்படையில் இரண்டு இளம் விதவைப் பெண்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதோடு தாழ்த்தப்பட்ட மிகவும் ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்த இவர்களுக்குக் குறைந்தது ரூ.50,000 முதலமைச்சர் நிவாரண நிதியாகக் கொடுத்து, மீளாத் துயரத்தில் வாடும் அந்தக் குடும்பங்களைக் காப்பாற்றுமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் மனு கொடுத்திருக்கிறேன்.

கருணை உள்ளம் கொண்ட தலைவர் அவர்கள் நிதி கொடுப்பதாகத் தெரிவித்து இருக்கிறார்கள். அந்தத் தொகையை வெகுவிரைவில் கொடுக்கத் தாங்கள் ஆவன செய்யுமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது) நிகரில்லாத் தலைவர் அவர்களின் திட்டங்களை நிறைவேற்றும் இந்த மானியத்தில் பேச வாய்ப்பு அளித்தமைக்காகவும் நன்றி தெரிவித்து, விடைபெறுகிறேன்; நன்றி, வணக்கம்.

முற்பகல் 11-10

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.



1994 மே 3]

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆம் ஆண்டினுடைய சமூக நலத் துறை மானியக் கோரிக்கையிலே பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றியைச் சொல்லி, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் ஒரு சில கருத்துக்களை கூறிக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். சமூக நலம் என்பது நாட்டிலே அடிமட்ட மக்களுக்கு, குறிப்பாகப் பெண்களின் அக்கறையிலே அதிக ஆர்வம் உள்ள துறை என்பதை உள்ளபடியே மனமார நாங்கள் வரவேற்கிறோம், பாராட்டுகிறோம். அதிலும் குறிப்பாக சமூக நலத் துறை என்பது பெண்கள் முன்னேற்றம், தாய்-சேய் நலம், குழந்தைகள் பாதுகாப்பு, மழலையருடைய கல்வி நலன், உடல் ஊனமுற்றோர், விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், ஆதரவற்ற குழந்தைகள், முதியோர் இப்படிப் பலதரப்பட்ட இவர்களை எல்லாம் கைதூக்கி விடுவதற்கு இந்தத் துறை அமைக்கப்பட்டு, இன்றைய நிலையிலே செவ்வனே செயலாற்றி வருவதை நாங்கள் மனதார வரவேற்கிறோம், பாராட்டுகிறோம்; ஒரு ஆண் படித்தார் என்று சொன்னால், அவர் மட்டும் படித்ததாகப் பொருள்; ஒரு பெண் படிக்கின்றபோது அந்தக் குடும்பமே படித்ததாகப் பொருள்படும் என்று தந்தை பெரியார் அவர்கள் சொன்னார்கள். அந்த வகையிலே வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைத்த நிலைமை எல்லாம் மாறி, இன்று பெண் அடிமை போக்கக்கூடிய அளவுக்கு நிலைமை எல்லாம் மாறி வருவதை நாங்கள் மனதார வரவேற்றாலும்கூட, இப்படி பெண் உரிமை பேணுவதற்காக, பெண்களுக்குச் சம வாய்ப்பு வருவதற்காக இன்னும் நம்முடைய அரசு அதிகமான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். தந்தை பெரியார் சொன்ன அந்தக் கொள்கைகளை எல்லாம் வைத்து, பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிறுவனராக இருக்கக்கூடிய டாக்டர் ஐயா அவர்கள் எங்களுடைய கட்சியிலேகூட கட்சியினுடைய தலைவர், செயலாளர், பொருளாளர் என்று அதிகாரம் கொடுத்து இந்த மூன்று பொறுப்புகளிலே ஒரு பொறுப்பு என்று சொல்லக்கூடிய வகையிலே, மூன்றில் ஒரு பங்கினைப் பெண்களுக்காக ஆரம்ப காலத்திலே இருந்து கொடுத்து வருகிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் மகிழ்ச்சியாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தந்தை பெரியாரைப் போல, எங்களுடைய கட்சியின் நிறுவனர் டாக்டர் ஐயா அவர்கள் எல்லா நிகழ்ச்சிகளிலும் சொல்லி

வருவதெல்லாம், பெண்களுக்குச் சம உரிமை, சம பங்கு, சம வாய்ப்பு, சம அந்தஸ்து என்று சொல்லக்கூடிய வகையிலே பெண்களுக்கு எல்லா நிலைகளிலும் முக்கியத்துவம் வழங்க வேண்டுமென்று எங்கள் இயக்கத்தின் ரீதியாகச் சொல்லி வருகிறோம்.

அந்த வகையிலே, இப்படி, அரசியல் கட்சிகள் எத்தனைதான் முயற்சிகளை மேற்கொண்டு பரப்பி வந்தாலும்கூட, நம்முடைய அரசு அதை இன்னும் அதிக அளவிலே செயல்படுத்த வேண்டும். அப்படிச் செயல்படுத்துவதற்கு எல்லா நிலைகளிலும், குறிப்பாக, பெண்களுக்கு பல்வேறு பயிற்சிகளைக் கொடுத்து, கலந்துரையாடல் நிகழ்ச்சிகளை எல்லாம் ஏற்பாடு செய்து, மாவட்டந்தோறும் இப்படிச் செய்கின்ற காரணத்தினாலே பெண்கள் விழிப்புணர்ச்சி பெறுவார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உதாரணத்திற்குச் சொல்வோம் என்று சொன்னால், எங்களுடைய தருமபுரி மாவட்டம், அதிலும் குறிப்பாக, என்னுடைய பெண்ணாகரம் தொகுதி கல்வியிலே மிகவும் பின்தங்கிய பகுதியாக, பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய தொகுதியாக இருந்தாலும்கூட, அங்கேயெல்லாம் தொண்டு நிறுவனங்கள் மகளிர் குழுக்களை அமைத்து, சிறப்பாகப் பணியாற்றி வருகின்றன. அந்த . மகளிர் குழுக்கள் தங்களுக்குள்ளே சேமிப்பை வளர்த்துக் கொள்வதன் மூலமாக மாதந்தோறும் ஒரு குறிப்பிட்ட தொகையைச் சேமிப்பது, அந்தத் தொகையை ஒருவருக்கு ஒருவர் மாறி மாறி கடன் வழங்குவது, திரும்பப் பெறுவது, இப்படிப்பட்ட நல்ல நிலைகளிலே முன்னேற்றம் அடைவதை இப்போது நாம் கண்டு கொண்டு இருக்கிறோம். இப்படி தொண்டு நிறுவனங்கள், அதிலும் குறிப்பாக மைராடா பிளான் போன்ற பல்வேறு தொண்டு நிறுவனங்கள் பெண்களுடைய முன்னேற்றத்திலே அதிக அக்கறை செலுத்தி வருகின்றன. அதிலே சில இடங்களிலே சில தொண்டு நிறுவனங்கள் வருமானத்தின் பெயரால் மோசடி எல்லாம் செய்து வருகின்றன. ஆகவே, நம்முடைய அரசு இதைக் கண்காணித்து பெண்கள் முன்னேற்றத்திற்காக அதிக கவனம் செலுத்தக்கூடிய, நல்ல வழிகளிலே பணியாற்றக்கூடிய நல்ல தொண்டு நிறுவனங்களை ஊக்குவிக்க வேண்டும். அதேபோல, மாவட்டந்தோறும், எல்லா ஒன்றியங்கள் தோறும் மகளிர் முன்னேற்றத்திற்காக, மகளிர் விழிப்புணர்வு பெறுவதற்காக, பெண் கல்வியைப் பேணுவதற்காக இந்தத் திட்டத்தை இன்னும் ஊக்குவிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டத்திற்கான கல்வித் தகுதியை 8-ஆம் வகுப்பிலேயிருந்து 10-ஆம் வகுப்பாக உயர்த்தியிருப்பது எல்லா மட்டத்திலேயும் வேதனையை உருவாக்கியிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் இதைப்பற்றி பேசிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் மீண்டும் மறுபரிசீலனை செய்து, அந்த 10-ஆம் வகுப்பு என்பதை 8 ஆம் வகுப்பு என்று அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டு விண்ணப்பித்தவர்கள் ஆயிரக்கணக்கிலே ஒவ்வொரு மாவட்டத்திலும் காத்துக்கொண்டிருக்கிறார்கள். 8-ஆம் வகுப்பு என்று இருந்தது, தற்போது 10-ஆம் வகுப்பு என உயர்த்தப்பட்டுவிட்டதே என்று சொல்லி ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். அந்த விண்ணப்பங்களையும் பரிசீலனை செய்து, நடப்பாண்டிலே அந்த உதவித் தொகை அவர்களுக்கும் கிடைக்க வழிவகை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முதியோா உதவித் தொகை வழங்கும்போது வாரிசு இல்லாதவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. சிலருக்கு வாரிசுகள் இருந்தாலும்கூட, சில குழந்தைகள் பெற்றோரைக் கவனிப்பதில்லை, பராமரிப்பதில்லை. அவர்களில் ஒரு சிலர் இந்த மாவட்டத்தைவிட்டு, மாநிலத்தைவிட்டு, கூலி வேலை செய்வதற்குச் சென்று விடுகிறார்கள். அந்த நிலையிலே அந்தப் பெரியவர்கள், பெற்றோர்கள், முதியவர்களெல்லாம் வேதனைப்படக்கூடிய ஒரு நிலையிருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்டவர்களுக்கு வாரிசு இருந்தாலும்கூட, உதவித்தொகை வழங்கப்படுமென்று முதலமைச்சர் அறிவித்திருந்தாலும்கூட, அது நடைமுறையில் அவர்களுக்குப் பயன் தரவில்லை. மீண்டும் உத்தரவிட்டு, பாதிக்கப்பட்டவர்கள் பயன்பெறுகிற வகையிலே வழிவகை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதியோர் உதவித் தொகை பெறுவதிலே, வாரிசு இருந்தாலும் அந்த உதவித் தொகை கிடைக்குமாறு செய்ய வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்கள். ஏற்கெனவே நான இந்த அவையிலே அதற்கான விளக்கங்களைத் தந்திருக்கிறேன். விதவைப் பெண்களுக்கு

18 வயது பூர்த்தியடைந்த மகன் இருந்தாலும் உதவித் தொகையைக் கொடுக்கலாம் என்று அறிவிப்புச் செய்யப்பட்டிருக்கிறது. அதற்கான அரசாணை வழங்கப்பட்டிருக்கிறது. அதேபோல, முதியோர், ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் பராமரிப்பதற்கு உரியவர்கள் எவருமே இல்லை என்று அந்தப் பகுதியிலே இருக்கின்ற ஊராட்சி மன்றத்தின் மூலமாக ஒப்புதல் பெற்றுத் தருவார்கள் என்று சொன்னால், அவர்களும் இந்தத் திட்டத்தின் மூலம் பயன்பெறுவதற்கு வழி உண்டு என்பதை இந்த அரசின் சார்பாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியது உண்மை. இது நடைமுறையிலே இருந்தாலும்கூட, என்னுடைய தொகுதியில், மக்கள் குறை தீர்க்கும் நாள் நிகழ்ச்சி நடந்தது. அந்த நிகழ்ச்சியிலே உண்மை நிலையை எடுத்துச் சொல்கிறார்கள். ஊர்ப் பெரியவர்கள் எல்லாம் சொல்கிறார்கள். கிராம நிருவாக அலுவலர் சொல்கிறார். ஊராட்சி மன்றத் தலைவர் சொல்கிறார். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், இவர்களுக்கு உதவித் தொகை வழங்க வேண்டுமென்று வாய்மொழியாக, நேரடியாகச் சொல்கிறார். இருந்தாலும் கூட, 6 மாதமாக அங்கே 4, 5 பேர்களுக்கு இன்னும் உதவித் தொகை வழங்கப்படாமல் அவர்கள் புறக்கணிக்கப்பட்டு வருகிறார்கள். இப்படி நடைமுறையிலே சிக்கல் இருக்கிற காரணத்தால்தான், அதையெல்லாம் சரி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சத்துணவுப் பணியாளர்களைப் பொறுத்தவரையிலே மிகக் குறைந்த ஊதியம் பெறுகிறார்கள். நீண்ட நாட்களாகப் பணியாற்றி வருகிறார்கள். அடிமட்டத்திலே, குழந்தைகளோடு பணியாற்றக்கூடிய அவர்களுக்கு இன்னும் ஊதிய உயர்வு வழங்க வேண்டும். அவர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பணியாளர்களைப் பொறுத்தவரையிலே, பள்ளிகளிலே சத்துணவுப் பணியாளர்கள், குழந்தைகள் நலக் காபபக அங்கன்வாடிகள், ஊட்டச் சத்து மையங்களிலே பணியாற்றுபவர்கள், அமைப்பாளர்கள், சமையலர்கள், உதவியாளர்கள் அனைவரையும் நிரந்தரப்படுத்தி, ஊதிய உயர்வு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சத்துணவுக்கு 18 பைசா என்பது மிகக் குறைவாக இருக்கிறது. அதை இன்னும் கூடுதலாக ஆக்கித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)



குழந்தைகள் நலக் காப்பகங்களுக்கு கட்டடம் இல்லாமல் இருக்கிறது. பள்ளிக்கூட பழைய கட்டடம் எல்லாம் இடிந்த நிலையில் இருக்கிறது. பள்ளிக்கூட சத்துணவு மையங்கள் மரத்தடியிலே, கொட்டகை போட்டு, அங்கே சமையல் செய்கின்ற நிலைமை இருக்கிறது. இவை மழைக் காலங்களில் பாதிக்கப்படக்கூடிய நிலையில் இருக்கின்ற காரணத்தினாலே உரிய கட்டடங்கள் கட்ட வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன்.

இங்கே செல்வந்தர்கள் இருக்கிறார்கள், ஏழைகள் இருக்கிறார்கள். வயதான காலத்திலே அவர்கள் தங்குவதற்கு அல்லது மனம் அமைதியாக இருப்பதற்கு எங்கேயாவது நாடிச் செல்கின்ற நிலை இருக்கிறது. அவர்களுக்கு மன அமைதி ஏற்படுவதற்கு, வயதான ஏழைகள் பயன்பெறுகின்ற அளவிற்கு, மாவட்டந்தோறும் முதியோர் காப்பகம் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள் எல்லாம் தையல் பயிற்சிக்கு விண்ணப்பித்தும், நீண்ட நாட்களாகியும் அவர்களுக்கு அனுமதி வரவில்லை. பயிற்சி முடிந்தவுடன் தையல் மிஷின் கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாணவர்களுக்கு, ஊனமுற்றவர்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்குவதைப் போல, கிராமப்புறத்திலே இருக்கக்கூடிய உடல் ஊனமுற்றவர்கள் எல்லோருக்கும் இலவச பஸ் பாஸ் வழங்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

*முற்பகல் 11-20*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. த. நடராஜன்.

* **திரு. த. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சமூக நலத் துறை மானியத்திலே பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"பெண்ணடிமை தீருமட்டும் பேசும் திருநாட்டு
மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே!"

என்று பெண் விடுதலைக்காகப் பாடிய பாவேந்தர் பாரதிதாசனுடைய வரிகளுக்கொப்ப, தன் வாழ்நாள் முழுவதும் பெண்கள் சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட தந்தை பெரியாரின் கொள்கையை நனவாக்குகின்ற வகையில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் செயல்பட்டுக் கொண்டு வருகிறார்கள் என்பதை இந்த நாடே அறியும்

கடந்த காலத்தில் ஒரு பெண்ணே இந்த மாநிலத்தின் முதல்வராக இருந்தும்கூட, பெண்களுக்காக எந்தவொரு சிறப்பான திட்டத்தையும் தீட்டாமல் இருந்ததை நன்கு அறிவோம். ஆனால், தன்னையும், தன் தோழியை மட்டும் பொருளாதாரத்தில் உயர்த்தி, இந்த நாட்டிலுள்ள தாய்மார்களின் வியர்வைகளிலிருந்து சிந்திய பணத்தைக் கொள்ளையடித்து, அவர்கள் மட்டும் இங்கிலாந்து ராணிகளாக வலம் வந்து கொண்டிருந்த அந்தக் காட்சியையெல்லாம் பார்த்திருக்கிறோம். ஆனால், நம்முடைய முதல்வர் அவர்கள் உண்மையாகவே பெண்களுக்காக சொத்திலே சம உரிமை, பெண்களுக்கு உள்ளாட்சி மன்றங்களில் 33 விழுக்காடு, பெண்களுக்கு வேலைவாய்ப்பில் 30 விழுக்காடு பெண்கள் திருமண நிதியுதவித் திட்டம், ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் நியமிக்கப்படுகின்ற ஆசிரியர்கள் பெண்களாக நியமிக்கப்பட வேண்டுமென்று இப்படிப் பல்வேறு திட்டங்களை செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிவோம் என்று இந்த நேரத்திலே சொல்லி, இந்த நாடு சமூக, பொருளாதார, கல்வி மற்றும் அரசியலில முழு வளர்ச்சி அடையவேண்டுமானால, பெண்கள் மற்றும் குழந்தைகள் நல முன்னேற்றத்தில் மிக அக்கறையோடு செயல்பட வேண்டும். அப்படி இந்தத் துறை இன்றைக்கு மணம் புரியும் மங்கையர் நலம், கருவுற்ற மகளிர் நலம், தாய்-சேய் நலம், குழந்தைகள் நலம், பள்ளிப் பிள்ளைகள் நலம், பெண் குழந்தைகள் நலம், ஊனமுற்றோர் நலம், ஆதரவற்றோர் நலம் மற்றும் முதியோர் நலம் என்று எல்லா வகையிலும் சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதை உண்மையிலேயே பாராட்ட வேண்டும். அதிலே முதலாவதாக, விதவைகள், ஆதரவற்ற, கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்காகச் சேவை மையங்கள் ஆறு மாவட்டங்களில் மட்டும்தான், இன்றைக்குச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அந்தச் சேவை மையங்கள் மிகச் சிறப்பாக செயல்படுகின்ற காரணத்தால், எல்லா மாவட்டங்களிலும் அந்தச் சேவை மையங்களை ஏற்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் சொல்லி, இந்த மாநிலத்திலேயே பெரிய மாவட்டமான விழுப்புரம் மாவட்டத்தில் அந்தச் சேவை மையத்தை ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று, திருமண நிதி உதவித் திட்டம். உண்மையிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு மிகச் சிறப்பான திட்டத்தை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், அடித்தளத்திலே



இருக்கின்ற ஏழை, எளிய பெண்களுடைய கண்ணீரைத் துடைக்கின்ற வகையில் மிகச் சிறப்பாக அந்தத் திருமண நிதியுதவித் திட்டத்தைச் செயல்படுத்திக்கொண்டு வருகிறார்கள். நம்முடைய நிதிநிலை அறிக்கையிலேகூட இன்றைக்கு 10-வது வகுப்பு வரை படித்தவர்களுக்கும் நிதியுதவி அளிக்கப்படும் என்ற சிறப்பான திட்டத்தைச் சொல்லியிருக்கிறார்கள். ஏனென்று சொன்னால், 8-வது வகுப்பு வரை என்றால், போலிச் சான்றிதழ்கள் வழங்குகின்ற நிலைமை இருக்கிற காரணத்தால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதை அறிவித்து இருக்கிறார்கள். உண்மையிலேயே அதை வரவேற்பதோடு, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வருகின்றேன். காசோலைகள் வழங்குகின்றபோது மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய படத்தோடு கூடிய கவரை அதிலே அளித்தார்கள். ஆனால் தற்போது அது நிறுத்தப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தக் காசோலைகளை வழங்குகின்றபோது, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய படத்தோடுகூடிய கவரை வழங்க வேண்டுமென்ற அன்பான வேண்டுகோளை நான் வைக்கின்றேன்.

அதேபோன்று டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதி உதவித் திட்டத்தில் 500 ரூபாய் வழங்கப்படுகிறது. இத்திட்டம் சமூக நலத் துறை மூலம் செயல்பட்டும் சரியாக மகளிரைச் சென்றடையவில்லை. அதனால் அந்தத் துறையிலிருந்து ஊராட்சி ஒன்றியங்களுக்கு மாற்றித் தந்தால் மிகச் சிறப்பாகச் செயல்படும் என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று மகளிர் மன்றங்கள் இன்றைக்கு மிகச் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. உண்மையிலேயே பாராட்ட வேண்டும். அதிலே மகளிர் என்று சொன்னால், ஒவ்வோர் ஒன்றியத்திற்கும் 30 மகளிர் மன்றங்கள்தான் செயல்படுகின்றன என்கிற விவரத்தை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். மேலும் இந்த 30 மகளிர் மன்றங்கள் என்பதை ஒவ்வோர் ஊராட்சிக்கும் ஒரு மகளிர் மன்றம் என்று எடுத்துச் செயல்படுத்தினால் மிகச் சிறப்பாக இருக்கும்.

அதேபோன்று, தையல் இயந்திரம், வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், ஊனமுற்ற ஆண், பெண் ஆகியோருக்கு இன்றைக்கு வழங்கப்படுகிறது. உண்மையிலேயே அவர்களுடைய வருமானத்தைப் பெருக்கும் வகையில் அந்த இயந்திரம் வழங்குகின்ற நிகழ்ச்சி மிகச் சிறப்பாக இருக்கிறது.

வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்ற அனைவருக்கும் இப்படிப்பட்ட தையல் இயந்திரங்களை வழங்கினால் மிகவும் சிறப்பாக இருக்கும். ஏனென்றால் அவர்களுக்கு வருமானம் வரக்கூடிய ஒரு நிலை ஏற்படும், அவர்கள் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு வழி ஏற்படும் என்று இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-25

அதேபோன்று, முதியோர் உதவித் தொகை பற்றிக்கூட இங்கே எடுத்துச் சொன்னார்கள், இதிலே 18 வயது நிரம்பிய ஆண் மகன் இருந்தால்கூட 2-6-1998 முதல் முதியோர் உதவித் தொகை வழங்கலாம் என்ற ஒரு சிறப்பான திட்டத்தை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். ஆனால், ஏனோ இன்னும் அது நடைமுறைப்படுத்தப்படாமல் இருக்கிறது. என்னுடைய செஞ்சிப் பகுதியில் இருக்கின்ற தாலுகா அலுவலகத்திற்குச் சென்று கேட்கின்றபோது இன்னும் எங்களுக்கு அரசாணை வரவில்லை என்று சொல்லுகிறார்கள். ஆகவே, 18 வயதுக்கு மேல் மகன்கள் இருந்தாலும் முதியோர் உதவித் தொகை வழங்கலாம் என்பதை உடனடியாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

அதேபோன்று, முதியோர் உதவித் தொகையிலே, ஆதரவற்ற விதவைகளுக்கு மகன்கள் இருந்தால அவர்களுக்கு அந்த உதவித் தொகை வழங்கப்படுவதில்லை என்ற நிலை இருக்கிறது. நான் இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், இந்த முதியோர் உதவித் தொகையை வழங்கும்போது ஆதரவற்ற விதவைகளுக்கு மகன்கள் இருந்தாலும், அந்த மகன்கள் முழுமையாக ஊனமுற்றிருந்தால், அதேபோல அந்த மகன்கள் 15 ஆண்டு, 20 ஆண்டுகாலம் வெளிநாடுகளுக்கு எங்காவது சென்றிருந்தால் அவர்களுக்கும் வழங்கினால் அது மிகவும் சிறப்பாக இருக்கும் என்ற நல்ல நோக்கத்தை நான் சொல்லிக்கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற அன்பான வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சற்று நேரத்திற்கு முன்புதான் இதற்கான விளக்கத்தை நான் அளித்திருக்கிறேன். அரசாணை அதற்காக



வழங்கப்பட்டிருக்கிறது. சில மாவட்டங்களில் இந்த அரசாணை சரியான முறையில் கிடைக்கவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, உடனடியாக அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் இது குறித்துத் தகவல் அனுப்பப்பட்டு, நிலுவையில் இருக்கின்ற விண்ணப்பங்களுக்கு உடனடியாக முதியோர் உதவித் தொகை வழங்குமாறு பணிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. த. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதிலே நான் குறிப்பிடுவது, முதியோர் உதவித் தொகை விதவைகளுக்கும் வழங்குகிறோம்; அதிலே ஆண் வாரிசு இருந்தால் அவர்களுக்கு வழங்கக்கூடாது என்ற நிலை இருக்கிறது; 18 வயதுக்குக்கீழ் ஆண் வாரிசு இருந்தால் கொடுக்கலாம் என்று இருக்கிறது; ஆனால், ஆண் வாரிசிலேகூட, 18 வயதுக்கு மேல் இருக்கின்ற ஆண் வாரிசுகள் முழுமையாக ஊனமுற்றிருந்தால் அவர்களால் எந்தப் பயனும் அடைவதில்லை.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 18 வயதுக்கு மேல் ஆண் வாரிசு இருந்தாலும், விதவைப் பெண்களுக்கு இந்த உதவித் தொகை வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே, 18 வயதுக்கு மேலே, ஊனமுற்றிருந்தாலும், ஊனம் இல்லாமல் இருந்தாலும் அவர்கள் எத்தனை வயது படைத்தவர்களாக இருந்தாலும் விதவை என்ற அடிப்படையில் இந்த உதவித் தொகை வழங்கப்படுகின்ற காரணத்தால் அந்த விதவைத் தாய்க்கு நிச்சயமாக 150 ரூபாய் உதவிப் பணம் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. த. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடுத்து, தொகுதிப் பிரச்சினைகளைக் குறிப்பிட விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் முக்கியமாக செஞ்சி நகரத்தை ஒட்டியுள்ள நாசிங்கராயன்பேட்டை கிராமத்தில் இருக்கின்ற எம்.ஜி.ஆர். நகர், பூமியானகுட்டை ஆகிய கிராமங்களிலே இருக்கின்ற மக்கள் 20 ஆண்டுகாலமாக தாங்கள் வீடு கட்டியுள்ள இடங்களுக்குப் பட்டா வழங்க வேண்டுமென்று போராடிக்கொண்டு வருகிறார்கள். அவர்கள் ஏறத்தாழ 1979-ஆம் ஆண்டிலிருந்து வீடுகளைக் கட்டிக்கொண்டு வாழ்ந்து வருகிறார்கள். 1984-ல் 22 நபர்களுக்கு, 11 ஏக்கராவுக்குப் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. இந்த 22 நபர்களுக்குப் பட்டா

[திரு. த. நடராஜன்] [1999 மே 3

கொடுப்பதற்கு முன்பே அவர்கள் அந்தப் பகுதிகளிலே வீடுகளைக் கட்டி வசித்து வருகிறார்கள். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதிலே தனிக் கவனம் செலுத்தி அந்த எம்.ஜி.ஆர். நகரிலே இருக்கின்ற மக்களுக்கும், பூமியான்குட்டை பகுதியிலே இருக்கின்ற மக்களுக்கும் பட்டா வழங்குவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எங்கள் பகுதியில் சங்கராபரணி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டிருக்கின்ற வராக நதி வாய்க்கால் திட்டம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்த காலத்தில் கொண்டுவரப்பட்ட திட்டமாகும். ஆனால் அன்றிலிருந்து இன்றுவரை வராக நதித் திட்டம் செயல்படுத்தப்படாமல் இருக்கிறது. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களிடம் நேரடியாக அவர்கள் செஞ்சிப் பகுதிக்கு வந்தபோது இந்தத் திட்டத்தைப் பற்றி எடுத்துச் சொல்லி, அவர்களும் இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளப்படும் என்று சொன்னார்கள். ஆனால் இதுவரையில் எடுத்துக்கொள்ளப்படவில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனை இந்த ஆண்டு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அன்பான வேண்டுகோள் விடுக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அடுத்து, எங்கள் பகுதியில் இருக்கின்ற விவசாயிகள் கரும்பு விவசாயிகள். வல்லம் ஒன்றியத்தில் இருக்கின்ற 20 கிராமத்து மக்கள் செய்யாறு ஆற்றிலிருந்து தண்ணீர் எடுத்துச் செல்லப்பட வேண்டுமென்ற கோரிக்கையை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் வந்தபோது வைத்தார்கள். ஆனால் அவ்வாறு இன்னும் எடுக்கப்படவில்லை. அந்தக் கோரிக்கையையும் நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரேயொரு விஷயத்தை மட்டும் சொல்லி முடித்துவிடுகிறேன். செஞ்சி நகரத்திலே எடுக்கப்பட்டிருக்கின்ற வடிகால் வாய்க்கால்கள் இன்னும் எடுத்த அளவிலேயே இருக்கின்றன. அதற்கு காங்கிரீட் வாய்க்கால் இன்னும் அமைக்கப்படவில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி, இந்த ஆண்டே அதற்கு நிதியொதுக்கித் தர வேண்டுமென்று அன்பான வேண்டுகோளை வைத்து, வாய்ப்பிற்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11-30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.



1999 மே 3]

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று சமூக நலத் துறை மானியக் கோரிக்கையிலே பேசக்கூடிய வாய்ப்பு கிடைத்ததற்காக என் மகிழ்ச்சியையும், நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்து, எனக்குத் தெரிந்த ஒரு சில கருத்துகளை இந்த அவைமுன் வைக்க விரும்புகிறேன். குறிப்பாக, சமூக நலத் துறைக்கு அரசு கொடுக்கக்கூடிய மானியம், அது முழுமையாக அதிகமாகக் கொடுக்கப்பட்டு, வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்குக் ஏழையெளியவர்களுக்கு, அரசு செயல்பட்டாலும்கூட, கிடைக்க வேண்டுமென்ற எண்ணத்திலே கவனிக்க வேண்டும். அது முழுமையாகக் கிடைக்கின்றதா என்பதை நிர்வாகத் திறமையின் மூலமாக அரசு சிறப்பாக, தன்னுடைய அனைத்து வாய்ப்புகளையும் செய்து முழுமையாகக் கிடைப்பதற்கு அன்போடு இந்த நேரத்திலே நான் கொடுக்க வேண்டுமென்று சமூக நலத் திட்டங்களில் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, கீழே உள்ளவர்கள் ஏழையெளியவர்கள், வறுமைக்கோட்டிற்குக் தையல் மிஷின் வழங்குவது. முழுமையாகப் பயனடையக்கூடிய திட்டம் நான் இந்தச் சட்டமன்றத்திலே இன்றைக்குப் பல்வேறு சூழ்நிலைகளிலே—நான் சொல்லியிருக்கிறேன் - தையல் மிஷின் பேசுகின்றபோதுகூடச் சொல்லியிருக்கிறேன் ஆதிதிராவிடப் பெண்கள் அத்தனை பெறக்கூடிய ஏழையெளியவர்கள், ஆதிதிராவிடப் பெண்கள் பெறவேண்டும் என்றும், பேரும், வருமானச் சான்றிதழ் ரூ. 6,500 க்குப் பெறவேண்டும் என்றும், கணவன்மார்கள் திடீரென்று இறந்துவிட்டால் ரூ. 7,500-க்குப் பெற வேண்டுமென்றும், பொதுவாகப் பல்வேறு நலத் திட்டங்களைப் பெறுவதற்கு ரூ. 12,000-க்குப் பெறவேண்டும் என்றும் இருக்கின்ற நிலையைப் பற்றி உறுதியாக மாநில அரசு மத்திய அரசுக்கு எழுத வேண்டும். இந்த வருமானச் சான்றிதழ்களில் பல்வேறு கோளாறு இருக்கின்ற காரணத்தினாலே, உண்மையானவர்களுக்கு, நேர்மையானவர்களுக்கு ஒழுங்காக, நியாயமாகக் கிடைப்பதில்லை என்பதை நான் அன்போடு, வருத்தத்தோடு இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக, சாதிச் சான்றிதழ் வாங்குவதற்கோ அல்லது வருமானச் சான்றிதழ் வாங்குவதற்கோ அல்லது இறப்புச் சான்றிதழ் வழங்குகின்ற அதே நேரத்தில் வாரிசுச் சான்றிதழையும் உடனடியாக அந்த வட்டாட்சியர் அலுவலகத்திலே கொடுப்பதற்குண்டான ஏற்பாட்டைச் செய்யவேண்டும். இறப்புச் சான்றிதழ் வாங்குவதற்கு ஒரு முறையும், அதற்குப் பிறகு வாரிசுச் சான்றிதழ் வாங்குவதற்கு ஒரு முறையுமாக, ஒரு மாதம், ஒன்றரை மாதத்திற்கு மேலாக ஏழையெளியவர்கள், விவரம் தெரியாதவர்கள் நடந்து கொண்டிருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையை எதிர்காலத்திலே மாற்ற வேண்டுமென்று அன்போடு

இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, தையல் மிஷின் கொடுக்கக்கூடியவர்களுக்கு, தையல் பயிற்சி நிலையங்களெல்லாம் ஒவ்வொரு ஒன்றியத்திலேயும், ஒன்று, இரண்டு பயிற்சி நிலையங்கள் இருந்தாலும்கூட, தேவையான இடத்தில் அதிகப்படுத்திக் கொடுகக வேண்டும். இன்று நாட்டிலே பெண்களுக்கு முழுமையாக உரிமையைக் கொடுக்க வேண்டுமென்று கூறிக்கொண்டிருக்கக்கூடிய இந்தக் காலகட்டத்திலே, அந்தப் பெண்களுக்கு எதிர்காலத்திலே நாடாளுமன்றத்திலே, சட்டமன்றத்திலே 33 விழுக்காடு இடம் கொடுக்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். ஆகவே, பெண்கள் சுயமாக வேலை செய்து, சம்பாதித்து, குடும்பங்களை நடத்தக்கூடிய அளவிற்கு, அதிகமாக, தேவையான அளவிற்குத் தையல் பயிற்சி பெற்ற ஏழையெளிய அத்தனை பேருக்கும், தையல் மிஷின்கள் உடனடியாகக் கிடைப்பதற்குத் தாங்கள் ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, கடந்த நிதியாண்டில் மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஏழையெளியவர்கள், கிராமப்பகுதியிலே இருக்கக்கூடிய குழந்தைகள், பெண்கள் படிக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் எட்டாம் வகுப்பு என்று தெரிவித்தார்கள். அதிகமான விண்ணப்பங்கள் வருகின்ற காரணத்தினாலோ, என்னவோ இப்போது பத்தாம் வகுப்பு என்ற நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். எனவே, மீண்டும், எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கவும், பத்தாம் வகுப்பு என்பதை மாற்றி ஏழையெளியவர்கள், கிராமப் பகுதிப் பெண்கள் பயனடையக்கூடிய அளவிற்கு, எட்டாம் வகுப்பு என்ற நிலையைக் கொண்டு வரவேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, முதியோர்...

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதிகமான எண்ணிக்கையில் விண்ணப்பங்கள் வந்த காரணத்தினால், பத்தாம் வகுப்பு என்று மாற்றப்பட்டிருக்கிறதா என்று அவர்கள் ஓர் ஐயத்தை எழுப்பியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே இந்த மாற்றம் செய்யப்படவில்லை. எட்டாவது படித்ததாகப் போலிச் சான்றிதழ்கள் அதிகமாக வருகின்ற காரணத்தினால், அதைத் தடுத்து, உண்மையான பயனாளிகளுக்கு இந்தத் தொகை நேர்மையான முறையிலே போய்ச்



சேர வேண்டும் என்பதற்காகவும், பெண்களுடைய கல்வித் தரம் பத்தாம் வகுப்புவரை உயர்ந்திட வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடனும்தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தத் திட்டத்தை மாற்றம் செய்திருக்கிறார்கள்.

முற்பகல் 11-35

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Point of order.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** என்ன Point of order? சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் போலிச் சான்றிதழ்கள் அடிக்கடி ஊடாடுகின்ற காரணத்தினால்தான் இது இப்படி மாற்றியமைக்கப்பட்டது என்று கூறுகிறார்கள். இந்தப் போலிச் சான்றிதழை ஒழிப்பதற்கான அதிகாரம் உங்கள் கையில்தான் இருக்கிறது. பள்ளித் தலைமை ஆசிரியர்கள் போன்றவர்களை எல்லாம் வைத்து அதை வரவொட்டாமல் தடுத்து நிறுத்தி பழையபடியே அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமேயொழிய போலிச் சான்றிதழ்கள் வருகின்றன என்ற காரணத்திற்காக நாம் திட்டத்தையே மாற்ற முடியாது என்பதுதான் எங்களுடைய கருத்து.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எட்டாவது வகுப்பு வரையிலே படித்தவர்கள் படித்ததாகச் சான்றிதழ் வாங்குவதற்கு உரிய முறையில் சான்றிதழ்களை வைத்திருக்கக்கூடிய உயர்நிலைப் பள்ளியாகவோ மேல்நிலைப் பள்ளியாகவோ இல்லாத இடங்களில் சான்றிதழ்கள் வாங்குகிறார்கள் ஆகவே, அங்கே அந்தச் சான்றிதழைச் சரிபார்த்துக் கொடுக்கக்கூடிய வாய்ப்பு 10-வது படிக்கின்றபோதுதான் வருகிறது. அதற்கு முன்னாலே அந்த வாய்ப்புகள் மிகக் குறைவாக இருக்கின்றன. போலித்தனமான விண்ணப்பங்களைக் கொடுத்து, போலித்தனமான விண்ணப்பத்தின் அடிப்படையிலே நிதி பெறுவதற்காக இடையிலே அதிகாரிகளைக்கூடத் தவறான முறையிலே தங்களுக்குச் சலுகை காட்டும்படி கேட்பதற்காகச் சில இடங்களில் கமிஷன் கொடுக்கிற அளவுக்குத் தவறுகள் நடக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. எனவே, சமூக நன்மை என்று கருதுகிறபோது, தவறுகள் இல்லாமல் அரசு நிதி அவர்களுக்குப் போய்ச் சேர வேண்டுமானால் குறைந்தது S.S.L.C.

வரையிலாவது படித்ததாக அப்படிப்பட்ட பள்ளிகளிலே சான்று பெற வேண்டும் என்ற பொதுநல நோக்கோடு இந்தத் திட்டம் மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் எந்தவிதச் சான்றும் இல்லாமல் வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழக்கூடியவர்கள் என்று சட்டமன்ற உறுப்பினர்கள் சான்று அளித்தாலே இருதயநோய் ஆப்பரேஷனாக இருந்தாலும் மற்றவைகளுக்கெல்லாம் ரூ. 25,000 கொடுக்கக்கூடிய அந்தச் சூழ்நிலையைக் கருத்திலே கொண்டு எதிர்காலத்திலே அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களுடைய சிபாரிசின் அடிப்படையிலே ஏன் செய்து கொடுக்கக்கூடாது என்பதை அரசு சிந்தித்து செயல்படுத்தி கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே அன்போடு நான் கேட்டுக்கொளகிறேன்.

குறிப்பாக, ஈரோடு மாவட்டத்திலே ஊனமுற்றோர் அலுவலகம் ஒரு பகுதியிலே, சூரப்பட்டி பகுதியிலே இருக்கக்கூடிய சூழ்நிலை காரணமாக பல பிரச்சினைகள். மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலேயே தேவையான அளவிற்கு இடமிருக்கின்ற சூழ்நிலையில், ஈரோடு மாவட்டத்திலே இந்த சமூக நலத் துறை தனியாக செயல்படக்கூடிய நிலையை மாற்றி எதிர்காலத்திலே மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலேயே அதைக் கொண்டு வர வேண்டும்.

ஊனமுற்றவர்களுக்கு வேலைவாய்ப்பில் 3% கொடுப்பதாக கூறியிருந்தாலும்கூட மின் துறையிலே மறுக்கக்கூடிய சூழ்நிலையை மாற்றி எதிர்காலத்தில் ஊனமுற்றவர்கள் என்று சான்று பெற்றிருக்கக்கூடிய படித்தவர்களுக்கு, தகுதி உள்ளவர்களுக்கு அத்தனை பேருக்கும் வேலை கிடைக்கக்கூடிய அளவிற்கு செய்து கொடுக்க வேண்டும். மின்துறையில் இருக்கும் இந்தக் குறையைப் போக்குவதற்கு ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும். கண்டிப்பாக, உறுதியாக 6,500, 7,500, 12,000 என்று சான்றிதழ் பெறுவதற்கு அத்தனை பேரும் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையில் மத்திய அரசுக்கு எழுதியாவது மாற்றியமைத்தால்தான் இந்த ஊழல் என்பதை ஓரளவிற்கேனும் குறைக்கமுடியும். அதைக் கண்டிப்பாக அரசு செய்து கொடுக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஒரேயொரு குறிப்பு. எங்களுடைய பகுதியிலெல்லாம் நாயக்கர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச்



சேர்ந்தவர்களுக்கு எல்லாம் இரண்டு, மூன்று மனைவிகள் இருப்பார்கள். வேறு கணவன்மார்களை, இல்லை மனைவிமார்களை கட்டிக்கொண்டு செல்லக்கூடிய காட்சி எங்கள் பகுதியிலே, கிராமப் பகுதியிலே நிறைய இருக்கிறது. ஆக, கடைசியாகக் கட்டிய மனைவிக்கு இரண்டு குழந்தைகள், மூன்று குழந்தைகள் இருக்கும். அந்தக் கணவன் திடீரென்று இறந்துவிட்டால் அந்த வாரிசுச் சான்றிதழ் வாங்குகிறபோது 3 பேர், 4 பேர் என்று வருகிறபோது அங்கே இருக்கக்கூடிய தாசில்தார், அங்கே இருக்கக்கூடியவர்கள் சான்றிதழ் கொடுக்க மறுத்து வருகிறார்கள். இந்த நிலையை மாற்றுவதற்கு, அப்படிப்பட்ட சாதியிலே பல்வேறு திருமணங்கள் இருந்தாலும்கூட கடைசியாகத் திருமணம் செய்து குழந்தைகள் இருக்கக்கூடிய ஒருவருக்குத்தான் அந்த முழுமையான தொகை கிடைக்க வேண்டும் என்ற அளவில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கண்டிப்பாகச் செய்து கொடுக்க வேண்டும் என்று அன்போடு இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முதல் திருமணத்தால் ஏற்படுகிற அந்த வாரிசுகளைவிட மூன்றாவது திருமண வாரிசுகளுக்குத்தான் ஆதரவாக இருக்கிறாரா என்று கேட்க விரும்புகிறேன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படி அல்ல அது. முதல் மனைவி இரண்டாவது மனைவிகளுக்கெல்லாம் வாரிசுகளே இல்லை. வாரிசுகளே இல்லாமல், வேறு கணவன்மார்களை, இல்லை வேறு நபர்களை கட்டிக் கொண்டு மூன்றாவது மனைவிக்குத்தான் குழந்தைகள் இருக்கக்கூடிய அந்தச் சூழ்நிலையிலே என்றுதான் சொல்கிறேனேயொழிய....

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறபோதே இவ்வளவு குழப்பம் இருக்கிறதே, திருமணம் செய்து கொண்டவர்களுக்கு எவ்வளவு குழப்பம் இருக்கும். சான்று கொடுப்பவர்களுக்கு அதைவிட எவ்வளவு அதிகக் குழப்பம் இருக்கும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, உங்களுடைய பேச்சை மாடத்திலிருந்து உங்கள் மனைவியார் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கவனத்தில் வைத்துப் பேசவும். (சிரிப்பு)

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாடத்தில் இருக்கிறவர்கள்—நான் மறுபடியும் இரண்டாவது கல்யாணம் பண்ணிக்கொள்ளப் போவதில்லை என்பதை அறிவார்கள். அதனால் மாடத்தில் இருக்கின்ற என் மனைவி கவனிப்பதால் எந்தவிதக் கருத்து வேறுபாடும் வராது. (மணியடிக்கப்பெற்றது)

*முற்பகல் 11-40*

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களது உறுப்பினர் அவர்கள் பேசியிருப்பது, உண்மையிலேயே ஒரு சமுதாயப் பிரச்சினை. திருமணம், ஒருவனுக்கு ஒருத்தி என்று இருக்க வேண்டும். அவர்கள் மூலமாகப் பிறக்கக்கூடிய குழந்தைகள், முறையான குழந்தைகள் என்று அழைக்கப்படுகிறார்கள். ஆனால், நாம் விரும்பாவிட்டாலும்கூட, சமுதாயத்திலே இந்தக் கேடு இருக்கிறது. சில பகுதியிலே வாழக்கூடியவர்கள், ஒரு பெண்ணை சேர்த்து வைத்துக்கொண்டு, அந்தப் பெண்ணின் மூலமாகக் குழந்தைகள் பிறந்து விடுகின்றன. அது தவறுதான். சட்டப்படியும் தவறு. சமுதாயத்திலே அது தவிர்க்கப்படவேண்டும். ஆனால், இன்று நடைமுறை எதார்த்தம்; சில இடங்களிலே நடக்கிறது. அந்தக் குழந்தைகள் எந்தச் சாதியிலும் இல்லாத குழந்தைகள் என்ற நிலைக்கு ஆளாக்கப்படுகிறார்கள். ஆகவே, பெற்றோர் செய்த தவறுக்கு, குழந்தைகள் என்ன செய்யமுடியும்? ஆகவே, அந்தக் குழந்தைகளுக்கும் ஏதாவது ஒரு நல்வாழ்வு அமையவேண்டும்; அதற்கு அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும் என்ற அந்த அடிப்படையிலேதான் அந்தக் கருத்தைச் சொல்கிறாரேயொழிய, கேலி பேசுவதற்காக அல்ல என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு குழந்தைக்கு சான்றிதழ் வழங்க வேண்டுமென்றால், அப்படி வழங்குகின்ற அதிகாரி, முழு அளவு விசாரித்து, திட்டவட்டமாகத் தெரிந்துதான் அதை வழங்கவேண்டும். இல்லையென்றால், சான்றிதழ் வழங்குவதிலே குறைபாடுகள் வந்துவிடும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் இல்லை; அவர் பேசி முடித்துவிடட்டும். ஏற்கெனவே அவருக்கு 5 நிமிடங்கள்தான் பேசுவதற்குக் கொடுத்தேன்; 10 நிமிடங்கள் ஆகிவிட்டன.



**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன். சான்றிதழ் வழங்குவதிலே குழப்பம் இருக்கிறது என்பதை என்னாலும் உணரமுடிகிறது. ஆனால், இதற்குத் தீர்வு எப்படிச் செய்வது என்பது எனக்கும் தெரியவில்லை. தீர்வு காண்பதற்கு அருள்கூர்ந்து வகை செய்ய வேண்டும். தாயும், தந்தையும் செய்த தவறுக்காக குழந்தைகளை, வளர்கின்ற எதிர்கால சந்ததியினரைத் தண்டித்து விடக்கூடாது என்ற கருத்தோடுதான் இதைச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: திரு. பாலசுப்பிரமணியன், ஒரே வரியில் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** விரைவாக நான் பேசி முடித்துக்கொள்கிறேன். குறிப்பாக, பழைய சத்துணவுக் கூடங்கள் மிகமிக மோசமான பழுதடைந்த கட்டடங்களிலே இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. எதிர்காலத்திலே, அப்படிப்பட்ட சத்துணவுக் கூடங்களினால், அங்கே இருக்கக்கூடிய குழந்தைகளுக்கு எந்தவிதமான இடையூறும் ஏற்படாத அளவுக்கு முன்பாகவே, அவற்றை ஒழுங்காகப் பழுதுபார்த்து செய்துதருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இதற்கு மேலாக நாம் ஒன்றைச் சிந்தித்துப் பாரக்க வேண்டும். விடுமுறை நாட்களிலேகூட, சத்துணவு எல்லாக் குழந்தைகளுக்கும் வழங்குவதாகச் சொல்லப்படுகிறது. அன்றாடம் சுமாராக 100 குழந்தைகள் என்று சொன்னால், விடுமுறை நாட்களிலும் அந்த 100 குழந்தைகள், நூற்றுக்கு நூறு சதவிகிதம் வருவதில்லை. ஆகவே, விடுமுறை நாட்களிலே சத்துணவு கொடுக்காமல் இருக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுவிடுமேயானால், எதிர்காலத்திலே எந்த அளவுக்கு அரசாங்கத்திற்கு செலவு குறையும் என்பதையும் பரிசீலித்து, இதுவரை பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு என் மகிழ்ச்சியையும், நன்றியையும் தெரிவித்து, என் உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆம் ஆண்டிற்கான சமூக நலம், சத்துணவு ஆகிய துறைகளுக்கான மானியக் கோரிக்கையின்மீது, இந்திய

தேசிய லீக் கட்சியின் சார்பிலே, இம்மாமன்றத்தில் என் கருத்துக்ளை எடுத்துவைக்க முன்வருகிறேன். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் பொறுப்பேற்றதற்குப் பின்னால், தமிழகத்திலே நல்லாட்சி நடந்து வருகிறது. இவ்வேளையிலே, எல்லாத் துறைகளும் சிறப்பாகச் செயல்பட்டு வருகிற நேரத்தில், இந்த சத்துணவுத் துறைக்கு அமைச்சராகப் பொறுப்பேற்று இருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்களும் இத்துறையைச் சிறப்பாக நடத்தி, செயல்படுத்தி, தமிழகத்திலே பெருமையைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தியை அறிந்து எங்களுடைய கட்சியின் சார்பிலே நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பெண்களுக்கென இத்துறை நல்ல பல திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது. இத்துறையின் மூலமாகச் செயல்படும் திட்டங்கள் நிறைய உள்ளன. இவை யாவும் பொதுமக்களிடத்திலே முறையாகச் சென்றடைவதிலே சில சிரமங்கள் இருக்கின்றன என்பதை இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. வை. சிவபுண்ணியம் தலைமை)

நல்ல பல திட்டங்களை, தமிழக அரசு அறிவித்து, இந்தத் துறையினுடைய அலுவலர்கள் மூலமாக, ஊராட்சி ஒன்றியத்தில் பணிபுரிகின்ற அலுவலர்கள் மூலமாக மக்களுக்குச் சென்றடையக்கூடிய வாய்ப்புகளை ஏற்பாடு செய்திருக்கிறார்கள். துறையிலே பணியாற்றுகின்ற, ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களிலே உள்ள அலுவலர்கள், மக்களைச் சந்தித்து, இத்திட்டங்களை மக்களுக்கு விளக்குவதிலே, அவர்கள் சரியாகச் செயல்படுவதில்லை என்பதை நான் இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நல்ல திட்டங்களையெல்லாம், பட்டிதொட்டி குக்கிராமங்களிலே, ஏழையெளிய, பிற்படுத்தப்பட்ட மக்கள் வாழ்கின்ற பகுதியிலே விளம்பரம் மூலமாக மாதந்தோறும் தெரிவிக்கிற வகையிலே செய்தால, மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்ற கருத்தினைச் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம், எட்டாம் வகுப்பு வரை படித்த பெண்களுக்கு என்று கடந்த காலத்திலே 10 ஆயிரம் ரூபாயை அரசு வழங்கி வந்தது. ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப் போன்று,





போலிச் சான்றிதழ்கள் எல்லாம் வருகிற காரணத்தினால், பத்தாம் வகுப்பு வரை என்று மாற்றப்பட்டுள்ளது என்பதை இங்கே எடுத்துரைத்தார்கள். நான் பணிவோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்கள் எட்டாம் வகுப்பு வரையிலே படிக்க வைக்க முடியாமல் உள்ள நிலையிலே, ஆடு மாடு மேய்க்கவும், கிராமங்களிலே வேலைக்கு அனுப்பவும் அவர்கள் எட்டாம் வகுப்பு படிப்பதையே நிறுத்திவிடுகிறார்கள். அரசு எல்லாச் சலுகைகளையும் வழங்கியிருக்கிறது. இலவச உணவு, சீருடை, இலவசப் புத்தகம் இப்படி எல்லாவற்றையும் அறிவித்திருந்தாலும் 8-ஆவது வகுப்பு வரையில் படிக்க முன்வராதவர்களுக்கு மத்தியிலே, அதனை 10 ஆம் வகுப்பு என்று உயர்த்தியிருப்பதை அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மீண்டும் 8-ஆவது படித்தவர்களுக்கே அந்த 10,000 ரூபாய் கிடைப்பதற்கு அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டுமாய் இந்த நேரத்திலே பணிவோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-45

பத்தாவது வகுப்பு படித்தவர்களுக்கு ரூ. 10,000 என்ற திட்டம் இருப்பதை 8 ஆம் வகுப்பு என்று மாற்றியிருக்கின்றார்கள். என்னுடைய பகுதியிலே அடித்தளத்திலே பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த மக்கள் 5 ஆம் வகுப்பு, மூன்றாம் வகுப்பு, இரண்டாம் வகுப்பு என்று கூட படிக்காத நிலையிருக்கின்றது. நான் அவர்களுக்குக்கூட, ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக 5-ஆவது வகுப்பு படித்தவர்களுக்கு ரூ. 3000 கொடுக்கக்கூடிய திட்டத்தைப் பெற்றுக் கொடுத்திருக்கிறேன். எனவே, இதையும் நீங்கள் மறுபரிசிலனை செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் மாவட்டத்தில், தாலுகா, ஊராட்சி ஒன்றிய அலுவலகம் மூலமாகத்தான் பயனாளிகளை நீங்கள் நிர்ணயம் செய்கின்றீர்கள். அவ்வாறு செய்கின்றபோது, ஓர் ஊராட்சி ஒன்றியத்தில் 20 அல்லது 25 பயனாளிகள்தான் பயனடையக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. உதாரணத்திற்கு எடுத்துக்கொள்வீர்களேயானால், என்னுடைய அரவக்குறிச்சி தொகுதியிலே இருக்கக்கூடிய ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தின் மூலமாக 4 மாதங்களுக்கு முன்னால் திருமண உதவித் திட்டத்திற்கு முறையாக நானே விண்ணப்பத்தினை பரிந்துரை செய்து கொடுத்தனுப்பியதில் அவை இன்றுவரை கிடைக்கவில்லை. ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலே துறையைச் சார்ந்த அதிகாரிகளை

நான் சந்தித்துக் கேட்டபோது, நிதி முடிவடைந்துவிட்டது, வருகின்ற காலத்திலே காத்திருப்போர் பட்டியலில் அவர்களை வைத்து, முன்னுரிமை கொடுத்து செய்வதாகச் சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே, நீங்கள் அப்படி பிரித்து கொடுக்கின்ற நேரத்தில், எந்தப் பகுதியிலே எவ்வளவு விண்ணப்பங்கள் வருகின்றன என்பதையெல்லாம் ஆய்ந்து அதற்கேற்றபடி கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்து கொடுக்க வேண்டுமாய் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல தர்மாம்பாள் நிதி உதவி திட்டத்தில் 7,000 ரூபாய் கணவன் இறந்ததற்குப் பின்னால் மறுமணம் செய்துகொள்ளக்கூடிய ஒரு திட்டத்தை உருவாக்கிக் கொடுத்து இருக்கிறீர்கள். விதவை மறுமணம் திட்டத்தில் 5 ஆம் வகுப்பிற்குகீழ் படித்தவர்களுக்கு ரூ. 3000 என்ற இது போன்ற திட்டங்கள் எல்லாம் அடித்தளத்திலுள்ள மக்களுக்குத் தெரியவில்லை என்பதை இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். ஒவ்வொரு பகுதியிலும் உள்ள அந்தத் துறையைச் சார்ந்த அதிகாரிகள் தாங்கள் பணிபுரிகின்ற கிராமங்களுக்குச் செல்கின்றபோது இந்தத் திட்டத்தைப் பற்றியெல்லாம் எடுத்துச் சொல்வார்களேயானால் அது பயனுள்ளதாக இருக்கும் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதைப்போல இலவச தையல் மிஷன்கள். நான் என்னுடைய தொகுதியிலே சட்டமன்ற உறுப்பினராக பொறுப்பேற்றுக்கொண்டதற்கு பிறகு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக 150 மனுக்களைச் சமர்ப்பித்தேன். அரவக்குறிச்சி தொகுதியிலே ஊராட்சி ஒன்றிய தலைவர்களே ஆய்வு நடத்தினார்கள். இந்த மூன்று ஆண்டு காலத்திலே ஒரே ஒரு முறை மூன்று இலவச தையல் மிஷின்கள்தான் கிடைத்திருக்கின்றன.

அதைப்போல ஊனமுற்றவர்களுக்கான மூன்று சக்கர வண்டிகள். (மணியடிக்கப்பெற்றது)

இப்போதுதான் பேச ஆரம்பித்திருக்கிறேன். சமூக நலத் துறையில் முக்கியமான கோரிகலைகள் இருக்கின்றன. தயவுசெய்து பேசுவதற்கு கால அவகாசம் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** சரி. சீக்கிரம் பேசுங்கள். கால அவகாசத்தைப் போக்கிவிடாதீர்கள். ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மூன்று சக்கர வண்டிகளும் மூன்றுதான் கிடைத்திருக்கின்றன. என்னுடைய தொகுதியைப்



பொறுத்தவரையிலே தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் வாழுகிறார்கள். எனது பகுதியில் மூன்று ஊராட்சி ஒன்றியங்கள்—அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், பரமத்தி ஊராட்சி ஒன்றியம், தாந்தோணி ஊராட்சி ஒன்றியம்—என மூன்று ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கரூர் மாவட்டத்திற்கு, வருகை தந்தபோது, அங்கு விழா நடத்தி அங்கே கொடுக்கப்பட்டதை நினைவூட்ட கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது, கொடுக்கப்பட்ட மனுக்கள் எல்லாம் பரிசீலனையில் இருக்கின்றன. இன்னும் அவைகள் வழங்கப்படவில்லை. எனவே, இந்த நிதியாண்டிலாவது அவற்றைப் பரிசிலனை செய்து எங்கள் தொகுதிக்கு வருகின்ற நேரத்திலே அவற்றை வழங்க வேண்டுமாய் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதேபோல, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் உங்கள் ஊரிலே அரவக்குறிச்சியிலும், பள்ளப்பட்டி—பள்ளப்பட்டி இஸ்லாமிய மக்கள் வாழக்கூடிய பகுதி-படித்துவிட்டுப் பட்டதாரிகளாக இருந்தாலும், அரசாங்க வேலைக்குச் செல்ல முடியாமல் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் ரெடிமேட் கார்மெண்ட்ஸ்—ஆயத்த ஆடைகள் போன்றவைகளை தயாரிக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கியிருக்கின்றார்கள். எனவே, இதற்காக டெய்லரிங் இன்ஸ்டிட்யூட்டும் அதுபோல ஒரு டைப்ரைட்டிங் இன்ஸ்டிட்யூட்டும் தரவேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலமாக மனு கொடுத்துள்ளோம். மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் சந்தித்து விண்ணப்பத்தைக் கொடுத்திருக்கிறேன். அதையெல்லாம் கூடியவிரைவிலே அந்தப் பகுதிக்கு நீங்கள் கொடுப்பீர்களேயானால், அந்தப் பகுதியிலுள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும். எனவே, இந்த இரண்டும் அத்தியாவசியத் தேவை எனத் தெரிவித்துகொள்கிறேன். மேல்நிலைப் பள்ளிக்கூடங்கள் இருந்தாலும், மேல் படிப்பிற்குச் செல்ல முடியாத சூழ்நிலையில் இருப்பவர்களுக்கு இதுபோன்ற வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய திட்டங்கள் பயனுள்ளதாக இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

இன்னும் ஓரிரு நிமிடம் கால அவகாசம் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்] [1999 மே 3

டோக்ரா திட்டம் நல்ல திட்டம். அந்தத் திட்டம் சிறப்பாகச் செயல்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் இதுகுறித்து மக்களுக்கு எடுத்துச் சொல்ல ஆவன செய்யவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

முதியோர் உதவித் தொகை கிடைப்பதைப் பொறுத்தவரையில் கடந்த காலத்திலே தாலுகா அலுவலகம் மூலமாக செய்யப்பட்டு வந்தது. இப்போது அதை மாவட்ட ஆட்சித் தலைவர் மாற்றியுள்ளார்கள். இப்போது ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தின் மூலமாக மாதத்திற்கு ஒரு முறை வருகின்ற மனுக்களைப் பெற்று, உடனடியாக ஆய்வு செய்து வழங்குகின்ற திட்டத்தை உருவாக்கியிருக்கின்றார்கள். அப்படியிருந்தாலும் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் மூலமாக அதனை ஆய்வு செய்து கொடுக்கின்றபோது காலதாமதம் ஏற்படுகிறது. எனவே, அதையும் துரிதப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தலைமை ஆசிரியர்கள் மூலமாக கடந்த காலத்திலே சத்துணவுக் கூடங்களையெல்லாம் கண்காணித்து வந்தார்கள். ஆனால், அந்த நிலைமை மாறி இப்போது ஊரக வளர்ச்சித் துறை மூலமாக கண்காணித்து வருகின்ற காரணத்தினாலே சில தவறுகள் அங்கே நிகழ்ந்து வருகின்றன என்பதை நாங்கள் எல்லாம் செல்கின்ற நேரத்தில் பார்க்க முடிகின்றது. ஆகவே, அதை மீண்டும் ஊரக வளர்ச்சித் துறை மற்றும் பள்ளித் தலைமை ஆசிரியர்களும் சேர்ந்து கண்காணித்தால் அந்தத் துறை இன்னும் சிறப்பாகச் செயல்படுவதற்கு வசதியாக இருக்கும் என்ற கருத்தினை இந்த நேரத்திலே பணிவன்போடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 11-50

தற்போது, சத்துணவிற்கு 18 பைசா என்று வழங்குவதைக் கூடுதல் செய்து 25 பைசாவாக நீங்கள் கொடுக்க முன்வர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். சில இடங்களிலே சத்துணவுக் கூடம் இல்லை என்பதை மாணபுமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்லியிருக்கின்றார்கள் உள்ளபடியே சில இடங்களிலே கீற்றுக் கொட்டகை போடப்பட்டிருக்கின்றது. பெற்றோர் ஆசிரியர் சங்கம்—Parent-Teacher Association— மூலமாக சில இடங்களிலே கட்டடங்களைக் கட்டியிருக்கின்றார்கள். சில இடங்களிலே பில்டிங்ஸ் கமிட்டி மூலமாக கட்டி இருக்கின்றார்கள். சில இடங்களிலே சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து கட்டிக் கொடுத்து இருக்கின்றோம். (மணியடிக்கப்பெற்றது) அப்படி இருந்தும் இன்னும் சில



1999 மே 3] [திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்]

பள்ளிக்கூடங்களிலே சத்துணவுக் கூடங்கள் கட்டப்படாமல் இருக்கின்றன. அவற்றிற்கு அரசு கட்டடங்களைக் கட்டிக் கொடுப்பதற்குரிய முயற்சியை மேற்கொள்ள வேண்டுமாய்க் கேட்டு கொள்கிறேன். கர்ப்பிணிப் பெண்கள், கருவுற்ற பெண்களுக்கு.... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி.

***திரு. சி. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமூக நலத் துறையின் மானியக் கோரிக்கையில் எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழக முதல்வர் அவர்கள் திருவள்ளூர் மாவட்டத்தைத் தனியாகப் பிரித்து மாவட்ட ஆட்சியர் அலுவலகப் பெருந்திட்ட வளாகம் கட்ட நிதியொதுக்கீடு செய்து, தனது திருக்கரத்தினால் கால்கோள் விழா செய்ததற்காக அவர்களுக்கு திருவள்ளூர் தொகுதி மக்களின் சார்பில் எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவிலோங்கி இவ்வுலகம் தழைக்குமாம்"

என்று பாடி பெண்களின் சம உரிமையை நிலைநாட்ட மகாகவி பாரதியார் கண்ட கனவுகளை நனவாக்கும் பொருட்டு எண்ணற்ற திட்டங்களை இந்த நிதிநிலை அறிக்கையில் சேர்த்திட்ட தலைவர் அவர்களின் தொலைநோக்குப் பார்வைகண்டு இம்மாமன்றம் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறது.

ஒரு நாடு சமூக பொருளாதாரக் கல்வியில் முழு வளர்ச்சி அடைய வேண்டும் என்றால், பெண்களின் வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்ற கோட்பாட்டினைக் கருத்திற்கொண்டு ஏழை, ஆதரவற்ற பெண்கள், முதியோர் ஊனமுற்றோருக்கு எண்ணற்ற திட்டங்களைத் தீட்டி, இந்திய திருநாட்டிற்கு முன்னோடியாக விளங்கக் கூடியவர் நம்முடைய முதல்வர் அவர்கள்.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு ஏழைப் பெண்கள் திருமண நிதியுதவித் திட்டம், தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதியுதவித் திட்டம், ஏழை விதவையரது மகள் திருமண நிதியுதவித் திட்டம், அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண நிதியுதவித் திட்டம். இத்தகைய திட்டங்கள் யாவும் வரலாற்றில்

பொன் எழுத்துக்களில் பொறிக்கப்பட வேண்டியவையாகும். ஏழை விவசாயப் பெருங்குடி மக்கள் தங்கள் பிள்ளைகளை விட்டுச் செல்ல அங்கன்வாடி மையங்கள், அங்கு இக்குழந்தைகளுக்கு பருப்பு நெய் கலந்த உணவு, ஏழை கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச் சத்து உருண்டை, இவையெல்லாம் சமூக பொருளாதாரத் துறையின் நாடு போற்றும் நல்ல திட்டங்கள் ஆகும். இத்திட்டத்தினால், சத்தான முத்தான குழந்தைகள் பிறப்பதுடன், கர்ப்பிணி தாய்மார்களின் இறப்பு விகிதம் குறைக்கப்பட்டதை நாடே நன்கு அறியும். கண் பார்வையற்றோர், காது கேளாதோர், கை கால் இழந்தோர், மன வளர்ச்சி குன்றியோர் என 10 இலட்சத்திற்கு மேற்பட்டவர்களின் வாழ்வில் ஒளி பிறந்திட இவர்களின் கல்விக்கென தனி நிதி ஒதுக்கீடு வழங்கியதோடு வேலைவாய்ப்பில் 3 சதவிகித இட ஒதுக்கீடு அளித்து இந்த அரசு உடல் ஊனமுற்றோருக்கு 3 சக்கர சைக்கிள், காதொலி கருவிகள், மூக்குக் கண்ணாடி வழங்கி, இலவசப் பேருந்து பயணத்திற்கு அனுமதி வழங்கி சமூக நலத் துறைக்குச் சிறப்புச் சேர்த்தவர் நம்முடைய முதல்வர் ஆவார்.

உற்றார் உறவினர் இன்றி உள்ள ஆதரவற்றோர் வாழ, சமூகப் பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு முதியோர் உதவித் தொகைப் பாதுகாப்புத் திட்டம், ஆதரவற்ற, உடல் ஊனமுற்ற, முதியோர் உதவித் தொகைத் திட்டம், ஆதரவற்ற முதியோர் உதவித் தொகைத் திட்டம், ஆதரவற்ற, கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கான உதவித் தொகை திட்டம், ஆதரவற்ற விதவைப் பெண்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம், இந்த 5 திட்டங்களின் மூலம் வழங்கும் மொத்த மாத உதவித் தொகையினை உயர்த்தி வழங்குவதோடு மட்டும் இன்றி ஆண்டிற்கு 2 முறை இலவச வேட்டி சேலை வழங்கி வருவதோடு அவர்களைப் பாதுகாத்து, அரணாகத் திகழ்பவர் நம்முடைய முதல்வர் ஆவார். ஜாதிமத பேதமற்ற சமதர்ம சமுதாயத்தை உருவாக்கிட முதல்வர் அவர்கள் கொண்டுவந்த "பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டம்" உலகத்திற்கே வழிகாட்டியாக அமையும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை. இந்தியாவிலேயே தமிழகத்தை தொழில் துறையில் முதல் இடத்தைப் பிடிக்கச் செய்த பெருமை நம்முடைய இனமானக் காவலர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களையே சாரும். இச்சாதனை தொடரும்பொருட்டு, திருவள்ளூர் தொகுதியில் ஏதேனுமொரு தொழிற்சாலை தொடங்கிட ஆவன செய்யுமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



முற்பகல் 11-55

இத்தருணத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு திருவள்ளூர் தொகுதி சார்பாகக் கீழ்க்கண்ட கோரிக்கைகளை வைப்பது எனது கடமையென நினைக்கின்றேன்:

திருவள்ளூர் மாவட்டத்திற்குத் தனியாக ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர்—I.C.D.S. Project Officer—நியமனம் செய்திட வேண்டுமாய் மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

திருவள்ளூர் மாவட்டம் தனியாகப் பிரிக்கப்பட்டு ஏறக்குறைய 3 ஆண்டுகள் ஆகியும், மின்சாரத் துறையைப் பொறுத்தவரையில் மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம் தொடங்கப்படவில்லை. இதைத் தொடங்கிட ஆவன செய்ய வேண்டும்.

மாவட்டத் தலைநகரான திருவள்ளூரில் நெடுஞ்சாலைத் துறை கோட்டப் பொறியாளர் அலுவலகம்—Highways Division Office—தொடங்கிட ஆவன செய்யப்பட வேண்டும்.

1990 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளப் பெருக்கத்தால் அடித்துச் செல்லப்பட்ட அரணவாயல்—திருவூர் இணைப்புப் பாலம் மீண்டும் கட்டப்படாமல் உள்ளதால் மக்கள் பெரிதும் பாதிப்படைகின்றனர். எனவே, கனிவுடன் பரிசிலனை செய்து கூவம் ஆற்றின் குறுக்கே இப்பாலம் மீண்டும் கட்டப்பட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

திருவள்ளூர் இரயில்வே கேட்டில் மேம்பாலம் விரைவில் அமைத்திட மத்திய அரசை வலியுறுத்துமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

திருவள்ளூர் நகரம் மாவட்டத் தலைநகரம் என்பதால் போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ளது. எனவே, திருவள்ளூர் இரயில்வே கேட் முதல் டோல்கேட் வரை புறவழிச் சாலை அமைத்திடுமாறு மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

திருவள்ளூர் நகரில் அரசு கலைக் கல்லூரியும், பூண்டி ஒன்றியத்திலே ஐ.டி.ஐ.யும், திருவள்ளூர் ஒன்றியத்தில் பாலிடெக்னிக்கும் தொடங்கிட ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. சி. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி] [1999 மே 3

பூண்டி ஊராட்சி ஒன்றியம் ஆட்டரம்பாக்கம் கிராமத்திற்கும், கிருஷ்ணாபுரம் கிராமத்திற்கும் இடையே புதிய இணைப்புச் சாலை 2 கிலோ மீட்டர் தூரம் அமைக்குமாறு அக்கிராம மக்கள் கடந்த 25 ஆண்டுகளாகக் கோரி வருகின்றனர். சுமார் 8,000 மக்கள் பயன்பெறும் இந்த இணைப்புச் சாலையை அமைத்திட "சிறப்பு" நிதி ஒதுக்கீடு செய்யுமாறு கோருகிறேன்.

மழைக் காலங்களில் சென்னை-கல்கத்தா சாலைக்கு மாற்றுச் சாலையாக அமையும் திருமழிசை-சத்தியவேடு சாலையைத் திருவள்ளூர் டோல்கேட் முதல் ஊத்துக்கோட்டை வரை 23 கிலோமீட்டர் நெடுஞ்சாலையை அகலப்படுத்தி, மேம்பாடு செய்து இருவழிச்சாலையாக அமைத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அல்லிக்குழி மலைச் சரிவிலிருந்து வரும் மழைநீரைப் பாதுகாத்திடும் பொருட்டு, அல்லிக்குழி ஓடையைத் தூர் வாரிநீர்த் தேக்க அணை (Check Dam) கட்டி அந்த நீரைப் பூண்டி நீர்த்தேக்கத்திற்குக் கொண்டு வர பெரிய திட்டம் தீட்டிட ஆவன செய்யுமாறு கோருகிறேன்.

மேற்கண்ட கோரிக்கைகளை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் கனிவுடன் பரிசீலனை செய்து உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு அன்புடன் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமூக நலம் மற்றும் சத்துணவுத் துறையின் மானியக் கோரிக்கையின்மீது பேச வாய்ப்பளித்த உங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

சமூக நலத் துறையிலே பல்வேறு சிறப்பான பணிகள் மேற்கொள்ளப் பட்டிருப்பது பாராட்டுக்குரிய ஒன்று. குறிப்பாக, ஒன்றிரண்டு கருத்துக்களை நான் சொல்லி முடிக்க விரும்புகிறேன்.

சத்துணவுத் திட்டம் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டம் நிரந்தரமான திட்டமாக நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகளை தமிழக அரசு மேற்கொண்டிருக்கிறது. ஆகவே, சத்துணவுத் திட்டம் நிரந்தரமான திட்டம் என்று முடிவெடுத்ததற்குப் பின்னாலே,



1999 மே 3] [திரு. வை. சிவபுண்ணியம்]

அதிலே பணிபுரிகிற பணியாளர்களும் நிரந்தரம் செய்யப்பட வேண்டுமென்ற கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. பல ஆண்டுகளாகத் தொடங்கப்பட்ட இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுகிறபொழுது அதிலே பணிபுரிகிறவர்கள் மட்டும் நிரந்தரம் செய்யப்படாமல் போதுமான ஊதிய உயர்வும் இல்லாமல் அரசு ஊழியர்களுக்குக் கிடைக்கிற சலுகைகளும் கிடைக்காமல் பணிபுரியக்கூடிய சூழ்நிலை இருப்பதைத் தமிழக அரசு பரிசீலனை செய்து அவர்களை நிரந்தரப் பணியாளர்களாக மாற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, 31-12-1997 ஆம் தேதியுடன் முடிவடைந்த 'டினிப்' திட்டத்தினை தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துணவுத் திட்டத்தோடு I.C.D.S. திட்டமாக சமூகநலத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டுக்கொண்டு வருவதைப்போல இணைக்கப்பட வேண்டுமென்று கோரிக்கை வைக்கப்பட்டு இதில் முடிவு எடுக்க காலம் தாழ்த்தப்பட்டு வருகிறது. அது உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வைக்கிறேன். சமூக நல இயக்ககத்திலேயுள்ள நிர்வாக அலுவலர் பதவி, மூத்த அமைச்சுப் பணியாளர், பணிகளில் கண்காணிப்பாளர்களைக் கொண்டு நிரப்பப்பட வேண்டும்—அரசாணை எண் 595-ன்படி நிரப்பப்பட வேண்டும். அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். சமூக நலத் துறையில் கண்காணிப்பாளர் பதவி, மேல் பதவி உயர்வு என்பதே இதுவரையிலே இல்லையென்ற ஒரு கருத்துச் சொல்லப்படுகிறது. ஆகவே, அவர்களுக்குப் பதவி உயர்வு வழங்குவதற்கான முயற்சிகளை இந்தத் துறை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நண்பகல் 12-00

அரசுப் பணியாளர்கள் ஓய்வு பெறும்போது பணியாற்றிய காலத்தைக் கணக்கிட்டு பணிக்கொடை வழங்குவதைப்போல—1981, 1982, 1983 ஆம் ஆண்டுகளில் சத்துணவுப் பணியாளர்கள் பணியிலிருந்து ஓய்வு பெறுகிற நிலை ஏற்பட்டிருக்கிறது. சுமார் 30 ஆண்டுகாலம் பணியாற்றிவிட்டு அவர்கள் ஓய்வு பெறுகிறார்கள். ஆனால், அவர்கள் ஓய்வுபெற்று வீட்டுக்குச் செல்கிறபோது அவர்களுக்கு எந்தவிதமான பணிக்கொடையும், எந்தவிதமான பயனுமே இல்லாமலே அவர்கள் வெறுங்கையோடு வீட்டிற்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்படுகிறது. ஆகவே, அவர்களுக்கு உதவிகள் செய்வதற்கான முயற்சிகளை அரசு எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்—ஆகவே, இவர்களுக்கும் பணியாற்றிய

காலத்தைக் கணக்கிட்டு கடைசியாகப்பெற்ற ஊதியத்தில் பாதித் தொகையாவது பணிக்கொடையாக வழங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஏனென்றால், பணிக்கொடை, ஓய்வூதியத் திட்டத்தில் இடம்பெறாத பணியாளர்களுக்கு பணிக்கொடை விதிகளில் வழிவகை செய்யப்பட்டு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, அந்த விதிகளின் அடிப்படையிலே அவர்களுக்கு பணிக்கொடை வழங்கப்பட முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எல்லோருமே இங்கே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டம். இந்தத் திட்டத்தைப்பற்றி பட்ஜெட் உரையிலே சொல்கிறபோது பல கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. 8 ஆம் வகுப்பு என்று இருந்த நிலை 10 ஆம் வகுப்பாக மாற்றப்பட்டிருப்பது, 8 ஆம் வகுப்பு படித்து, இதற்காகக் காத்திருக்கின்ற இப்படிப்பட்ட நல்ல சூழ்நிலையிலே, ஆவலோடு காத்திருந்தவர்களுக்கு ஏமாற்றம் அளித்து இருக்கிறது என்பதுதான் உண்மை பல ஆயிரக்கணக்கான மனுக்கள் பல சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும். ஆகவே, 10 ஆம் வகுப்பு என்ற நிலையை 8 ஆம் வகுப்பு என்று மாற்றி அவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் உதவி வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல ஆதரவற்ற பெண்கள் திருமண உதவித் திட்டம் மூலம் ரூபாய் 5,000 என்று வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், இந்தத் திருமண உதவித் திட்டத்திலே இரண்டு விதமான கருத்துக்கள் இருக்கக்கூடாது என்பதை வலியுறுத்திச் சொல்ல கடமைப்பட்டிருக்கின்றேன். திருமண உதவித் திட்டத்தில் பெண்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் என்று வழங்கிவிட்டு, ஆதரவற்ற பெண்கள் உதவித் திட்டத்தில் 5,000 ரூபாய் என்று வைப்பதை அரசு பரிசீலித்து அதையும் 10,000 ரூபாயாக....

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏழை, 18 வயது பூர்த்தியடைந்திருந்தால், 8-வது படித்திருந்தால் அவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் வழங்கவேண்டும் என்று அரசினுடைய உத்தரவாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அது இப்போது 10-வது வகுப்பு என்று மாற்றப்பட்டு இருப்பதை அனைவரும் அறிவீர்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆதரவற்ற பெண்களுக்குக் கொடுக்கின்ற





உதவியையும் 10 ஆயிரம் ரூபாயாக உயர்த்த வேண்டும் என்று சொன்னார்கள். இரண்டுக்கும் வேறுபாடு இருக்கக்கூடாது என்று சொன்னார்கள். இரண்டுக்கும் வேறுபாடு இருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். முதலிலே சொன்ன திட்டம் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம். 8-வது வகுப்பு படித்து முடித்திருக்க வேண்டும். தேர்வாகியிருக்க வேண்டும் என்பதுகூட அங்கே கட்டாயப்படுத்தப்படவில்லை. 8-வது வகுப்பு படித்திருந்தால், 18 வயது பூர்த்தியடைந்திருந்தால் ஏழைக் குடும்பமாக இருந்தால் அவர்களின் திருமணத்திற்கு 10 ஆயிரம் ரூபாய் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்து, இந்த ஓர் ஆண்டு மட்டுமே 70 ஆயிரம் பெண்கள் பயன் அடைந்திருக்கிறார்கள். ஆனால், ஆதரவற்ற பெண்கள் என்று வருகிறபோது அவர்களுக்குத் தாயோ, தகப்பனோ இல்லையென்ற காரணத்தினாலே 8-வது வகுப்பு வரை அவர்களால் படிக்க இயலாது. எனவே, அப்படிப்பட்ட பெண்களுக்கு திருமண உதவித் திட்டம் கட்டாயம் வழங்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில்தான் கருணை உள்ளம் கொண்ட கலைஞர் அவர்கள் அந்தத் திருமண உதவியாக 5 ஆயிரம் ரூபாய் வழங்கியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** துணைத் தலைவர் அவர்களே, நான் அந்தத் திட்டத்தைத் தவறாகச் சொல்லவில்லை. வரவேற்கிறேன். ஆனால், அதிலே செய்தியாகச் சொல்லப்பட்டிருப்பதே ஆதரவற்ற பெண்கள் என்ற வார்த்தை வருகிறபோது அவர்களுக்கு ஆதரவாக இந்தத் தொகை வழங்கலாமே என்ற அந்தக் கருத்தின் அடிப்படையிலேதான் இந்தக் கருத்தை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். ஆகவே, பரிசீலிக்க வேண்டும்.

அதேபோல், முதியோர் உதவித் தொகை வழங்குவதிலே பல்வேறு கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கு உதவித் தொகை வழங்குவதிலே சில விதிமுறைகள் சொல்லப்பட்டிருப்பதிலே, ஒன்று, அவர்களுடைய சொத்து மதிப்பு ரூபாய் ஆயிரத்திற்குமேல் இருக்கக்கூடாது என்று குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது கொள்கை விளக்கக் குறிப்பிலே. சொத்து மதிப்பு என்றால், 1000 ரூபாய் என்று எந்தச் சொத்தையும் மதிப்பிடவே முடியாது. அவர்கள் குடியிருக்கிற ஓலைக் குடிசையாக இருந்தால்கூட அது 10 ஆயிரம் ரூபாய்க்கு மேலே பெறுமானம் உள்ளதாகத்தான் இருக்கிறது. ஆகவே, அந்த 1,000 ரூபாய் சொத்து மதிப்பு என்று அதிலே குறிப்பிட்டிருக்கிற அந்த விதிமுறையை எடுத்துவிட வேண்டும். தேவையானால் இப்போது

இருக்கிற விலைவாசி நிலைமைகளுக்கேற்ப மதிப்பீடுகளை உயர்த்திச் சொல்லலாமே தவிர அந்த ஆயிரம் ரூபாய் என்பது அந்த முதியோர் உதவித் தொகை பெறுபவர்களுக்குப் பொருத்தமாக இருக்காது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாநில மகளிர் ஆணையம் அமைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு இங்கே சட்ட அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். அதன் மூலமாக பல்வேறு பணிகளை நிறைவேற்றுவதற்குரிய வாய்ப்புகள் இருக்கின்றன. சத்துணவுப் பணியாளர்களாக பட்டதாரிகள், ஆண், பெண் பணியாளர்கள் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும்.

பிற்பகல் 12-05

அதோடு ஆசிரியர் பயிற்சி முடித்தவர்களும் அதிலே இருக்கிறார்கள். அவர்கள்கூட கோரிக்கை வைத்து பல ஆண்டு காலமாகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். பணிமூப்பின் அடிப்படையிலே அவர்களுக்கு ஆசிரியர் பணியிடம் கொடுப்பதற்கான முயற்சிகளையும் கல்வித் துறை அமைச்சரவர்களும் மேற்கொள்ள வேண்டும்; அதற்கான முயற்சிகளை சமூக நலத் துறையும் மேற்கொள்ள வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கண்பார்வையற்றோர், காது கேளாதோர் ஆகியவர்களுக்கு இட ஒதுக்கீட்டின் அடிப்படையிலே பணி வாய்ப்பு வழங்குவதிலே நடைமுறைப் பிரச்சினை இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதனைத் தவிர்க்கும் வகையில், கண்பார்வையற்றோர்கள், காது கேளாதோர்கள் என்ற வகையில் ஊனமுற்றவர்கள் என்று கருதப்பட்ட 70 சதவிகிதம் ஊனப்பட்டிருந்தால் போதுமானது என்ற வகையில் விதிமுறைகளில் உரிய திருத்தம் செய்யப்பட வேண்டும். அதன்மூலமாகத்தான் அந்த கண்பார்வையற்றோர், காது கேளாதோர் உரிய சலுகைகளும், வேலை வாய்ப்புகளும் பெறுவதற்கான வாய்ப்புகள் இருக்கும். அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, பள்ளிச் சத்துணவு, குழந்தைகள் நல மையம், ஊட்டச் சத்துணவு மையம், அங்கன்வாடி மையம் என்று பல பிரிவுகளாக இருக்கின்றன. இந்த எல்லாப் பிரிவுகளுமே இரண்டு துறைகளின்கீழ் வருகின்றன. இரண்டு அமைச்சர்கள் அதைக் கண்காணிக்கக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இதையெல்லாமே சேர்த்து ஒரு சத்துணவுத் துறை என்ற அடிப்படையிலே தனித்



துறையாக நியமிக்க வேண்டும். தனி ஒரு அமைச்சர், அதற்குப் பொறுப்பாக இருந்தால்தான் எல்லாவிதமான காரியங்களையும் செயல்படுத்த முடியும். ஊரகத் தொழில் துறை அமைச்சரும் கவனிக்க வேண்டிய அவசியம் இருப்பதனாலே பல்வேறு பிரச்சினைகளும், முரண்பாடுகளும், கருத்து வேறுபாடுகளும், பல்வேறு சங்கடங்களும் அதிலே இருக்கின்றன. ஆகவே, ஒரே துறையாக இதை ஆக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தரமான உணவுப் பொருட்கள் வேண்டுமென்ற கோரிக்கையிருக்கிறது. அதுகூட, மறுக்கப்படலாம். பல செய்திகள் இருக்கின்றன. சத்துணவுக் கூடங்களுக்கு வழங்கப்படுகின்ற அரிசி தரமானதாக இல்லை என்றவொரு குற்றச்சாட்டு இருக்கிறது. பலயிடங்களிலே சொல்லப்படுகிறது. சிலயிடங்களில் சரி செய்யப்படுகிறது. இருந்தாலும் துர்நாற்றம் வீசுகின்ற அரிசியைக்கூட வழங்குகிறார்கள். இது இலவச சத்துணவு என்ற காரணத்தினாலே அரிசி தரமானதாக வழங்கப்படவில்லை என்ற ஒரு குறைபாடு இருக்கிறது. அதை நிவர்த்தி செய்வதற்கான முயற்சிகளை அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சத்துணவுப் பணியாள்ர்களாகப் பணியாற்றக்கூடியவர்களுக்கு கோடைக்காலத்திலே விடுமுறைக் காலங்களிலே ஊதியம் வழங்கப்படுவது இல்லை. ஆகவே, அதைப் பரிசீலித்து அவர்களுக்கு ஊதியம் வழங்குவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும்.

குறிப்பாக, சத்துணவுத் திட்டத்திலே 25 ஆண்டுகாலமாக பணியாற்றி இருக்கின்றவர்களுக்குப் பதவி உயர்வு இல்லை. அரசு பிற துறைகளிலே காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புகின்றபொழுது அவர்களுக்கும் பணி மூப்பின் அடிப்படையிலே பதவி உயர்வு வழங்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சத்துணவுத் திட்டம் தொடங்கப்பட்டு செயல்படுத்துவதற்கான எல்லா ஏற்பாடுகளும் செய்யப்படுகின்றன ஆனால் அந்தச் சத்துணவு மையக் கூடங்களில் அந்தப் பணியாளர்கள் அமர்ந்து பணிபுரிவதற்கு அல்லது அரசு அலுவலர்களோ மற்றவர்களோ சென்று பார்வையிடுகிறபொழுது அமர்வதற்கான போதுமான அளவுக்கு நாற்காலி, மேசை, பீரோ அல்லது பதிவேடுகள் வைத்துக் கொள்வதற்கான ஒரு பெட்டிகூட இல்லாத சூழ்நிலையிருக்கிறது. ஆகவே, அதை ஒட்டுமொத்தமாகவே தமிழ்நாடு முழுவதும் பரிசீலித்து

சத்துணவுக் கூடங்களுக்குத் தேவையான இந்த உபகரணங்களையெல்லாம் வழங்குவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சமையல்காரர்கள், உதவியாளர்கள், இவர்களுக்குச் சம ஊதியம் இல்லாமல் இருக்கிறது. இருவருமே ஒரே பணியிலே ஈடுபடுகிறார்கள். ஆகவே, இவர்களுக்குச் சம ஊதியம் வழங்குவதற்குரிய முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஆகவே, இந்தக் கோரிக்கைகளெல்லாம் பல்வேறு சந்தர்ப்பங்களிலே அந்தத் துறையின் மூலமாகவும், அந்தப் பணியாளர்கள் மூலமாகவும் அரசுக்கு சொல்லப்பட்டிருக்கிறது. அவற்றைப் பரிசீலித்து நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: டாக்டர் காஞ்சனா கமலநாதன்.

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, சமூக நல மானியத்தில் பேசுகின்ற இந்த வாய்ப்பை அளித்தமைக்காக உங்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதிகாசத்திலேயிருந்து ஒரு சிறிய உதாரணம்:

“பாண்டவர்தந் தேவியவள் பாதியுயிர் கொண்டுவர,
நீண்ட கருங்குழலை நீசன் கரம்பற்றி
முன்னிழுத்துச் சென்றான், வழிநெடுக, மொய்த்தவராய்,
‘என்ன கொடுமை யிது’ வென்று பார்த்திருந்தார்.
ஊரவர்தங் கீழ்மை யுரைக்குந் தரமாமோ?
வீரமிலா நாய்கள், விலங்கா மிளவரசன்
தன்னை மிதித்துத் தராதலத்திற் போக்கியே,
பொன்னையவ ளந்தப் புரத்தினிலே சேர்க்காமல்,
நெட்டை மரங்களென நின்று புலம்பினார்.
பெட்டைப் புலம்பல் பிறர்க்குத் துணையாமோ?”

புதுமைப் பெண்ணைப் படைத்து, இந்தப் பெண்ணினம் மேன்மையுற வேண்டும் என்பதற்காகப் பாடல்களைத் தொகுத்தளித்த மகாகவி



பாரதி தன்னுடைய பாஞ்சாலி சபதத்திலே திரௌபதியை துச்சாதனன் வீதியிலே இழுத்து வந்த காட்சியை எழுதுகின்றபொழுது மிதமிஞ்சிய கோபத்தினால் எழுதியிருக்கக்கூடும் என்று கருதுகிறேன். “பெட்டைப் புலம்பல்” என்று ஒரு சொல்லை அதிலே சேர்த்துவிட்டார்.

உலக மகளிர் தினம் கொண்டாடப்பட்டபொழுது ஒரு கவியரங்கத்திலே நான் கலந்துகொண்டபொழுது ஓர் இளம் பெண் கவிஞர் இந்தச் சொற்றொடரைச் சொன்னார்கள். பெண்ணை இவ்வளவு உயர்வாகப் பேசிய பாரதிகூட ஓர் இடத்திலே “புலம்பல்” என்று வருகிறபொழுது அது பெண்களுக்கே சொந்தமானது, “பெட்டைகளின் புலம்பல்” என்று சொல்லிவிட்டான், வானுலகம் சென்றாவது அந்த மகாகவியை நான் கேட்காமல் விடமாட்டேன் என்று மிகவும் சினந்து சொன்னார்கள். (குறுக்கீடு) I am not yielding.

பிற்பகல் 12-10

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, “பெட்டைப் புலம்பல்” என்று பாரதி குறிப்பிட்டது, பெண் என்ற ஓர் இனம் சம்பந்தபட்டதாக இல்லை. பெண் என்றாலே அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு, முன்துருத்தல் நிச்சமும் பெண்பார்க்கு உரிய என்ப என்றுதான் களவியல் சூத்திரம் கூறுகிறது. பெண் என்றால் இப்படித்தான் என்று சொல்லப்பட்ட அந்த அர்த்தத்தை வெளிப்படுத்துவதற்குத்தான் அந்தக் கவிதை வரியில் பாரதி அந்த விஷயத்தைச் சொன்னானே தவிர, பெண்ணை இழிவுபடுத்துவதற்கு அல்ல.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் காஞ்சனா கமலநாதன்.

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாரதிக்காக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வக்காலத்து வாங்கியதை நான் பாராட்டுகிறேன். ஆனால் பெட்டை என்ற சொல்லுக்கு என்ன பொருளை நேரடியாகப் பொதுவாக எடுத்துகொள்வார்கள் என்பதைத்தான் அந்த இளம் கவிஞர் குறிப்பிட்டுச் சொனனாரே தவிர அந்த ஒரு சொற்றொடருக்கு...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, பெட்டை என்றால் பெண் கோழியைத்தான் எடுத்துக் கொள்ளவேண்டும். பெண் என்று எடுத்துக்கொள்ளக் கூடாது. (சிரிப்பு)

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாரதி கூட ஓர் இடத்திலே ஒரு சொல்லிலே சறுக்கிவிட்டான் இந்தப் பெண் இனத்தை - கோழியாக இருந்தாலும் அந்த பெண் கோழியை இழிவுபடுத்திவிட்டான். ஆனால் சறுக்கலே இல்லாத தலைவர், மாண்புமிகு தமிழக முதல்வர் தன்னுடைய பேச்சில், எழுத்தில், எண்ணத்தில், திரைப்படத் துறையிலே அவர் வடித்துக்கொடுத்த...

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உண்மையிலேயே தமிழ் இலக்கியத்தினுடைய நீண்ட கால வரலாற்றில் முதல் முறையாகப் பெண் இனத்திற்காக ஆண்களைக் குற்றவாளிக் கூண்டிலேற்றிக் குறுக்கு விசாரணை செய்த முதல் தமிழ்க்கவி பாரதிதான். எனவே பாரதி, பெண்களுக்கு எதிராக இருந்தான் என்று, போகிற போக்கில் நாம் சொல்லிவிட்டுப் போகக் கூடாது என்பதற்காகத்தான் இந்த ஒரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன்.

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் என்னுடைய நேரத்தை வெகுவாகக் குறைத்துவிடுவீர்கள் என்ற அச்சத்தினால் இந்த விவாதத்தைத் திசைதிருப்ப நான் விரும்பவில்லை. எனவே தொடர்ந்து விவாத்தின் கருத்துக்கு வருகின்றேன். தன்னுடைய எழுத்தில், பேச்சில், திரைப்படங்களுக்குதான் எழுதிக் கொடுத்த வசனங்களில், மாநாடுகளில், பொதுக் கூட்டங்களில்—எந்த இடத்திலுமே எந்த நிலையிலுமே பெண்ணைப்பற்றி இழிவுபடுத்தி ஒரு சொல்லைக்கூடச் சொல்லாத, சறுக்கல் இல்லாத தலைவர் தமிழக முதல்வர் மாண்புமிகு கலைஞர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) எனபதை மட்டும்தான் நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல வந்தேனே அல்லாமல் வேறல்ல. அவர்களைப் புகழ்ந்து உரைப்பதை அவர்கள் இந்தச் சபையிலே வெகுவாகக் குறைத்துக்கொள்ளுங்கள் என்றுதான் அறிவுறுத்தியிருக்கின்றார்கள். ஆனாலும்கூட, நூற்றுவர் படைத் தலைவனிடத்திலே குற்றேவல் செய்கின்ற ஒருவனுடைய மகள்கூடத் தன்னுடையப் பெற்றோரைப்பற்றிப் புகழ்ந்து உரைப்பதை வெகு



மகிழ்ச்சியாகச் சொல்வாள் என்று சொன்னால், மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் பெருந்தகை என்றும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் என்றும் தமிழகத்தின் பெண் இனத்தினுடைய பெற்றோராய் இருக்கக்கூடிய, பாராளப் பெற்றாரை, எங்கள் பெற்றோரைப் புகழாமல் இந்தச் சமூக நல மானியத்தைப் பேசி முடிப்பது என்பது அத்துணை எளிமையான காரியம் அல்ல என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழகத்தில் மகளிர் நலன் காக்கப் பிறந்த மகானுபாவன், மகளிருக்குப் பொருளாதார மேம்பாடு கிடைக்கச் சுயவேலை வாய்ப்புத் திட்டங்கள் என்றும், சிறு வணிகக் கடன் என்றும் பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்து எங்களுடைய வறுமைப் புழுக்கத்தை நீக்கிய பூமென் காற்று. வரதட்சணைக் கொடுமையை ஒழித்து, சமுதாயத்தின் பல்வேறு கொடுமைகளுக்கு ஆளாகி நடுங்கிக் கிடந்த பெண் சமுதாயத்தின் குளிருக்குக் கிடைத்த போர்வை. எங்கள் விழிகளுக்குக் கிடைத்த பார்வை. பசிக்குக் கிடைத்த பால்சோறு, எங்கள் ருசிக்குக் கிடைத்த தேன் பலாச்சுளை. டாக்டர் கலைஞர் அவர்கள் இந்தச் சமூக நலத்திற்காக, மகளிர் நலத்திற்குக் குறிப்பாகக் கொண்டு வந்திருக்கிற அத்துணைத் திட்டங்களுக்கும் நாங்கள் • (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உலகம் என்றால் என்ன, அம்மையப்பன் என்றால் என்ன என்ற விவாதம் வந்தபோது, —குறுக்கீடுகள் அதிகமாக இருக்காது என்று கருதுகிறேன்— தன் பெற்றோரைச் சுற்றி வந்து மாம்பழத்தைப் பெற்றுக்கொண்ட கணபதியைப்போல, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி என்று சொல்லிவிட்டு அமர்ந்தாலே இந்தச் சமூக நல மானியத்திலே பேசி முடித்துவிட்ட முழுப் பலனும் கிடைக்கும் என்ற அளவிலே அவர் ஒவ்வொரு துறையிலும் எங்களுக்காக, பெண்களின் மேம்பாட்டுக்காக போட்டிருக்கின்ற அத்துணைத் திட்டங்களுக்கும் சலுகைகளுக்கும் ஒட்டுமொத்தமாக நன்றி என்று சொல்ல நாங்கள் கடமைப்பட்டிருக்கின்றோம். ஆனாலும் கூட, எனக்கு முன்பு பேசிய பல்வேறு உறுப்பினர்கள் நிறைய கருத்துகளை இந்த மானியத்திலே எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். பதில் அளிக்கின்றபோது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவற்றுக்கு தகுந்தவாறு பதில் சொல்ல இருக்கிறார்கள். ஒரு சில கோரிக்கைகளை மட்டும் என்னுடைய கருத்தாக இந்த அவையிலே பதிய வைத்து, விடைபெற நான் விரும்புகிறேன்.

பிற்பகல் 12-15

இங்கே, எட்டாவது வகுப்பு வரை படித்தவர்களுக்கு மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித் திட்டத்தின் கீழே, எட்டாவதோடு நிறுத்திக் கொள்ளக்கூடாது, பத்தாவது வரையிலே படித்திருக்க வேண்டுமென்று இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே விளக்கப்பட்டிருப்பதை எல்லோரும் ஒட்டுமொத்தமாக எதிர்த்தார்கள். எட்டாவது வரை படித்த பெண்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். பதினான்கு வயதிலேயே பெண் குழந்தைகள் எட்டாவது வகுப்பை முடித்து விடுகிறார்கள். 13, 14 வயது என்கின்றபோது எட்டாவது வகுப்பு படித்து முடித்து விடுகிறார்கள். அதற்குப் பிறகு 18 வயது ஆகின்ற வரையில் அவர்கள் காத்துக் கொண்டிருக்கின்ற அந்தக் காலகட்டத்தில் பத்தாவது வரை படித்தால் எந்தவித நஷ்டமும்—அரசாங்கம் எல்லாவித உதவிகளையும் செய்கிறது, எனவே 10-வது வரை படிப்பதற்கு—எந்தவிதமான பெரிய நஷ்டமும்—அவர்களுக்கு வந்துவிடப் போவதில்லை. சும்மா வீட்டிலே உட்கார்ந்துகொண்டு, மோட்டுவளையைப் பார்த்துக் கொண்டிருப்பதைவிட 10-வது வரை அவர்கள் படிப்பதை வலியுறுத்த ஒரு நல்ல அம்சமாக நிதிநிலை அறிக்கையிலே சேர்க்கப்பட்டிருக்கிறது என்ற பொருளிலேதான் நாம் எல்லோரும் அதை வரவேற்று, அதற்கு ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும் என்று சொன்னாலும்கூட, தொகுதியிலே பெறப்படுகின்ற மனுக்களைப் பார்க்கின்றபோது, மாண்புமிகு முதல்வரவர்கள் அமர்ந்திருக்கின்ற இந்தப் பேரவையில், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சரவர்களுக்கு ஒரே ஒரு கோரிக்கையை, ஒரு வேண்டுகோளை வைக்க நான் கடமைப் பட்டிருக்கிறேன். இந்த ஆண்டு மட்டுமாவது—அவர்கள் ஏற்கெனவே காத்திருந்தனர், கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு. ஆனால் நாம் இபபடி ஒரு திட்டத்தைப் புதிதாக இந்த ஆண்டு கொண்டுவரப் போகிறோம் என்று அவர்களுக்குத் தெரியாது எனவே நீங்கள் பரிசீலனை செய்து பாருங்கள். ஆலோசனை செய்து பாருங்கள். முடிந்தால், 31-3-1999 வரை மனுக் கொடுத்தவர்களுக்குக் கொடுக்க முடியுமா என்ற ஒரு வேண்டுகோளை நீங்கள் பரிசீலிக்க வேண்டும் என்று நான் மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சரவர்கள் இரண்டு, மூன்று முறை இந்தப் பேரவையிலே அறிவித்திருக்கிறார்கள் பெண் குழந்தைகளுக்கு; முதல் குழந்தைக்கு 1500 ரூபாய்; ஒரே குழந்தை என்றால் 3000 ரூபாய்; இரண்டாவது பெண் குழந்தை பிறந்துவிட்டால், அதற்கும் 1500 ரூபாய் என்ற அளவிலே அறிவித்திருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) ஓரிரு நிமிடங்களில் முடித்து விடுகிறேன். இதிலே ஒரு சின்ன interesting-ஆன புதுப் பிரச்சினை; என்னுடைய தொகுதியிலே ஒரு பெண் இரண்டாவது முறை கருவுற்று twins-ஆக இரண்டு பெண் குழந்தைகளைப் பெற்றுவிட்டாள். மொத்தம் மூன்று பெண் குழந்தைகள். இது ஒரு rarity. ரொம்ப rare-ஆகத்தான் இந்த மாதிரி நடக்கும். அப்படியிருந்தால், அவர்களையும் இதிலே உள்ளடக்கி எப்படிச் செய்வது? 4,500 ரூபாய் கொடுத்துவிட முடியுமா என்று மாண்புமிகு அமைச்சரவர்கள்.....

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதிசயமாக இப்படிச் சில பெண்கள், ஒருமுறை twins ஆகக் குழந்தைகளை ஈன்றுவிடுகிறார்கள். ஆனால், பிறந்தால் அந்தக் குழந்தைகளுக்கு மட்டும் சிறப்பு இனமாகக் கருதி, அரசு வழங்குகின்ற 1500 ரூபாயை வழங்குவதாகத் தற்போது நாங்கள் முடிவு செய்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** முதலிலே பெண் குழந்தை பிறந்துவிட்டது. இரண்டாவது முறை கருவுற்று, இரண்டாவது பிரசவத்தில் இரண்டும் பெண் குழந்தைகளாகப் போய்விட்டன. ஆகவே, இப்படி விதிவிலக்காக, எங்கேயோ ஒன்றிரண்டு என்று வருகின்ற அந்தக் குழந்தைகளுக்கு வாய்ப்பளிக்க வேண்டும். அதையும் நீங்கள் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே மூன்று சக்கர சைக்கிளைப் பற்றி எல்லோரும் பேசினார்கள். போலியோ நோயினால் பாதிக்கப்பட்டு நடக்க முடியாமல் இருக்கின்ற அந்த நிலை எவ்வளவு துரதிருஷ்டமானது; வேதனைக்குரியது; வாழ்நாள் முழுவதும் நடக்கமுடியாமல், பிறருடைய உதவியை எதிர்பார்த்திருப்பது எப்படிப்பட்டது என்பதைப் பரிபூர்ணமாக உணர்ந்தவள் நான். அந்த வகையில், இன்றைக்குக்கூட தினமணி பத்திரிகையிலே

முதல் பக்கத்திலே ஒரு செய்தி வந்திருக்கிறது. மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் அதனை நிச்சயமாகப் பார்த்திருப்பார்கள் என்று நான் நம்புகிறேன். அதிலே, 'கடந்த காலத்திலே மத்திய சர்க்காருடைய அமைச்சராக இருந்த மாண்புமிகு ஜனார்த்தனம் அவர்கள், 112 மூன்று சக்கர சைக்கிள்களை திருநெல்வேலியிலே ஒரு திருமண மண்டபத்திலே, நகராட்சியின் பொறுப்பிலே அவற்றை விட்டிருக்கின்றார்கள். கடந்த ஒரு மாத காலமாக அவை அங்கே கிடக்கின்றன. அவற்றை என்ன செய்வது என்று தெரியாமல் அதிகாரிகள் குழம்பிக் கொண்டிருக்கிறார்கள். நாளொன்றுக்கு, அந்தத் திருமண மண்டபத்திற்கு வாடகையாக ரூ.5,000/- செலுத்த வேண்டிய சூழ்நிலை இருக்கிறது,' என்றெல்லாம் இன்று தினமணி பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. எனவே, மாண்புமிகு முதலமைச்சரவர்களைக் கலந்து, நீங்கள் அரசுத் தரப்பிலே என்ன நடவடிக்கையை, என்ன முடிவை எடுக்க முடியுமோ அதை எடுத்து. அந்த 112 மூன்று சக்கர சைக்கிள்களை நாம் பயன்படுத்திக்கொள்ள முடியுமா என்கிற அந்தப் பரிசீலனையை நீங்கள் செய்ய வேண்டுமென்று மெத்தப் பணிவன்போடு உங்களை வேண்டிக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொரு வேண்டுகோள். (மணியடிக்கப்பெற்றது) முடித்து விடுகிறேன். மாவட்டங்களிலே, சமூக நலத் துறையில் முக்கிய சேவிகாக்கள் இருக்கிறார்கள். மாவட்டங்களிலே சமூக நலத் துறை அதிகாரி என்ற ஓர் அம்மையார் இருக்கிறார்கள். அவர்கள், அவ்வளவு ஒத்துழைப்பை எங்களுக்குக் கொடுப்பதில்லை. நான் இதை complaint ஆகச் சொல்லவில்லை. அவர்கள் இன்னும் கொஞ்சம் பரிவாக, அவர்கள் கிட்டத்தட்ட செவிலியர்களைப் போன்றவர்கள். ஒரு நர்ஸ் இருக்க வேண்டுமோ அந்த அளவுக்குக் கருணையோடு, அன்போடு முதலில் சட்டமன்ற உறுப்பினர்களுக்குக்கூட ஆலோசனை சொல்லி வழிகாட்டி, இன்னின்ன திட்டங்கள் துறையின் மூலமாக வந்து காத்துக் கிடக்கின்றன, உங்களுடைய தொகுதியிலே என்ன இருக்கிறது என்று கேட்டு எங்களுக்கு அவர்கள் உதவி செய்ய வேண்டும். ஆனால் அவர்கள் பாராமுகத்தினராகத் தட்டிக் கழிப்பதைப் போலப் பேசுகின்ற ஒரு நிலைமை மிகுந்த துன்பத்தைத் தருவதாக இருக்கிறது. அந்த நிலையைப் போக்குகின்ற வகையிலே நீங்கள் தயவுசெய்து



அவர்களுக்கு அறிவுறுத்த வேண்டுமென்று நான் மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அளவிலே சமூக நலத் துறை மானியத்திலே பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக நன்றி கூறி என் உரையை முடிக்கிறேன், நன்றி, வணக்கம்.

பிற்பகல் 12-20

## 6. விதி 110-ன் கீழ் அறிக்கை

### 1989-90-க்குப் பின் மூடப்பட்ட நிறுவனங்களைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு உதவித்தொகை ரூ.250/- அளிப்பது குறித்து முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி வேண்டியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மூடப்பட்ட தொழிற்சாலைகளில் வேலை செய்த தொழிலாளர்களுக்கு மேற்கு வங்காளத்தில் அளிப்பதுபோல உதவித் தொகை அளிக்க வேண்டுமென்று இம்மன்றத்திலே பலமுறை உறுப்பினர்கள் கோரி உள்ளார்கள். மேற்கு வங்காளத்தில் செயல்படுத்தப்படும் திட்டத்தைப் போலவே நமது மாநிலத்திலும் 1989-90 ஆம் ஆண்டுக்குப் பிறகு மூடப்பட்ட நிறுவனங்களைச் சார்ந்த தொழிலாளர்களுக்கு மாதம் ரூ.250/- உதவித் தொகை அளிக்க முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டம் மேற்கு வங்காளத்தில செயல்படும் திட்டத்தின் வரைமுறைகளோடு செயல்படுத்தப்படும். இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதால் ஆண்டு ஒன்றுக்கு அரசுக்கு சுமார் 10 கோடி ரூபாய் செலவாகும். இத்திட்டம் தொழிலாளர் தினமான மே 1 ஆம் தேதியிலிருந்து அமலுக்கு வருகிறது. இதன் காரணமாக சுமார் 40,000 தொழிலாளர்கள் பயன்பெறுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 5. மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### கோரிக்கை எண் 29 - சமூக நலன்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமூக நலத் துறை மானியத்தில் பேசுவதற்கு வாய்ப்புத் தந்தமைக்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய நாட்டில் எத்தனை திட்டங்களைத் தீட்டினாலும் நாம் எதிர்பார்த்த பலன் ஈட்டுவது இல்லை, அதற்கு ஜனத்தொகைதான் முக்கியமான காரணமாக இருக்கிறது. எனவே, ஜனத்தொகையைக் கட்டுப்படுத்துவதற்கு முழுப் பொறுப்பை எடுத்துக்கொண்டு பணியாற்றக்கூடிய ஒரு துறை சமூக நலத் துறை என்று சொன்னால் அது மிகையாகாது. இந்த அளவுக்கு சமூக நலத் துறை பல ஆண்டுகளாகப் பணியாற்றியும்கூட குடும்பக் கட்டுப்பாடு அல்லது ஜனத்தொகை ஆகியவற்றில் நாம் எதிர்பார்த்த அளவுக்கு இலக்கை அடைய முடியவில்லை என்று சொன்னால், இது மட்டுமல்ல, அதிலே பாதிக்கப்படக்கூடியவர்கள் பெரும்பாலும், ஜாதி சமய, மதத்திற்கு அப்பாற்பட்ட அனைத்து ஏழை மக்களும்தான். எனவே அரசு குடும்பக் கட்டுப்பாட்டை, குடும்பக் கட்டுப்பாட்டினுடைய அவசியத்தை இந்தத் துறையின் மூலம் இன்னும் அதிகக் கவனம் செலுத்தி, சிறப்பாக நடத்த ஆவன செய்ய வேண்டும். குடும்பக் கட்டுப்பாட்டை ஊக்கப்படுத்தக்கூடிய வகையில் அல்லது குடும்பக் கட்டுப்பாட்டை அமல்படுத்தாதவர்களுக்கு அரசு சலுகைகள் வழங்குவதைக் குறைக்க முடியுமா? அதாவது 2, 3 குழந்தைகளுக்கு மேல் உள்ளவர்களுக்கு—அல்லது அதை எப்படிச் செய்ய வேண்டுமென்று அரசு பரிசீலிக்க வேண்டும். குடும்பக் கட்டுப்பாட்டை அதிகமாக்கி, மக்கள் ஆர்வத்தோடு அதில் செயல்படுவதற்கு அப்படி ஏதாவது—இதற்கு மேல் குழந்தைகள் இருந்தால் அவர்களுக்கு உண்டான வாய்ப்பைக் குறைக்க முடியுமா என்பதுபோல ஏதாவது ஒரு முறையைப் பரிசீலனை செய்து, குடும்பக் கட்டுபபாட்டில் அதிக மக்கள் ஆர்வம் கொள்ளக்கூடிய வகையில் ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, 10 ஆம் வகுப்பு படித்த ஏழைப் பெண்களுக்கு திருமண உதவித் தொகை. இந்தத் திருமண உதவித் தொகை பல



இடங்களில் திருமணம் நடந்ததற்குப் பிறகு கிடைக்கிறது. அதனால் கணவன் அந்தத் தொகையை வாங்கக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. அதாவது மகளுக்குத் திருமணம் செய்து கொடுக்க முடியாத ஏழைப் பெற்றோர்களுக்காக இந்த நிதி வழங்கப்படுகிறது. அந்த நிதியை அந்த நோக்கத்தின் அடிப்படையில் திருமணத்திற்கு முன்பாகவே கொடுத்தால்தான் அந்தப் பெற்றோர்களுக்கு அது உதவியாக அமையும். எனவே, திருமணத்திற்கு முன்பாகவே கொடுக்கக்கூடிய வகையில் அதனுடைய சட்டத்தினைச் சற்றுத் தளர்த்தி பெரும்பாலும் திருமணத்திற்கு முன்பாகக் கிடைக்கக்கூடிய வகையில் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, திருமண உதவித் திட்டத்தில், இந்த நிதி உதவி, திருமணத்திற்கு முன்பாகக் கிடைக்க வேண்டுமென்றுதான் அரசு இந்தத் திட்டத்தை அமல்படுத்த உத்தரவு நல்கியது. ஆனால், திருமணத்திற்கு உதவி வேண்டுமென்று விண்ணப்பிக்கிறவர்கள் காலதாமதமாக விண்ணப்பிக்கிற காரணத்தால் அந்தத் திருமணம் முறையான திருமணம்தானா என்று விசாரித்து முடிவு செய்வதற்கு சற்றுக் கால அவகாசம் தேவைப்படுகிறது. ஏற்கெனவே அரசின் ஆணைப்படி 45 நாட்களுக்கு முன்னதாக, திருமணம் செய்துகொள்கிறவர்கள் விண்ணப்பம் செய்வார்கள் என்று சொன்னால் திருமணத்தன்றே அவர்களுக்கு இந்த உதவித் தொகை கிடைப்பதற்கு அரசு ஆவன செய்யும். சில திருமணங்கள் நடைபெறாமல் தடங்கல் ஏற்பட்டு நின்றுவிடுகின்றன என்று அறிகிறபட்சத்தில் காசோலை கொண்டு சென்ற உதவியாளர்கள் திரும்ப அந்தக் காசோலையை எடுத்துக்கொண்டு வருகின்ற சூழ்நிலையெல்லாம் ஏற்பட்டுவிடுகிறது. எனவே, திருமணம் முறையாக நடைபெறுகிறதா என்று பார்த்து அந்தக் காசோலையை வழங்குவதற்கேற்ப அரசு வழிவகை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-25

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண நிதி உதவித் தொகையைப் பெற 45 நாட்களுக்கு முன்பாக மனு செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். இதிலே பல மனுக்கள், மனு செய்தவர்களுக்கு,

மனு reject ஆகி அந்த நன்மைகளை, சலுகைகளைப் பெற முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே, 15 தினம் என்று வைத்துக்கொண்டால் போதும், ஒரு மாதத்தில்கூட ஒரு திருமணம் நிச்சயிக்கப்படுகிறது. ஆகையினால் 15 தினம் என்று நீங்கள் அறிவிக்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அரசினுடைய அறிவிப்பில் 15 நாட்களுக்கு முன்னதாக வழங்க வேண்டுமென்று இருக்கிறது. திருமணத்தன்றே காசோலை வழங்கப்பட வேண்டுமென்ற அவசியத்தை முன்னிட்டுத்தான், 45 நாட்களுக்கு முன்னதாக விண்ணப்பம் தரப்படும் என்றால், பரிசோதனை செய்து, விசாரித்து திருமணத்தன்றே அந்த உதவித் தொகையை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அவ்வண்ணமாக மதுரை, கோவை போன்ற மாவட்டங்களில் திருமணத்தன்றே பல பெண்கள் இந்த உதவித் தொகையைப் பெற்று இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நாம் மனுச் செய்த 45 நாட்களுக்குள் இந்தப் பணம் திருமணத்தன்றோ அல்லது அதற்குப் பிறகோ கொடுத்துவிடுவதாகச் சொன்னார்கள். ஆனால் நடைமுறையில் பல மாவட்டங்களில் அதில் காலதாமதம் ஏற்படுகிறது. எங்கள் மாவட்டத்திலே, குறிப்பாக மனுச் செய்து ஓராண்டு கழித்தும்கூட இன்னும் பணம் வந்து சேர்ந்தபாடில்லை. ஆகவே, போதிய நிதி அதற்கு ஒதுக்கப்படவில்லையோ என்கின்ற அச்சம் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதற்குக் கூடுதலாக நிதியை ஒதுக்கித் தந்தால்தான் இந்தப் பிரச்சினையே தீரும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, இந்த 45 நாட்களுக்குள் கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று சொன்னால், நிதிதான் அதிலே குறுக்கிடுகிறது. ஆகவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருணையோடு நிதியை வழங்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தத் திட்டத்திற்கு 60 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து 60,000 பெண்கள் பயன்பெற வேண்டும் என்று அறிவிப்புச்



செய்திருந்தார்கள். கூடுதலாக விண்ணப்பங்கள் வந்த காரணத்தா
மேலும் 10 கோடி ரூபாய் அதற்கு ஒதுக்கீடு செய்து 70 கோடி ரூபா
வழங்கியிருக்கிறார்கள். 70,000 பெண்களுக்கு இந்த ஆண்டு எந்
ஆட்சியிலுமே தரப்படாத அளவுக்கு உதவித் தொகையை மாண்புமி
முதல்வர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 46,000-க்கு
மேற்பட்ட விண்ணப்பங்கள் அனைத்து மாவட்டங்களிலும் நிலுவையில
இருக்கின்றன. இவற்றுக்கெல்லாம் உதவித் தொகை வழங்
வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே கேட்டபோது
அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்தின் மூலமாகச்
செய்திகளை அறிந்து, அதற்காக இன்றைக்கு ஒப்புதல் வழங்கி
இருக்கிறார்கள். 10-வது படித்த பெண்கள் இந்த விண்ணப்பங்களிலே
இருப்பார்கள் என்று சொன்னால், அவர்களுக்கு இந்த ஆண்டு 10,000
ரூபாய் தொடர்ந்து வழங்கப்படும் என்ற அறிவிப்பைச்
செய்திருக்கிறார்கள். எனவே, விண்ணப்பங்கள் நிலுவையில் இருக்கின்றன
என்று வருந்திய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஓரளவுக்கு
மகிழ்ச்சி அடையலாம். இந்த 46,000-க்கு மேற்பட்ட விண்ணப்பங்களிலே
60 சதவிகித விண்ணப்பங்கள் 10-வது வரை படித்த
பெண்களுக்கானவையாகும். இது ஒரு மகிழ்ச்சியான செய்தியாகும்.
எனவே, 60 சதவிகிதம் பேருக்கு அதாவது, விண்ணப்பித்தவர்களில்
பத்தாவது வரை படித்த பெண்கள் அனைவருக்கும் இந்த உதவித்
தொகை கட்டாயம் வழங்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். சொக்கர்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வேலாயுதன் அவர்கள்
பேசி முடிக்கட்டும். இப்படி எல்லோரும் எழுந்து, எழுந்து கேட்டுக்
கொண்டிருந்தால் எப்படி? திரு. ஆர். சொக்கர்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்,
அவர்களே மகிழ்ச்சியான செய்தியை மாண்புமிகு சமூக நலத் துறை
அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு நான் நன்றி
தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர்
காஞ்சனா கமலநாதன் அவர்கள் சொன்னபோது, இந்த 10-வது
வகுப்பு என்ற வரையறை இந்த ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. அது
தொடரட்டும். ஆனால் கடந்த ஆண்டு 8-வது வரை படித்திருந்தால்கூட
இந்தச் சலுகை உண்டு என்று அறிவித்ததை எதிர்நோக்கி ஏற்கெனவே
விண்ணப்பம் செய்தவர்கள் இன்னும் 10 சதவிகிதம் தான் உங்கள்
கணக்குப்படி இருக்கிறார்கள். ஆகவே, 31-3-1999-க்கு முன்னால் 8-வது வரை

படித்தவர்கள், இந்த 10,000 ரூபாய்க்கு விண்ணப்பம் செய்திருந்தால் அவர்களுக்கும் வழங்கப்படுமா என்பதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கை விவாதத்தைத் தொடர்ந்து நான் அளித்த பதிலுரையில் நீண்டநேரம் இதற்கான விளக்கத்தை வழங்கி இருக்கின்றேன். எட்டாவது வரையிலே படித்தால் அவர்கள் சான்றிதழ்களைப் பெறுவதற்குப் பல சங்கடங்கள் இருக்கின்றன. அதை 10-வது என்று மாற்றியதன் காரணமே, 10-வது படித்துத் தேர்வு எழுதி இருந்தாலும்கூட அவர்களுக்குச் சான்று கிடைத்துவிடுகிறது. அதை நேரடியாகவே கொண்டுவந்து மனுவோடு சேர்த்துக் கொடுத்துவிடலாம். எட்டாவது வரை படித்தவர்கள், பல பேர்களை அணுகி அந்தச் சான்றிதழ்களைப் பெற வேண்டியிருக்கிறது, எட்டாவது வரையிலே படித்ததற்கு. அதற்குள் இந்த 10 ஆயிரம் ரூபாயிலே பாதித் தொகை கமிஷனாகப் போய்விடுகிறது. இப்படி இல்லாமல் அவர்களுக்கு முழுத் தொகையும் போய்ச் சேர வேண்டும் என்கிற எண்ணத்திற்காகத்தான் இந்த மாறுதலைச் செய்திருக்கின்றோமேயல்லாமல் வேறல்ல. இப்போது எடுத்த கணக்கின் படி, மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய மாநாட்டில் அவர்கள் மூலமாக நான் பெற்ற கணக்கின்படி, சமூக நலத் துறை அமைச்சர் இங்கே குறிப்பிட்டதைப்போல, 60 சதவிகிதத்திற்கு மேற்பட்டவர்கள் 10-வது வரை படித்தவர்களே இப்போது நிலுவையில் இருக்கிறார்கள்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

பிற்பகல் 12-30

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோன்று சத்துணவைத் தொடர்ந்து அரசாங்கம் வழங்க வேண்டும் என்று ஓரளவுக்கு முடிவு எடுத்துவிட்டது. ஆனால், சத்துணவுப் பணியாளர்கள் இதுவரை கிட்டத்தட்ட 30 ஆண்டுகளாகப் பணியாற்றக் கூடியவர்களுடைய நிலை நிரந்தரம் செய்யப்படாமல் உள்ளது. அதைக் கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று, பட்டதாரிகள் சத்துணவு அமைப்பாளர்களாக கிட்டத்தட்ட 3 ஆயிரம் பேர் 17 ஆண்டுகளாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களையும் அரசு கவனத்தில் கொண்டு, அவர்களுக்கு வேண்டிய சலுகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அதுபோன்று, இந்தச் சத்துணவு அலுவலகங்களில் பணியாற்றக் கூடியவர்கள் ஒரு பெரிய வேதனையான செய்தியைச் சொல்கிறார்கள். அதாவது, இந்தத் துறை, பெண்களை அதிகம் முன்னேற்ற வேண்டுமென்ற நோக்கத்தோடு ஏற்படுத்தப்பட்டிருந்தாலும் கூட, இந்தத் துறையில் பணியாற்றக்கூடிய அலுவலக Superintendent ஆக ஆண்கள் பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு எக்காரணம் கொண்டும் பதவி உயர்வு இல்லை. அதாவது, அலுவலர்கள் அளவுக்குப் பதவி உயர்வு பெற வேண்டிய தகுதி இருந்தும், அவர்களுக்குப் பதவி உயர்வு இல்லையென்ற நிலை இருக்கிறது. அவர்கள் வேதனையோடு சொல்கின்றார்கள். 33 சதவிகிதம் பெண்களுக்கு அனைத்திலும் இட ஒதுக்கீடு வேண்டுமென்று கேட்கக்கூடிய அரசியல்வாதிகளாகிய நீங்கள், எங்களுக்கு இந்தத் துறையில் இருக்கக் கூடியவர்களுக்கு பதவி உயர்வு கிடையாது என்று சொல்லக்கூடிய நிலை இருக்கிறது. களப் பணியாற்றக்கூடிய பெண்கள் 95 சதவிகிதம் பேருக்கு பதவி உயர்வு, அதுபோல அலுவலகங்களில் பணியாற்றக்கூடிய 5 சதவிகிதம் பேருக்கு பதவி உயர்வு, ஆக 100 சதவிகிதமும் பெண்களுக்கு மட்டுமே பதவி உயர்வு என்று இந்தத் துறை இருக்கிறது. அனைத்துத் தகுதிகளும் உள்ள எங்களுக்கு பதவி உயர்வு முற்றிலுமாகப் புறக்கணிக்கப்படுகிறது என்று வேதனையோடு குறிப்பிடுகின்றார்கள். எனவே, அவர்களுக்கும் ஒரு 5 சதவிகிதம் அல்லது 10 சதவிகிதமாவது, அலுவலகத்தில் பணியாற்றக்கூடிய ஆண்களுக்கும், தகுதி அடிப்படையில் பதவி உயர்வு கொடுக்க அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும் என்பதை இந்த வேளையில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோன்று முதியோர்களில் தகுதியுள்ள அனைவருக்கும் Pension வழங்க வேண்டும். உதாரணமாக, தாலூகா அலுவலகம் 100 பேருக்குத்தான் இந்த Pension வழங்க வேண்டுமென்று விதி இருக்கும்போது, 110 பேர் மனு செய்துவிட்டால், பத்துப் பேர் இறந்ததற்குப் பிறகுதான், திரும்ப முதல் அடுத்த பத்துப் பேருக்கு வரக்கூடிய நிலை இருப்பதாகச் சொல்கின்றார்கள்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் இங்கே குறிப்பிடுவது தவறான கருத்து என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த ஆட்சிக் காலத்திலேதான், 1989-க்கு முன்னதாக—ஒரு குறியீடு நிர்ணயிக்கப்பட்டு,

குறிப்பிட்ட இடத்திலே முதியோர் உதவித் தொகை பெறுவது இவ்வளவு பேர்தான் பெற முடியும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது ஆனால், நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 1989 ஆம் ஆண்டு பொறுப்பேற்றதற்குப் பிறகு இந்தக் குறியீடுகளை முற்றிலுமாக அகற்றி, தகுதியுள்ள விண்ணப்பதாரர் யார் இருந்தாலும் அவர்கள் அனைவருக்கும் இந்த முதியோர் உதவித் தொகை வழங்கப்படும் என்று அறிவிப்புச் செய்திருக்கின்றார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் இதைச் சுட்டிக்காட்டி, அந்த விண்ணப்பதாரர்களுக்கு பயன்களைப் பெற்றுத் தரலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு அமைச்சருக்கு நன்றி. ஆக, அந்த முதியோர்களுக்கு மாத ஊதியம் 150 ரூபாய் என்றிருப்பதை குறைந்தபட்சம் 250 ரூபாயாகவாவது உயர்த்திக் கொடுத்தால் மிகவும் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோன்று, ஊனமுற்றவர்களுக்கு மூன்று சக்கர வாகனம் வழங்குவது. அதிலும் தகுதியுள்ள அனைவருக்கும் வழங்க அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

பிற்பகல் 12-35

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடித்துவிடுகிறேன். 2 பெண் குழந்தைகள் உள்ளவர்களுக்கு 2 கிராமில் ஒரு மோதிரம்; அதாவது 2 பெண் குழந்தைகள் மட்டும் இருக்கின்றன; ஒரு ஏழை குடும்பக் கட்டுப்பாடு செய்து கொண்டால் 2 கிராமில் ஒரு மோதிரமும் 5 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படுகின்ற நிலை இருக்கின்றது. என்னுடைய ஊரில் லீலா என்று சொல்லக்கூடிய ஒரு பெண் இருக்கிறாள்; அவளுடைய கணவர் பெயர் ஹரிதாஸ்; வழுதலங்காட்டுவளை, மேலக்கருப்புக்கோடு சுங்காங்கடை அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம்; என்னுடைய ஊர் அவருக்கு 1½ கிராமில் மோதிரம் கிடைத்து இருக்கிறது. அந்தத் தவறு எப்படி நடக்கிறது என்பதைக் கண்காணித்து, அதுபோன்ற தவறுகள் நடக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்....

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கடந்த கால அம்மையார் ஆட்சியில் நடைபெற்ற ஊழலில் ஒரு சிறு துளியைத்தான் எடுத்துக்காட்டி இருக்கிறார்கள். 2 கிராமில் ஒரு மோதிரம்



ஒரு வயதுக் குழந்தைக்கு வழங்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால், அந்த மோதிரம் 2 கிராம் எடையுமில்லை; அது 800 ரூபாய் மதிப்பு என்று சொன்னார்கள், அது 800 ரூபாய் மதிப்பும் வராது; சுத்தத் தங்கமுமில்லை என்பது ஊர் அறிந்த உண்மை.

**திரு. சி. வேலாயுதன்:** அவருக்கு 5 ஆயிரம் ரூபாய் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். எனவே, இதுபோன்ற தவறுகள் நடக்காமல் கவனித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று முதியோர் கல்வியில் மேற்பார்வையாளராகப் பணியாற்றியவர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உரையை முடியுங்கள் என்று சொன்னால், அதேபோன்று, அதேபோன்று என்று நீட்டிக் கொண்டே போகிறீர்களே?

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்பார்வையாளராகப் பணியாற்றிவர்கள் 1996 ஒரே ஒரு Point-தான். மேற்பார்வையாளராகப் பணியாற்றிவர்கள் 1996 ஆம் ஆண்டு பணி நீக்கம் செய்யப்பட்டு உள்ளார்கள். அவர்கள் 1,363 பேர் இருக்கிறார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு நூலகத்தை மேற்பார்வை செய்து வந்தார்கள். 1,363 நூலகங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு நூலகத்திற்கும் கிட்டத்தட்ட 1 இலட்சம் ரூபாய் மதிப்பில் புத்தகங்கள் இருக்கின்றன; Almirah போன்ற பொருட்களும் இருக்கின்றன. எனவே, அவர்களைத் திரும்பவும் பணியில் சேர்த்து அந்த நூலகங்களை கவனிக்கக்கூடிய பொறுப்பையாவது அவர்களுக்கு அரசாங்கம் செய்ய முடியுமா என்பதைக் கனிவுடன் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டு, சத்துணவுப் பணியில் பணியாற்றக்கூடிய ஆண்களுடைய பதவி உயர்வையும் அரசாங்கம் கவனத்தில் கொண்டு—அவர்களும் பெண்களுக்காகப் போராடக்கூடிய நீங்கள் ஆண்களுக்காக இதைச் சொல்லக் கூடாதா என்று கேட்கின்றார்கள்; அதைக் கவனத்தில் கொண்டு அவர்களுடைய பணி உயர்வையும் அரசாங்கம் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகின்றேன். வாழிய செந்தமிழ், வாழ்க நற்றமிழர்; வாழிய பாரத மணித்திருநாடு; வந்தே மாதரம்; வந்தே மாதரம். பாரத் மாதா கி ஜே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள். நீங்களும் சீக்கிரம் வந்தே மாதரம் சொல்லுங்கள்.

***திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே நாங்கள் அப்படிச் சொல்வதில்லை. மாண்புமிகு பேரவைத்

தலைவர் அவர்களே, நாம் பல திட்டங்களை நிறைவேற்றி வருகின்றோம். நம்முடைய முன்னாள் ஏழைகளின் தலைவர் காமராசர் அவர்கள் Tour செல்லும்போது, ஏன் இவனைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பவில்லை என்று கேட்டார்கள். அதற்குத்தான் அன்றைய பெற்றோர்கள், பகல் உணவு இல்லை; கட்டிக்கொள்வதற்குத் துணி இல்லை; படிப்பதற்குப் புத்தகங்கள் வாங்குவதற்கு வழியில்லை என்று அவர்கள் சொன்ன காரணத்தினால்தான், அதை உடனடியாக ஏற்று பகல் உணவுத் திட்டம், சீருடை வழங்கும் திட்டம், இனாமாகப் புத்தகங்கள் வழங்கும் திட்டம் எல்லாம் அன்றைக்குக் காமராசர் அவர்களால் நிறைவேற்றப்பட்டன. அதையே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று பெரிய அளவில்—நம்முடைய மதிப்பிற்குரிய முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் சத்துணவுத் திட்டங்களைக் கொண்டு வந்தார்கள்; அதையே இன்றைக்கு விரிவுபடுத்தி எல்லாக் குழந்தைகளும் பயனடையும் அளவிற்கு நீங்கள் செய்து வருவதை நான் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன். இதை வரவேற்கின்ற சூழ்நிலையிலே இன்றைக்குச் சமூக நலத் துறையிலே மட்டும் ஏராளமான பேர் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். தையல் சங்கங்கள் 78 மூலம் 37,683 பேர் இன்றைக்குத் தொழிலில் அமர்ந்து சம்பாதிக்கிறார்கள்.

இணை உணவு தயாரிக்கும் திட்டத்தின் மூலம் 1,652 பேர் இன்றைக்குப் பணியிலே இருந்து சம்பாதித்துக் கொண்டு இருக்கிறார்கள். அதேமாதிரி எழுதுபொருள் சங்கங்கள் மூலம் 1,052 பேர் பணியாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். இதர சங்கங்கள் மூலம் 1,132 பேர் இன்றைக்குப் பணியிலே அமர்ந்து இருக்கிறார்கள். அதுமாத்திரமல்ல. அவர்கள் சம்பாதிக்கக்கூடிய நல்ல சூழ்நிலையிலே இருக்கின்றார்கள். சத்துணவுத் துறை மூலமாக ஆண்களும் பெண்களும் இன்றைக்குக் கிட்டத்தட்ட 2 இலட்சம் பேருக்கு மேற்பட்டவர்கள் பணியில் இருந்து கொண்டு இருக்கிறார்கள். இதையெல்லாம் நாம் மக்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுப்பதிலே ஒரு மிகப் பெரிய சாதனை என்றுதான் இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்தச் சத்துணவுத் துறையிலே வேலை பார்க்கக்கூடியவர்களுக்கு நாம் சம்பளம் கொடுக்கிறோம். இப்போது அவர்களுக்கு அதிகமாகக் கொடுத்தாலும்கூட—அந்த அமைப்பாளர்களுக்கு ஆயிரம் ரூபாய், சமையல்காரர்களுக்கு 500 ரூபாய், உதவியாளர்களுக்கு 450 ரூபாய் கொடுக்கிறோம். அவர்களையெல்லாம் நிரந்தரமாக்கி விடுவோமேயானால், அவர்களுக்கு நிரந்தரப் பணி கிடைக்கக்கூடிய ஒரு நல்ல சூழ்நிலை அமையும். ஆகையினால் அவர்களை நிரந்தரப்



பணியிலே அமர்த்த வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே மிகப் பணிவோடும் அன்போடும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து முதியோர் உதவித் தொகை. இந்த முதியோர் உதவித் தொகையில் உண்மையிலே வேதனை தரக்கூடிய விஷயம் என்னவென்றால், ஆண்மகன் இருந்தால் அவர்களுக்கு உதவித் தொகை கிடையாது என்று நாம் வைத்து இருக்கின்றோம். பெண் மகன் இருந்தாலும்கூட, அவள் கணவன் வீட்டிற்குச் சென்று குடும்பம் நடத்தும்போது, உள்ளூரில் கல்யாணம் செய்து வைத்து இருந்தால், அவருடைய தாய் தகப்பனாருக்கு, உணவு இல்லாத பெற்றோருக்கு மறைத்து உணவு போடுகிறாள். ஆனால், ஒரு மகன் இருந்தால், அவனைப் பெற்று வளர்த்து சீராட்டி பாலூட்டி வளர்த்த தாய் தந்தையரை அடித்து வெளியே அனுப்பிவிடுகிறான். இப்படிப்பட்ட மனுக்கள் நிறைய என்னிடத்திலே வருகின்றன. ஆகையினாலே இந்த அமைச்சரவையைக் கேட்டுக்கொள்கிறேன்; குறிப்பாக முதல்வர் அவர்களிடத்திலே என்னுடைய பணிவான வேண்டுகோளாக வைக்கிறேன். நாம் உதவித் தொகை வழங்குகிறபோது ஒருவருக்கு பெண் வாரிசு இருந்தாலும், ஆண் வாரிசு இருந்தாலும், யார் இருந்தாலும், உதவி கேட்கும் அத்தனை பேருக்கும் உதவித் தொகை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே பணிவான வேண்டுகோளாக வைக்க விரும்புகிறேன்.

பிற்பகல் 12-40

இன்றைக்கு ஊனமுற்றவர்களுக்கு நிறைய உதவிகள் செய்கிறோம். எங்கெங்கெல்லாம் ஊனமுற்றவர்கள் இருக்கிறார்களோ அவர்களுக்கு உதவிட வேண்டும். சில பேர்களுக்கு மூன்று சக்கர வண்டி கொடுக்கிறோம். எல்லோருக்கும் கொடுப்பதாகத் தெரியவில்லை. எல்லோருக்கும் கொடுக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

ஒவ்வொரு கிராமத்திலும் முக்கிய சேவிகாக்கள் இருக்கிறார்கள். கிராம சேவிகாக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு அங்கே வேலையே கிடையாது. முக்கிய சேவிகா, கிராம சேவிகா தினம் வருகிறார்கள், போகிறார்கள். அவர்களுக்கு முன்னிருந்த மாதிரி, கிராமங்களுக்குப் போய் சங்கங்களைப் பதிவு செய்தல் போன்ற அந்தப் பெண்கள் செய்ய வேண்டிய பணிகளெல்லாம் இப்போது செய்வதாக எனக்குத் தெரியவில்லை. ஆகவே, இந்த முக்கிய சேவிகா, கிராம சேவிகாக்களை கிராமங்களுக்கு அனுப்பி, இந்தப் பணிகளைச் செய்கிற வாய்ப்பினை உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

[திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்] [1999 மே 3

ஒரு பெண் குழந்தை இருந்தால் 3,000 ரூபாய் வைப்புத் தொகையாகவும் இரண்டு பெண் குழந்தைகள் இருந்தால் 1,500 ரூபாய் வீதம் வைப்புத் தொகையாகக் கொடுக்கிறோம். இது பாராட்டக்கூடிய ஒன்று. அவர்களுடைய கல்யாணக் காலத்தில் கிட்டத்தட்ட 30,000 ரூபாய் கிடைக்கக்கூடிய ஒரு நல்ல நிலைமையை நாம் உருவாக்கியிருக்கிறோம். அதற்காக என்னுடைய பாராட்டுதலை நான் இந்த நேரத்தில் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

விதவைகள், ஆதரவற்றோர், கணவனால் கைவிடப்பட்டவர்கள்—Deserted, destitute, widows—ஆகிய இவர்களுடைய நிலை உண்மையிலேயே மிகவும் பரிதாபத்திற்குரியது. விதவைகள், அவர்களுடைய குழந்தைகளுக்கு எல்லா வகையிலும் நாம் உதவி செய்கிறோம். இந்த விதவைப் பெண்களுக்கு இன்னும் அதிகமாக உதவிகளைச் செய்ய வேண்டும். முடிந்தவர்கள் வேலைக்குச் செல்கிறார்கள் முடியாத நிலையில் உள்ள வயதானவர்கள் எந்தவிதமான உதவியும் இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த மாதிரியுள்ள விதவைகளுக்கு எல்லா வகையிலும், அவர்களுக்கு வடு கட்டிக் கொடுப்பதிலிருந்து மற்ற எல்லா உதவிகளையும் செய்து தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

திருமண உதவித் திட்டம். இதற்காக நிறையச் செய்கிறோம். திருமண நாளுக்கு 1 வாரத்திற்கு முன்னால், 10 நாட்களுக்கு முன்னால் அந்தப் பணத்தைக் கொடுத்துவிட்டால், அந்தத் திருமணத்தைச் செய்யும்போது, அந்தப் பெண்ணின் தகப்பனாருக்கு—அவன் வட்டிக்குக் கடன் வாங்குகிறான். வட்டிக்கு வாங்குவதால் நிலைமை இன்னும் மோசமாகிறது. ஆகவே இந்த உதவித் தொகையை உடனடியாகக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

தொழில் செய்வதற்கு Condensed course for deserted, destitute, widows—இப்படி இருக்கக்கூடியவர்களுக்கு, 20 வயதிலிருந்து 35 வயது வரை இருக்கக்கூடிய பெணகளுக்கு, 8-வது பாஸ் பண்ணிய பெண்களுக்கு, 10-ஆம் வகுப்பு பாஸ் பணணிய பெண்களுக்கு, ஒரு பள்ளியை ஒவ்வொரு மாவட்டத்திலும் நடத்த வேண்டும். நான் நடத்தினேன். நான் நடத்தி பல பெண்கள், வேலையில்லாமல் இருந்த பெண்கள், ஆசிரியர் பயிற்சி பெற்று, ஆசிரியர் பணிக்குச் சென்று நல்ல முறையில் சம்பாதிக்கின்ற வாய்ப்பினை உருவாக்கியிருக்கிறேன். அதற்குப் பிறகு எனக்கு விபத்து ஏற்பட்டவுடன் அதை விட்டுவிட்டேன்.



1999 மே 3] [திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்]

நடத்த முடியாமல் விட்டுவிட்டேன். இதற்கான பணம் முழுவதையும் மத்திய அரசு கொடுத்துக் கொண்டிருந்தது. ஆகவே, ஒவ்வொரு மாவட்டத்திலும் condensed course நடத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது மத்திய அரசின் திட்டம்.

நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். பெண்களை தொழில் நடத்த அயல்நாடுகளுக்கு—அயல் நாடு என்றால் ஜப்பான், சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளுக்கு அனுப்ப வேண்டுமென்று நான் கேட்டேன். மாண்புமிகு முதல்வர் தம்முடைய பதிலிலே சொன்னார்கள். அவர்கள் சென்று துணிகளை வாங்கிக் கட்டிக்கொண்டு வரக்கூடாது என்று சொன்னார்கள். நீங்கள் அனுப்பக்கூடிய இந்த அங்கத்தினர்கள், இந்தப் பெண் உறுப்பினர்கள் துணிகளை வாங்கிக் கொண்டு வரமாட்டார்கள். அவர்கள் அங்கே சென்று குடிசைத் தொழிலை எப்படிச் செய்ய வேண்டும்; பெண்கள் எப்படி அங்கே பணியாற்றுகிறார்கள்; அதை எப்படி நம்முடைய மாநிலத்திலே நிறைவேற்ற வேண்டுமென்று பார்ப்பதற்காகத்தான் செல்வார்களே தவிர வேறு மாதிரி நினைத்துக் கொண்டு அனுப்பாமல் இருந்துவிட வேண்டாம். 10 பேர் இருந்தால் போதுமானது. 10 பேரை அனுப்பும் செலவு முழுவதையும் அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டும். 10 பேரை அனுப்பி, அங்கிருந்து அவர்கள் வந்தவுடனே, என்னென்ன கற்றுக்கொண்டு வந்தீர்கள் என்று ஓர் ஆசிரியர் கேள்வி கேட்பதைப் போல, மாணவ மாணவியரிடம் ஆசிரியர்கள் கேள்வி கேட்பதைப் போல, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டு அந்தக் குடிசைத் தொழில்களை விரிவுபடுத்துவதற்கான ஒரு வாய்ப்பினை உருவாக்கித் தர வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், அப்படிச் செய்தால்தான் பெண்கள் குடிசைத் தொழிலைச் செய்ய நாம் ஏற்பாடு செய்து கொடுக்க முடியும்.

*பிற்பகல் 12-45*

பல பெண்கள் தெருவிலே அலைகிறார்கள். பல பெண்களை இரண்டு, மூன்று குழந்தைகள் பெற்றவுடன், அந்தப் பெண்களை ஒதுக்கிவிட்டு வேறு பெண்களை சேர்த்துக் கொண்டு சில ஆண்கள் போய்விடுகிறார்கள். இது கிராமங்களிலே சர்வசாதாரணமாக நடந்து கொண்டிருக்கிறது. இப்படி இருக்கின்ற நிலையில் படித்த பெண்களெல்லாம் முன்னேறுகிற வகையில் சிறப்பான வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு இன்னொன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதாவது

பெண்கள் வாழ்கையில் முன்னுக்கு வந்தால்தான், ஒரு குடும்பத்தில் ஒரு பெண் படித்திருந்தால்தான், நிச்சயமாக அந்தக் குடும்பத்திலே உள்ள அத்தனை பேரையும் படிக்க வைக்க முடியும். அத்தனை பேருக்கும் கல்வி அறிவு புகட்ட முடியும். ஓர் ஆண்மகன் படித்திருந்தால், அவர் தொழில் செய்வார், சம்பாதிப்பார், அவர் வருவார், போவார் அவ்வளவுதான். ஆனால் ஒரு பெண்மகள் படித்திருந்தால், தன்னுடைய குழந்தைகளைப் பார்த்து, 'என்ன படித்தாய், என்ன செய்தாய்?' என்று கேட்டு அந்தக் குழந்தையைச் சரியான முறையில் வளர்ப்பதற்கும் அந்தத் தாய்தான் காரணமாக இருப்பாள். ஆகவே பெண்களை எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்குத் தொழில் துறையிலே அவர்களை இணைக்க வேண்டும். இதில்கூட மாண்புமிகு சிறு தொழில் துறை அமைச்சர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். பெண்கள் தனியாகத் தொழில் தொடங்க 50 ஆயிரம் ரூபாய் மானியமாகக் கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். அதையே பெண்கள் தனியாகத் தொழில் செய்வதற்கு அவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும். ஒவ்வொரு ஜில்லாவிலும் 10 பேரைவைத்து அவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும். 10 பேரை வைத்துப் பயிற்சி அளித்து, அவர்கள் தொழில் நடத்துவதற்கு ஒரு இலட்சமோ, இரண்டு இலட்சமோ பணம் கொடுத்து, அவர்களைக் கண்காணிப்பதற்குக்கூட அதிகாரியை நியமித்து, அவர்கள் தொழில் செய்வதற்கான வழி இருக்கிறதா என்று பார்த்து, அந்த அடிப்படையில் செய்வோம் என்று சொன்னால், அந்தப் பத்து பேர் அங்கே இருக்கக்கூடிய பெண்களைச் சேர்த்துத் தொழில் நடத்துவதற்கு வாய்ப்பு இருக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே, பெண்கள் மீது, இந்த நாட்டு மக்கள்மீது அக்கறையுள்ள நமது மதிப்பிற்குரிய முதல்வர் அவர்கள் இதையும் சற்று மனதிலே வைத்து பெண்களை எந்தெந்தத் துறையில் கொண்டு வரலாம் என்பதையெல்லாம் யோசனை செய்து பார்த்து அவர்களுக்கு வேண்டிய அத்தனையும் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 33%, 30% ஒவ்வொருவருக்கும் கொடுக்க வேண்டுமென்று நாம் இங்கே சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறோம். இப்பொழுது 33% கொடுத்தால் போதும். இப்பொழுது பல துறைகளில், பல இடங்களில் விசாரித்தால் 4%, 5% கூட இல்லை. பெண்கள் அவர்களுடைய காலில் நிற்க வேண்டும். "Try to stand on your own legs" என்று ஜெகஜீவன்ராம் அவர்கள் சொல்வார்கள். உங்களுடைய காலில் நிற்கவேண்டும். என்னுடைய காலில் நான் நின்றால், எனக்கு யாருடைய தயவும் தேவையில்லை. என்னுடைய பிள்ளை-குட்டிகளை நான்



காப்பாற்றுவேன், பேரக் குழந்தைகளைக் காப்பாற்றுவேன். அவர்களுக்காக நான் செயல்படுவேன் என்று சொல்ல வேண்டும். ஆகையால் பெண்களுக்கு 33% அல்லது 30% என்று நாம் அமல்படுத்தி, எந்தெந்தத் துறைகளில் வேலைவாய்ப்புக் கொடுக்கலாமோ, இதுவரைக்கும் எவற்றில் கொடுக்காமல் இருக்கிறோமோ அவற்றிலெல்லாம் ஆறு மாத கால அவகாசம் எடுத்துக்கொண்டு, அவர்களிடத்திலிருந்து மனுக்களைப் பெற்று, அந்த மனுக்களைப் பரிசிலனை செய்து, அவர்களுக்கு வேலைவாய்ப்பை உண்டாக்கிக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் என்னுடைய வேண்டுகோளாகத்தான் நான் மாண்புமிகு முதலமைச்சரிடத்திலே இதை வைக்கின்றேன்.

என்னைப் போன்றவர்களெல்லாம் கிராமங்களுக்குப் போகும்போது, 'என்ன அக்கா, எங்களுக்கு ஒன்றுமே செய்யவில்லை, நாங்கள் என்ன செய்வோம், நீங்கள் முதலமைச்சருக்கு வேண்டியவராயிற்றே' என்று கேட்கிறார்கள். இது வேறு பெரிய பாடாகப் போய்விட்டது. முதலமைச்சருக்கு வேண்டியவராயிற்றே என்று கேட்கிறார்கள். முதலமைச்சர் ஏதோ 2,3 வேலைகளைச் செய்து கொடுத்தார். நான் சொல்கிற வேலைகளைச் செய்வதாகக் காணோம். நான் தனிப்பட்ட வேலை எதுவும் சொல்வதில்லை. தொகுதி வேலைகளைச் சொல்கிறேன். அந்தத் தொகுதி வேலைகளையும் அவர்கள் ஓரளவிற்குச் செய்து கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். அதைப் பார்த்து, இந்தத் திட்டத்தைக் கொண்டு வாருங்கள். இதைச் செய்யக் கூடாதா என்று படித்த இளைஞர்கள் கேட்கிறார்கள். ஆகவே அதையெல்லாம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் மனதிலே வைத்து, தனியாகத் திட்டம் கொண்டு வரவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சமூக நலத் துறை அமைச்சரிடம் கேள்வியைக் கேளுங்கள். முதலமைச்சரிடமே பேசிக் கொண்டிருக்கிறீர்களே ?

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** சமூக நலத் துறையைப் பற்றித்தான சொல்லி வருகிறேன். பெண்களை வெளிநாட்டிற்கு அழைத்துச் சென்று அங்கே நிறையக் கற்றுக்கொண்டு வந்து, இங்கே குடிசைத் தொழிலை அதிகமாக வளரச் செய்யவேண்டும். அவர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கவேண்டும். வருமானத்தை அதிகரிக்கவேண்டும் என்பதையெல்லாம் நான் முதலிலேயே சொல்லிவிட்டேன். apart from the Social Welfare Minister, முதல்வர் இவற்றிற்கெல்லாம் அவர்கள் மனது வைக்கவேண்டும். இதை அவர்கள் செய்யவேண்டும்.

முதல்வர் அவர்கள் மனது வைத்தால்தான் அந்தத் திட்டங்களெல்லாம் நிறைவேறும் என்பதை நான் அன்போடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு) Speaker எங்கள் Speaker. அவர் எங்களுக்குச் சரியாக வேலை கொடுக்கமாட்டார். அவர் தந்தையார் இருந்தாரே, அவர் என்னை, பெற்ற மகள் மாதிரி நினைப்பார், அவருடைய அய்யா. அது ஒன்றுதான் எனக்குப் பெருமை. நான் கைதூக்கிக் கொண்டே இருப்பேன். அவர் கூப்பிடமாட்டார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேச்சைச் சீக்கிரம் முடியுங்கள்.

**திருமதி. ஏ.எஸ். பொன்னம்மாள்:** ஆக, கிராமங்களில் நாம் இன்னும் சில வேலைகளைச் செய்தாகவேண்டும். சிலர் சில கிராமங்களைத் தத்து எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படித் தத்து எடுத்து, தொழில் துறையில் இருக்கக்கூடியவர்களை அணுகி, மாண்புமிகு முதல்வர் அவர்கள், அவர்களை அழைத்துப் பேசி, சில முக்கியமான பெரிய, பெரிய கிராமங்களில் அந்தத் தொழிலில் சம்பந்தப்பட்ட முதலாளிகளிடத்தில் சொல்லி, அந்த ஊரில் ஒரு ஆயிரம் பேர் அல்லது 5 ஆயிரம் பேர் என்று உள்ள ஒரு கிராமத்தை எடுத்து, அங்கேயுள்ள படித்த இளைஞர்களுக்கு எந்த மாதிரியான வேலைவாய்ப்பைக் கொடுக்கலாம், அதற்கு எந்த வகையிலே அரசு உதவி செய்யலாம் என்று அவர்களுக்கு அறிவுரைகள் வழங்கி, அவர்கள் மூலமாக, அவர்கள் அத்தனை பேரையும் தொழில் துறையிலே சேர்த்துச் செயலாற்றும நல்ல சூழ்நிலையை உருவாக்கவேண்டும். அதுபோன்று, பெரிய, பெரிய மில் அதிபர்களிடம் சொல்லி, பெரிய, பெரிய தொழிற்சாலை அதிபர்களிடம் சொல்லி ஒரு ஆண்டுக்கு நீங்கள் 5000 பேர்களுக்கு வேலை கொடுத்தால், அதில் 1000 பெண்களுக்காவது வேலை கொடுக்க வேண்டும், அப்போதுதான் licence புதுப்பிக்கப்படும், அப்போதுதான் grant கொடுக்கப்படும், அப்போதுதான் கடன் கொடுக்கப்படும் என்கின்ற ஒரு நிலையை உருவாக்கினால், அது பெண்கள் மத்தியிலே ஒரு சிறப்பான வரவேற்பைப் பெறும். நல்ல முறையில் பெண்கள் வேலை வாய்ப்பைப் பெறுவார்கள் என்று கூறிக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-50

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். இரண்டு வயதிலிருந்து 5 வயது வரை இருக்கும் குழந்தைகளுடைய தாய்மார்கள் வேலைக்குச் செல்லும்போது, அந்தக் குழந்தைகள் ஓடிச்சென்று காலைப் பிடித்துக்கொண்டு அழுகின்றன. தாய்மார்கள் குழந்தைகளை இழுத்துவிட்டுச் செல்லுகிறார்கள். நாம்



குழந்தைகளுக்காக ஒவ்வொரு கிராமத்திலும் Creche அமைப்போமானால், எப்படி பள்ளிக்கூடங்களை ஒவ்வொரு கிராமத்திற்கும் ஏற்படுத்துகிறோமோ, அதைப்போல, இரண்டு முதல் 5 வயது வரை இருக்கின்ற குழந்தைகளுக்காக, இந்த Creche—குழந்தைகள் காப்பகம்—சிறிய குழந்தைகளுக்கான காப்பகங்களை ஒவ்வொரு கிராமத்திற்கும் உண்டாக்கிக் கொடுத்தால், அதிலே பல ஆயிரக்கணக்கான பெண்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைப்பதற்கு ஒரு நல்ல வாய்ப்பு ஏற்படும் என்பதை இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்கிறேன். இதைத் திட்டமிட்டு, தொகுதி வாரியாக, அந்தத் தொகுதியில், எந்தெந்த இடங்களிலே நடத்தலாம் என்று எம்.எல்.ஏ.-க்களைக் கேளுங்கள், யூனியன் சேர்மெனிடம் கேளுங்கள், எங்கெங்கே நடத்தலாம் என்று கேட்டு, இந்தத் துறையின் மூலம் குழந்தைகள் காப்பகத்தை உருவாக்குவோமானால், இன்னும் பல ஆயிரக்கணக்கான பெண்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கலாம், அவர்களுடைய கண்ணீரைத் துடைக்கலாம், கணவனால் இழுத்தெறியப்பட்ட பெண்கள், கணவன் முன்னாலேயே நிமிர்ந்து நடக்கக்கூடிய நல்ல சூழ்நிலையை உருவாக்கலாம் என்று இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன். எனவே, இவற்றையெல்லாம் மனதில் வைத்து, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் இந்தக் காரியத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்களை ஒரு கமிட்டியின் மூலமாக வெளிநாடுகளுக்கு அனுப்ப— வெளிநாடுகள் என்று சொன்னால் வெகுதூர நாடுகளைச் சொல்லவில்லை. ஆசிய நாடுகளைச் சொல்கிறேன். சிங்கப்பூர், ஜப்பான், மலேசியா போன்ற நாடுகளுக்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சட்டமன்றம் முடிந்து, மே மாதத்தில் அனுப்புவீர்களா அல்லது அதற்குப் பிறகு அனுப்புவீர்களா என்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லியாக வேண்டும், சொல்ல வேண்டுமென்று கேட்டு, நல்ல திட்டங்களைக் கொண்டு வந்திருக்கின்ற மாண்புமிகு அமைச்சருக்கு நன்றியையும், பாராட்டையும் தெரிவித்து, முடித்துக் கொள்கிறேன் நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலத் துறை மீதான மானியக் கோரிக்கையில் இதுவரை 11 சட்டமன்ற உறுப்பினர்கள்—3 பெண்கள் உட்பட

தங்களுடைய மேலான கருத்துக்களை இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள். அனைவருமே சமூக நலத் துறையினுடைய பணிகளைப் பாராட்டியிருப்பதுடன், புதிய கருத்துகளை வழங்கி, மேலும் இந்த சமூக நலத் துறை சிறப்பான முறையிலே பணிபுரிந்திட வேண்டுமென்று அவர்கள் அவற்றைத் தெரிவித்திருப்பதற்காக என்னுடைய நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்கள் அனைவரும் அன்னையின் வயிற்றில் பிறந்து, அன்னையின் அரவணைப்பில் வளர்ந்தவர்களே. எனவே, இந்த மக்கள் சமூகம் முழுவதும் அன்னையரின் பெருங்கொடையாகக் காட்சியளித்துக் கொண்டு வருகிறது.

"மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா" என்னும் கவிமணியினுடைய பேருரை பெண் குலத்தின பெருமையைப் பறைசாற்றுகின்றது.

அதேபோல, "பெண்ணடிமை தீருமட்டும் பேசும் திருநாட்டில் மண்ணடிமை தீர்ந்திடுதல் முயற்கொம்பே" என்று, பெண் விடுதலையைப் பேணிக் காத்திட வேண்டுமென்று, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் முழங்கியிருக்கிறார்கள். இவர்களுடைய எண்ணத்தை எல்லாம் ஈடுசெய்வதைப் போல, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுடைய ஆலோசனையின்படி, இந்தச் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை ஒல்லும் வகையெல்லாம் திட்டமிட்டு, அவற்றைச் செல்லும் வாயெல்லாம் செயற்படுத்தி வருகின்றது.

மணம் புரியும் மங்கையர் நலம், கருவுற்ற மகளிர் நலம், தாய் சேய் நலம், குழந்தைகள் நலம், பள்ளிப் பிள்ளைகள் நலம், பெண் குழந்தைகள் நலம், ஊனமுற்றோர் நலம், தொழுநோயாளிகள், ஏதிலார், ஆதரவற்றோர் நலம் மற்றும் முதியோர் நலம் என்று சமுதாயத்தின் அனைத்து நிலைகளிலும் இத்துறை தனிச் சிறப்பு நாட்டம் செலுத்தி, சிறப்புத் திட்டங்களைத் தீட்டி, அவற்றைச் செம்மையாகச் செயல்படுத்தி வருகிறது. நலிந்த பிரிவினரும் வளம் பெற்று, சிறப்புடன் வாழும் நிலையை உருவாக்கி, அதன் மூலம் ஏற்றதாழ்வற்ற புதிய சமுதாயத்தை ஏற்படுத்தும், உயர்ந்த நோக்குடன் இத்துறை பணியாற்றி வருகிறது.



பிற்பகல் 12-55

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின் மூலமாக ஏழைப் பெண்கள், 8 ஆவது படித்த பெண்கள், 18 வயது பூர்த்தியடைந்த பெண்களுக்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான் 1989ஆம் ஆண்டு 5000 ரூபாய் வழங்குவதாக அறிவிப்புச் செய்தார்கள்.

இதன் காரணமாக, பல பெற்றோர்கள், பெண் குழந்தை பெற்று விட்டோமே; அவளை எப்படிக் கரையேற்றுவோம் என்று கதிகலங்கி நின்றவர்கள். தங்களுடைய உறவினர்களைக் கேட்டால்கூட, கடனாகக்கூடக் கொடுப்பதற்கு மறுத்த காலம் அது. ஆனால், யாருடைய விண்ணப்பமும் இல்லாமலேயே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், அந்தப் பெண் குழந்தை பெற்றவர்களுடைய கஷ்டத்தைப் போக்க வேண்டும் என்ற எண்ணத்திலும் பெண் குழந்தையினுடைய கல்வியை உயர்த்துவதற்கு அந்தப் பெற்றோர்களே உறுதுணையாக இருந்திட வேண்டுமென்ற எண்ணத்திலும் இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்கள். இதன் காரணமாக, 2,24,408 பெண்களை எட்டாம் வகுப்பு வரை கடந்த பத்தாண்டுகளில் படிக்குமாறும் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய இந்தத் திட்டம் தூண்டியிருக்கிறது என்பதை நான் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1909 ஆம் ஆண்டு முதல் 1991 ஆம் ஆண்டு வரை எடுக்கப்பட்ட ஒரு கணக்கெடுப்பிலிருந்து, ஒவ்வோர் ஆண்டும் பெண்களின் கல்வி அறிவு உயர்ந்து, 1991 ஆம் ஆண்டிலே 52.29 சதவிகிதத்தை அடைந்துள்ளது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த 52-லேயிருந்து மேலும் கூடுதலான சதவிகிதம் பெண்கள் கல்வியறிவு பெறவேண்டும் என்பதற்காக, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தத் திட்டத்திலே தற்போது மாற்றம் செய்து, பத்தாம் வகுப்பு வரை படித்தவர்களுக்கு, பத்தாயிரம் ரூபாய் நிதியுதவி வழங்குவோம் என்று அறிவிப்புச் செய்தார்கள். இதன் காரணமாக, பெண் கல்வி அதிகப்படுத்தப்படும் என்பது மட்டுமல்ல, 18 வயதிலேயே இந்தத் திருமண உதவி கிடைக்கும் என்ற காரணத்தினாலே, எட்டாவது படித்த பெண்கள் 13 அல்லது 14 வயதுடன் வீட்டில் நின்றுவிடுகிறார்கள். மூன்று ஆண்டு காலம், நான்கு ஆண்டு காலம், அவர்கள் வீட்டிலே சும்மா இருப்பதைக் காட்டிலும், அந்தக் காலத்தில், அவர்கள் மீண்டும் ஓர் இரண்டு ஆண்டு காலம் படித்து, தங்களுடைய அறிவைப் பெருக்கிக்கொள்ள வேண்டும் என்பதற்காக, அந்த வாய்ப்பை மாண்புமிகு முதல்வர் அவர்கள் உருவாக்கித் தந்திருக்கிறார்கள் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

1989 ஆம் ஆண்டு இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்திய பிறகு, இரண்டே ஆண்டு காலம்தான் ஆட்சி நீடிக்க முடிந்தது. அந்த இரண்டு ஆண்டு காலத்திலேயே ஐந்தாயிரம் ரூபாய் என 35,064 பேருக்குப் பயன் கிடைத்தது. கிட்டத்தட்ட 17½ கோடி ரூபாயை, அந்தத் திட்டத்திற்காக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அன்றைய தினம் வழங்கினார்கள். அதன்பிறகு ஓர் ஆட்சி வந்தது. அம்மா ஆட்சிதான். எனவே, பெண்களுடைய நலத்திற்காகக் கொண்டு வரப்பட்ட இந்தத் திட்டத்தில் அதிகமான பயனாளிகளை அவர்கள் ஏற்படுத்தி இருக்கலாம். அல்லது தந்த உதவித் தொகையையாவது உயர்த்திக் கொடுத்திருக்கலாம். அதிலே அவர்களுக்கு நாட்டம் இல்லை. வேறு எதிலோ அவர்களுக்கு நாட்டம் இருந்த காரணத்தினால், இந்தத் திட்டத்தில் பல பேர் பயனடையாதவகையில் பல நிபந்தனைகளை வைத்திருந்தார்கள். எனவே, ஐந்தாண்டு காலம் அவர்களுடைய ஆட்சி நிரந்தரமாக இருந்தாலும்கூட, பயனடைந்தவர்களின் எண்ணிக்கை என்னவோ, 53,120 தான். இரண்டாண்டு காலத்தில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 35,000-க்கும் மேற்பட்ட பெண்களுக்கு அந்தத் திட்டத்தின் பயன்சேரும்படிச் செய்தார்கள். ஆனால் ஐந்தாண்டு காலத்திலே 70,000 பேர்கூட அந்தப் பயனைப் பெறமுடியாமல், அன்றையதினம் தவித்துக் கிடந்தார்கள். ஆனால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் மீண்டும் பொறுப்பேற்றுக் கொண்டபிறகு பத்தாயிரம் ரூபாயாக இந்தத் திட்டத்தில் வழங்குவதாக அறிவித்து, கடந்த மூன்றாண்டுகளில் மட்டும் 1,36,215 பெண்களுக்குத் தலா 10,000 ரூபாய் வீதம், 136,21,50,000 ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலேயும் இந்த அளவுக்கு ஏழைப் பெண்கள் பயன்பெற்றதாக சான்று எதுவும் இல்லை என்பதை இந்த நேரத்திலே நான் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல, பல திருமண உதவித் திட்டங்கள்; அஞ்சுகம் அம்மையார் பெயரிலே கலப்புத் திருமண உதவித் திட்டம்; இதிலே பயனடைந்தவர்கள் 1,522 பேர். ஆதரவற்ற பெண்கள் திருமண உதவித் திட்டம்; இதிலே பயனடைந்தவர்கள் 241 பேர். டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் விதவை மறுமணத் திட்டம்; இதிலே பயனடைந்தவர்கள் 558 பேர். விதவை மகள் திருமண உதவித் திட்டத்திலே பயனடைந்தவர்கள் 3,064 பேர். இப்படிப் பல்வேறு திருமண உதவித் திட்டங்கள் மூலமாக, மாண்புமிகு முதல்வர் அவர்கள்,



பெண்ணைப் பெற்றவர்கள் கண்ணைக் கசக்க வேண்டாம் என்று, இன்றையதினம் அவர்களுக்கு அம்மையப்பனாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றார் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பெண் குழந்தை பிறந்தால் கொன்றுவிடுவது என்பது ஒரு சில இடங்களிலே வழக்கமாக இருந்து வந்தது. அதைத் தடுப்பதற்காக நம்முடைய அரசு தொடர்ந்து சில மாற்றங்களைக் கொண்டு வந்திருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். பெண் சிசுவதையைத் தடுக்கும் பொருட்டும், சாதி மத பாகுபாடின்றி, கைவிடப்பட்ட மற்றும் அநாதையாக்கப்பட்ட குழந்தைகளைத் தத்துக் கொடுப்பதற்கு, தமிழகத்தில் உள்ள 15 தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு அரசு அங்கீகாரம் வழங்கியிருக்கிறது. இவ்வாண்டு தருமபுரியில் உள்ள ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனத்திற்கும் தத்துக் கொடுக்கும் உரிமம் அளிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தொண்டு நிறுவனங்கள் மூலமாக, 1996 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து, 1998 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை சுமார் 1,355 அநாதைக் குழந்தைகள் பெறப்பட்டு, 632 குழந்தைகள் உள்நாட்டிலும், 356 குழந்தைகள் வெளிநாட்டிலும் தத்துக் கொடுக்கப்பட்டிருக்கிறார்கள். மீதமுள்ள 312 குழந்தைகள் மேற்கண்ட தொண்டு நிறுவனங்களில் பராமரிக்கப்பட்டு வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1-00

பள்ளிக், கல்லூரி மாணவிகள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் இணைந்து, கிராமப்புறத்துப் பெண்கள் பங்கேற்ற பெண் சிசுவதை ஒழிப்புப் பேரணி, கடந்த ஆண்டில் தருமபுரி, உசிலம்பட்டி, நாமக்கல், சேலம் ஆகிய இடங்களில் நடைபெற்றன. சிசுவதை செய்வது தவறு என்று சொல்லி அதற்கான விழிப்புணர்ச்சியைப் பெண்களிடையே இது சிறப்பாக ஏற்படுத்தியுள்ளது. இதன்மூலம் நூற்றுக்கணக்கான பெண் சிசுவதை தடுக்கப்பட்டிருக்கிறது என்ற புள்ளிவிவரம் தரப்பட்டு இருக்கிறது.

அதைப்போலவே, முத்துலட்சுமிரெட்டி அம்மையார் மகப்பேறு உதவித் திட்டத்தின் மூலமாக, 1996-லிருந்து 1998 ஆம் ஆண்டு வரை 4 இலட்சத்து 4722 பேர், 500 ரூபாய் என்ற உதவித் தொகையைப் பெற்று, பயனடைந்திருக்கிறார்கள். பெண்கள் நலனைப் பாதுகாக்கும் நோக்கத்தோடு, தமிழக அரசால், மகளிர் நல ஆணையம், திருமதி பத்மினி ஜேசுதுரை அவர்களைத் தலைவராகக் கொண்டு, 9 பெண் வல்லுநர்களை உறுப்பினர்களாகக் கொண்டு அமைக்கப்பெற்று

சிறப்பாகச் செயலாற்றி வருகிறது. இதனுடைய அலுவலகம் தற்போது இயக்குநர் அலுவலகத்திலே இயங்கி வருகிறது. வரும் ஜூன் மாதம் முதல் தேதி முதற்கொண்டு சென்னை கிண்டியிலுள்ள மகளிர் மேம்பாட்டுக் கழக அலுவலக வளாகத்தில் இயங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெண்கள் நலனுக்காக ஏற்படுத்தப்பட்ட சட்டங்கள் குறித்து, குறிப்பாக கிராமப் பெண்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கத்தோடு, சட்ட விழிப்புணர்ச்சி முகாம்கள், இந்த ஆணையத்தின் சார்பில் நடத்தப்பட்டு, 47 கல்லூரிப் பேராசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கல்லூரிப் பேராசிரியர்கள் தங்கள் பகுதியிலும், கிராமப்புறங்களிலுமுள்ள பெண்களுக்குச் சட்ட அறிவை உணர்த்திட முகாம்களை நடத்துவார்கள். இதன்மூலம் ஏராளமான பெண்கள், தங்களுக்கு இருக்கின்ற சட்ட உரிமையை அறிந்துகொள்வதற்கு வாய்ப்பு ஏற்படும். பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகள், அநீதிகள் அனைத்திற்கும் நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் காவல் துறையினருக்கு உண்டு என்பதால், இனப்பாகுபாடுகள் பற்றிய விழிப்புணர்ச்சி முகாம்கள் நடத்தி, காவல் துறையைச் சார்ந்த 90 ஆய்வாளர்கள் மற்றும் உதவி ஆய்வாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. இதன் மூலமாக, காவல் நிலையத்திறகு வருகின்ற பெண்களுக்கு எப்படிப்பட்ட வழிகளை அவர்கள் காட்ட வேண்டும் என்பதை அறிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட சமூக நல அலுவலர்கள், வரதட்சணை ஒழிப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்காக, 5 பேர் கொண்ட வரதட்சணை ஒழிப்பு ஆலோசனைக் குழு ஒன்றும் நியமிக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இவர்கள் வரதட்சணை குறித்து வரும் மனுக்கள் மீது விசாரணை நடத்தி நடவடிக்கையும் எடுத்து, குடும்பத்திலே ஏற்படும் பிரச்சினைகளை எல்லாம் தீர்த்து வைத்துள்ளார்கள்.

கொள்கை அளவில் தமிழக அரசு, ஆணை 211, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 3-9-1998-ன்படி இவ்வாணையத்திற்குச் சட்டரீதியான அதிகாரங்கள் வழங்க இசைவளித்துள்ளது. புதுடில்லியில் உள்ள தேசிய குற்றப் பதிவுக் கூடத்திலிருந்து பெறப்பட்டுள்ள 1997 ஆம் ஆண்டின் புள்ளிவிவரங்களின்படி, தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, மகாராஷ்டிரா,



மத்தியப் பிரதேசம், பீகார், உத்திரப்பிரதேசம், இராஜஸ்தான், பஞ்சாப், மேற்கு வங்காளம் ஆகிய 10 மாநிலங்களில் வரதட்சணைக் கொடுமையால் இறந்தவர்களின் எண்ணிக்கையையும், அதன் குற்ற விகிதத்தையும் கணக்கிட்டுப் பார்த்தபோது, தமிழ்நாட்டில்தான் மிகவும் குறைவாக இருக்கிறது என்ற தகவல் தரப்பட்டிருக்கிறது. ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் மகளிர்களை, குழுக்களாகக் கொண்டு 30 மகளிர் மன்றங்கள் வீதம், 11,520 மகளிர் மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. 30 கிராமங்களிலே இந்த மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன, பல்லாண்டு காலமாக. மாண்புமிகு உறுப்பினர்கள் இதையெல்லாம் அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். இந்த 30 மகளிர் மன்றங்கள் செயல்பட்டு வருகிற அந்தப் பகுதிகளிலே அந்த மன்றங்கள் நன்றாகச் செயல்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் தொடர்ந்து சொல்லியிருக்கிற காரணத்தினால், அவற்றை அதிகப்படுத்துவது குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கலந்து பேசி, ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெண்களுக்கான கூட்டுறவுச் சங்கங்கள் பல இடங்களிலே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. பல திட்டங்கள் மூலம், பெண்களின் பொருளாதார முன்னேற்றத்தை உயர்த்த, வறுமைக் கோட்டின்கீழே வாழும் பெண்களுக்கு சுயவருமானம் பெற்றுத்தர ஏதுவாக, 78 தையல் சங்கங்களை ஏற்படுத்தி, சத்துணவு உண்ணும் 63 இலட்சம் குழந்தைகளுக்கு இலவச சீருடைகளைத் தைத்து வழங்கி வருகிறோம். மேலும், 26 இணை உணவுச் சங்கங்களை ஏற்படுத்தி, அவை 6 மாதம் முதல் 3 வயது வரையுள்ள குழந்தைகளுக்கும் கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் 7,500 மெட்ரிக் டன் இணை உணவு தயாரித்து வழங்கி வருகின்றோம். இந்த இரண்டு சங்கங்கள் மூலமாக 38,000 பெண்கள் சுயவேலைவாய்ப்புப் பெற்று வருகிறார்கள்.

தமிழக அரசின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தைப் பற்றி ஏற்கெனவே நான் உங்கள் மத்தியிலே தெரிவித்திருக்கிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. வேலாயுதன் அவர்கள்கூட, கடந்த ஆட்சிக் காலத்திலே நடைபெற்ற ஊழல்களைப்பற்றியெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் ஆட்சியிலே கிட்டத்தட்ட 28,000-க்கும் மேற்பட்ட குழந்தைகளைப் பதிவு செய்திருந்தார்கள். அந்தக் குழந்தைகளுக்கு 5 ஆயிரம் ரூபாய் முதலீடு செய்யப்படும் என்று அறிவித்திருந்தார்கள். ஆனால், அப்படி எந்த ஒரு குழந்தையின்

[திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்] [1999 மே 3

பெயரிலேயும் 5,000 ரூபாய் முதலீடு செய்யவில்லை என்பதை அறியும்போது, அவர்கள் எவ்வளவு ஏமாற்றுக்காரர்களாக, பெற்றோர்களை ஏமாற்றி இருக்கிறார்கள் என்பது நம்மால் உணரப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அந்தப் பெற்றோர்களின் மனம் குளிருமாறு, அந்தக் குழந்தைகளுக்கு இந்த அரசு பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் என்று தெரிவித்து, அந்த 28,000 பெண் குழந்தைகளின் பெயரிலேயும் தமிழகப் போக்குவரத்து நிதி நிறுவனத்தின் மூலமாக 1,500 ரூபாய் முதலீடு செய்து, அதற்கான ரசீதை அந்தப் பெற்றோர்களுக்கு அனுப்பியிருக்கிறார்கள். ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை அவர்கள் அதைப் புதுப்பித்துக் கொள்ள முடியும் அந்தக் குழந்தைக்கு 20 வயது வருகிறபோது, அந்தப் பெண் குழந்தைக்கு 29,000 ரூபாய் கிடைக்கும் என்பது மிகுந்த பாராட்டிற்குரிய செய்தி என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 1-05

அதைப்போலவே, இதுவரை 67,583 பெண் குழந்தைகள் இதிலே பயன்பெற்றிருக்கிறார்கள். இதன்மூலமாக 10 கோடி ரூபாய்க்கு மேலாக, தமிழக அரசு இந்தத் திட்டத்திலே முதலீடு செய்திருக்கிறது என்பதை நான தெரிவித்துக்கொள்கிறேன். 541 பெண் குழந்தைகள் ரூ. 3,000 வீதம் இதிலே பெற்றுப் பயன் அடைகிறார்கள். ஒரு பெண் குழந்தை என்றால் ரூ. 3,000 என்று முதலீடு செய்வதன் மூலமாக, 58,000 ரூபாய் அந்தக் குழந்தை 20 வயதிலே பெற முடியும். இந்த இருபதாண்டு காலத் திட்டம் மூலமாக, அரசுக்கு 20 ஆவது ஆண்டிலே கிட்டத்தட்ட 300 கோடி ரூபாய்க்கு மேலாக, குழந்தைகள் பயன் பெறுவதற்காக ஒதுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, எத்தகைய அரிய திட்டத்தை, நம்முடைய முதலமைச்சர் அவர்கள், பெண் குழந்தைகளைப் பெற்றிருக்கிற பெற்றோர்களுக்கு வழங்கி இருக்கிறார்கள் என்பதை உங்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், இந்தியாவிலிருந்து. குவைத்திற்கு, வீட்டு வேலை செயவதற்காக அனுப்பப்பட்ட பல பெண்களுக்கு, பல இன்னல்கள் ஏற்படுத்தப்பட்டு, சித்திரவதைக்கு ஆளாகி அவர்கள் எல்லாம் தமிழகத்திற்கு வரவேண்டும் என்று விரும்பிய நேரத்தில், இந்தியத் தூதரக அலுவலகத்தின் பாதுகாப்பில் இருந்த 22 பெண்கள், கடந்த 14ஆம் தேதி சென்னைக்கு வரவழைக்கப்பட்ட நேரத்தில், அவர்கள் தங்குவதற்கு சமூகப் பாதுகாப்பு இல்லத்திலே இடம் தந்து, அவர்கள் தங்களுடைய சொந்த ஊருக்குச் செல்வதற்கு 500 ரூபாய் உதவித்



1999 மே 3] [திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்]

தொகையை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து வழங்கியிருக்கிறார்கள். மேலும், ஏராளமான பெண்கள், அங்கு அவதிப்படுகின்ற செய்தி நமக்குத் தெரிவிக்கப்பட்ட பிறகு, இந்தியத் தூதரக அலுவலகத்தின் பாதுகாப்பிலே இருக்கிற அந்தப் பெண்களை எல்லாம் இந்தியாவிற்கு அழைத்து வரவேண்டுமென்ற தகவலை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே குறிப்பிட்டபோது, அவர்கள் மனமுவந்து, அப்படிப்பட்ட பெண்களை அழைத்து வருவதற்கு, பாரதப் பிரதமர் திரு. வாஜ்பாய் அவர்களுக்கு அன்றையதினம் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அதில் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சமூக நல வாரியத்தின் மூலமாக பல தொண்டு நிறுவனங்கள், தங்களுடைய செயல் திட்டங்களை நடத்திக்கொள்வதற்கு உதவிகள வழங்கப்பட்டு வருகின்றன. மத்திய அரசாங்கத்தின் மத்திய சமூக நல வாரியத்தின் மூலமாகவும், தமிழக அரசின் சமூக நலத் துறையின் மூலமாகவும், அவர்களுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. நம்முடைய அம்மையார் திருமதி பொன்னம்மாள் அவர்கள், குழந்தைகள் காப்பகம் அமைக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட செயல்களையெல்லாம்—குழந்தைகள் காப்பகங்கள். மத்திய சமூக நல வாரியத்தின் மூலமாகவும், தமிழக அரசின் சமூக நல வாரியத்தின் மூலமாகவும் நடத்த அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. 1,499 தொண்டு நிறுவனங்களுக்கு இதன் மூலமாக, சென்ற ஆண்டு 363 இலட்சம் ரூபாய் நிதியுதவி கிடைத்திருக்கிறது. அதுமட்டுமல்லாமல், தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள அனைத்து தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் கூட்டமைப்பின் சார்பில், பேரணி, கருத்தரங்கம், கண்காட்சி போன்றவற்றை நடத்தி, இந்தத் தொண்டு நிறுவனங்களின் மூலமாக, செயல்படுத்தப்படும் அரசின் அனைத்து உதவிகளையும் விளக்கி, சிறப்பான முறையில் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தப்பட்டது. இதுபோன்ற நிகழ்ச்சிகள் எல்லா மாவட்டங்களிலும் நடத்தப்பட வேண்டுமென்று, தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் சமூக நல வாரியத்தின் மூலமாகக் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணும் நோக்கில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையில் செயல்பட்டுவரும் இந்த அரசு, சமூக நலத் துறை மூலம், சேவை மனப்பான்மையுடன் தொண்டாற்றி வரும் இதுபோன்ற தொண்டு நிறுவனங்களுக்குப் பக்க பலமாகவும், உறுதுணையாகவும் இருக்கும் என்பதையும் குறிப்பிட்டுச்சொல்ல விரும்புகிறேன்.

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் திட்டப் பணியில் கிராமங்களிலுள்ள 50 வளர் இளம் பெண்களைத் தேர்வு செய்து, இரண்டு நாள் முகாம் நடத்தப்பட்டு வருகிறது. ஒரு நாள் பெண் மருத்துவர் ஒருவரிடம் 'நேருக்கு நேர்' கலந்துரையாடல் நடக்கும். குடும்ப நலக் கல்வி பற்றிய விவரங்கள் தெரிவிக்கப்படுவதால், பழைய மூட நம்பிக்கைகள் ஒழியவும், விஞ்ஞானபூர்வமான மருத்துவ சிகிச்சைகளைப் பெற்று, பெண்கள், குழந்தைகள், நலம் பெறவும், அதற்கான வழிவகைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அதேபோல், மற்றொரு நாள் பெண் வழக்கறிஞர் மூலமாக நேர்காணல் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டு, சட்ட ரீதியான பாதுகாப்பு நிலைகளைப் பெண்கள் அறிந்துகொள்வதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 1-10

சமூகப் பாதுகாப்புத் துறை மூலமாக உறைவிடம் மற்றும் மருத்துவ வசதிகள் பெற இயலாத நிலையில் குடும்பத்தின் துன்புறுத்தல் களுக்குள்ளாகி, பாலியல் மற்றும் இதர வன்முறைகளுக்குள்ளாக்கப்பட்டு, கிராமங்களிலிருந்து நகர்ப்புறங்களுக்கு, வீட்டு வேலைக்காகவோ அல்லது வேலை தேடியோ வந்து சேர்கின்ற பல சிறார்கள் கொடுமைக்கு ஆளாக்கப்படுகிற சூழ்நிலை அமைந்திருப்பதைப் பார்க்கிறோம்.

அந்தச் சிறார்களை எல்லாம் காண்பவர்கள், உடனடியாக, அந்தச் சிறார்களுக்கு பாதுகாப்பான நடவடிக்கைகளைப அரசின் மூலமாக, தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் மூலமாகத் தருவதற்காக, சிறார்களுக்கான தொலைபேசி உதவித் திட்டமானது அனைத்துலக குழந்தைகள் தினமான 30-4-1999-ஆம் நாளன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தத் திட்டத்தின் மூலம் துயருறும் குழந்தைகளைக் காண்கின்ற பொது மக்கள் யாராக இருந்தாலும், அக்குழந்தைகளுக்குப் பாதுகாப்பு, மருத்துவ வசதி, உறைவிட வசதி போன்றவற்றைப் பெற்றுத்தருவதற்கு, 1098 என்ற எண்ணைச் சுழற்றினால், சென்னையில் டான் பாஸ்கோ மற்றும இந்திய குழந்தைகள் சங்கத்தில் இயங்கும் ஒருங்கிணைப்பு மையங்களுக்கு அந்தத் தகவல்கள் உடனடியாகப் போய்ச் சேரும். அங்கே இருக்கின்ற உதவியாளர்கள், உடனடியாக அந்தக் குழந்தை இருக்கும் இடத்திற்கு வந்து, குழந்தையைக் காப்பாற்றி, பராமரிப்பதற்கு வேண்டிய அனைத்து வசதிகளும் செய்யப்பட்டிருக்கின்றன. இந்தப் புதுமையான திட்டம், பெருநகரங்களிலே மூன்றாவது நகரமான,



நம்முடைய சென்னை மாநகரத்தில், தமிழகத்தில் உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மத்திய சமூக நீதி மற்றும் மேம்பாட்டு அமைச்சகச் செயலாளர் திரு. டி.கே. மணவாளன் அவர்கள் அன்றையதினம் நிகழ்ச்சியில் கலந்துகொண்டபோது, மத்திய அரசால் வழங்கப்படுகின்ற நிதியை தமிழக அரசுதான் முழுமையாகச் செலவிடுகிறது என்ற செய்தியைச் சொல்லிப் பாராட்டி இருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை நகரத்தில் ஓடும் ஆட்டோக்களில் பெண்களை இழிவுபடுத்துகின்ற வாசகங்கள் எழுதப்பட்டிருந்தன. அவை குறித்த தகவல் மாநகரக் காவல் துறை ஆணையரிடம் தெரிவிக்கப்பட்ட போது, கிட்டத்தட்ட 60-க்கும் மேற்பட்ட ஆட்டோக்களில் எழுதப்பட்டிருந்த அந்த இழிவுபடுத்துகின்ற வாசகங்களை உடனடியாக அப்புறப்படுத்தி, மேற்கொண்டு எவரும் அப்படிப்பட்ட வாசகங்களை எழுதக்கூடாது என்று உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே, சாலையோரங்களிலும, பேருந்து நிலையங்களிலும் பிச்சை எடுக்கிற ஆண், பெண் குழந்தைகள் பலரும் காவல் துறை மூலமாகக் கண்டெடுக்கப்பட்டு, தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் கிட்டத்தட்ட 25 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கிய, மேல்பாக்கத்தில் இருக்கின்ற ஏதிலார் இல்லங்களிலே அவர்களைத தங்க வைத்து, அவர்களுக்கு உணவு, உறைவிட வசதி செய்யப்பட்டிருக்கிறது. சென்னை நகரத்தில் ஆங்காங்கு காணப்படுகின்ற பிச்சைக்காரர்களை இன்றைக்கு மறுவாழவு இல்லங்களுக்கு அனுப்பி வைத்து, அவர்களுக்கும் பராமரிப்புச் செய்து வருகிறது இந்த அரசு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டிலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும், ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறை மூலமாக சிறப்பு மருத்துவ முகாம், கடந்த 1-3-1999 முதல் 12-3-1999 வரை நடத்தப்பட்டு, பார்வையற்றோர், பேசும் திறனற்ற காது கேளாதோர், கை, கால் ஊனமுற்றோர், மன வளர்ச்சி குன்றியோர் மற்றும் பல்வகையில் ஊனமுற்ற 503 பேரைக் கண்டறிந்து, அவர்களுக்கு வேண்டிய உதவிகளையும், கருவிகளையும் அளிப்பதற்கு அரசு ஏற்பாடு செய்திருக்கிறது.

மேலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் அறிவித்துள்ள வாழ்வொளித் திட்டம் மூலம் கண்டறியப்படுகின்ற ஊனமுற்ற குழந்தைகளுக்கு, ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறை மூலமாக, தேவையான இலவச உதவிக் கருவிகளையும், சலுகைகள் அத்தனையையும் அளிப்பதற்கும், ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. தற்போதுள்ள நடைமுறையின்படி, ஊனமுற்றோர் அடையாள அட்டை வைத்திருக்கும் ஊனமுற்ற நபர்கள், பல்வேறு மறுவாழ்வு உதவிகளைப் பெறுவதற்கென ஒவ்வொரு முறையும் மருத்துவச் சான்றிதழ் பெற்றுத் தர வேண்டிய நிலை இருந்து வருகிறது. இதைத் தவிர்த்திட, ஊனமுற்றோரின் சிரமத்தைக் குறைக்கும் பொருட்டு, சிறப்புப் பயிற்சி பெற்ற மருத்துவ வல்லுநர்களை வாரத்தில் குறிப்பிட்ட நாளில் மாவட்ட மறுவாழ்வு மையத்திற்கு வரவழைத்து, அவர்கள் மூலமாக, அந்தந்தப் பிரிவைச் சார்ந்த தகுதி பெற்ற ஊனமுற்ற நபர்களைக் கண்டறிந்து, அவர்களுக்கு அந்த மையத்திலேயே உடனடியாக, சான்றிதழ், சலுகைகள் மற்றும் உதவிக் கருவிகளை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனால் சான்றிதழ் பெறுவதில் ஏற்படும் தேவையற்ற காலதாமதம் குறைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள், பார்வையற்ற கல்லூரி மாணவர்கள் மற்றும் பட்டதாரி சங்கத்தினரை கடந்த 12-3-1999 அன்று நேரடியாகச் சந்தித்து, நடத்திய பேச்சு வார்த்தைமூலமாக, அவர்களுக்குச் சில சலுகைகளை அறிவித்திருக்கிறார்கள். அதை மீண்டும் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். 9 ஆவது வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு வழங்கப்படும் மாத உதவித் தொகை 85 ரூபாயிலிருந்து 110 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது.

பட்டப் படிப்பு மாணவர்களுக்கு வழங்கப்படும் மாத உதவித் தொகையை 125 ரூபாயிலிருந்து 150 ரூபாயாகவும், முதுநிலைப் படிப்பு, பொறியியல் மற்றும் ச[illegible]ப் படிப்பு பயில்வோருக்கு வழங்கப்படும் மாத உதவித் தொகையை 170 ரூபாயிலிருந்து 195 ரூபாயாகவும் உயர்த்தி வழங்குவதற்கு ஆணை வழங்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி )

பிற்பகல் 1-15

தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியம் 7-3-1999-ல் வெளியிட்ட விளம்பரத்தின்படி நிரப்பப்படாமல் உள்ள இரண்டு ஆங்கில விரிவுரையாளர்கள் பணியிடத்தையும், தற்போது காலியாகவுள்ள



சரித்திர விரிவுரையாளர் பணியிடம் ஒன்றையும் பார்வையற்றோர்களைக் கொண்டு நிரப்புவதற்கும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் இசைவு அளித்திருக்கின்றார்கள். கூடுதலாக ஒரு தமிழ் விரிவுரையாளர் பணியிடத்தை பார்வையற்றவரைக் கொண்டு நிரப்புவதற்கும், நிரப்பப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பார்வையற்ற 23 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களில், பட்டதாரி பார்வையற்ற ஆசிரியர்கள், வரும் கல்வியாண்டில் நியமனம் செய்யப்படுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சமூக நலத் துறை நடத்தும் சிறப்புப் பள்ளிகளில் தற்போது காலியாக உள்ள 6 இடைநிலை ஆசிரியர் பணியிடங்களும் தகுதி வாய்ந்த பார்வையற்றோரைக் கொண்டு நிரப்பப்படும். புத்தகம் கட்டும் பயிற்சி முடித்த 14 பார்வையற்றோர்கள் 7 அரசு அச்சகங்களிலே தற்காலிகமாகப் பணியில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். 21 அரசுப் போக்குவரத்துக் கழகங்களிலும் ஒரு பார்வையற்றவரை பொருத்துநர் பணிக்கு நியமனம் செய்ய இசைவு அளிக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டும் அல்லாமல், மகளிர் மேம்பாட்டுக் கழகம் என்பதன் மூலமாக, கிராமப்புறங்களில் உள்ள ஏழை, எளிய மகளிர் மேம்பாட்டிற்கு, பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியுதவி மற்றும் மாநில நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்ட திட்டத்தின்கீழ் 1,20,960 குழுக்கள் மூலமாக, 3,17,946 பெண்கள், 16,368 மகளிர் சுய உதவிக் குழுக்களை ஏற்படுத்தி, அதன் மூலமாக 22 கோடி ரூபாயைச் சேமித்திருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் பதவியேற்றவுடன் மகளிர் திட்டத்திற்காக 1,440 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, சென்னை நீங்கலாக, அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டத்தை விரிவுபடுத்தியிருக்கிறார்கள். மேலும், தொழிற் பயிற்சித் திட்டத்தின்கீழ் 70 மகளிரும், தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 38 மகளிரும் இதன் மூலமாகப் பயன்பெற்றிருக்கிறார்கள்.

1999-2000ஆம் வருடத்தில் 200 பெண்களுக்கு மேற்கூறிய 2 திட்டங்கள் மூலமாகப் பயிற்சி அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் மூலமாக 'முற்றம்' என்ற ஒரு மாதாந்திர இதழ் வெளியிடப்படுகிறது. இதன்மூலம் ஏழை, எளிய பெண்கள், குழுக்களின் அனுபவங்களையும் கருத்துக்களையும் பரிமாறிக்கொள்ள முடிகிறது.

செய்திப் படங்கள் மற்றும் ஒலி நாடாக்கள் மூலம் செய்திகளைப் பரப்புவதுடன், இந்த மாத இதழைக் கிராமப்புறப் பெண்களின் தேவைகளைக் கருத்திற்கொண்டு செம்மையாக நடத்திடவும் அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. ஏழைப் பெண்கள், குழந்தைகள்

மற்றும் ஊனமுற்றோர் நலத்தில் அக்கறை கொண்ட இந்த அரசு, அனைவருடைய நல்வாழ்விற்காகவும் அனைத்து வசதிகளையும் செய்து தருவதற்கு எப்போதும் தயாராக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கே பேசிய பல உறுப்பினர்களும் ஒவ்வொரு கருத்தை வலியுறுத்திக் குறிப்பிட்டிருக்கிறார்கள். குறிப்பாக, சத்துணவுப் பணியாளர்களுக்குக் குறைந்த சம்பள விகிதம் வழங்கப்படுகிறது, அதை உயர்த்தித் தர வேண்டும் என்று சொன்னார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்னதாக, எவ்வளவு குறைந்த சம்பளத்திலே அவர்கள் எவ்வளவு சிரமப்பட்டு வாழ்க்கை நடத்தி வந்தார்கள் என்பதை அனைவரும் அறிவார்கள். கலைஞருடைய ஆட்சி வந்தால்தான் எங்களுக்கு நன்மைகள் கிடைக்கும் என்று அத்தனை பேரும் எதிர்பார்த்துக் கொண்டு இருந்தார்கள். இந்த ஆட்சி வந்த பிறகு, கிட்டத்தட்ட இந்தப் பணியாளர்களுக்கு ஆரம்பத்தில் வழங்கப்பட்ட 200 ரூபாய் ஊதியத்தினை, நம்முடைய முதல்வர் அவர்கள் 600 ரூபாயாக உயர்த்தித் தந்து, தற்போது 1,100 ரூபாய் அவர்கள் பெற்று வருகிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுடைய பணி நிரந்தரம் செய்யப்பட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருமே இங்கே வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். நிதி நிலைமையை எண்ணிப்பார்த்து, தற்போது அதைச் செய்வதற்கு இயலாது என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எல்லா இடங்களிலும் இருக்கின்ற சத்துணவு மையங்கள் பழுதடைந்திருக்கின்றன என்று பொதுவாக அனைவருமே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நம்முடைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் 50 இலட்சம் ரூபாய் வழங்குகிறார்கள். அந்தத் தொகையிலிருந்து நீங்கள் குறிப்பிட்ட பகுதிகளுக்கு, சத்துணவு மையங்களுக்கான பழுதினை நீக்குவதற்கும், புதிதாகக கட்டித் தருவதற்கும் முயற்சிகளை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று உங்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சத்துணவு மையங்களைப் பார்வையிடுகின்ற அதிகாரம் ஊராட்சி மன்றத்திற்கு வழங்கப்பட்டிருக்கிறது என்றும், தலைமை ஆசிரியர்களுக்கு அந்த வாய்ப்பு வழங்கப்படவில்லை என்றும் ஒரு கருத்து இங்கே



தெரிவிக்கப்பட்டது. அவர்கள் கண்காணிக்க வேண்டும் என்பது தொடர்ந்து இருந்து வருகின்றது. அவர்கள் அதைக் கண்காணித்து வருவதைத் தடுப்பதற்கு எந்தச் சட்டமோ அல்லது விதியோ நாங்கள் விதிக்கவில்லை. எனவே, தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் யாராக இருந்தாலும், மக்களுடைய பிரதிநிதிகள் அந்தச் சத்துணவு மையங்களுக்குச் சென்று பார்வையிட்டு, அதிலே ஏதேனும் குற்றங்குறைகள் இருந்தால், எங்களுக்குத் தெரிவித்தால், நிச்சயமாக, தகுந்த நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொள்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தையல் இயந்திரங்கள் அதிகமாக வழங்கப்பட வேண்டுமென மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டார்கள். தையல் இயந்திரங்களை 1,000 பேருக்குத்தான் இந்த ஆட்சி வருவதற்கு முன்பாக இருந்தவர்கள் வழங்கினார்கள் ஆண்டுதோறும். மாண்புமிகு முதல்வர் அவர்கள் வந்தவுடனேயே, கூடுதலாக ஓர் ஆயிரம் தையல் இயந்திரங்களை வழங்குவதற்கு உத்தரவிட்டார்கள். 2,000 பேருக்கு வழங்கினோம். அதற்கு அடுத்த ஆண்டு மேலும் கூடுதலாக வேண்டும் என்று கேட்டவுடன், மனமுவந்து 3,000 பேருக்கு வழங்கினார்கள். கடந்த ஆண்டு அதை இன்னும் அதிகமாக உயர்த்தி, 4,000 பேருக்கு வழங்கினார்கள். ஆனால், கடந்த ஆண்டு கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியிலே Manufacturers மட்டும்தான் கலந்துகொள்ள வேண்டுமென்று அறிவிப்புச் செய்திருந்தோம். ஆனால், Manufacturer ஆக இல்லாத ஒருவர், தங்களுக்கும் அதிலே வாய்ப்பு வழங்க வேண்டுமென்று தடையாணை வாங்கிவிட்ட காரணத்தினால், அது வழங்கப்படாமல் நிறுத்தப்பட்டிருந்தது. தற்போது அதில் உயர் நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு அரசுக்குச் சாதகமாக வழங்கப்பட்டிருக்கிற காரணத்தினால், வழங்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 4,000 தையல் இயந்திரங்களும் இந்த ஆண்டு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 1-20

சத்துணவு மையங்களுக்கு வழங்கப்படுகின்ற அரிசி, கோதுமை, பருப்பு போன்றவற்றினுடைய தரம் சரியாக இல்லையென்று ஒரு சில உறுப்பினர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அது நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக நேரடியாக வழங்கப்படுகிறது. நான் இதுவரை பார்த்த எந்தச் சத்துணவு மையத்திலும் அப்படிப்பட்ட

குறைபாடு எனக்குத் தெரியவில்லை; எனக்குத் தெரிவிக்கப்படவும் இல்லை. இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர்கள் அந்தக் குறைபாட்டைச் சொல்லி இருக்கிறார்கள். குறிப்பிட்டு எந்த இடத்திலே அதைப்போல தரம் இல்லாத அரிசி வழங்கப்படுகிறது என்று தெரிவித்தால், உடனடியாக மாற்றி வழங்குவதற்கு நிச்சயமாக இந்த அரசு ஏற்பாடு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆண்டு புதிய அறிவிப்புகளைத் தரவேண்டும் என்று கேட்டபொழுது, மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிதிநிலையைப் பொறுத்து அதிகமாக வழங்குவதற்கு இயலாது என்ற அந்த இக்கட்டான சூழ்நிலையைத் தெரியப்படுத்தினார்கள். இருந்தாலும், பெண்கள் நலத்திலும், குழந்தைகள் நலத்திலும், ஏதிலார் நலத்திலும் மிகுந்த கனிவோடு நம்முடைய முதல்வர் அவர்கள் எப்பொழுதும் திட்டங்களை அறிவிப்பவர் என்ற காரணத்தினால், அதிலேயும் அவர்கள் இன்றைக்குச் சில திட்டங்கள் குறித்து அறிவிப்புச் செய்யுமாறு அனுமதியை வழங்கியிருக்கின்றார்கள். அதை உங்கள் மத்தியிலே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

ஆதரவற்ற பெண்கள் திருமண நிதியுதவித் திட்டம். ஆரம்பத்தில் 2,000 ரூபாய் என்றுதான் வழங்கப்பட்டு வந்தது. நம்முடைய முதல்வர் அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு, 3,000 ரூபாயாக வழங்கினார்கள். கடந்த ஆண்டு இதை 5,000 ரூபாய் ஆக உயர்த்தித் தந்தார்கள். பயனாளிகளுடைய எண்ணிக்கைகூட 65 தான் இருந்தது. அதை, கடந்த ஆண்டு 100 பேர் என்று உயர்த்தி உத்தரவிட்டார்கள். 5,000 ரூபாய் என்று வழங்கியதை இந்த ஆண்டிலேயிருந்து 2,000 ரூபாய் உயர்த்தி 7,000 ரூபாய் என்று வழங்குவதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

அதுமட்டுமல்லாமல், 8 ஆவது வகுப்புகூடப் படிக்காத பெண்கள் இந்தத் திட்டத்திலே பயனடையலாம் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கலப்புத் திருமணத் திட்டத்திற்கு அஞ்சுகம் அம்மையாருடைய பெயர் சூட்டப்பட்டிருப்பதை நீங்கள் அறிவீர்கள். அதைப்போல, விதவை மறுமணத் திட்டத்திற்கு டாக்டர் தர்மாம்பாள் அம்மையாருடைய பெயர் சூட்டப்பட்டு இருப்பதை நீங்கள் அறிவீர்கள். ஏழைப் பெண்கள் திருமண உதவித் திட்டத்திற்கு மூவலூர்



இராமாமிர்தம் அம்மையாருடைய பெயர் சூட்டப்பட்டிருப்பதை நீங்கள் அறிவீர்கள். எனவே, ஆதரவற்ற பெண்கள் திருமண நிதியுதவித் திட்டத்திற்கு ஒரு பெயர் சூட்ட வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே கேட்டுக்கொண்டபொழுது, மன நிறைவோடு, இந்த ஆதரவற்ற பெண்கள் திருமண நிதியுதவித் திட்டத்திற்கு, அன்னை தெரசாவினுடைய பெயரைச் சூட்டுமாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுமதி வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஏழை விதவைகளின் மகள் திருமண உதவித் திட்டத்திற்கு, கடந்த காலத்தில் 2,000 ரூபாய்தான் வழங்கி வந்தார்கள். அதை 3,000 ரூபாயாக உயர்த்தியதும் நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள்தான். கடந்த ஆண்டு நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த நிதியுதவியை 5,000 ரூபாயாக உயர்த்தித் தந்தார்கள். இந்தத் திட்டத்தின்கீழ் 1,064 பெண்கள் பயன் பெற்றிருக்கிறார்கள். இந்தத் தொகையையும் உயர்த்த வேண்டுமென்று கேட்டபொழுது, நியாயமான ஒன்றுதான், விதவையினுடைய மகள் திருமண உதவித் திட்டத்திற்கு உயர்த்துவோம் என்று சொல்லி, 5,000 ரூபாய் என்று வழங்கி வந்ததை, 2,000 ரூபாய் உயர்த்தி 7,000 ரூபாயாக வழங்க உத்தரவிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டத்திற்கும் ஒரு புதிய பெயரைச் சூட்ட வேண்டுமென்று மாண்புமிகு முதல்வரிடத்திலே கேட்டுக் கொண்டபொழுது, மனநிறைவோடு, இந்தத் திட்டத்திற்கு, பகுத்தறிவுச் செம்மல் ஈ.வே.ரா. பெரியாருடைய துணைவியார் மணியம்மை அவர்களுடைய பெயரை இதற்குச் சூட்டவேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவிப்புச் செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

டாக்டர் தர்மாம்பாள் அம்மையாருடைய பெயரில் விதவைத் திருமண உதவித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவது நீங்கள் அறிந்த ஒன்றுதான். அந்த விதவை மறுமண உதவித் திட்டத்தில்,

“காதல் சுரக்கின்ற நெஞ்சத்திலே கெட்ட

கைம்மையைத் தூர்க்காதீர்—ஒரு

கட்டழகன் திருத் தோளினைச் சேர்ந்திடச்

சாத்திரம் பார்க்காதீர்”

என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள். விதவை என்ற சொல்லில், வார்த்தையிலேகூட பொட்டு இல்லையே என்று ஒரு கவிஞன் வருந்தியபோது, நம்முடைய முதல்வர் அவர்கள், "வருந்தாதே தம்பி, 'கைம்பெண்' என்று கூறிப்பார், இரண்டு பொட்டுக்கள் இருக்கின்றனவே" என்று எடுத்துக் கூறினார். (மேசையைத் தட்டும் ஒலி). அந்த வகையிலே, இந்தத் திருமண உதவித் திட்டத்திற்கு, முன்பு 5,000 ரூபாய் என இருந்து வந்ததை, 7,000 ரூபாய் ஆக நம்முடைய முதல்வர் அவர்கள் உயர்த்தித் தந்தார்கள். இப்பொழுது, இந்த விதவை மறுமணத் திட்டத்திற்கு 10,000 ரூபாயாக உயர்த்தி வழங்கிட உத்தரவிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நிலுவையில் இருக்கின்ற விண்ணப்பங்களுக்கு 7 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்று அறிவிப்பு செய்திருக்கின்றார்கள்.

*பிற்பகல் 1-25*

தமிழகத்திலுள்ள மகளிர் எல்லாம், பெண் இனத்தின் முன்னேற்றத்திற்காக, உரிமைக்காகப் பாடுபட்ட தியாகம் செய்த வீராங்கனைகளைத்தான் முன்மாதிரியாகத் தங்கள் வாழ்வில் கொள்ளவேண்டுமேயல்லாமல், சந்தர்ப்பவசத்தால் தலைவி ஆனவர்களை, அரசியலில் சுயலாபம் தேடி, ஊழல் புரிந்தவர்களை முன்மாதிரியாகக் கொள்ளக்கூடாது என்பதற்காக, பெண்களுக்கு நலன் சேர்க்கும் திட்டங்களுக்கு எல்லாம் நம்முடைய முதல்வர் அவர்கள், பெண் இனத்திற்குப் பெருமை சேர்த்த, மாதர்குல மாணிக்கங்களாகத் திகழ்ந்தவர்களுடைய பெயர்களைச் சூட்டியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழக அரசின் சார்பிலே நடைபெறும் 6 சேவை இல்லங்களிலே தங்கியுள்ள பெண்களுக்கு, உணவுச் செலவினமாக 250 ரூபாயும், குழந்தைகளுக்கு 165 ரூபாயும் என்று இருந்ததை உயர்த்தி, மாதந்தோறும் பெண்களுக்கு 300 ரூபாயும், சிறுவர்களுக்கு 200 ரூபாயும் வழங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) திருமதி சரஸ்வதி அவர்கள் பேசுகின்றபோது, சேவை இல்லங்களின் பணி பாராட்டத்தக்கதாக இருக்கிறது, எல்லா மாவட்டங்களிலும் இந்தச் சேவை இல்லங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் எனறு சொன்னார்கள். ஆறு இடங்களிலே அந்தச் சேவை இல்லங்கள் இருக்கின்றன. அதிலேயே இன்னும் மகளிரைச் சேர்த்துக்கொள்வதற்கு இடம் இருக்கின்றது. எனவே, புதிதாக



மாவட்டங்களிலே அதைத் தொடங்குவதற்கு வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தாம்பரம், தஞ்சாவூர் கடலூர் ஆகிய சேவை இல்லங்களிலே ஆதரவற்ற, கணவனால் கைவிடப்பட்ட ஏழைப் பெண்களுக்கு தட்டெழுத்து மற்றும் சுருக்கெழுத்துப் பயிற்சி வகுப்புகள் இலவசமாக நடைபெற்று வருகின்றன. அதைப்போலவே, மீதமிருக்கின்ற திருநெல்வேலி, காரைக்குடி மற்றும் சேலம் ஆகிய மூன்று சேவை நிலையங்களிலேயும் தட்டெழுத்து மற்றும் சுருக்கெழுத்துப் பயிற்சி வகுப்புகள் இந்த ஆண்டு முதல் தொடங்குவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். இதன் மூலமாக, 60 பெண்கள் பயனடைய இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கடும் உடல் ஊனமுற்றோருக்குப் பராமரிப்புத் தொகை 100 ரூபாய் என்று இருந்ததை, நம்முடைய ஆட்சி வந்த பிறகுதான் 150 ரூபாய் என்று உயர்த்தி வழங்கினார்கள். பயனாளிகளினுடைய எண்ணிக்கையையும் 1050-லிருந்து 2,900 என்று உயர்த்தி வழங்கினார்கள். கடந்த ஆண்டு கூடுதலாக மேலும் 2 ஆயிரம் பேருக்கு இந்தத் தொகை வழங்கப்படும் என்பதை அறிவிப்புச் செய்து, 4,900 பேர் பயனடைந்திருக்கிறார்கள். ஆனால், இன்னும் போகின்ற இடங்களில் எல்லாம் பலர் தங்கள் கிராமங்களிலேயிருக்கின்ற அந்தக் குழந்தைகளைக் காட்டி, இவர்களுக்கும் இந்தத் தொகையை நீங்கள் வழங்குங்கள் என்று கேட்டார்கள். இதுகுறித்து மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே குறிப்பிட்டுச் சொன்னபோது, மேலும் இந்த ஆண்டு கூடுதலாக 1,500 பேருக்கு பராமரிப்பு உதவித் தொகை 150 ரூபாய் வழங்கப்படும் என்று அறிவிப்புச் செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

பார்வையற்றோருக்கான சிறப்புப் பழகுநர் பயிற்சித் திட்டத்தின்கீழ், பார்வையற்றோருக்கான அரசு தொழிற் பயிற்சிப்பள்ளி, பூவிருந்தவல்லியிலும் மற்றும் ஆண்கள் தொழிற் பயிற்சி மையம் கிண்டியிலும், பயிற்சி முடித்து தேர்ச்சி பெற்ற பார்வையற்றோர் மற்றும் காது கேளாதோருக்கு வேலைவாய்ப்பை உறுதிப்படுத்தும் வகையில், மாதந்தோறும் 400 ரூபாய் அரசு, தனியார் தொழில் நிறுவனத்தில் பணிபுரிந்து வரும் 8 பேருக்கு வழங்கப்பட்டு வருகிறது. இந்தத் தொகையை உயர்த்த வேண்டும் என்று அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க 400 ரூபாயை, 100 ரூபாய் உயர்த்தி 500 ரூபாயாக வழங்குவதற்கும், பயனாளிகளை 8 பேரிலேயிருந்து 25

பேராக உயர்த்துவதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

பார்வையற்றவர்களுக்குத் தேர்வு எழுத உதவி செய்துவந்த உதவியாளர்களுக்கு ஆரம்பத்திலே 6 ரூபாய்தான் வழங்கப்பட்டு வந்தது. நம்முடைய முதல்வர் அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்டதற்குப் பிறகு, 6 ரூபாயிலிருந்து 15 ரூபாயாக உயர்த்தித் தந்தார்கள். 200 பேர் அதிலே பயன்பெற்று வந்தார்கள். அவர்கள், மேலும் இந்தத் தொகையை உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டபோது, மாண்புமிகு முதல்வர் அவர்கள், 15 ரூபாயிலிருந்து 30 ரூபாயாக அந்த உதவித் தொகையை உயர்த்தி வழங்கியிருக்கிறார்கள். ஆறு ரூபாயிலிருந்து 15 ரூபாயாக வழங்கினார்கள்; இப்போது 15 ரூபாயிலிருந்து 30 ரூபாய் என்று ஒரு மடங்கு கூடுதலாக உயர்த்தி வழங்குகிற மனவளம் கொண்டவர் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

உடல் ஊனமுற்றோருக்கு மூன்று சக்கர வண்டி வழங்குவது, ஆரம்பத்திலே ஆயிரம் பேருக்கு என்று இருந்தது. கூடுதலாக 500 பேருக்கு வழங்குவதற்கு உத்தரவிட்டு, கடந்த ஆண்டு 1,500 பேருக்கு வழங்கப்பட்டு வந்தது. மேலும், நிறைய உறுப்பினர்கள் ஊனமுற்றோருக்கான சக்கர வண்டி தேவைப்படுகிறது என்று குறிப்பிட்ட காரணத்தாலே, கூடுதலாக 500 பேருக்கு இந்த ஆண்டு வழங்குவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒவ்வொரு மாவட்டத்திலும் நாற்காலி பின்னும் பணியைச் செய்கின்ற பார்வையற்ற நபர்கள் 800 ரூபாய் தொகுப்பூதியத்திலேதான், 27 பேர், பணியாற்றி வந்தார்கள். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றுக்கொண்ட பிறகு, இந்தத் தொகுப்பூதியத்தை 1,230 ரூபாய் என்று உயர்த்தித் தந்தார்கள். இப்போது அவர்கள் 1,940 ரூபாய், அகவிலைப்படி உட்பட பெற்று வருகிறார்கள். அந்தப் பார்வையற்ற பணியாற்றுகிறவர்களுடைய நிலையை உயர்த்த வேண்டும் என்பதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாதந்தோறும் 100 ரூபாய் உயர்த்தித் தருவதற்கு அனுமதி வழங்கியிருக்கிறார்கள்.

சமூகப் பாதுகாப்புத் துறையின்கீழ் இயங்கும் இல்லங்களில் தங்கியுள்ள மகளிருக்கான திருமண உதவித் திட்டம், பல ஆண்டுகாலமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அந்தத் திருமண



உதவித் திட்டத்திற்கு 300 ரூபாய்தான் திருமணச் செலவிற்காக வழங்கப்பட்டு வந்தது. அவர்களுடைய வாழ்க்கைத்தரம் செம்மையாக அமையவேண்டும் என்பதற்காக, 2,000 ரூபாய் அவர்களுக்குப் பராமரிப்பு உதவியாக வழங்கப்பட்டு வந்தது. எல்லாத் திருமணத்திற்கும் அதிகத் தொகை தருகின்றபொழுது, இந்த வாழ்விழந்த பெண்களுடைய மறுவாழ்விற்கு வழங்கப்படுகிற திருமண உதவித் தொகையையும் உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கிணங்க, நம்முடைய முதல்வரவர்கள், நன்கொடையாக—திருமண உதவித் தொகையாக, நன்கொடையாக—அன்றையதினத்தின் செலவுக்கு வழங்கப்பட்ட 1,000 ரூபாயை, 2,000 ரூபாயாக வழங்குவதற்கும், பராமரிப்புத் தொகையாக வழங்கப்பட்டு வந்த 1,000 ரூபாயை 3,000 ஆக வழங்குவதற்கும் உத்தரவிட்டு, ஆக மொத்தம் 5,000 ரூபாய் இந்தப் பெண்களுக்கு வழங்குவதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (மணியடிக்கப்பெற்றது)

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** பாதிக்கப்பட்ட பெண்கள் ஒரு புகலிடம் தேடி வருகின்றபொழுது, அவர்களுக்கு சென்னையில் இருக்கின்ற இரண்டு தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலமாக, அபயநிலையம், அதேபோல அடைக்கலாபுரம், தூத்துக்குடியில் இருக்கின்ற Francis Xavier பள்ளி இவற்றில் தங்கியிருக்கின்ற பெண்களுக்கு உணவுக்காக நாள் ஒன்றுக்கு நாலரை ரூபாய்தான் வழங்கப்பட்டு வந்தது. அதை மாற்றி, மாதந்தோறும் 200 ரூபாய் என்று வழங்குவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி).

அதைப்போலவே, ஒழுக்கநெறி பிறழ்தல் சட்டத்தின்கீழ் தண்டனைக்கு உட்படுத்தப்பட்ட மகளிருக்கு வழங்கப்படுவது போலவே. மீட்பு இல்லத்திலே இருக்கிற மகளிருக்கும் விசாரணைக் காலத்திலே வழங்கப்பட வேண்டுமென்ற எண்ணத்தில், நாள் ஒன்றுக்கு அவர்களுக்கு நாலரை ரூபாய் என்று வழங்கப்பட்ட உணவுச் செலவினத்தை, வகுத்தமைக்கப்பட்ட உணவு விகிதப்படி மாதந்தோறும் 400 ரூபாய் என வழங்குவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

சமூகப் பாதுகாப்புத் துறையின்கீழ் தொழிற் பயிற்சி பெறும் இளைஞர் காப்பகம், மகளிர் சிறப்புக் காப்பகம், பிற்காப்பு இல்லங்களிலே தங்கி தொழிற் பயிற்சி பெறுபவர்களுக்கு ஊக்கத்தொகையாக பகுதித் திறன் படைத்தவர்களுக்கு (semi-skilled) 30 ரூபாய் வழங்கப்பட்டு வந்ததை 50 ரூபாயாகவும், முழுத் திறன் படைத்தவர்களுக்கு (skilled workers) 50 ரூபாய் என்று இருப்பதை 70 ரூபாயாக உயர்த்தியும், அவர்கள் வீட்டுக்கும்போது, அந்தத் தொகையைச் சேமித்து மொத்தமாகவும் வழங்குவதற்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது.

பாதுகாப்புத் துறையின்கீழ் இயங்கும் சிறப்பு இல்லங்களிலே தங்கியுள்ள சிறுவர் சிறுமியர் தொடர்ந்து மறு கல்வி கற்பிக்க ஒப்புக்கொள்ளும் பெற்றோருடன் அந்தக் குழந்தையை அனுப்பி வைப்பதற்காகக் குடும்ப உதவித் தொகையாக நூறு பேருக்கு நூறு ரூபாய் என்று வழங்கப்பட்டு வந்தது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதனை 200 ரூபாய் என்று உயர்த்தி வழங்க உத்தரவிட்டிருக்கிறார்கள்.

நம்முடைய முதல்வரவர்கள்தான் தொழுநோயாளிகளினுடைய நன்மைக்காக 25 ஆண்டுகளுக்கு முன்பே 10 இடங்களிலே இல்லங்கள் அமைத்துத் தந்தார்கள். அந்த இல்லங்களிலே கடந்த 5 ஆண்டு காலமாக எவரையும் சேர்க்கக்கூடாது என்று ஒரு தடைச்சட்டம் போட்டு இருந்தார்கள். நம்முடைய முதல்வரவர்கள் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு, அந்தத் தடைச்சட்டத்தை நீக்கி, கிட்டத்தட்ட 300-க்கும் அதிகமான தொழுநோயாளிகள் மீண்டும் புனர்வாழ்வு பெறுகின்ற ஒரு வாய்ப்பை உருவாக்கித் தந்தார்கள். எனவே, எங்கள் நல்வாழ்விலே என்றைக்கும் கண்கண்ட தெய்வமாகத் தலைவர் கலைஞர் அவர்கள்தான் திகழ்கிறார்கள் என்று மனமாரப் பாராட்டுகின்ற அந்தத் தொழுநோயாளிகள், அவர்களுடன் தங்கியிருக்கின்ற அவர்களுடைய குழந்தைகளுக்குக் கல்வி உதவித் தொகை வழங்குவது உயர்த்தித் தரப்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள்.

ஏற்கெனவே, அந்தக் குழந்தைகளுக்கு முதல் வகுப்பிலே இருந்து 7 ஆம் வகுப்பு வரை படிக்கிற குழந்தைகளுக்கு, வருடத்திற்கு 20 ரூபாய்தான் வழங்கப்பட்டு வந்தது. இப்பொழுது அதை மாதத்திற்கு 20 ரூபாய் என்று வழங்குவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



அதைப்போல, 8ஆம் வகுப்பு, 9ஆம் வகுப்பு, 10ஆம் வகுப்பு படிக்கின்ற குழந்தைகளுக்கு ஆண்டுக்கு 30 ரூபாய்தான் வழங்கப்பட்டு வந்தது. அதை மாதத்திற்கு 30 ரூபாய் என்று வழங்குவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

அதைப்போலவே, ப்ளஸ் 1, ப்ளஸ் 2 பயிற்சி பெறுகிற மாணவர்களுக்கு ஆண்டுக்கு 50 ரூபாய் வழங்கப்பட்டு வந்தது. அதையும் இப்பொழுது மாதத்திற்கு 50 ரூபாய் என்று உயர்த்தி, அந்தத் தொழுநோயாளிகள் உள்ளத்திலே இன்றைக்கு மகிழ்ச்சியை உலவ விட்டிருக்கிறார் நம்முடைய முதல்வர் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு) சொல்லிவிடுகிறேன்.

வெட்டுத் தீர்மானங்களை 12-க்கும் மேற்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் வழங்கியிருக்கிறார்கள். 79-க்கும் மேற்பட்ட கருத்துகளை அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள். நான் இதுவரை பேசிய கருத்துகளிலிருந்து அவர்கள் மனநிறைவு அடைந்திருப்பார்கள் என்று கருதுகிறேன். எனவே, வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டு அரசுக்கு மானியக் கோரிக்கை எண் 29-ன்கீழ், 1999-2000ஆம் ஆண்டுக்கு 558,57,58,000 ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

### கோரிக்கை எண் 29 — சமூக நலன்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 29—சமூக நலன். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை. திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை. திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. தங்கமணி அவர்களுடைய வெட்டுத்தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், இருக்கையில் இல்லை. திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், இருக்கையில் இல்லை. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.



**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை. திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. கே. ரவி அருணன், இருக்கையில் இல்லை. திரு. கே. ரவி அருணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப் படுகிறது.

"சமூக நலன் பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.558,57,58,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (4-5-1999) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-35 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

151. 1997-98ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைத் தொழி கழகத்தின் முப்பத்து இரண்டாவது ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண் நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீ பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*180.* மானியக் கோரிக்கை எண் 29-சமூக நலன் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1999-2000. (தமிழ்,ஆங்கிலம்)

*181.* சமூக நலன் பற்றிய செயல்முறைத் திட்டம், 1999-2000. (தமிழ், ஆங்கிலம்).



## இணைப்பு

(313 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

### கோரிக்கை எண் 29

### சமூக நலன்

### கொள்கை விளக்கக் குறிப்பு, 1999-2000

### அத்தியாயம்-1

**முன்னுரை**

கோரிக்கை எண் 29-ன்கீழ் 1999-2000 ஆம் ஆண்டிற்கு ரூ. 5,58,57,58 ஆயிரங்கள் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுகிறேன்.

"தொட்டிலை ஆட்டும் கை தொல்லுலகை ஆளும் கை" என்பது தமிழில் வழங்கிவரும் முதுமொழியாகும். நாடு என்பதும், சமூகம் என்பதும் மக்களைக் குறிப்பதே. மக்கள் அனைவரும் அன்னையின் வயிற்றில் பிறந்து அன்னையின் அரவணைப்பில் வளர்ந்தவர்களே. எனவே, இந்த மக்கட்சமூகம் முழுவதும் அன்னையின் பெருங்கொடையாகும்.

"மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா"

என்னும் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களின் பாடல் வரிகள் பெண்குலப் பெருமையை எடுத்தியம்புகின்றன.

"அன்னம் ஊட்டிய தெய்வமணிக்கைகள் ஆணை காட்டில் அனலை விழுங்குவோம்" என்று பெண்களைப் போற்றிய பெருங்கவிஞன் பாரதி புதுமைப் பெண்களின் வரவிற்குக் கட்டியம் கூறியவன்.

"ஆணும் பெண்ணும் நிகரெனவே கொள்வதால்
அறிவிலோங்கி இவ்வுலகம் தழைக்குமாம்" என்றும்,

"எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே
பெண் இளைப்பில்லை காண்..."

என்றும், பெண்களின் சம உரிமை பற்றி முழங்கியவனும் அவனே.

"வன்மை உயர்வு மனிதர் நலமெல்லாம்
பெண்மையினால் உண்டென்று பேசவந்த பெண்ணழகே!"

[1999 மே 3

என்று பெண் குழந்தை தாலாட்டில் பெண்குலத்தின் உயர்வைப் பாடிய புரட்சிக் கவிஞர் பாவேந்தர்,

"பெண்ணடிமை தீருமட்டும் பேசும் திருநாட்டில்
மண்ணடிமை தீர்ந்திடுதல் முயற்கொம்பே!"

என்று பெண் விடுதலையைப் பேணிடப் பணித்துள்ளார்.

இத்தகைய சிறப்புகளைப் பெற்றிருக்கும் பெண் குலத்தின் ஏற்றத்திற்காகத் தமிழக அரசின் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை ஒல்லும் வகையெல்லாம் திட்டமிட்டு, அவற்றைச் செல்லும் வாயெல்லாம் செயல்படுத்தி வருகிறது.

மணம் புரியும் மங்கையர் நலம், கருவுற்ற மகளிர் நலம், தாய்-சேய் நலம், குழந்தைகள் நலம், பள்ளிப்பிள்ளைகள் நலம், பெண் குழந்தைகள் நலம், ஊனமுற்றோர் நலம், ஆதரவற்றோர் நலம் மற்றும் முதியோர் நலம் என்று சமுதாயத்தின் அனைத்து நிலைகளிலும் இத்துறை தனிச்சிறப்பு நாட்டம் செலுத்தி, சிறப்புத் திட்டங்களைத் தீட்டி, அவற்றைச் செம்மையுறச் செயல்படுத்தி வருகிறது. நலிந்த பிரிவினரும் வளம்பெற்றுச் சிறப்புடன் வாழும் நிலையை உருவாக்கி, அதன்மூலம் ஏற்றத்தாழ்வற்ற புதிய சமுதாயத்தை ஏற்படுத்தும் உயர்ந்த நோக்குடன் இத்துறை பணியாற்றி வருகிறது.

## அத்தியாயம்-2

## மகளிர் மற்றும் குழந்தைகள் நலம்

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

திருவள்ளுவர்

"ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி யிருந்தவர் மாய்ந்துவிட்டார்;
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போமென்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்."

மகாகவி பாரதியார்

2.1 நமது நாட்டின் மொத்த மக்கள் தொகையில் பெண்கள் மற்றும் குழந்தைகளின் எண்ணிக்கை பெரும்பான்மை வகிக்கிறது. ஒரு நாடு சமூக, பொருளாதார, கல்வி மற்றும் அரசியலில் முழு வளர்ச்சி



1999 மே 3]

அடைய வேண்டுமெனில் பெண்கள் மற்றும் குழந்தைகள் முன்னேற்றத்திற்கு அதிகபட்ச முக்கியத்துவம் அளித்தல் வேண்டும்.

2.2 பெண்கள் மற்றும் குழந்தைகளின் முழு வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் தூண்டுகோலாக விளங்குவதற்கென, தமிழ்நாட்டில் சமூக நலத் துறை துவக்கப்பட்டது. பெண்கள் மற்றும் குழந்தைகள் நலனை முன்னிறுத்திச் செயல்படும் இத்துறையின் முக்கிய நோக்கங்களாவன:-

பெண்கள் மற்றும் குழந்தைகள் முன்னேற்றத்திற்கென திட்டம் மற்றும் செயல்களை வகுத்தல்.

ஆதரவற்ற பெண்கள் மற்றும் குழந்தைகளுக்காகச் சேவை புரிய நவீனத் திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்துதல்.

இத்திட்டங்களின் பயன்கள் ஏழைகள் மற்றும் ஆதரவற்றவர்கட்குப் போய்ச் சேரும் வகையில் திட்டச் செயல்பாடுகளைக் கண்காணித்தல்.

அரசு மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் சேவைகளை ஒருங்கிணைப்பதன் மூலம் இரு வழிகளிலும் உள்ள சிறந்த திறன்களைப் பயன்படுத்துதல்.

குழந்தை வளர்ச்சியினை மேம்படுத்தும் விதமாகத் திட்டம் தீட்டுவது, ஊட்டச்சத்துக் குறைபாடு நீக்குதல், இறப்பு விகிதத்தைக் குறைத்தல், ஆரோக்கியமான குழந்தை நலனுக்காகச் சத்துணவு, சுகாதாரக் கண்காணிப்பு, தடுப்பூசி, நோய்த்தடுப்பு மற்றும் முன் பருவக் கல்வி ஆகிய பணிகளை மேற்கொள்ளுதல்.

### 2.3 பெண்களுக்கான அரசின் கொள்கை

பெண்கள் மற்றும் குழந்தைகள் வளர்ச்சிக்கான திட்டங்களைச் செயல்படுத்துவதில் தமிழகம் என்றுமே முன்னோடியாகத் திகழ்ந்து வருகிறது. பெண்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தவும் மற்றும் அவர்களின் அடிப்படைத் தேவைகளான சுகாதாரம், சத்துணவு, குழந்தை பராமரிப்பு மற்றும் கர்ப்ப காலப் பராமரிப்பு ஆகிய தேவைகளைப் பெறும் வழிகளை மேம்படுத்தவும் நல்ல நலத் திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

குழந்தைப் பேறு, வீட்டு வேலை மற்றும் வெளிப்புற வேலை ஆகிய மூன்று வகைச் சுமைகளின் விளைவாக, அவர்களுக்குச் சத்துணவுக் குறைபாடு மட்டுமின்றி அவர்களது ஆயுட்காலமும் குறைந்து விடுகிறது.

இதுமட்டுமின்றி, நம்நாட்டில் பெண்கள் பிறப்பதிலிருந்தே இப்பாகுபாட்டிற்கு ஆளாகிறார்கள். இந்த இனப்பாகுபாடு பிரசவிக்கும் பெண்களின் அதிக இறப்பு விகிதத்திற்கும், அதிகக் குழந்தை இறப்பு விகிதத்திற்கும், காரணமாக விளங்குகிறது. நம்நாட்டில் பெண்கள் நலனைப் பாதுகாக்க ஏற்படுத்தப்பட்ட சட்டங்கள் மூலம் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகளும், பெண்களைக் கொடுமைப்படுத்தும் சம்பவங்களும் நிகழாவண்ணம் தடுத்திடச் செம்மையான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1. பல ஆதரவற்ற பெண்கள் தன்னம்பிக்கை பெறவும், வாழ்க்கையில் உறுதியும் முன்னேற்றமும் அடையவும், அரசாங்கத்தின் நிதி மற்றும் ஆதரவு தேவைப்படுகிறது. விதவைகள், ஆதரவற்ற மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கான சேவை இல்லங்கள் ஆறு மாவட்டங்களில் நடைபெற்று வருகின்றன.

2. தமிழ் சமூகத்தில் பெற்றோரின் முக்கிய பொறுப்பாக மகளின் திருமணம் கருதப்படுகிறது. இதன் காரணமாகவே, பெண் என்றால் திருமணச் செலவு பெற்றோருக்கு அதிகமிருக்கும் என்று பெண் குழந்தைகள் வரவேற்கப்படுவதில்லை. ஏழைகளாக இருப்பினும், அவர்கள் சக்திக்கு மீறி மகள் திருமணத்திற்குச் செலவு செய்யும் சமூக நிர்ப்பந்தங்களால், பெண் குழந்தையென்றாலே துன்பம் என்ற முத்திரை குத்தப்படுகிறது. இதனைக் கருத்தில் கொண்டு, ஏழை பெற்றோர்கள் துயர் துடைக்கும் முகமாக இவ்வரசு பல்வேறு திருமண நிதியுதவித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

3. பல்லாண்டு வளர்ச்சிக்குப் பிறகும், நமது இந்திய சமுதாயம் சாதி, மதம் என்ற கட்டுப்பாடுகளிலிருந்து வெளியே வராத நிலை உள்ளது. வரதட்சணைக் கொடுமை முற்றிலுமாக நீங்க வேண்டுமெனில், சாதி, மத வேறுபாடுகளை முழுமையாகக் களைந்து திருமணங்கள் சாதி, மத அடிப்படையின்றி கலப்புத் திருமணங்கள் நடைபெறுதல் வேண்டும். அதற்கு அரசு நிதி உதவியளித்து ஊக்குவிக்கிறது.

4. இந்திய அரசியலமைப்பின்கீழ், பெண்களுக்காக உள்ள அனைத்து உரிமைகளும், பாதுகாப்பும், சட்டங்களும் மறுக்கப்படாமல் முழுமையாகக் கிடைக்க வழிவகை செய்வதில் தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்கிறது. பல்வேறு சட்டங்கள் மற்றும் சீர்திருத்தங்கள் மூலம் அவை சம்பந்தப்பட்ட பெண்களை அடைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த அடிப்படையில் முதலில் பெண்களுக்கான சட்ட உரிமைகளைச் செய்ல்படுத்தும் அதிகாரிகளுக்கு, பெண்களைச் சமமாகப் பாவிக்கும் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள்



நடத்தப்படுகின்றன. மாணவிகளும், பெண்களும் சட்ட உரிமைகளை அறிந்து கொள்ள கல்லூரி விரிவுரையாளர்கள் மூலம் கிராமபுறங்களிலும் பயிற்சி முகாம்கள் நடத்திட செயல் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

**2.4 குழந்தைகளுக்கான அரசின் கொள்கை**

குழந்தைகளின் நலனுக்காகத் திட்டங்களை வகுப்பதிலும் நடைமுறைப்படுத்துவதிலும் தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்கிறது. தமிழக அரசால் துவக்கப்பட்ட பல திட்டங்கள் இந்திய அரசாலும் மற்ற மாநில அரசுகளாலும் பின்பற்றப்பட்டு வருகின்றன. தமிழக அரசால் துவக்கப்பட்ட மதிய உணவுத் திட்டம் தற்போது பல மாநில அரசுகளாலும் முன்மாதிரியாக எடுத்துக் கொள்ளப்பட்டு பின்பற்றப்படுகின்றது. தமிழக அரசின் சிறந்த திட்டங்களால் குழந்தைகளின் கல்வியறிவு, சுகாதாரம் மற்றும் சத்துணவு ஆகியவற்றில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

ஒரு நாட்டின் வலிமையான அடிப்படைக்கு ஆரோக்கியமான குடிமக்கள் தேவை. நாட்டின் வருங்காலக் குடிமக்களாகிய குழந்தைகளின் நலனிற்கு முக்கியத்துவம் அளிக்காத எந்த நாடும் வளர்ச்சி நோக்கி முன்னேற இயலாது. இதனைக் கருத்திற்கொண்டு தமிழக அரசு, குழந்தைகளுக்கான நலத் திட்டங்களை, அவர்கள் கருவில் இருக்கும்போதே பயன்பெறுமாறு பேறுகால உதவிநிதி, சத்துமாவு, ஊட்டச் சத்துணவு வழங்கும் திட்டம் ஆகிய திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. கருவுற்ற தாய்மார்களுக்கு விழிப்புணர்வு ஊட்டவும், அவர்களின் ஆரோக்கிய நலனைப் பேணவும் வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

உலக அளவில் நடத்தப்பட்ட விஞ்ஞானப் பூர்வமான ஆய்வுகளில் 0-6 வயது வரை உள்ள குழந்தைகளின் வளர்ச்சியைக் கண்காணிப்பது அவசியம் என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்த வயதில்தான் ஆரோக்கிய வாழ்க்கைக்கான அடித்தளம் அமையும். அரசு, வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்களில் உள்ள குழந்தைகளுக்கு, பாதுகாப்பினைக் கருதி, சத்துணவு, சுகாதாரம், தடுப்பூசி, முன்பருவக்கல்வி மற்றும் ஊனத் தடுப்பு முயற்சிகளைச் செம்மையாக மேற்கொண்டு வருகிறது.

அனாதை, ஆதரவற்ற குழந்தைகளுக்குத் தகுந்த நிறுவனப் பாதுகாப்பு அளிப்பது அரசின் கடமைகளுள் ஒன்றாகும். சமூகநலத் துறை நிறுவனப் பாதுகாப்பில் உள்ள இவ்வகைக் குழந்தைகளுக்குக் கல்வி மற்றும் தொழில் கல்வி அளிப்பது, இக்குழந்தைகளின் வருங்காலத்தை நிர்ணயிப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றது.

[1999 மே 3

ஒரு குழந்தையின் உடல் மற்றும் மனவளர்ச்சி முழுமையாக உருவாகுவதற்குக் குடும்பச் சூழ்நிலை பெரிதும் உறுதுணையாக உள்ளது. சிறந்த நிறுவனப் பாதுகாப்புகூட ஒரு குடும்பத்தில் அளிக்கப்படும் அன்பு, பாசம் மற்றும் உணர்வுபூர்வமான குடும்ப அமைப்பிற்கு ஒருபோதும் ஈடாக முடியாது. ஒதுக்கப்பட்ட மற்றும் மறுக்கப்பட்ட இவ்வகைக் குழந்தைகளின் முழுமையான வளர்ச்சிக்கு குடும்பச் சூழ்நிலைகளை உருவாக்கித் தரும் மாபெரும் பொறுப்பு இந்தச் சமுதாயத்திற்கும் அரசிற்கும் உண்டு. சமுதாயத்தில் விழிப்புணர்ச்சியை ஊட்டுவதன் மூலம் இம்மாதிரி குழந்தைகளை, குழந்தை இல்லாத பெற்றோர்கள் தத்தெடுக்க ஊக்குவிக்கப்படுவார்கள். இதனைச் செயலாக்கும்பொருட்டு, தத்தெடுக்கும் வழிமுறைகளைச் சுலபமானதாகவும், வெளிப்படையாகவும் ஆக்குவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

**2.5 பெண்களுக்கான பொருளாதார முன்னேற்றத் திட்டங்கள்**

பெண்களின் உண்மையான முன்னேற்றம் என்பது, அவர்களுக்குப் பொருளாதார சுதந்திரம் அளிக்காமல் அடையமுடியாது என்பது யாவரும் அறிந்த உண்மை. தமிழக அரசு, பல திட்டங்கள் மூலம் பெண்களுக்குச் சுயவருமானம் பெற்றுத் தருவதோடு பெண்களுக்கு ஏற்படும் சில எதிரான சூழ்நிலைகள்ள எதிர்கொள்ளத் தேவையான தன்னம்பிக்கையையும் பொருளாதார வலிமையையும் பெற்றுத் தருகிறது.

பெண்களின் இலாபகரமான வேலைவாய்ப்பிற்காக அரசு பல்வேறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்துள்ளது. தற்போது 136 சங்கங்கள் பெண்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கி வருகின்றன. அதன் விவரங்கள் பின்வருமாறு:

| வரிசை எண் | சங்கத்தின் தன்மை | சங்கங்களின் எண்ணிக்கை | பயனபெறுவோர் |
|---|---|---|---|
| 1. | தையல் சங்கங்கள் | 78 | 37683 |
| 2. | இணை உணவு சங்கங்கள் | 26 | 1652 |
| 3. | எழுதுபொருள் சங்கங்கள் | 20 | 1053 |
| 4. | இதர சங்கங்கள் | 12 | 1132 |



1999 மே 3]

1998-99ஆம் ஆண்டு தையல் சங்கங்கள் மூலமாக சுமார் 63 இலட்சம் இணை சீருடைகள் தைக்கப்பெற்று புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தின்கீழ் பயனடையும் 1 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் பள்ளிச் சிறார்களுக்கு வழங்கப்பட்டன. இத்துடன் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர் மரபினர் துறைகளின்கீழ் நடைபெறும் பள்ளிகளில் பயில்பவர்களுக்கும் இச்சங்கங்களின் மூலம் சீருடைகள் தைத்து வழங்கப்படுகின்றன.

இணை உணவுச் சங்கங்கள் இணை உணவு தயாரித்து 6 மாதம் முதல் 3 வயது வரை உள்ள குழந்தைகளுக்கும், கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் வழங்குகின்றன. வருடத்தில் சுமார் 7500 மெட்ரிக் டன் இணை உணவு தயாரித்து, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்திற்கு வழங்கப்படுகிறது.

அரசுத் துறை மற்றும் அரசு நிறுவனங்களுக்குத் தேவையான பல்வேறு வகைப் பதிவேடுகளை அச்சடித்து வழங்குவதன் மூலம் எழுதுபொருள் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தருகிறது.

மேற்கண்ட கூட்டுறவுச் சங்கங்களுடன் 48 பயிற்சி மையங்களும், 6 உற்பத்தி நிலையங்களும் செயல்படுகின்றன. ஆண்டுதோறும் சுமார் 823 பெண்களுக்கு இப்பயிற்சி நிலையங்களின் மூலம் பல்வேறு தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**2.6 திருமண உதவித் திட்டங்கள்**

"விதவைகளைக் கட்டாயப்படுத்தி, மறுமணம் செய்யாமல் வைத்திருப்பது போன்ற இயற்கைக்கு விரோதமான பொருள் உலகில் வேறொன்றுமில்லை என்பது திடமான நம்பிக்கை. விதவைத் தன்மை என்பது எந்த விதத்திலும் தர்மமாகாது. பலாத்காரத்தினால் நடத்தும் கைம்மை வாழ்வு பாவமானது."

மகாத்மா காந்தி

"காதல் சுரக்கின்ற நெஞ்சத்திலே கெட்ட
கைம்மையைத் தூர்க்காதீர்-ஒரு
கட்டழகன் திருத் தோளினைச் சேர்ந்திடச்
சாத்திரம் பார்க்காதீர்."

பாவேந்தர் பாரதிதாசன்

[1999 மே 3

| திட்டத்தின் பெயர் | உதவித் தொகையின் அளவு | உதவித்தொகை பெறுவதற்கான தகுதிகள் | பயனாளிகளின் எண்ணிக்கை மற்றும் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி (1999-2000) |
|---|---|---|---|
| 1. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித் திட்டம் | ரூ.10000/- காசோலை அல்லது கேட்பு வரைவோலை. | மணப்பெண் 10 ஆம் வகுப்பு தேர்வு எழுதியிருக்க வேண்டும். பழங்குடியினருக்கு 5 வது படித்திருந்தால் போதுமானது.<br>ஆண்டு வருமானம் ரூ. 12000/- க்கு மிகாமல் இருக்க வேண்டும் 18 வயது மற்றும் அதற்கும் மேல். குடும்பத்தில் ஒரு பெண்ணிற்கு மட்டும் நிதி உதவி வழங்கப்படும். | 70000<br>ரூ. 70 கோடி |
| 2. ஏழை விதவையாது மகள் திருமண நிதியுதவித் திட்டம். | ரூ.5000/- காசோலை அல்லது கேட்பு வரைவோலை | விதவையரின் ஆண்டு வருமானம் ரூ.12000/-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.<br>18 வயது முதல் 30 வயதிற்குள். ஒரே ஒரு மகளின் திருமணத்திற்கு மட்டுமே உதவித் தொகை வழங்கப்படும் | 1050<br>ரூ.52.50 லட்சம் |



1999 மே 3]

| திட்டத்தின் பெயர் | உதவித் தொகையின் அளவு | உதவித்தொகை பெறுவதற்கான தகுதிகள் | பயனாளிகளின் எண்ணிக்கை மற்றும் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி (1999-2000) |
|---|---|---|---|
| | | வருமான வரம்பு இல்லை. | |
| 3. டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதியுதவித் திட்டம். | ரூ.7000/- (ரூ. 5000/- தேசிய சேமிப்புப் பத்திரம் மற்றும் ரூ 2000 காசோலை) | மணப்பெண்ணின் வயது 20-30 க்குள் இருத்தல் வேண்டும். | 196<br>ரூ. 13.72 இலட்சம் |
| 4. ஆதரவற்ற பெண்களுக்குத் திருமண உதவித் திட்டம். | ரூ. 5000/- காசோலை அல்லது கேட்பு வரைவோலை | ஆண்டு வருமானம் ரூ. 12000/-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். மணப்பெண்ணின் வயது 20-30-க்குள் இருத்தல் வேண்டும். | 100<br>ரூ. 5.00 இலட்சம் |
| 5. அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண நிதி உதவித் திட்டம். | (அ)ரூ.20000/- (ரூ. 10,000/- தேசிய சேமிப்பு பத்திரம் மற்றும் ரூ. 10,000/- காசோலை) | (அ)திருமணமான தேதியிலிருந்து 2 வருடங்களுக்குள் விண்ணப்பிக்க வேண்டும். மணமகள் 20-30 வயதிற்குள் இருக்க வேண்டும்.<br>வருமான வரம்பு ரூ.12000/-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும் என்றிருந்தது. ஆனால், 2-10-1997 முதல், நடைபெற்ற திருமணங்களில் மணமக்களில் ஒருவர் தாழ்த்தப்பட்ட அல்லது பழங்குடியினர் வகுப்பினராக இருப்பின் வருமான வரம்பு இல்லை. | 1090<br>ரூ.1.64 கோடி |

| திட்டத்தின் பெயர் | உதவித் தொகையின் அளவு | உதவித்தொகை பெறுவதற்கான தகுதிகள் | பயனாளிகளின் எண்ணிக்கை மற்றும் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி (1999-2000) |
|---|---|---|---|
| | ஆ) ரூ. 1000/- (ரூ. 7000/- தேசிய சேமிப்பு பத்திரம் மற்றும் ரூ. 3000/- காசோலை) | ஆ) 23-4-98 லிருந்து கலப்புத் திருமணம் செய்து கொள்ளும் அனைவருக்கும் வருமான வரம்பு இல்லை. | |

**2.7 டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதி உதவித் திட்டம்**

பெண்கள் கருவுற்ற காலங்களில், ஓய்வாக இருப்பதும், மிக அதிக வேலை செய்யாமல் இருப்பதும், அவர்கள் கருவில் சுமக்கும் குழந்தையின் நலனுக்காக மட்டுமின்றி, அவர்களின் உடல் நலம் மற்றும் பேறுகாலத்திற்கும் மிகவும் அவசியமாகிறது. எனினும், இச்சமூகத்தில் நிலவி வரும் பழக்க வழக்கம் காரணமாகக் குடும்பங்களில் பெண்களின் நலனுக்குக் கடைசிபட்ச முக்கியத்துவமே அளிக்கப்படுகிறது. மேலும், பல குடும்பங்களில் பெண்கள் வறுமையின் காரணமாக, அவர்களின் பேறுகால நாள் வரை ஓய்வின்றி உழைப்பதும், பொருளீட்டுவதும் அவசியமாகி வருகின்றது. இப்பெண்களின் நலனைக் கருத்திற்கொண்டு, அவர்கள் பேறுகாலத்தின்போது ஓய்வெடுக்க ஏதுவாகவும் அவர்கள் வேலைக்குச் செல்லாதிருக்கும் காலங்களில் ஏற்படும் பொருளாதார இழப்பை ஈடுகட்டவும், பேறு கால முடிவிற்கு முன்னால் 8-12 வாரங்களின் அப்பெண்கள் சத்துணவு பெறவும், ஓய்வெடுக்கவும் ஏதுவாக, அரசு நிதியுதவி மற்றும் சத்துணவு அளிக்கிறது. ஒவ்வொரு தாய்க்கும் மொத்தமாக ரூ 500/- நிதியுதவி மணியார்டர் மூலம் அனுப்பப்படுகிறது. 31-7-98 வரை மைய அரசின் தேசிய மகப்பேறு திட்டத்தின்கீழ் ரூ.300-ம் மாநில அரசின் மகப்பேறு திட்டத்தின்கீழ் ரூ. 200/-ம் சேர்த்து கருவுற்ற தாய்மார்களுக்கு வழங்கப்பட்டது. 1-8-98 முதல் தேசிய மகப்பேறு நலத்திட்டத்தின்கீழ் (தேசிய சமூக உதவித் திட்டம்) ரூ. 500/- ஒவ்வொரு கருவுற்ற தாய்க்கும் வழங்கப்படுகிறது.



**2.8 நிறுவனங்களின் மூலம் உதவி**

*1. சேவை இல்லங்கள்*

ஆதரவற்ற மற்றும் உதவிக்கு யாருமற்ற, எங்கும் வாழ முடியாத விதவைகளுக்கு தகுந்த நிறுவனப் பாதுகாப்பு அளிப்பது மிகவும் முக்கியமாகும். இவ்வகைப் பெண்கள் அவர்கள் வாழ்க்கையை மீண்டும் அமைத்துக்கொள்ளும் முகமாக அரசு சேவை இல்லங்களைத் துவக்கியுள்ளது. சமூக நலத் துறை 6 சேவை இல்லங்களை, தாம்பரம், கடலூர், சேலம், தஞ்சாவூர், திருநெல்வேலி மற்றும் காரைக்குடி ஆகிய இடங்களில் நடத்தி வருகிறது. இந்த இல்லங்களில், இப்பெண்களுக்கு உணவு, உறைவிடம் கல்வி மற்றும் தொழிற்கல்வி அளிக்கப்படுகின்றன. குழந்தையுடன் உள்ள இவ்வகைப் பெண்கள், அவர்களின் குழந்தைகளையும் இவ்வில்லங்களில் சேர்த்துக்கொள்ளவும், கல்வி பெறவும் வசதியுள்ளன.

தாம்பரம் மற்றும் கடலூர் சேவை இல்லங்களில் கலைப் பாடங்களைக் கொண்ட மேல்நிலை வகுப்புகளும், தஞ்சாவூர் சேவை இல்லத்தில், அறிவியல் பாடங்களில் மேல்நிலை வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. உணவுக்காக பெரியவர்களுக்கு மாதம் ஒன்றிற்கு ரூ. 210/-ம் சிறியவர்களுக்கு ரூ. 165/-ம் வழங்கப்படுகிறது. மேலும், பெரியவர்களுக்கு ரூ. 400/- மதிப்பிலும், சிறுவர்களுக்கு ரூ.100/- மதிப்பிலும் வருடத்திற்கு ஒருமுறை இலவச சீருடை வழங்கப்படுகிறது. மற்றும் ஒன்று முதல் 2ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு ரூ. 50/- வீதமும் 3 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு ரூ. 125/-வீதமும், 6 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவிகளுக்கு ரூ. 175/- வீதமும், 9 மற்றும் 10 வகுப்பு வரை பயிலும் மாணவிகளுக்கு ரூ. 300/-ம், +1 மற்றும் +2 மாணவிகளுக்கு ரூ. 600/- வீதமும் பாடநூல்கள் மற்றும் குறிப்பேடுகள் தமிழ்நாடு அரசின் பாடநூல் நிறுவனத்தில் வாங்குவதற்கு ஆண்டிற்கு ஒருமுறை நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகின்றது.

உடல் ஊனமுற்றோருக்காக தனியாக ஒரு பிரிவு தாம்பரம் சேவை இல்லத்தில் இயங்குகிறது.

தாம்பரம், கடலூர் மற்றும் தஞ்சாவூர் சேவை இல்லங்களில் தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து செயலகப்பிரிவு ஒன்றும் தனியாக இயங்கி வருகிறது. ஒவ்வொன்றிலும் ஒருவருட பயிற்சி 20 நபர்களுக்கு அளிக்கப்படுகிறது. பயிற்சிக்குப்பின் அவர்கள் அரசுத்தேர்வு எழுதலாம்.

செவிலியர், துணி மற்றும் வடிவமைப்பு, ஆய்வகத் தொழில் நுட்பப் பயிற்சி ஆகியன திருநெல்வேலி, காரைக்குடி மற்றும் தாம்பரம் ஆகிய சேவை இல்லங்களில் அளிக்கப்படுகின்றன. தஞ்சாவூரிலுள்ள சேவை இல்லத்தில் உள்ளவர்களுக்கு நவீனத் தொழில் நுட்பத்தில் ஈடுபடுத்தும் வகையில் கணிப்பொறி பயிற்சியளிக்கப்படுகிறது. 10 ஆம் வகுப்பு படித்து முடித்த பெண்கள் பல்நோக்கு சுகாதார பணியாளர் பயிற்சிக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். 1996 முதல் 1999 வரை 126 பெண்களுக்கு இப்பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 1999-2000 ஆம் ஆண்டில் சேவை இல்லங்களுக்காக ரூ.169.38 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2. பணிபுரியும் மகளிர் விடுதிகள்**

படித்த பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில் அதிகமான பெண்கள் சமுதாயத்தில் வேலை வாய்ப்பினை எதிர்நோக்கியுள்ளார்கள். வேலை கிடைத்திடும் பெண்கள் தங்கள் குடும்பத்தாரையும், ஊரையும்விட்டு பணிபுரிய வெளியூருக்குச் சென்றிட வேண்டியுள்ளது. அவர்களுக்குத் தங்கும் வசதி பிரச்சினையாக உள்ளது. பெரும்பான்மையான பெண்கள் சிறந்த தங்குமிடம் குறைந்த வாடகையிலும், வசதியானதாகவும், நல்ல சூழ்நிலையில் பாதுகாப்புடனும் எதிர்பார்க்கிறார்கள். பணிபுரியும் பெண்களுக்குச் சிறந்த தங்குமிடம் அளித்திடும் வகையில், தமிழ்நாட்டில் சென்னையில் 2-ம், கடலூர், மதுரை, புதுக்கோட்டை, தூத்துக்குடி, திருச்சி மற்றும் ஓசூர் ஆகிய இடங்களில் ஒவ்வொன்றுமாக, மொத்தம் 8 இடங்களில் அரசு மகளிர் விடுதிகளை ஆரம்பித்துள்ளது. மகளிரின் மாத வருமானம் பெருநகரப் பகுதிகளில் ரூ. 7500/-க்கு மிகாமலும், ஏனைய பகுதிகளில் ரூ. 7000/- க்கு மிகாமலும் இருந்திட வேண்டும். வாடகை, தண்ணீர், மின் கட்டணம், உணவு ஆகியவை உள்ளுறைவோரிடமிருந்து சரிசமமாக வசூல் செய்யப்படும். விடுதிக்காக கண்காணிப்பாளர் ஒருவர், சமையலர் இருவர், அலுவலக உதவியாளர் ஒருவர், இரவுக் காவலர் ஒருவர் மற்றும் சுகாதாரப் பணியாளர் ஒருவர் ஆகிய பணியாளர்களுக்கான ஊதியத்தை அரசு வழங்குகிறது.

**2.9 தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு அரசு உதவி**

வறுமைக் கோட்டிற்குகீழே வாழும் மக்களிடையே நேரிடையாகத் தொடர்பு கொண்டிருக்கும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை



இனங்கண்டு அவற்றை கீழ்க்கண்ட இரு பிரிவுகளாகப் பிரித்து ஆதரவு அளித்து வருகிறது:

**அ) பெண்களுக்காக நடத்தப்படும் சேவை இல்லங்கள்**

அரசு நிதி உதவியுடன் காந்தி கிராமத்தில் உள்ள கஸ்தூரிபாய் சேவிகாஸ்ரமத்திலும் சென்னையில் உள்ள ஸ்ரீ சேவா மந்திரிலும் இரண்டு சேவை இல்லங்கள் நடைபெற்று வருகின்றன.

**ஆ) பணிபுரியும் மகளிர் விடுதி கட்ட நிதியுதவி அளித்தல்**

தொண்டு நிறுவனங்கள், உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களால் கட்டப்படும், பணிபுரியும் மகளிர் விடுதிக்குக் கட்டடம் கட்டுவதற்கான மொத்தச் செலவில் 75% மத்திய அரசு மானியமாக வழங்குகிறது. மொத்த மதிப்பீட்டில் 15% அல்லது ரூ.35,000/- இவற்றில் எது குறைந்த தொகையோ அத்தொகை மானியமாக மாநில அரசால் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தை பயன்படுத்த விரும்பும் நிறுவனங்கள் கட்டடம் கட்ட சொந்தமாக நிலம் வைத்திருக்க வேண்டும். இந்நிறுவனங்கள் மாநகராட்சி/நகராட்சியின் முன்அனுமதி பெற்றிருக்க வேண்டும். இதே பணிக்காக பிற அரசிடமிருந்து உதவிகள் பெற்றிருத்தல் கூடாது. கட்டடம் கட்டப்படும் நிலத்தின் மதிப்பில் 50% மத்திய அரசால் மானியமாக அளிக்கப்படுகிறது. இதுவரையில் 63 பணிபுரியும் மகளிர் இல்லக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

**2.10 பெண்களுக்கான இதர திட்டங்கள்**

**1. வழிகாட்டி மையம்**

பெண்களின் நலனுக்காகவும், வளர்ச்சிக்காகவும் பல திட்டங்கள் செயல்பட்டு வந்தபோதிலும் பெண்களிடம் இத்திட்டங்களைப் பற்றிய விழிப்புணர்வு மிகவும் குறைவாகவே உள்ளது. பெண்களின் நலனுக்காக வழங்கப்படும் பல்வேறு நலத் திட்டங்களைப்பற்றி அவர்களுக்குத் தகவல் அளிப்பதற்காக ஒரு வழிகாட்டி மையம் புதிதாக தொடங்கப்பட்ட மாவட்ட சமூகநல அலுவலகங்கள் தவிர இதர மாவட்ட சமூக நல அலுவலகங்களில் செயல்பட்டு வருகிறது. புதிதாக தொடங்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள மாவட்ட சமூகநல அலுவலகங்களில் வழிகாட்டி மையம் தொடங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மையத்தின் தலைவராக இருக்கும் வழிகாட்டி அலுவலர் பெண்களுக்குத் தேவையான தகவல்களை

அளிப்பதற்கும் வங்கிக் கடன் விண்ணப்பங்களை வங்கிகளுக்குப் பரிசிலனைக்கு அனுப்பவும் உதவி புரிகிறார்.

1999-2000ஆம் ஆண்டிற்காக ரூ.49.96 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2. மகளிர் மன்றங்கள்**

சுய உதவிக் குழுவின் முக்கியத்துவம் உலக அளவில் உணரப்பட்டுள்ளது. கிராம அளவில் உள்ள சுய உதவிக் குழுக்கள் கிராம மகளிரை ஒருங்கிணைக்கப் பயன்படுவதோடு, மேலும் கூட்டு முயற்சியினால் கிடைக்கும் வளர்ச்சியினைப் பகிர்ந்துகொள்ளவும் பயன்படுகிறது. கிராம மகளிர், குழுவாகப் பணியாற்றும்போது அவர்களின் தன்னம்பிக்கை, விழிப்புணர்வு, சேவை மனப்பான்மை பன்மடங்காகப் பெருகுகிறது. தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திற்கும் 30 மகளிர் மன்றங்கள் என்ற அளவில் சுமார் 11,520 மகளிர் மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு மகளிர் மன்றமும் 25 முதல் 30 பெண் உறுப்பினர்களை உள்ளடக்கியது. உணவுகளைப் பதப்படுத்துவது, குழந்தை வளர்ப்பு, சுத்தம், சுற்றுப்புறச் சுகாதாரம், சத்துணவு ஆகியவற்றில் பயிற்சி அளிப்பதற்காக ஒவ்வொரு வருடமும், ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூ. 13,000/- மானியமாக வழங்கப்படுகிறது. ஒவ்வொரு வருடமும் மகளிர் மன்றங்களை ஊக்குவிக்கும்பொருட்டு சிறப்பாகச் செயல்படும் 75 மகளிர் மன்றங்களுக்குத் தலா ரூ.2000 வீதம் பரிசு வழங்கப்படுகிறது.

1999-2000 ஆம் ஆண்டிற்காக ரூ.51.21 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3. இலவச தையல் இயந்திரம் வழங்குதல்**

வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள் மற்றும் ஊனமுற்ற ஆண், பெண் இருபாலருக்கும் அவர்களின் வேலைவாய்ப்பிற்கும், சுயதொழில் செய்து வாழ்க்கை வாழ்வதற்கும் இலவசமாகத் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. 1998-99 ஆம் ஆண்டிற்கு அனுமதிக்கப்பட்ட 4000 தையல் இயந்திரங்களை வாங்குவது குறித்து நீதிமன்ற வழக்குக் காரணமாக தையல் இயந்திரங்கள் வழங்கப்படாமல் தடைப்பட்டது. தற்போது



தடையாணை நீக்கப்பட்டதன் காரணமாக தொடர்ந்து 4000 எண்ணிக்கை தையல் இயந்திரங்கள் இவ்வாண்டு வழங்கப்படும். 1999-2000 ஆம் ஆண்டில் 4000 தையல் இயந்திரங்கள் வழங்குவதற்கு ரூ. 76.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4. விதவைகளின் குழந்தைகளுக்குப் பாடநூல்கள் மற்றும் குறிப்பேடுகள் இலவசமாக வழங்குதல்**

இலவசப் பாட புத்தகங்கள் மற்றும் நோட்டுப் புத்தகங்கள் வழங்கும் இத்திட்டம் ரூ.12000/-க்கு மிகாமல் ஆண்டு வருமானம் பெறும் விதவைகளின் குழந்தைகள் பயன்பெறுவதற்காக ஏற்படுத்தப்பட்டது. 1996-97 ஆம் ஆண்டு முதல் அனைத்து ஏழை விதவையரின் குழந்தைகளுக்கும் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் வழங்கவும் உதவித் தொகை ரூ.50/- முதல் ரூ.600/- வரை உயர்த்தியும் வழங்கப்படுகிறது. 1999-2000 ஆண்டிற்கு ரூ.16.69 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனால் 10,000 குழந்தைகள் பயனடைவர்.

**2.11 தமிழ்நாடு சமூக நல வாரியம்**

தமிழ்நாடு சமூக நல வாரியம் 1954 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு தமிழ்நாட்டின் தொண்டு நிறுவனங்களின் வளர்ச்சியிலும், முன்னேற்றத்திலும் முக்கிய பங்கு வகிக்கிறது. வாரியத்தின் முக்கிய நோக்கங்கள் வருமாறு:—

1. சமூகநலத் தன்னார்வ அமைப்புகளை ஊக்குவித்து உயர்வடையச் செய்தல்.

2. தனியார் சேவை நிறுவனங்களின் பணித்திறனை வளர்ப்பதற்குத் தொழில்நுட்பம் மற்றும் நிதி உதவியளித்து அவற்றின் தரத்தினை உயர்த்துதல்.

3. அரசு உதவி பெறும் திட்டங்களை மதிப்பீடு செய்தல்.

தமிழ்நாடு சமூக நல வாரியம், மாநில அரசிடமிருந்தும் (நிர்வாக செலவினம்), மத்திய சமூகநல வாரியத்திடமிருந்தும் நிதி உதவி பெற்று, தொண்டு நிறுவனங்கள் மூலம், குழந்தைகள், ஊனமுற்றோர்கள் மற்றும் மகளிர் ஆகியோரது மேம்பாட்டிற்காகப் பணியாற்றுகிறது. சுமார் 50 சதவீதம் முதல் 90 சதவீதம் வரை தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி தரப்படுகிறது. எஞ்சிய செலவுத் தொகை தொண்டு நிறுவனங்களால் ஏற்கப்படுகிறது. சில சிறப்புத் திட்டங்களுக்கு 100 சதவீதம்கூட நிதியுதவி தரப்படுகிறது.

1499 தொண்டு நிறுவனங்களுக்கு ஏப்ரல் 1998 முதல் மார்ச் 1999 முடிய ரூ.363.37 இலட்சங்கள் நிதியுதவி செய்யப்பட்டுள்ளது. (மத்திய அரசு நிதி உதவி ரூ.298.33 இலட்சங்கள் + மாநில அரசு நிதியுதவி ரூ.65.04 இலட்சங்கள்).

மகளிர், குழந்தைகள் மற்றும் ஊனமுற்றோர் நலப்பணிகளைச் செய்யும் சேவை நிறுவனங்களுக்கு இயன்ற ஊக்கமளித்து வருகிறது. போதை மருந்து உட்கொள்ளுதல், மது அருந்துதல் போன்ற தீய பழக்கங்களை ஒழிக்கும் பணியிலும் மற்றும் தெருக் குழந்தைகள் மேம்பாடு, எயிட்ஸ் விழிப்புணர்ச்சி போன்ற சிறந்த பணிகளை செயலாற்றும் தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றுகிறது. பாலியல் தொழிலாளர்களின் குழந்தைகளைப் பராமரிக்கும் குழந்தைகள் காப்பகம் அமைப்பதற்கும் பெருமுயற்சி எடுத்துக்கொள்கிறது. பிற சமூகநலத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கும், பெண்களின் முன்னேற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் உதவக்கூடிய வகையில் அரசுத் துறைகள் மற்றும் சேவை நிறுவனங்களுக்கு இடையில் பாலமாக செயலாற்றுகிறது.

**2.12 தமிழக அரசின் நிதியுதவியுடன் சமூகநல வாரியத்தால் செயல்படுத்தப்படும் திட்டங்கள்**

*1. வேலை செய்யும் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களின் குழந்தைகள் காப்பகம்.*

வேலை செய்யும் மற்றும் நோய்வாய்ப்பட்ட ஏழை தாய்மார்களின் குழந்தைகள் பெரும்பாலும் புழுதியில், விளையாடிக்கொண்டும், பள்ளிக்குச் செல்லாமலும் இருக்கின்றனர். இதற்குக் காரணம், வீட்டைப் பாதுகாக்கவும், அக்குழந்தைகளுக்குப்பின் பிறந்துள்ள மழலையர்களைப் பார்த்துக்கொள்ள வேண்டிய சூழ்நிலைக்கு அவர்கள் தள்ளப்படுவதால், அவர்கள் பள்ளிக்குச் செல்வது என்பது இயலாததாகிறது. இதனைத் தடுக்கவும், இவர்கள் சமூக விரோதச் செயல்களில் ஈடுபடாமல் இருக்கவும், தேர்ந்தெடுக்கப்பட்ட சில மாவட்டங்களில், 17 குழந்தைகள் காப்பகங்களை 1993-94ஆம் ஆண்டிலும், 25 குழந்தைகள் காப்பகங்கள் 1995-96ஆம் ஆண்டிலும், 75 குழந்தைகள் காப்பகங்கள் 1996-97ஆம் ஆண்டிலும், 50 குழந்தைகள் காப்பகங்கள் 1997-98ஆம் ஆண்டிலும், 1998-99ஆம் நிதியாண்டில் 50 குழந்தைகள் காப்பகங்களும் தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மொத்தம் 217 குழந்தைகள் காப்பகங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அவற்றின் பராமரிப்பிற்கு 1999-2000 ஆம் நிதியாண்டிற்கு ரூ. 53.87 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



*2. தமிழ்நாடு சமூகநல வாரியத்தின்கீழ் கிராமப்புறங்களில் செயல்படும் தொண்டு நிறுவனங்களுக்குத் தமிழக அரசின் மானியம்*

தமிழ்நாடு சமூகநல வாரியத்தின்கீழ், கிராமப்புறங்களில் மக்கள் நலனுக்காகச் செயல்படும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு அடிப்படை வசதிக்காக (உபகரணங்கள், குழந்தைகளின் விளையாட்டு சாதனங்கள் போன்றவை) ஆண்டொன்றுக்கு ரூ.500/- முதல் ரூ.5000/- வரை 20 தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்குத் தமிழக அரசு மானியம் வழங்கி வருகிறது.

இந்த நிதியாண்டிற்கு ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*3. குடும்ப ஆலோசனை மையம்*

குடும்பங்களில் ஏற்படும் கருத்து வேறுபாடுகள் காரணமாக பிரிய நேரிடும் தம்பதிகளுக்கு ஆலோசனை வழங்கவும், தம்பதிகள் இருவரும் இணைந்து வாழ்வதற்கான வழிமுறைகளை எடுத்துரைக்கவும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் மூலம் தமிழ்நாடு சமூகநல வாரியம் ஓர் ஆலோசனை மையம் நடத்தி வருகிறது. இதற்கான செலவினம் தொடர்பாகத் தமிழக அரசு மானியம் வழங்குகிறது.

இதற்கென 1999-2000 ஆம் ஆண்டிற்கு ரூ. 79,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2.13 தமிழ்நாடு மாநிலப் பெண்கள் ஆணையம்**

"நாம் வேண்டும் பெண்ணுரிமை என்பது
ஆணைப் போலவே பெண்ணுக்கும் வீரம், வன்மை,
தோபம். ஆளுந்திறம் உண்டென்பதை ஆண் மக்கள்
ஒப்புக்கொள்ள வேண்டும் என்பதேயாகும்".

—தந்தை பெரியார்

பெண்களின் நலனைப் பாதுகாக்கும் நோக்கத்துடன், தமிழ்நாடு மாநில பெண்கள் ஆணையம் 1993-ல் தொடங்கப்பட்டது. இந் ஆணையத்தில், தலைவர் மற்றும் 9 உறுப்பினர்கள் உள்ளனர். பெண்க நல உரிமைகளைப் பாதுகாப்பதோடு, பெண்களுக்கானச் சட்டங்கள், திட்டங்கள் மற்றும் அவற்றைச் செயலாக்குவது குறித்து, அவ்வப்போது ஆய்வு நடத்துவதும், கொடுமைக்கும், இன்னலுக்கும் ஆளாகும்

பெண்களை நேரிடையாகச் சென்று கண்டறிந்து ஆய்வறிக்கை வழங்கி தக்க நடவடிக்கை எடுக்கவும் அரசுக்கு மேற்கண்டவை குறித்து ஆலோசனை வழங்குவதும் இந்த ஆணையத்தின் முக்கிய பொறுப்புகளாகும். 1999-2000ஆம் ஆண்டிற்கு இதற்கென ரூ. 2.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முக்கியமாக, பெண்கள் நலச் சட்டங்கள் குறித்து, கிராமப் பெண்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நோக்கோடு, கிராமப்புற மற்றும் நகர்ப்புற பெண்கள், கல்லூரிகள் மூலமாகச் சட்ட விழிப்புணர்ச்சி முகாம்கள் ஏற்படுத்த ஆணையம் திட்டமிட்டுள்ளது.

பெண்கள் உரிமைகளைப் பாதுகாக்க முக்கியமாக அரசு அலுவலர்களுக்கு, அதிலும் குறிப்பாக காவல் துறை அலுவலர்களுக்கு அதிக அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளன. ஏனென்றால், பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகள், அநீதிகள் அனைத்திற்கும் தக்க நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் காவல் துறையினருக்கே உள்ளது. ஒரு பெண் புகார் கொடுக்க, தானாகவே முன்வந்து காவல் நிலையம் சென்றால், அப்பெண்ணை வித்தியாச நோக்கோடு பார்க்கும் நிலை இன்னும் சமுதாயத்தில் நிலவி வருகிறது. இந்நிலை மாற்றப்பட வேண்டும். மாறிவரும் சமூகச் சூழ்நிலையில் காவல் துறையினர், பெண்கள் குறித்த மனப்பான்மையினை மாற்றிக்கொள்ளும் அவசியம் ஏற்பட்டுள்ளது. 1998-99ஆம் ஆண்டில் இனப்பாகுபாட்டினைக் களையும் விழிப்புணர்ச்சி முகாம்களை ஆணையம் மிகப்பெரிய அளவில் நடத்தியது. களப்பணியாளர்களுக்கு குறிப்பாகக் காவல் துறையினைச் சார்ந்த ஆய்வாளர்கள் மற்றும் உதவி ஆய்வாளர்களுக்குப் பெண்களைக் கண்ணியமாக நடத்த வேண்டிய அவசியத்தினை உணரவைக்கும் முன்னோடி பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இதுவரை சமூகநல அலுவலகத்தில் இயங்கி வந்த இவ்வாணையம் இனிவரும் காலங்களில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனக் கட்டடத்தில் இயங்கும். இவ்வாணையத்திற்குச் சட்டபூர்வ அதிகாரம் அளிக்கக் கூடிய சட்ட முன்வடிவு நடைபெறுகின்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில் அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

## 2.14 தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்

தமிழ்நாடு அரசு, ஏழை எளிய பெண்களின் மேம்பாட்டிற்கென 1983 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் "தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்" என்ற நிறுவனத்தை ஏற்படுத்தியது. இந்த நிறுவனத்திற்கென



ரூ.1.00 கோடி அங்கீகரிக்கப்பட்டு, இதில் ரூ.40.00 இலட்சம் மாநில அரசும் ரூ.38.42 இலட்சம் மத்திய அரசும் பங்குத் தொகையாக வழங்கியுள்ளன.

*முந்தைய ஆண்டுகளின் சாதனை*

கிராமப்புற ஏழை எளிய மகளிர் மேம்பாட்டுக்கென பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியுதவி (ஐஃபாட்) மற்றும் மாநில நிதியுதவியுடன் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம் செயற்படுத்தப்பட்டன. 1997-98 ஆம் ஆண்டுவரை பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்ட திட்டத்தின்கீழ் 1,20,960 பெண்கள் மற்றும் மாநில நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்ட தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 92,473 பெண்கள் ஆக மொத்தம் 2,13,433 கிராமப்புற பெண்கள் 10,384 மகளிர் சுய உதவிக்குழுக்களில் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு பயனடைந்துள்ளனர். இக்குழுக்களின் சேமிப்புத் தொகை ரூ. 13.00 கோடியாகும். இதைத் தவிர மேலும் 70 பெண்கள் இந்நிறுவனத்தின் மற்ற திட்டங்கள் மூலம் பயனடைந்தனர்.

1998-99 ஆம் ஆண்டில் "தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம்" (மகளிர் திட்டம்)· முதற்கட்டமாக செயல்படுத்தப்பட்ட 14 மாவட்டங்களுடன் மேலும் 7 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது. இந்தத் திட்டத்தின்கீழ் 21 மாவட்டங்களில் கூடுதலாக 1,01,513 மகளிர் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு பயன்பெற்றுள்ளனர். ஐஃபாட் திட்டத்தின்கீழ் பயனடைந்த 1,20,960 மகளிரும் இத்திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து இத்திட்டத்தின்கீழ் பயனடைந்தோர் எண்ணிக்கை 2,22,473 ஆக உயர்ந்துள்ளது.

ஆக 1998-99 ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 16,368 மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு 3,14,946 கிராமப்புற மகளிர் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு பயனடைந்துள்ளனர். இவர்களின் சேமிப்புத் தொகை 31-3-1999 முடிய ரூ. 22.00 கோடியாகும்.

மேலும், "தொழிற் பயிற்சி" திட்டத்தின்கீழ் 70 மகளிரும் தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 38 மகளிரும் பயன் பெற்றுள்ளனர்.

மகளிர் பொழுதுபோக்கு அவசியத்தை கருத்திற்கொண்டு முதற் கட்டமாக 50 மகளிர் பொழுதுபோக்கு மையங்கள் தொடங்கப்பட்டு இயங்கி வருகின்றன.

1999 மார்ச் மாதம் வரையிலான காலத்திற்குத் திட்ட வாரியான சாதனை விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

## அட்டவணை-1

### திட்ட வாரியான முன்னேற்ற விவரம் 1998-99

| வ.எண் | திட்டம் | அலகு | செயல் இலக்கு பயன் பெற்றவர்கள் | நிதி(ரூ. இலட்சத்தில்) அரசு மானியம் மு.ம./தி.ம. | மொத்தம் செலவு விவரம் |
|---|---|---|---|---|---|
| 1. | தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம் (பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதி உதவியுடன்) | | 120960 | - | 1270.50# |
| 2. | தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம் (மாநில நிதி உதவியுடன்) | | 193986 | 800.00 | 401.19 |
| 3. | தொழில் பயிற்சித் திட்டங்கள் | | 70 | 15.00 | 7.90 |
| 4. | தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் | | 38 | 2.00 | 1.59 |
| 5. | மகளிர் பொழுது போக்கு மையங்கள் | 50 மையங்கள் | - | 0.53 | 0.53 |
| | மொத்தம் | 50 | 315054 | 817.53 | 411.21 |

#1999 மார்ச் மாதம் வரை செலவு ஈடு செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட கணக்கு. இது மொத்தத்தில் சேர்க்கப்படவில்லை.

**1999-2000ஆம் ஆண்டிற்கான திட்டம்**

1. மகளிர் மேம்பாட்டுத் திட்டம்

1999-2000ஆம் ஆண்டில் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வரும் 21 மாவட்டங்களுடன் மேலும் 7 மாவட்டங்களில் மகளிர் மேம்பாட்டுத்



திட்டம் விரிவுபடுத்தி செயல்படுத்தப்பட உள்ளது. இந்தத் திட்டம் செயல்படுத்தப்படவுள்ள ஏழு புதிய மாவட்டங்கள் நாகப்பட்டினம், தஞ்சாவூர், பெரம்பலூர், காஞ்சிபுரம், கன்னியாகுமரி, திண்டுக்கல் மற்றும் கோயம்புத்தூர் ஆகியவை ஆகும். (சென்னை தவிர்த்து அனைத்து மாவட்டங்களும்).

28 மாவட்டங்களில் உள்ள கிராமப்புற பெண்கள் சுய உதவி குழுக்களின் உறுப்பினர்களாகத் தொடர்ந்து சேர்க்கப்பட்டு தேவையான பயிற்சி அளிப்பதுடன் அவர்கள் மேம்பாட்டிற்காக குழுக்களின் தற்போதைய சேமிப்பான ரூ.22 கோடி சேமிப்பினை ஊக்குவித்து சுழற்சி நிதிப் பெருக்கத்திற்கு வழி வகுக்கப்படும்.

பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியுதவியுடன் செயல்படுத்தப் பட்ட தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம் முடிவுற்றுள்ளதால் அம்மாவட்டங்கள் மாநில நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டத்துடன் இணைக்கப்பட்டு விட்டது. எனினும், இத்திட்டத்தின் விடுபட்ட செயல்பாடுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வெளிப்புறக் கடன் வசதிகள் பெற வங்கிகளின் உதவியும் திரட்டப்படும். இதுகுறித்து ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கி (நபார்ட்) மற்றும் மாநில அளவிலான வங்கிகளின் கூட்டமைப்புடன் தொடர்பு கொள்ளப்பட்டு வருகிறது.

1999-2000ஆம் ஆண்டிற்கு மகளிர் மேம்பாட்டுத் திட்டத்திற்கென அரசு ரூ.12.00 கோடி நிதி ஒதுக்கியுள்ளது

சுய உதவி கொள்கையைத் தொடர்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். கடன் பெற விருப்பமுள்ள தகுதியான பெண்களுக்குக் கடன் வசதி பெற்றுத் தருதலும், கடனைத் திரும்ப வசூலிப்பதும் இத்திட்டத்தில் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். தேசிய வங்கி மற்றும் வணிக வங்கிகளுடன் சேர்ந்து இத்திட்டத்தைச் செயலாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் குறிப்பிடப்பட்ட இலக்கினை அடைதலும் தரமான செயற்பாட்டை உறுதி செய்வதுமே குறிக்கோளாகும். இந்த சுய உதவிக்குழுக்கள் மூலம் கிராமப்புற குடும்பங்கள் பொருளாதார மற்றும் சமூக மேம்பாடு அடைதலும் அதிக வட்டிக்குக் கடன் கொடுப்போரைச் சார்ந்த நிலையைத் தவிர்ப்பதுவும் உறுதி செய்யப்படும். தங்களுக்குத் தாங்களே உதவி செய்து கொள்வதன்மூலம் ஏழை எளிய பெண்கள் சீரான

[1999 மே 3

வாழ்க்கையை நடத்த கற்றுக்கொள்வர். இந்த அடிப்படைத் திறமையை வளர்த்துக் கொள்வதன்மூலம் பெண்கள் தங்களுடைய சமூக நிலையை உறுதியாக உயர்த்திக்கொள்ள முடிகிறது. மேலும், எந்த நிலையிலும் தங்களுடைய வாழ்க்கையை உறுதிப்படுத்திக்கொள்ளவும் பொருளாதார வசதியை மேம்படுத்திக்கொள்ளவும் ஏதுவாகி உள்ளது.

1998-99 ஆம் ஆண்டு முதல் "முற்றம்" என்ற மாதாந்திர இதழ் வெளியிடப்படுகிறது. இதன்மூலம் ஏழை எளிய பெண்கள் குழுக்களின் அனுபவங்களையும், கருத்துக்களையும் பரிமாறிக்கொள்ள முடிகிறது. செய்திப்படங்கள் மற்றும் ஒலி நாடாக்கள்மூலம் செய்திகளைப் பரப்புவதுடன் இந்த மாத இதழை கிராமப்புற பெண்களின் தேவையைக் கருத்திற்கொண்டு செம்மையாக நடத்திடவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2. மகளிர் பொழுதுபோக்கு மையங்கள்

1997-98 ஆம் ஆண்டில் 50 மகளிர் பொழுதுபோக்கு மையங்கள் ஏற்படுத்தப்பட்டு, இந்த மையங்களின் செயல்பாடுகளும் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

1999-2000 ஆம் ஆண்டில் மாநில அரசு 100 புதிய மகளிர் பொழுதுபோக்கு மையங்களை ஏற்படுத்தவும் இயங்கி வரும் 50 மையங்களின் பராமரிப்புச் செலவிற்காகவும் பகுதி-2 திட்டங்களின்கீழ் ரூ.4.75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

பொதுவாக, வளர்ச்சித் திட்டங்கள் அனைத்தும் ஊட்டச்சத்து, உடல் நலக்கல்வி, குடிநீர் வழங்கல், வருவாய் பெருக்குதல் போன்ற தேவைகளின் அடிப்படையில் திட்டம் தீட்டப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. பெண்களின் பொழுதுபோக்கு தேவையையும் கருத்திற்கொண்டு நலத் திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டுமென்ற குறிக்கோளுடன், மகளிர் பொழுதுபோக்கு மையங்கள் அமைக்கப்பட்டு பயனுள்ள வகையில் இயங்கி வருகின்றன. இந்த மையங்கள் மகளிர் வளர்ச்சிக்கான செய்திகளைப பரிமாற்றம் செய்துகொள்ளும் மையங்களாகவும் அமையும்.

3. தொழிற் பயிற்சி திட்டங்கள்

ஏழை எளிய பெண்களுக்கு வேலைவாய்ப்பை அளிக்கக்கூடிய இத்தொழிற்பயிற்சித் திட்டத்திலே கடந்த 3 ஆண்டுகளில் 1,650



1999 மே 3]

பெண்கள் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தினை ஆய்வு செய்திடவும் தொடர்ந்து இத்திட்டத்தினைக் கண்காணிக்க ஏதுவாக ஒரு புதிய ஊர்தி வாங்கவும் 1998-99 ஆம் ஆண்டில் பகுதி-2 திட்டங்களின்கீழ் மாநில அரசு ரூ.15.00 இலட்சம் ஒதுக்கியது.

இந்நிறுவனம், 70 பெண்கள் பயன்பெறும் வகையில் மூன்று குழுக்களாகப் பிரித்து செவிலியர் உதவியாளருக்கான பயிற்சியை அரசு சாரா தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலமாக நடத்தி ரூ.3.78 இலட்சம் அனுமதித்தது.

இந்நிறுவனம் கடந்த மூன்று ஆண்டுகளில் தொழிற்பயிற்சித் திட்டத்தின்கீழ் ஏற்படுத்தப்பட்ட வேலைவாய்ப்பினையும் திட்டச் செயல்பாட்டினையும், ஆய்வு செய்திட ஒப்பந்தப்புள்ளிமூலம் தனியார் நிறுவனம் தேர்வு செய்யப்பட்டு ஆய்வுப் பணி முடியும் நிலையில் உள்ளது.

தொழிற்பயிற்சித் திட்டச் செயலாக்கத்திற்கென நடப்பு ஆண்டில் ரூ.4.00 இலட்சத்தில் ஒரு புதிய ஊர்தியை இந்நிறுவனம் வாங்கியுள்ளது.

1999-2000ஆம் ஆண்டிற்குத் தொழிற்பயிற்சித் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தும் அரசு சாரா தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்/பயிற்சி நிறுவனங்கள்மூலம் நடத்திட பகுதி-2 திட்டங்களின்கீழ் தமிழக அரசு ரூ.7.50 இலட்சங்கள் நிதி ஒதுக்கியுள்ளது. கடந்த ஆண்டுகளின் செயல்பாடுகள் அடிப்படையில் மாற்றம் செய்யப்பட்டு இத்திட்டம் செயலாக்கப்படவுள்ளது. மத்திய அரசின் நொராட்/ஸ்டெப் திட்டங்களின் நிதி மற்றும் மாநில நிதி ஒதுக்கீட்டில் உள்ள சேமிப்பு தொகையையும் இத்திட்டத்தின் செயல்பாட்டிற்குப் பயன்படுத்தப்படும்.

4. மகளிர் தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டம்

1998-99ஆம் ஆண்டில் மகளிர் தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டத்தில், பகுதி-2 திட்டங்களின்கீழ், முதற்கட்டமாக 50 பெண்கள் தொழில் முனைவோருக்கு (25 மகளிர் சென்னையிலும், 25 மகளிர் மதுரையிலும்) பயிற்சி அளித்திட மாநில அரசு ரூ.2.00 இலட்சம் ஒதுக்கியது.

இந்தப் பயிற்சித் திட்டத்தில் தகுதி உள்ள 38 மகளிர் தேர்வு செய்யப்பட்டு, சென்னை மற்றும் மதுரையில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

1999-2000 ஆம் ஆண்டில் மகளிர் தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 100 மகளிருக்குப் பயிற்சி அளித்திட மாநில அரசு ரூ.4.00 இலட்சம் ஒதுக்கியுள்ளது.

## அட்டவணை—II

### திட்ட விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன

### திட்டம் 1999-2000

| வ. எண் | திட்டம் | இலக்கு | நிதி ஒதுக்கீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம் (விரிவு)(மகளிர் திட்டம்) | (இலக்கு நிர்ணயிக்கப் படவில்லை). 28 மாவட்டங்களில் 3 இலட்சம் மகளிரை குழுக்களில் சேர்க்க திட்டமிடப்பட்டுள்ளது.<br>சுய உதவிக் குழுக்களில் பெண் உறுப்பினர்கள் சேர்த்தல் மற்றும் குழுக்கள் மேம்பாடு. | 1200.00 |
| 2. | தொழில் பயிற்சித் திட்டங்கள் | 100 மகளிர் | 7.50 |
| 3. | தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் | 100 மகளிர் | 4.00 |
| 4. | மகளிர் பொழுதுபோக்கு மையங்கள் | புதியவை: 100 மையங்கள்<br>இயங்குபவை : 50 மையங்கள் | 4.75 |
| | மொத்தம் | | 1216.25 |

## குழந்தைகள் நலம்

2.15. குழந்தைகள் உடல் நலத்தையும், சத்துணவு பெறும் நிலைமையையும், நன்கு பாதுகாத்து, அவர்களின் ஆற்றலை வளர்க்கும்



நோக்குடன், தமிழ்நாடு அரசு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது. நோயாலும் சத்துணவு பற்றாக்குறையாலும் ஏற்படும் இளம் வயது இறப்பினைக் குறைக்கும் வகையில் நமது மாநிலத்தில் ஒருங்கிணைந்த சத்துணவும், உடல் நலம் பேணும் வசதிகளும் வழங்கும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டங்களின்கீழ் குழந்தையின் உடல் வளர்ச்சியை அவ்வப்போது கவனித்தல், அவசியமாயின் அருகிலுள்ள மருத்துவமனைகளுக்கு அனுப்பி பரிசோதனை செய்தல், இணை சத்துணவு, முன்பருவக் கல்வி வழங்குதல் ஆகிய பணிகள் அடங்கும். சத்துணவு, மருத்துவம், முன்பருவக் கல்வி வழங்குதல் ஆகியவை மறுக்கப்பட்ட நிலையில் வாழும் குழந்தைகளுக்கு, இவற்றை முழுமையாக வழங்க முயற்சிகள் எடுப்பதற்கு அரசு தீர்மானித்து உள்ளது.

### 2.16 புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்

1. தமிழ்நாட்டில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் ஊரகப் பகுதிகளிலுள்ள குழந்தை நல மையங்களில் 2 வயது முதல் 5 வயதுக்கு உட்பட்ட பள்ளி செல்லா குழந்தைகளுக்கும் 5 வயது முதல் 9 வயது வரை உள்ள ஆரம்பப் பள்ளிக் குழந்தைகளுக்கும் 1-7-1982 முதல் கொண்டுவரப்பட்டது. இத்திட்டம் 15-9-1982 முதல் நகர்ப்புற சத்துணவு மையங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. பின்னர் 10 முதல் 15 வயது வரையிலான (6 வது வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும்) பள்ளி மாணவர்களுக்கும் 15-9-1984 முதல் இத்திட்டம் நீட்டிக்கப்பட்டது. முதியோர் ஓய்வூதியம் பெறுபவர்களும் இத்திட்டத்தின் பயனாளிகளாகச் சேர்க்கப்பட்டனர். தற்போது 47 நகராட்சிகளிலுள்ள 720 குழந்தை நல மையங்கள் தவிர மாநிலத்தில் ஏனைய குழந்தை நல மையங்கள் (2 முதல் 5 வயது குழந்தைகளுக்கானவை) யாவும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

2. இரண்டு முதல் ஐந்து வயதுள்ள பள்ளி செல்லா குழந்தைகளுக்கு சத்துணவுடன் முன்பருவக் கல்வியளிப்பதும், 1 முதல் 10-வது வகுப்பு வரை பயிலும் பள்ளிக் குழந்தைகளுக்கு தினமும் ஒருவேளை சத்துணவும் அளிப்பதன்மூலம், ஊட்டச்சத்துக் குறையை அகற்றுவதும், குழந்தைகளின் படிப்புத் திறன் விகிதத்தைப் பெருக்குவதும், பள்ளி செல்லும் குழந்தைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதும், இத்திட்டத்தின் நோக்கமாகும். சத்துணவிற்கான உணவுப் பொருட்கள்

(அரிசி, பருப்பு, எண்ணெய்) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தாலும், முட்டை திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி முறையிலும் தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களாலும் இரும்புச்சத்து செறிவூட்டப்பட்ட உப்பு, தமிழ்நாடு உப்பு நிறுவனத்தாலும் வழங்கப்படுகின்றன. காய்கறி (9 பைசா), தாளிதம் (3 பைசா), விறகு (5.5 பைசா), உப்பு (0.5 பைசா) ஆகியவற்றிற்காக நாள் ஒன்றுக்கு ஒரு பயனாளிக்கு 18 பைசா வீதம் மானியம் அளிக்கப்படுகிறது. ஒரு பயனாளிக்கு பின்வருமாறு உணவுப் பொருட்கள் கணக்கிடப்பட்டு தினம் வழங்கப்படுகிறது. [1999 மே 3

| வ எண். | உணவுப் பொருள் | 2 முதல் 4 வயது குழந்தைகள் (கிராம்) | 5 முதல் 9 வயது மாணவர்கள் (கிராம்) | 10 முதல் 15 வயது மாணவர்கள் (கிராம்) | முதியோர் (கிராம்) |
|---|---|---|---|---|---|
| 1 | அரிசி | 80 | 100 | 120 | 200 |
| 2 | பருப்பு | 10 | 15 | 15 | 15 |
| 3 | எண்ணெய் | 2 | 1 | 1 | 1 |

3. ஏற்கெனவே ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கட்டுப்பாட்டில் இயங்கி வந்த பள்ளி சத்துணவு மையங்களும், 1992 மற்றும் 1994 ஆம் ஆண்டுகளில் சமூகநல இயக்குநர் கட்டுப்பாட்டிற்கு மாற்றப்பட்டு இயங்கி வந்தன. அதன்பின் 1-10-1997 முதல் இவை முறையே ஊரக வளர்ச்சி இயக்குநர் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையரது கட்டுப்பாட்டிற்கு மாற்றப்பட்டுள்ளன. சென்னை மாநகரிலுள்ள பள்ளி மையங்கள் சென்னை மாநகராட்சியின் கீழ் தொடர்ந்து இயங்குகின்றன. குழந்தை நல மையங்கள் மட்டும் சமூக நல இயக்குநர் மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்ட ஒருங்கிணைப்பாளரது கட்டுப்பாட்டில் தொடர்ந்து செயல்படுகின்றன.

4. இத்திட்டத்தில் 3-6-1989 முதல் சத்துணவுடன் வேக வைத்த முட்டை ஒன்று பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு வந்தது. தற்போது 1-6-1998 முதல் வாரத்திற்கு ஒருமுறை வேக வைத்த முட்டை குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. எல்லா மாவட்டங்களிலும் முட்டை ஒப்பந்தக்காரர்கள் கொடுக்கும்



1999 மே 3]

முட்டைகள் தரம் வாய்ந்தவைதானா என்பதை தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகம் (டாப்கோ) மேற்பார்வையிடுகிறது. சத்துணவுத் திட்டம் மற்றும் முட்டை வழங்கும் திட்டம் சரியாக நடைபெறுகிறதா என்பதைக் கண்காணிக்க மாவட்ட அளவிலும், வட்டார அளவிலும் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

5. மேலும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் நினைவு மகப்பேறு உதவித் திட்டத்தின்கீழ் பயனடையும் கர்ப்பிணிப் பெண்களும் பயனடைகிறார்கள். முதியோர் உதவித் தொகை பெறும் பயனாளிகளும் இத்திட்டத்தின்மூலம் பயன் பெறுகிறார்கள்.

6. ஒவ்வொரு திட்டத்தின் கீழும் சத்துணவு மையங்களின் எண்ணிக்கை மற்றும் பயன் அடைந்தோர் எண்ணிக்கை பின்வருமாறு:-

I குழந்தை நலச் சத்துணவு மையங்கள்

| வ. எண் | திட்டம் | மையங்களின் எண்ணிக்கை | பயனடைபவர்களின் எண்ணிக்கை: குழந்தைகள் | தாய்மார்கள் மற்றும் முதியோர் உதவித் தொகை பெறுவோர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் | 10477 | 313122 | 135790 | 448912 |
| 2 | தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம் | 18526 | 581623 | 80455 | 662078 |
| 3 | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் | 720 | 29868 | 3680 முஉதொ. | 33548 |
| | மொத்தம் (குழந்தை நல மையங்கள்) | 29723 | 924613 | 219925 | 1144538 |

II பள்ளி சத்துணவு மையங்கள்

| வ. எண் | திட்டம் | மையங்களின் எண்ணிக்கை | பயனடைபவர்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|
| | | | குழந்தைகள் | மொத்தம் |
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு மையங்கள் (ஊரக பகுதிகள்) | 37748 | 6002690 | 6002690 |
| 2 | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு மையங்கள் (நகர்ப்புறம்) | 2059 | 461267 | 461267 |
| | பள்ளி மையங்கள் மொத்தம் | **39807** | **6463957** | **6463957** |

**2.17 இந்திய அரசின் ஆரம்பப் பள்ளி மாணவர்களுக்கான சத்துணவுத் திட்டம்**

இத்திட்டம் 15-8-1995 முதல் இந்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழுள்ள கல்வித் துறையின் மூலமாக தமிழகத்தில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கு மத்திய அரசாங்கம் ஆரம்பப் பள்ளி மாணவ மாணவிகளுக்கு இலவசமாக 1998-99 ஆம் வருடத்திற்கு 1.18 இலட்சம் டன் அரிசி ஒதுக்கீடு செய்தது.

**2.18 ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்**

(அ) சமுதாயத்தில் நலிவுற்ற குழந்தைகள், கருவுற்ற மகளிர் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்துக் குறைவு மற்றும் அது தொடர்பான நோய்களைத் தடுக்க ஒருங்கிணைந்த முறையில் வடிவமைக்கப்பட்ட ஒரு திட்டமே ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் ஆகும். இத்திட்டத்தின் பணிகள் கருவில் உள்ள குழந்தையிலிருந்து தொடங்கி 6 வயது ஆகும் வரை அக்குழந்தைக்குத் தேவையான சத்துணவு, சுகாதாரம் மற்றும் உடல், மன வளர்ச்சிக்கான தேவைகளையும் கருத்தாகக் கவனிப்பதே ஆகும். இத்திட்டத்தின்மூலம் வழங்கப்படும் முக்கிய பயன்கள் இணை ஊட்டச்சத்து, முறைசாரா முன்பருவக் கல்வி, மருத்துவ சோதனை, நோய்த் தடுப்பு, ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக் கல்வி மற்றும் மேல் மருத்துவ பரிசோதனைக்கு வழி செய்தல் ஆகும்.



(ஆ) ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் முதன் முதலில் 1975-76 ஆம் ஆண்டு சென்னை நகரத்திலும், தளி மற்றும் நிலக்கோட்டை வட்டாரங்களிலும் தொடங்கப்பட்டது. முதன்முதலில் சோதனை அடிப்படையில் 3 திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இத்திட்டம் மேலும் விரிவாக்கப்பட்டு 67 திட்டங்கள் கிராமப்புறங்களிலும், 44 திட்டங்கள் நகர்ப்புறங்களிலும் மற்றும் 2 திட்டங்கள் மலைப்புற பகுதிகளிலும் ஆக மொத்தம் தமிழ்நாட்டில் தற்பொழுது 113 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் 47 திட்டங்கள் சுவீடன் நாட்டு (சிடா) நிதி உதவியுடன் செயல்பட்டு வருகின்றன.

(இ) ஒவ்வோர் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டப் பகுதியும் ஒரு இலட்சம் மக்கள் தொகையை உள்ளடக்கியதாகும். ஒவ்வொரு திட்டப் பகுதியும் ஒரு குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலரின் தலைமையில் ஒரு மருத்துவ அலுவலர், நான்கு மேற்பார்வையாளர்கள் மற்றும் 4 துணை மருத்துவச் செவிலியர்கள் உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கிராமம் மற்றும் மலைப்புற பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலம் சுகாதாரப் பணிகள் கவனிக்கப்படுகின்றன. ஒவ்வொரு திட்டப் பகுதியிலும் அங்கன்வாடிகள் என்று அழைக்கப்படும் 100 குழந்தைகள் நல மையங்கள் செயல்படுகின்றன.

(ஈ) குழந்தைகள் நல மையங்கள் மூலம்தான் இத்திட்டப் பணிகள் கவனிக்கப்படுகின்றன. சுமார் 1,000 மக்கள் தொகை உள்ள பகுதிக்கு ஒரு குழந்தை நல மையம் என்ற விகிதத்தில் மையங்கள் அமைக்கப்படுகின்றன. ஒவ்வொரு மையத்திலும் 6 மாதம் முதல் 2 வயதுக்குட்பட்ட குழந்தைகள் 30 பேரும், 2 முதல் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் 40 பேரும், கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் 30 பேரும் ஆக மொத்தம் 100 நபர்கள் பயன்பெறுவர்.

| | |
|---|---|
| மொத்த ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டங்கள் .. | 113 |
| நகர்ப்புற பகுதி .. | 44 |
| கிராமப்புற பகுதி .. | 67 |
| மலைப்புற பகுதி .. | 2 |
| மையங்களின் எண்ணிக்கை .. | 10477 |

[1999 மே 3

**2.19 சுவீடன் பன்னாட்டு வளர்ச்சி ஆணைக் குழு நிதி உதவியுடன் நடத்தப்படும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் (சிடா)**

சுவீடன் நாட்டு நிதி உதவியுடன் இத்திட்டம் காஞ்சிபுரம், திருவள்ளூர், புதுக்கோட்டை மற்றும் நீலகிரி மாவட்டங்களில் தற்போது செயல்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் முதல் கட்டம் 1989-ல் தொடங்கப்பட்டது. இரண்டாவது கட்டம் 1-7-1993 முதல் தொடங்கப்பட்டு 47 ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டங்களில் செயல்பட்டுக் கொண்டு வருகிறது. சுவீடன் நாட்டு நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் இந்த இரண்டாவது கட்டத் திட்டம் 30-6-1999-ல் முடிவடைய உள்ளது.

சிடா திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டங்களுக்கு அளிக்கப்படும் பயிற்சித் தவிர, கூடுதலான பயிற்சித் திட்டங்களும், முன்பருவக் கல்வியில் கூடுதல் உபகரணங்களும், மையக் கட்டடம் கட்ட/பழுது பார்க்கக் கூடுதல் நிதியுதவியுடன் கூடுதல் மருந்துப் பொருட்களும் வழங்கப்படுகின்றன. ஊனத்தினைக் கண்டறிதல் மற்றும் தடுத்தல் பயிற்சி போன்ற கூடுதல் பணிகளும் நிறைவேற்றப்படுகின்றன.

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மற்றும் சிடா திட்டத்தின்கீழ் 6 மாதம் முதல் 2 வயதிற்குட்பட்ட 1.5 இலட்சம் குழந்தைகளும், 2 வயது முதல் 5 வயதிற்குட்பட்ட 3.1 இலட்சம் குழந்தைகளும், 1.3 இலட்சம் கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் பயனடைந்து வருகின்றனர்.

சிடா திட்டத்தில் இரண்டாவது கட்டமாக ஒதுக்கப்பட்ட ரூ. 45.20 கோடி ரூபாயில் மீதமுள்ள ரூ.173.305 இலட்சத்தில் ரூ.100.00 இலட்சம் சிடா மதிப்பீடு செலவிற்கு ஒதுக்கிவிட்டு எஞ்சியுள்ள ரூ. 73.305 இலட்சத்தை கொண்டு கீழ்க்காணும் திட்டங்கள் 30-6-1999-க்குள் நிறைவேற்றி முடிக்கப்படவுள்ளன.

1. சுகாதாரம் (மருந்துகள் வாங்குவதற்கு)
2. வளர் இளம் பெண்களுக்கு பயிற்சி
3. பெண்கள் வாழ்க்கைக் கல்வித் திட்டம்



1999 மே 3]

4. ஊதியம் (இயக்ககத்தில் 21 பணியிடங்கள் மற்றும் ஊட்டியில் 2 பணியிடங்கள்)
5. முன்பருவக் கல்வி (விலை குறைந்த சாதனங்கள் வழங்குதல்)

**2.20 வளர் இளம் பெண்கள் முகாம்**

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பகுதிகளில் அருகாமையிலுள்ள இரு கிராமங்களைச் சார்ந்த 50 வளர் இளம் பெண்களை ஒன்று சேர்த்து இருநாட்கள் முகாம் நடத்தப்படுகின்றது. இளம் பெண்கள் வாழ்க்கையில் அத்தியாவசியமான குடும்ப நலக் கல்வி சம்பந்தமான விஷயங்கள் அனைத்தும் விளையாட்டு, பாட்டுகள், பயிற்சிகள் மூலமாகவே முகாம்களில் நடத்தப்பட்டு வருகின்றன. பெண் மகப்பேறு மருத்துவர் ஒருவருடன் நேருக்கு நேர் நிகழ்ச்சி நடத்தப்படுவது இம்முகாமின் சிறப்பு அம்சமாக விளங்குகின்றது. இச்சந்தர்ப்பத்தின் மூலமாக இளம் பெண்கள் இப்பருவத்தில் உடல், மன ரீதியாக ஏற்படும் மாற்றங்கள் குறித்தான விஷயங்களை மகப்பேறு மருத்துவரிடம் நேரிடையாகக் கேட்க வாய்ப்பு அளிக்கப்படுகின்றது. குடும்பத்தில் உள்ள உறுப்பினர்களிடமோ அல்லது சமுதாயத்தினரிடமோ கேட்க இயலாத விளக்கங்கள் குறித்துத் தெளிவு பெறுவதோடு, சில முக்கியமான தனிப்பட்ட பிரச்சினைகள் மீதான மூட நம்பிக்கைகளை நீக்குவதற்கும் இம்முகாம் வாய்ப்பு ஏற்படுத்தித் தருகின்றது. இது தவிர, உடல் ஆரோக்கியம், சத்துணவு, தாய் சேய் பராமரிப்பு (மற்றும்) சட்டம் ஆகியவைகள் குறித்தும் விளக்கங்கள் அளிக்கப்படுகின்றன.

முகாமில் வழக்கறிஞர் ஒருவருடன் நேருக்கு நேர் நிகழ்ச்சி நடத்தப்படுகின்றது. பெண்கள் உரிமைகள் குறித்தான சிறுநாடகம் ஒன்று ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட பணியாளர்களால் நடத்தப்பட்டு, அந்த நாடகத்தில் பெண்கள் பிரச்சினைகள் குறித்து வந்திருக்கும் பெண்களிடம் கேள்விகள் கேட்கப்பட்டு, அப்பிரச்சினையை எவ்வாறு அணுகுவது என்பது குறித்தும் அவற்றிற்கான தீர்வு, சட்டங்கள் மற்றும் சட்ட உதவி குறித்தான விளக்கங்களும் வழக்கறிஞரால் அளிக்கப்படுகிறது. இந்த நிழ்ச்சியும் இளம் பெண்கள் சம உரிமைகள் குறித்து தெரிந்துகொள்ள வழிவகை செய்கின்றது.

1998-99-ல் 876 முகாம்கள் நடத்தப்பட்டு 43,800 மகளிர் இத்திட்டத்தின் வாயிலாகப் பயன் அடைந்துள்ளனர்.

[1999 மே 3

### 2.21 முன்பருவக் கல்வி

முன்பருவக் கல்வி அளித்தல் என்பது, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டக் குறிக்கோள்களில் முக்கியமாக இருப்பினும், திட்ட அலுவலர் முதல் பணியாளர் வரையில் இதற்கு முக்கியத்துவம் அளிக்காமல் இருந்தனர். இதுகுறித்தான முக்கியத்துவத்தை அனைவரிடத்திலும் ஏற்படுத்தி, முன்பருவக் கல்விக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்ற எண்ணத்தினை அனைத்துப் பணியாளர்களிடமும் ஏற்படுத்தும் முகமாக, பல்நோக்கு பயிற்சி மேற்கொள்ளப்பட்டது. முதற்கட்டமாக அலுவலர்களுக்கும் அதன்பிறகு, களப்பணியாளர்கள் மற்றும் மையப் பணியாளர்களுக்கும் 'கற்றலின் இனிமை' என்ற விளையாட்டு முறை பயிற்சி மூலம் அளிக்கப்பட்டது.

இப்பயிற்சி மூலம் 75 அலுவலர்களும் 15 பயிற்றுநர்களும், 100 களப்பணியாளர்களும் 2,880 மையப் பணியாளர்களும் பயிற்சி பெற்றுள்ளனர். 1998-99-ல் சுமார் 4,500 குழந்தைகள் நல அமைப்பாளர்கள் இப்பயிற்சியினால் பயன் அடைந்துள்ளனர். கீழ்க் காணும் நிதி 1999-2000 ஆண்டிற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:—

| | மத்திய அரசின் பங்கு | மாநில அரசின் பங்கு |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் | 2094.85 | 1773.16 |
| சிடா ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் | 1394.15 | (0.38) |

அடையாள ஒதுக்கீடு மட்டும்.

## தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம்

### 2.22 திட்டத்தின் சமீபகால சாதனைகளும் முன்னேற்றங்களும்

தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம், உலகவங்கியின் கடனுதவியுடன் 20-1-1991-ல் ஆரம்பிக்கப்பட்டு தமிழ்நாட்டில் 24 மாவட்டங்களில் 318 வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் 31-12-1997 அன்று முடிவடைந்தது. இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கம் 6 மாதம் முதல் 3 வயது வரையுள்ள குழந்தைகளிடையே ஏற்படும் கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாட்டைக்



[1999 மே 3]

குறைத்து அக்குழந்தைகளின் இயல்பு நிலையை உயர்த்துவதும், கடந்த 1991-ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி குறிப்பாக கிராமங்களில் 1000-க்கு 65 ஆக இருந்த சிசு மரண விகிதத்தைக் குறைப்பதும் மற்றும் எடைகுறைவாகப் பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கையை 50 சதவிகிதமாகக் குறைப்பதும் ஆகும்.

### 2.23 இத்திட்டத்தின் சாதனைகள்

இத்திட்டத்தின்மூலம் 1991 ஆம் ஆண்டுமுதல் 0-36 மாதக் குழந்தைகள் சுமார் 40.65 இலட்சம் பயனடைந்துள்ளனர். கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் சுமார் 20.63 இலட்சம்பேர் பயனடைந்துள்ளனர். இத்திட்டப்பணிகளின் செயல்பாட்டினால் கிராம சமுதாயத்தில் ஊட்டச்சத்து இயல்பு நிலை மற்றும் முதல் நிலை குழந்தைகளின் எண்ணிக்கை 50.1 சதவிகிதமாக அதிகரித்துள்ளது. மேலும், குழந்தைகளிடையே காணப்பட்ட கடுமையான மற்றும் மிதமான ஊட்டச்சத்துக் குறைபாட்டின் அளவு 11.5 சதவிகிதமாகவும் குறைக்கப்பட்டது.

### எதிர்காலத் திட்டம்

தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம், 31-12-1997ல் முடிவடைந்தபின், 1-1-1998 முதல் இத்திட்டம் செயல்படுத்தப்பட்ட 318 வட்டாரங்களிலும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தினைச் செயல்படுத்த மைய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி, ஏற்கெனவே செயல்படுத்தப்படும் 113 ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டங்களும், 318 மாற்றப்பட்ட திட்டங்களும் ஒருங்கிணைக்கப்பட்டு தமிழ்நாடு முழுவதும் உள்ள 431 குழந்தை வளர்ச்சித் திட்டங்களையும் ஒரே நிர்வாகத் தலைமையின்கீழ் கொண்டுவரும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், உலக வங்கியின் உதவியுடன் மகளிர் மற்றும் குழந்தைகள் நலத்திற்கான புதிய திட்டம் மைய அரசின் அனுமதி பெற்றபின் செயல்படுத்தப்படும்.

### 2.24 நோக்கங்கள்

* குழந்தைகளிடையே காணப்படும் மிதமான மற்றும் கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாட்டை தற்போதைய நிலையில் 30 சதவிகிதம் குறைப்பது.

* எடை குறைவாகப் பிறக்கும் குழந்தைகளின் நிலையை தற்போதைய நிலையிலிருந்து 30 சதவிகிதம் குறைத்தல்.

[1999 மே 3

* சிசு மரணத்தை தற்போதைய நிலையிலிருந்து 30 சதவிகிதம் குறைக்க வழிவகை செய்தல்.

* கர்ப்பிணிகளின் இறப்பு விகிதத்தை தற்போதைய நிலையில் இருந்து 10 சதவிகிதம் குறைக்க வழிவகை செய்தல்.

* பெண்களுக்குரிய உரிமைகள் வழங்குவதன் மூலம் பெண்கள் மற்றும் குழந்தைகளின் ஊட்டச்சத்து மற்றும் சுகாதார நிலையை மேம்படுத்துவதோடு குடும்பத்தின் நிலையையும் மேம்படுத்தி இதன் மூலம் ஒரு முழுமையான குழந்தைநல முன்னேற்றத்தை அடைதல்.

* பெண்கள் மற்றும் குழந்தைகளின் வளர்ச்சியில் சம்பந்தப்பட்ட பணிகளையும் திட்டங்களையும் ஒருங்கிணைந்து செயல்படுத்துதல்.

* பெண்கள் மற்றும் குழந்தைகள் நல முன்னேற்றத்தில் மக்களின் கவனத்தை ஈர்த்து, சமுதாயத்தின் பொறுப்பை உணரச் செய்து, குழந்தைகளின் மேம்பாட்டை வலிமையாக்குவதற்குத் திட்டத்தை அவர்களாகவே முன்வந்து ஏற்று நடத்த வழிவகுத்தல்.

ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டத்தின் மூலம் பெற்ற பயன்களை வலுப்படுத்துவதுடன், புதிய வழிமுறைகளாக முழு மேலாண்மை, இளம் மகளிருக்கான ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரப் பணிகள், திட்டப்பணிகளை ஒருங்கிணைத்தல், திட்டத்தில் அக்கறை கொண்டோருக்கு தேவைக்கு ஏற்ப பயிற்சி அளித்தல், பெண்களின் மேம்பாடு போன்றவற்றில் தனிக்கவனம் செலுத்துதல், புதிய உத்தியாக கிராம அளவில் கிராம மக்களைக் கொண்டே திட்டப் பணிகளின் செயல்பாடுகளை முறைப்படுத்த விழிப்புக் குழு அமைத்தல் ஆகியவை மேற்கொள்ளப்படும்.

## 2.26 திட்ட மதிப்பீடு

இந்தப் புதிய திட்டத்தை ஐந்தாண்டுகளுக்குச் செயல்படுத்த ரூ.81.26 கோடி உதவி, மைய அரசு மூலமாக உலக வங்கியிடமிருந்து கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## 2.27 கவனமும் பாதுகாப்பும் தேவைப்படும் குழந்தைகள்

ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட குழந்தைகள் நலத்திற்காக தமிழக அரசு பாடுபடுகிறது. இவர்களின் நலத்திற்காக இத்துறை 25 ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லங்களை 5500 குழந்தைகளின் நலத்திற்காக



1999 மே 3]

நடத்துகிறது. 5 வயது முதல் 18 வயது வரையிலுள்ள ஆதரவற்ற, கைவிடப்பட்ட குழந்தைகள் இவ்வில்லங்களில் சேரலாம். அரசு இவர்களுக்கு உறைவிடம், கல்வி, மருத்துவ வசதி ஆகியவற்றை வழங்குகிறது. இக்குழந்தைகளின் அடிப்படைத் தேவைகளுடன் உடை, குறிப்பேடுகள், பாட நூல்கள், காலணிகள் மற்றும் படுக்கை வசதிகள் வழங்கப்படுகின்றன. மற்ற பள்ளிகளில் பயிலும் குழந்தைகளைப்போல் அரசு குழந்தைகள் காப்பகங்களில் பயிலும் குழந்தைகளும் காலணி அணிய வேண்டும் என்ற நோக்கத்துடனும், மேலும், அக்குழந்தைகள் பூச்சிக்கடி மற்றும் பல்வேறு வகையான தொற்று நோய்களுக்கு ஆளாவதைத் தவிர்க்கும் பொருட்டும், மேற்படி குழந்தைகள் ஒவ்வொருவருக்கும் தலா ரூ.50 மதிப்புடைய காலணி வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது. இச்செலவிற்காக 1999-2000 ஆம் நிதியாண்டில் ரூ. 2.75 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் இக்குழந்தைகளுக்குச் சீருடை வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இவ்விடுதிகளில் உள்ள 1 முதல் 2 ஆம் வகுப்புவரை பயிலும் குழந்தைகளுக்கு வருடம் ரூ.50-ம், 3 முதல் 5-ம் வகுப்புவரை பயிலும் சிறுவர்களுக்கு ரூ.125-ம், 6, முதல் 8-ம் வகுப்புவரையிலும் மாணவர்களுக்கு ரூ.175-ம் 9 மற்றும் 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு ரூ.300-ம் மேல்நிலை கல்வி பயிலும் மாணவர்களுக்கு ரூ.600-ம், பாடநூல்கள் மற்றும் குறிப்பேடுகள் தமிழ்நாடு அரசு பாடநூல் நிறுவனத்தில் வாங்குவதற்கு ஆண்டிற்கு ஒருமுறை நிதி ஒதுக்கீடு வழங்கப்படுகிறது. இவர்களுக்கு தொழிற் கல்வியும் அளிக்கப்படுகிறது. 1999-2000 ஆம் ஆண்டிற்கு ரூ.9.07 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ்விடுதிகளின் தரத்தினை உயர்த்துவதற்கு இடைவிடா கண்காணிப்பும் ஆய்வும் அவசியமாகும். இந்நிறுவனங்கள் சிறப்பாகச் செயல்படுவதற்காக ஆலோசனை அளிப்பதற்கென அரசு, தலைச்சிறந்த சமூகப் பணியாளர்களைக்கொண்ட குழு ஒன்றினை அமைத்துள்ளது.

1999-2000ஆம் ஆண்டில் ரூ.386.20 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

## 2.28 பள்ளி மாணவர்களுக்கு இலவச சீருடை வழங்கும் திட்டம்

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் ஒன்று முதல் எட்டாம் வகுப்புவரை பயிலும் பள்ளிக் குழந்தைகளுக்கு ஆண்டுதோறும் ஒரு ஜோடி இலவச சீருடை வழங்கும் திட்டப்

1985-86 ஆம் ஆண்டுமுதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சீருடைகளைத் தைத்து வழங்கும் பொறுப்பு சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்ட இயக்குநருக்கு அளிக்கப்பட்டுள்ளது. சீருடைகளைத் தைப்பதற்குத் தேவையான துணிகள் கோ-ஆப்டெக்ஸ் மற்றும் தமிழ்நாடு துணிநூல் கழகத்தால் தைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் மூலம் வாங்கப்படுகிறது. சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்ட இயக்குநரின் கட்டுப்பாட்டில் இயங்கும் மகளிர் தையற் கூட்டுறவு சங்கங்களின்மூலம் சீருடைகள் தைக்கப்பட்டு கல்வித் துறை அலுவலர்கள் மூலமாக பயனாளிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. 1998-99 ஆம் ஆண்டு முதல் இலவச சீருடை ஒன்றுக்கு ரூ.0.50 பைசாவீதம் தையற் கூலி உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. இலவச சீருடைத் திட்டத்தின்கீழ் 1998-99 ஆம் ஆண்டிற்கு 62.79 இலட்சம் ஜோடி சீருடைகள் தைக்கப்பட்டு பயனாளிகளுக்கு 1999 ஆம் ஆண்டு ஜூன்-ஜூலை மாதங்களில் பள்ளிகள் திறந்தவுடன் விநியோகம் செய்யப்படும். 1999-2000 ஆம் ஆண்டிற்கும் இத்திட்டத்தினை கொள்கை அளவில் தொடர்ந்து செயல்படுத்த அரசு ஆணையிட்டுள்ளது. இதற்காக ரூ.5,671.69 இலட்சம் தொடக்கப் பள்ளிக் கல்வித் துறையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2.29 ஜப்பானிய அரசின் நிதி உதவியுடன் தொட்டில் குழந்தைகள் இல்லம் கட்டுதல்**

ஜப்பானிய அரசு ரூ.22 இலட்சம் நிதியுதவி அளித்து, சேலம் மாவட்டத்தில் தொட்டில் குழந்தைகள் இல்லம் இயங்க, கட்டடம் கட்டுவதற்கும், திட்டம் நல்ல முறையில் இயங்குவதற்குத் தேவையான பொருட்கள் வாங்கவும், வழிவகை செய்துள்ளது. இதற்கான கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இம்மையம், சேலம் மாவட்ட சமூக நல அலுவலர் கட்டுப்பாட்டில் இயங்கும்.

மாநிலத்தில் பெண் சிசு வதையைத் தடுக்க கீழ்க்கண்டவாறு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது:

பெண் குழநதைகள் வேண்டாம் என்று நினைப்பவர்களோ அல்லது குழந்தைகள் தாயின் பராமரிப்பின்றிக் காணப்பட்டாலும் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களிலோ, அரசு பொது மருத்துவமனைகளிலோ, மாவட்ட ஆட்சியரிடமோ, மாவட்ட சமூக நல அலுவலகங்களிலோ அல்லது 16 தத்துக் கொடுக்கும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களிடமோ தெரிவித்தால் அவர்கள்



நேரடியாக வந்து குழந்தைகளைப் பெற்றுக் கொள்வார்கள். பின்னர், அரசு அக்குழந்தைகளைத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் பராமரிக்கும்.

**2.30 தமிழக அரசு பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்**

பெண் குழந்தைகளின் மதிப்பை உயர்த்த பெண் குழந்தைகளின் பெற்றோருக்கு பெண்களின் மேற்கல்விக்காகவும், திருமணத்திற்காகவும் நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் பெண் குழந்தைகள் தன்னம்பிக்கையுடன் வளர்வதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

1997-98 முதல், திருத்தம் செய்யப்பட்ட பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்மூலம் ஆண் குழந்தை இல்லாத ஒன்று அல்லது இரண்டு பெண் குழந்தை உள்ள 40 வயதிற்குட்பட்ட தாய் கருத்தடை சிகிச்சை செய்து கொண்டால் தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின்மூலம், ஒரு பெண் குழந்தை இருந்தால் ரூ.3000-ம், இரு பெண் குழந்தைகள் இருந்தால், தலா ரூ.1500-ம் 5 ஆண்டு நிரந்தர வைப்புத் தொகை இரசீதாக அக்குழந்தைகள் பெயரில் வழங்கப்படும். அப்பெண் குழந்தை 20 வயது ஆகும்வரை ஐந்தாண்டுக்கு ஒருமுறை கட்டாயமாக இந்த ரசீதைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டும். இதனால் கிடைக்கும் பணம் அப்பெண் குழந்தை 20 வயதாகும்போது வழங்கப்படும். உத்தேசமாக ரூ.1500 முதலீட்டிற்கு ரூ.29000-மும் ரூ.3000 முதலீட்டிற்கு ரூ. 58000-மும் கிடைக்கும். கடந்தகால ஆட்சியில் பதிவு செய்யப்பட்டு முதலீடு செய்யாமலிருந்த குழந்தைகள் 26,905 பேருக்கும் சேர்த்து இதுவரை இத்திட்டத்தின்கீழ் 68124 குழந்தைகள் சேர்க்கப்பட்டுள்ளனர். இதுவரை ரூ.1029.98 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1999-2000 ஆம் ஆண்டிற்கு ரூ.2.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2.31 தத்துக் கொடுத்தல்**

தத்துக் கொடுத்தல்/தத்து எடுத்தல் தொடர்பான சட்டங்கள் குறித்தும் வழிமுறைகள் குறித்தும் பொது மக்களிடத்தில் மிகக் குறைந்த விழிப்புணர்வே உள்ளது. இந்திய நாட்டில் உள்ள ஒரு சில பெற்றோரிடையே குழந்தையை தத்து எடுத்துக்கொள்ளும் ஆர்வம் அதிகமாக இருந்தபோதிலும் இது தொடர்பான விவரங்கள் கிடைப்பது அரிதாக உள்ளது.

எனவே, தத்துக் கொடுக்கும் நிறுவனங்கள் பற்றிய தகவல்கள், இது தொடர்பான சட்டங்கள் மற்றும் அதன்கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள வழிமுறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவது அவசியம் என அரசு கருதுகிறது. தத்துக் கொடுத்தல் குறித்தான விழிப்புணர்வை மக்களிடையே பரப்பவும் திட்டமிடப்பட்டுள்ளது. தொலைக்காட்சி மற்றும் வானொலி விளம்பரம் மூலமும் இது தொடர்பான தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், அரசு அலுவலர்கள், பெற்றோர்கள் சங்கம் ஆகியோரை இணைத்து ஈடுபடுத்தி மாவட்ட தோறும் கருத்தரங்குகள் நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

தற்போது, தத்து எடுக்க நினைக்கும் பெற்றோர்களுக்கோ அல்லது தத்துக் கொடுப்பதில் ஈடுபட்டுள்ள தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கோ இது தொடர்பான சட்டங்கள், வழிமுறைகள், தத்துக் கொடுக்கும் நிறுவன முகவரிகள் ஆகிய விவரங்கள் அடங்கிய கையேடு ஏதும் இல்லை. எனவே, இது தொடர்பான கையேடு ஒன்றினைத் தயாரித்து வெளியிடுவதன்மூலம் தத்துக் கொடுக்கும் நிறுவனங்கள் பயன் பெறுவது தவிர, இதில் ஈடுபட்டுள்ள அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் ஒதுக்கப்பட்ட மற்றும் நிற்கதியான குழந்தைகளை எவ்வாறு தத்து எடுப்பது என்பது குறித்த வழிமுறைகளை அறிய பயன் உள்ளதாக இருக்கும்.

தற்போது, அரசு அங்கீகாரம் பெற்ற தத்து எடுத்துக் கொடுக்கும் 16 தொண்டு நிறுவனங்கள் சென்னை, கோவை, திருச்சி, தேனி, தூத்துக்குடி, நீலகிரி, மதுரை மற்றும் தர்மபுரி ஆகிய நகரங்களில் இருக்கின்றன. மற்ற மாவட்டங்களில் இதுபோன்ற தொண்டு நிறுவனங் கள் இல்லை. ஆகையால், ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு தத்து எடுத்து தத்துக் கொடுக்கும் தொண்டு நிறுவனத்தை அடையாளம் கண்டு அவர்களுக்கு தத்துக் கொடுப்பது தொடர்பான நடைமுறைகளைக் கற்றுக் கொடுக்க 3 நாள் பயிற்சி அளிக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது.

இத்திட்டத்தைச் செம்மையாகச் செயல்படுத்த இயக்ககத்தில் ஒரு தகவல் மையம் அமைத்து அதில் திட்டம் தொடர்பான அனைத்து தகவல்களும் கணிப்பொறிமூலம் சேகரித்து வைக்க திட்டமிடப் பட்டுள்ளது. இத்தகவல் மையம் நம் நாட்டிலும் வெளி நாடுகளிலும் தத்துக் கொடுப்போருக்கு பயன்படும். இத்தகவல் மையம் நம்நாட்டிலும்



வெளிநாடுகளிலும் வெளியிடப்படும் பருவ வெளியீடுகள், புத்தகங்களைக் கொண்டதாக இருக்கும்.

## 2.32 குழந்தைகளின் நலனில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பங்கேற்பு

கட்டடங்கள் கட்டுவதற்கும், குழந்தைகளைப் பராமரிப்பதற்கும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு மானியம் வழங்கப்படுகின்றது. 20 சதவீதம் நிறுவனமே ஏற்றுக்கொள்கிறது. இதில் 80 சதவீதம் மானியமாக மாநில அரசு 1-4-1992 முதல் வழங்குகிறது. இம்மானியம் தொடர் செலவினமாக உணவு, உடை போன்றவற்றிற்கு ஒரு குழந்தைக்கு ஒரு மாதத்திற்கு ரூ.250 வீதம் வழங்கப்படுகிறது.

177 நிறுவனங்களில் பயன்பெறும் 14,377 குழந்தைகளுக்காக 1999-2000 வருடத்திற்கு ரூ.308 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.33 முதியோர் இல்லங்கள்

வறுமை நிலையில் உள்ள குடும்பத்தைச் சார்ந்த முதியோர்கள் மற்றும் ஆதரவற்ற நிலையில் உள்ள முதியோர்கள் ஆகியவர்களில் அன்றாட வாழ்வில் உணவு, உறைவிடம் இன்றித் துயருறுவோர் பலர் உள்ளனர். இவர்களுடைய துயர் களைய தனியார் தொண்டு நிறுவனங்களின் சேவையில் தற்போது 7 இல்லங்களில் 280 முதியோர்கள் தங்கிப் பயன்பெறும் வகையில் அரசு நிதி உதவி அளிக்கிறது.

1999-2000 ஆம் நிதியாண்டிற்கு ரூ.6.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முதியோர்களுக்கு உணவுச் செலவிற்காக மாதம் ஒன்றுக்கு ஒருவருக்கு ரூ. 250/- வீதம் மானியம் மாநில அரசால் அளிக்கப்படுகிறது. அவ்வப்பொழுது சமூகநல இயக்ககத்திலிருந்து சம்பந்தப்பட்ட அலுவலர் அந்நிறுவனங்களுக்குச் சென்று இத்திட்டம் சரிவர செயல்படுகிறதா என்பதை ஆய்வு செய்தும் வருகின்றார்.

## 2.34 கருணை இல்லங்கள்

தமிழகத்தில் 38 திருக்கோயில்களின் சார்பில் தற்போது 43 கருணை இல்லங்கள் இயங்கி வருகின்றன. கருணை இல்லங்களுக்கு ஆகும் செலவில் 50% அரசு மானியமாக சமூகநலம் மற்றும் சத்துணவுத்

திட்டத் துறையின் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். திருக்கோயில்களால் நடத்தப்பட்டுவரும் கருணை இல்லங்களின் 1438 குழந்தைகளுக்கு, உணவின் வகையில் ஒரு குழந்தைக்கு மாதமொன்றுக்கு ரூ.200-ம் நிர்வாகச் செலவின் வகையில் மாதமொன்றுக்கு ரூ.267-ம் படுக்கைச் செலவின வகையில் ஆண்டொன்றுக்கு ரூ.20-ம் வழங்கப்பட வேண்டும். சீருடையைப் பொறுத்தமட்டில், சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை மூலமாகவும் இந்தக் கருணை இல்லங்களுக்கு வழங்கப்படும். 1998-99 ஆம் ஆண்டிற்காக ரூ.90.55 இலட்சம் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறைக்கு மானியமாக வழங்கப்பட்டது.

1999-2000 ஆம் ஆண்டிற்காக ரூ.90.55 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2.35 அரசு மறுவாழ்வு இல்லங்கள்**

1. தொழுநோயால் அவதியுறும் ஏழை நோயளிகளின் நோயைக் குணப்படுத்தவும் அவர்களுக்குப் புதுவாழ்வு அளிக்கவும் தமிழ்நாடு அரசு கீழ்க்காணும் 10 இடங்களில் தொழுநோய் மறுவாழ்வு இல்லங்களை அமைத்து உள்ளது:

1. பரனூர்-காஞ்சிபுரம் மாவட்டம்
2. உளுந்தூர்ப்பேட்டை-விழுப்புரம் மாவட்டம்
3. பர்கூர்-தர்மபுரி மாவட்டம்
4. புதுக்கோட்டை-புதுக்கோட்டை மாவட்டம்
5. விண்ணப்பள்ளி-ஈரோடு மாவட்டம்
6. மனையேறிப்பட்டி-தஞ்சாவூர் மாவட்டம்
7. ஓய் புதுப்பட்டி-மதுரை மாவட்டம்
8. மல்லவாடி-திருவண்ணாமலை மாவட்டம்
9. செல்லியம்பட்டி-தர்மபுரி மாவட்டம்
10. தேவியாக்குறிச்சி-சேலம் மாவட்டம்

**2. நிர்வாகம்**

முன்னாள், சிறைத் துறைத் தலைவரின்கீழ் இயங்கி வந்த இவ்வரசு மறுவாழ்வு இல்லங்கள் 24-5-1997 முதல் சமூகநலம் மற்றும் சத்துணவு இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டு இயங்கி வருகின்றன. ஒவ்வோர் இல்லமும் ஒரு நிர்வாக அலுவலரால் நிர்வகிக்கப்படுகிறது.



**3. அனுமதி**

ஒவ்வோர் இல்லத்திலும் 400 பெரியவர்களும் 25 சிறுவர்களும் (ஆண், பெண் உட்பட) தங்குவதற்கு வசதியுள்ளது. தொழுநோயால் பாதிக்கப்பட்டுள்ள தானாக வரும் நோயாளிகளும், பிச்சை எடுத்ததற்காகத் தண்டனை பெற்றவர்களும் இவ்வில்லங்களில் அனுமதிக்கப்படுகிறார்கள். மணமானவர்களின் கணவரோ அல்லது மனைவியோ தொழுநோயால் பாதிக்கப்பட்டு பிச்சை எடுப்பவராக இருந்தால் மற்றவரையும் இல்லத்தில் சேர்க்க அனுமதி உள்ளது. அவர்களுக்குக் குழந்தைகள் இருப்பின் அவர்களும் இவ்வில்லங்களில் சேர்க்கப்படுகின்றனர்.

**4. உள்ளுறைவோருக்கு அளிக்கப்படும் வசதிகள்**

உள்ளுறைவோருக்கு இலவசமாகத் தங்க வசதியும், உணவு, உடை, மருத்துவ வசதி மற்றும் பல தொழில்களில் பயிற்சியும் அளிக்கப்படுகின்றன. அவர்கள் விளையாடுவதற்கான வசதியும் திரைப்படம் மற்றும் வண்ணத் தொலைக்காட்சி பெட்டி காண்பிக்க வசதியும், நூலகம் போன்ற வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

**அ. உணவு**

தொழுநோயால் பாதிக்கப்பட்ட இல்லவாசிகளுக்கு நாளொன்றுக்கு ரூ.15 வீதமும் அவர்களுடைய குழந்தைகளுக்கும், சார்ந்துள்ளவர்களுக்கும் நாளொன்றுக்கு ரூ.10 வீதமும் வழங்கப்படுகின்றன. காந்தி ஜெயந்தி, சுதந்திர தினம் போன்ற சிறப்பான நாட்களில் ஒவ்வொரு உள்ளுறைவோருக்கும் ரூ.3/-க்கு சிறப்புணவுக்கு வழங்கப்படும் தொகையானது, ரூ.5/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**ஆ. இருப்பிடம்**

உளுந்தூர்பேட்டை, பர்கூர் மறுவாழ்வு இல்லங்களைத் தவிர மற்ற எல்லா இல்லங்களும் குடும்பத்தினர்கள் தங்கக்கூடிய அறைகள் கொண்ட 4 தொகுதிகளாக (பிளாக்) கீழ்த்தளத்தில் அமைந்துள்ளன. மேலும், முதல் மாடியில் தனி நபர் தங்குவதற்கு துயில்கூடங்கள் (டார்மிட்டரிஸ்) கட்டப்பட்டுள்ளன. உளுந்தூர்பேட்டை மற்றும் பர்கூர் இல்லங்கள் ஒற்றைத்தள கட்டடமாகவும், நிரந்தரக் கொட்டகைகளாகவும் உள்ளன.

இ. உடை, பாய் போன்றவை

ஜனவரி மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் உள்ளுறைவோருக்கு இரண்டு இணை உடைகள் வழங்கப்படுகின்றன. அண்மையில் பொங்கலை முன்னிட்டு இலவச சேலைகளும், வேட்டிகளும் உள்ளுறைவோருக்கு வழங்க ஆணையிடப்பட்டது. ஆண்டுதோறும் பொருத்தமான இரப்பர் காலணிகளும் வழங்கப்படுகின்றன. அரசாணை எண் 203 சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை நாள் 12-8-1998-ன்படி 1998-99 ஆம் ஆண்டு முதல் நிதி ஒதுக்கீட்டை ரூ.300/-லிருந்து ரூ.1000/- ஆக தமிழக அரசால் உயர்த்தி ஆணை வழங்கப்பட்டுள்ளது. தட்டு, டம்ளர் 5 வருடத்திற்கு ஒருமுறையும் மற்றும் பாய் ஒவ்வொரு வருடமும், மேலும் மூன்று வருடங்களுக்கு ஒருமுறை போர்வையும் வழங்கப் படுகின்றன.

ஈ. மருத்துவ வசதிகள்

உள்ளுறைவோருக்கு மருத்துவ சிகிச்சை இலவசமாக அளிக்கப்படுகிறது. இரண்டு மருத்துவ அதிகாரிகள், இரண்டு செவிலியர்கள், ஒரு ஆய்வுக்கூட தொழில் நுட்பப் பணியாளர், ஒரு மருந்தாளுநர், ஒரு உடற்கூறு பயிற்சியாளர், ஒரு பேறுகால உதவியாளர், ஒரு ஒரு உதவி ஆண் செவிலியர், ஒரு உதவி பெண் செவிலியர் முதலானவர்கள் ஒவ்வோர் இல்லத்திலும் உள்ளுறைவோரின் மருத்துவத் தேவைகளைக் கவனிக்கின்றனர். இவர்களுக்குத் தொழுநோய் சிகிச்சை அளிப்பதோடு மட்டுமின்றி மற்ற நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படுகிறது. தீவிர சிகிச்சை பெற வேண்டிய நோயாளிகள், 10 பேர் தங்கக்கூடிய தனி வார்டுகளில் அனுமதிக்கப்பட்டு அவர்களுக்கு சிறப்புணவு மற்றும் மருந்துகள் அளிக்கப்படுகின்றன. எல்லாவித வசதிகளும் கொண்ட அறுவை சிகிச்சைக் கூடங்கள் பர்கூர், உளுந்தூர்பேட்டை இல்லங்கள் தவிர்த்து மற்ற இல்லங்களில் உள்ளன. கைவிரல் முடமானவர்கள், கால் விளங்காதவர்கள் மற்றும் உடற்கூறு சரியில்லாத நிலையில் உள்ளவர்களுக்கு அறுவை சிகிச்சை செய்யப் படுகிறது.

உ. உடற்கூறு பயிற்சியும் தொழிற் பயிற்சியும்

ஒவ்வோர் இல்லத்திலும், ஓர் உடற்கூறு பயிற்சியாளர் உள்ளார். மின்கருவி (எலெக்ட்ரிக்கல் ஸ்டிமுலேட்டர்) மெழுகுப் பூச்சு சாதனத் தொட்டி (வாக்ஸ் பாத்) ஆகியவற்றின் உதவியைக் கொண்டு ஊனமுற்ற உறுப்பினர்களுக்கும் உடற்கூறு பயிற்சி தேவையுள்ள உள்ளுறைவோர்



அனைவருக்கும் உடற்கூறு பயிற்சியாளர்களால் பயிற்சி அளிக்கப்படுகிறது. புண் மற்றும் உருச்சிதைந்த நோயாளிகளை உடற்கூறு பயிற்சியாளர்களும் மற்றும் மருத்துவ அதிகாரிகளும் அறுவை சிகிச்சைக்காகத் தேர்ந்தெடுக்கின்றனர். புண்ணாவதைத் தவிர்ப்பதற்காக உள்ளுறைவோருக்கு நுண்ணிய துளைகளுடன்கூடிய இரப்பர் காலணிகள் அளிக்கப்படுகின்றன. மேலும், தேவைப்படுகிற இல்லவாசிகளுக்கு சிறப்புக் காலணிகள் வழங்கப்படுகின்றன.

ஊ. பொழுதுபோக்கு வசதிகள்

ஒவ்வோர் இல்லத்திலும் விளையாட்டுப் பொருட்களை வாங்குவதற்கு 1998-99 ஆம் ஆண்டு ரூ. 200-லிருந்து ரூ. 1200/- ஆக உயர்த்தி அரசு அனுமதித்துள்ளது. ஒவ்வோர் இல்லத்திலும் இல்லவாசிகள் பொழுது போக்குக்காக வருடத்திற்கு ரூ. 400/-க்கு இசைக்கருவிகளும் வாங்கி அளிக்கப்படுகின்றன. மேலும், இறந்த இல்லவாசிகளின் ஈமச்சடங்கிற்காக ரூ.200/- வழங்கப்படுகிறது.

எ. கல்வி மற்றும் இதர வசதிகள்

இவ்வில்லவாசிகளில் இலக்கியம் மற்றும் பொதுக் கல்வி மேம்பாட்டிற்காக இரண்டு செய்தித்தாள்கள் மற்றும் இலக்கியப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன.

5. **உள்ளுறைவோரின் குழந்தைகளுக்கான வசதிகள்**

தொழுநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் சேலம் மாவட்டத்திலுள்ள ஆத்தூர் தாலுகாவில் ஏத்தாப்பூர் என்னுமிடத்தில் நடத்தப்படும் சிறப்புப் பள்ளியில் அனுமதிக்கப்படுகின்றனர். மேற்படி நோயினால் பாதிக்கப்படாத குழந்தைகள் கூடுமானவரையில் தனியாகப் பிரிக்கப்பட்டு, இவ்வில்லங்களுக்கு அருகிலுள்ள பள்ளிகளில் சேர்க்கப்படுகின்றனர்.

1. சீருடை, புத்தகங்கள், பெட்டி முதலியவைகளுக்காக ஒவ்வொரு குழந்தைக்கும் ஆரம்ப செலவினமாக ரூ.75/- அரசு வழங்குகிறது.

2. மேலும், இவ்வில்லங்களிலுள்ள பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு கல்விக்காகக் கீழ்க்கண்டவாறு செலவினம் மேற்கொள்ள அரசு ஆணை வழங்கியுள்ளது:

இரண்டாம் வகுப்பு முதல் ஏழாம் வகுப்புவரை ரூ.20/- (ஒவ்வோர் ஆண்டிற்கும்).

எட்டாம் வகுப்பு மற்றும் ஒன்பதாம் வகுப்புக்கு ரூ.30/- (ஒவ்வோர் ஆண்டிற்கும்).

பத்தாம் வகுப்பிற்கு ரூ.50/-ம் பதினொன்று மற்றும் பன்னிரெண்டாம் வகுப்புகளுக்கு ரூ.75/- (ஒவ்வோர் ஆண்டிற்கும்).

**6. உள்ளுறைவோர் மறுவாழ்வுக்கான நடவடிக்கைகள்**

இவ்வில்லங்களில் அனுமதிக்கப்பட்டுள்ள தொழுநோயாளிகளில் உடல்நலத்துடன் இருப்போருக்குக் கீழ்க்கண்ட துறைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது:

1. துணி நெய்தல் (கைத்தறி, விசைத்தறி)
2. பாய் பின்னுதல்
3. காலணி தயாரித்தல் மற்றும் பழுதுபார்த்தல்
4. தையல்
5. தச்சுவேலை
6. விவசாயம்
7. காகித உறை செய்தல் (புதுக்கோட்டை இல்லத்தில் மட்டும்)

**7. கைத்தறிகள் மற்றும் விசைத்தறிகள்**

தற்போது 135 கைத்தறிகளும், 77 பாய்தறிகளும் பத்து இல்லங்களிலும் உள்ளன. இல்லவாசிகளால் தயாரிக்கப்படும் பொருட்கள் அவர்களின் தேவைகள்போக மீதமுள்ளவை அருகிலுள்ள மாவட்ட மருத்துவமனைகளுக்கு விற்கப்படுகின்றன. புதுப்பட்டி மற்றும் உளுந்தூர்பேட்டை இல்லங்களில் நிறுவப்பட்டுள்ள நூற்பாலைகளில் மாதத்திற்கு 10,000 சிட்டங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. 34 தையல் இயந்திரங்கள் இவ்வில்லங்களில் உள்ளன. இல்லவாசிகளுக்கு வழங்கப்படும் உடைகள் தையல் கலையில் தேர்ச்சிபெற்ற இல்லவாசிகளாலேயே தைக்கப்பட்டு அளிக்கப்படுகின்றன.

8. கடந்த ஆட்சியில் இல்லத்தில் தொழுநோயாளிகள் புதியதாகச் சேர்வது மறுக்கப்பட்டிருந்தது. அரசாணை (டி) எண். 893 உள் துறை



(சிறை 6) நாள் 4-10-1996-ன்படி அந்தத் தடையாணை நீக்கப்பட்ட பிறகு 10 இல்லங்களில் புதியதாக சேர்க்கப்பட்டவர் எண்ணிக்கை 229. மொத்தம் 2446 தொழுநோயாளிகள் சிகிச்சையளிக்கப்பட்டு மறுவாழ்வு அடைந்துள்ளனர். (அரசினர் காப்பு இல்லம் மேல்பாக்கம் நீங்கலாக)

அரசு மறுவாழ்வு இல்லங்கள் மற்றும் அரசினர் ஏழைகள் பராமரிப்பு விடுதிகளில் உள்ள இல்லவாசிகள் விவரம் (1-2-1999-ல் உள்ளபடி)

| எண் | அரசு மறுவாழ்வு இல்லம்/ விடுதி பெயர் | அனுமதிக்கப் பட்ட மொத்த எண்ணிக்கை | பெரியவர்கள் | | குழந்தைகள் | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | ஆண் | பெண் | ஆண் | பெண் | |
| 1. | பரனூர் | 425 | 187 | 134 | 16 | 25 | 362 |
| 2. | மல்லவர்டி | 425 | 114 | 59 | 2 | 11 | 186 |
| 3. | உளுந்தூர்பேட்டை | 425 | 98 | 63 | 4 | 4 | 169 |
| 4. | செல்லியம்பட்டி | 425 | 133 | 68 | 2 | 2 | 205 |
| 5. | தேவியாக்குறிச்சி | 425 | 121 | 66 | 4 | 3 | 194 |
| 6. | விண்ணபபள்ளி | 425 | 110 | 66 | 4 | 4 | 184 |
| 7. | யா. புதுப்பட்டி | 425 | 204 | 125 | 8 | 15 | 352 |
| 8. | புதுக்கோட்டை | 425 | 173 | 115 | 7 | 8 | 303 |
| 9. | மனையேறிப்பட்டி | 425 | 145 | 81 | 1 | 2 | 229 |
| 10. | பர்கூர் | 425 | 141 | 102 | 11 | 8 | 262 |
| 11. | அரசினர் காப்பு விடுதி மேல்பாக்கம் | 950 | 75 | 56 | - | - | 131 |
| | மொத்தம் | 5200 | 1501 | 935 | 59 | 82 | 2577 |

**9. அரசினர் காப்பு முகாம், மேல்பாக்கம்**

1-3-1954 முதல் நடத்தப்பட்டுவரும் மேல்பாக்கம், அரசினர் காப்பு முகாம் இத்தகைய முகாம்களில் முதன்மையானதாகும். சென்னை நகரில் பிச்சைக்காரர்கள் பிரச்சினைகளைத் தீர்க்கவும், அவர்களுக்கு அவர்களின் திறமைக்குத்தக்க வகையில் தொழிற்பயிற்சி கொடுத்து அவர்களைத் திசை திருப்பி மறுவாழ்வு தந்து சிறந்த குடிமகனாக ஆக்குவதே இந்த விடுதியின் நோக்கமாகும்.

[1999 மே 3

## அத்தியாயம்–3

### ஊனமுற்றோர் மறுவாழ்வு

3.1 1992-ம் ஆண்டுக்குமுன்வரை ஊனமுற்றோர் மறுவாழ்வுப் பணிகள் அனைத்தும் சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை இயக்குநர் மூலம் செயல்படுத்தப்பட்டு வந்தன. ஊனமுற்றோர்க்கென உள்ள தனிப்பட்ட பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டும் இதற்கென தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்தவும் வேண்டி சிறப்புத் திறனும் கூடுதல் வசதியும் கொண்டதுமான ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறை இயக்குநரகம் 1992-ம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.

**ஊனமுற்றோரின் தொகை**

தேசிய மாதிரிக் கணக்கெடுப்பின்படி மொத்த மக்கள் தொகையில் ஊனமுற்றோர் 1.9 விழுக்காடு ஆகும். 1991 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தமிழகத்தின் மொத்த மக்கள் தொகையில் 1.9 விழுக்காடு என்பது 10,61,320 ஆகும். ஊனமுற்றோர் வகைவாரியான விவரம் பின்வருமாறு:

| வ. எண் | ஊனத்தின் வகை | ஊனமுற்றோரின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | விழுக்காடு |
|---|---|---|---|
| 1. | பார்வையற்றோர் | 2.04 | 19.2 |
| 2. | பேசும்திறன் அற்று காது கேளாதோர் | 2.17 | 20.5 |
| 3. | கை, கால் ஊனமுற்றோர் | 6.24 | 58.8 |
| 4. | மனவளர்ச்சி குன்றியோர்/ தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்தோர் மற்றும் இதர வகை ஊனமுற்றோர் | 0.16 | 1.5 |
| | மொத்தம் | **10.61** | **100.00** |

**உயர்ந்துவரும் நிதி ஒதுக்கீடு**

ஊனமுற்றோர் மறுவாழ்வுக்கென 1990-91-ம் ஆண்டில் ரூ.433 இலட்சங்கள் என்று இருந்த நிதி ஒதுக்கீடு, அதிகரிக்கப்பட்டு



1999 மே 3]

1999-2000 ஆம் ஆண்டில் ரூ.1878.21 இலட்சங்கள் என்று உயர்த்தப்பட்டுள்ளது. ஊனமுற்றோர் நிலையை உயர்த்த ஊனமுற்றோர் நலனில் அரசு கொண்டுள்ள ஆழ்ந்த அக்கறையினை ஆண்டுக்காண்டு நிதி ஒதுக்கீட்டை உயர்த்தி வருவதைக் கொண்டு அறியலாம்.

**3.3 ஊனமுற்றோருக்குச் சிறப்புக் கல்வி**

ஊனமுற்றோருக்காக நிறுவப்பட்டுள்ள சிறப்புப் பள்ளிகளின்மூலம் அவர்களுக்குச் சிறப்புக் கல்வி அளிக்கப்படுகிறது. அரசுப் பள்ளிகள் மற்றும் அரசு மானியம் பெற்று நடைபெறும் சிறப்புப் பள்ளிகள் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | பள்ளியின் வகை | அரசுப் பள்ளிகள் | அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகள்: மானியம் பெறும் பள்ளிகள் | அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகள்: மானியம் பெறாத பள்ளிகள் | நகராட்சிப் பள்ளிகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | பார்வையற்றோருக்கான பள்ளி | 11 | 11 | 25 | -- | 47 |
| 2. | பேச்சுத்திறன் குறைந்து செவித்திறன் இழந்தோர் பள்ளி | 10 | 19 | 39 | 2 | 70 |
| 3 | மனவளர்ச்சி குன்றியோருக்கான பள்ளி | 1 | 13 | 33 | - | 47 |
| 4. | கடுமையான கை, கால் பாதிக்கப்பட்டோருக்கான பள்ளி | 1 | 13 | 36 | - | 50 |
| 5. | தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்தோருக்கான பள்ளி | - | i | 2 | - | 3 |
| | மொத்தம் | 23 | 57 | 135 | 2 | 217 |

[1999 மே 3

அரசு சிறப்புப் பள்ளிகள் நடைபெறும் இடங்கள் பின்வருமாறு:

| பார்வையற்றோருக்கானது | பேச்சுத்திறன் மற்றும் செவித்திறன் இழந்தோருக்கானது | கடுமையான கை, கால் ஊனமுற்றோருக்கானது | மனவளர்ச்சி குன்றியோருக்கானது |
|---|---|---|---|
| கோயம்புத்தூர் | கடலூர் | மதுரை | சென்னை |
| கடலூர் | தர்மபுரி | | |
| தர்மபுரி | ஈரோடு | | |
| மதுரை | காஞ்சிபுரம் | | |
| நாகர்கோவில் | சென்னை | | |
| பூவிருந்தவல்லி | உதகமண்டலம் | | |
| புதுக்கோட்டை | புதுக்கோட்டை | | |
| சேலம் | சேலம் | | |
| சிவகங்கை | தஞ்சாவூர் | | |
| தஞ்சாவூர் | விருதுநகர் | | |
| திருச்சிராப்பள்ளி | | | |

மேற்குறிப்பிடப்பட்ட அரசு சிறப்புப் பள்ளிகளில் கல்வி பயிலும் ஊனமுற்ற குழந்தைகளுக்குச் சிறப்புக் கல்வியுடன் உணவு, தங்குமிடம் ஆகியவை இலவசமாக வழங்கப்படுகின்றன. ஆண்டுக்கு இரண்டு ஜோடி சீருடை இலவசமாக வழங்கப்படுகின்றது. இந்தச் சிறப்புப் பள்ளிகள்மூலம் சுமார் 8500 ஊனமுற்ற குழந்தைகள் சிறப்புக் கல்வி பெறுகிறார்கள். 1999-2000 ஆம் ஆண்டிற்கு சிறப்புக் கல்விக்கான நிதி ஒதுக்கீடு ரூ.1010.28 இலட்சங்களாகும்.

பேச்சுத் திறன் மற்றும் செவித் திறன் குறைந்துள்ள குழந்தைகளுக்கென 20 முன்பருவப் பள்ளிகள் கடலூர், தர்மபுரி, ஈரோடு, காஞ்சிபுரம், சென்னை, உதகமண்டலம், புதுக்கோட்டை, சேலம், தஞ்சாவூர், விருதுநகர் ஆகிய இடங்களிலுள்ள அரசு காது கேளாதோருக்கான பள்ளிகளிலும் வேலூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, சிவகங்கை, கன்னியாகுமரி, தூத்துக்குடி, திண்டுக்கல் ஆகிய இடங்களிலுள்ள அரசு மானியம் பெறும் பள்ளிகளிலும் இணைந்து இயங்கி வருவதுடன் இராமநாதபுரத்தில் அனாதைக் குழந்தைகள் காப்பகத்திலும், கோயம்புத்தூரிலுள்ள அரசு பார்வையற்றோருக்கான பள்ளியிலும் நடத்தப்பட்டு வருகின்றன. செவித்திறன் குறைந்த குழந்தைகள் 200 பேர் இப்பள்ளிகளின் மூலம் சிறப்புக் கல்வி பெறுகிறார்கள்.



1999 மே 3]

### 3.3 ஊனமுற்றோருக்கு கல்வி உதவித் தொகை

ஊனமுற்ற குழந்தைகளின் கல்விக்காகப் புத்தகங்கள், குறிப்பேடுகள் மற்றும் இதர பொருள்கள் வாங்க, பள்ளி மற்றும் உயர்கல்வி பயிலும் அனைத்து மாணவ மாணவிகளுக்கும் அரசு உதவித்தொகை வழங்குகிறது.

உதவித்தொகை பெறும் விவரம் பின்வருமாறு:

ஒன்று முதல் ஐந்தாம் வகுப்புவரை பயிலும் மாணவ மாணவியர்களுக்கு மாதம் ரூ.25 வீதமும், ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்புவரை பயிலும் மாணவ மாணவிகளுக்கு மாதம் ரூ.75 வீதமும் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகின்றது.

ஒன்பதாம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரையில் மாதம் ரூ.85 என்று இருந்ததை உயர்த்தி மாதம் ரூ.110 எனவும் பட்டப் படிப்பிற்கு மாதம் ரூ.125 என இருந்ததை மாதம் ரூ.150 எனவும் தொழிற்கல்வி, பொறியியல், மருத்துவம் மற்றும் முதுநிலை பட்டப்படிப்பிற்கு மாதம் ரூ.170 என வழங்கி வந்ததை மாதம் ரூ.195 என வழங்கவும் அரசு முடிவெடுத்துள்ளது. இத்திட்டத்தில் 12,000 மாணவர்கள் பயன்பெற்று வருகிறார்கள். 1999-2000 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கென நிதி ஒதுக்கீடு ரூ.42 இலட்சங்களாகும்.

### 3.4 பார்வையற்ற மாணவர்கள் தேர்வு எழுத உதவுபவர்களுக்கு உதவி

பார்வையற்றோருக்கான சிறப்புப் பள்ளிகளில் கல்வி பயிலும் பார்வையற்ற மாணவர்கள் தேர்வுகளில் வினாக்களுக்கு இவர்கள் வாய்மூலம் சொல்லும் பதிலினை அவ்வாறே எழுத, பார்வையுள்ள உதவியாளரை வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள்.

பார்வையற்ற மாணவர்கட்கு தேர்வு எழுத உதவிபுரிபவர்களுக்கு ஒரு தேர்வுத் தாளுக்கு ரூ. 15 வீதம் உதவித்தொகை பெறும் பள்ளிகள் பின்வருமாறு.

1. பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி, பூவிருந்தவல்லி, சென்னை.
2. பார்வையற்றோருக்கான பெண்கள் அரசு மேல்நிலைப் பள்ளி, திருச்சிராப்பள்ளி.
3. பார்வையற்றோருக்கான சிறுமலர் மேல்நிலைப் பள்ளி, சென்னை.

4. பார்வையற்றோருக்கான புனித லூயிஸ் மேல்நிலைப் பள்ளி, சென்னை.

200 மாணவர்கள் இத்திட்டத்தினால் ஆண்டுதோறும் பயனடைந்து வருகிறார்கள். இத்திட்டத்திற்கென 1999-2000 ஆம் ஆண்டில் ரூ. 1.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.5. அரசு மண்டல பிரெய்லி அச்சகம்

பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி பூவிருந்தவல்லி வளாகத்தில் பார்வையற்றோருக்கு பிரெய்லி புத்தகங்களை அச்சிட்டுத் தரும் மண்டல பிரெய்லி அச்சகம் இயங்கி வருகிறது. ஒவ்வொரு வருடமும் இந்த அச்சகம் மூலம் அரசு பார்வையற்றோருக்கான பள்ளிகளில் பயிலும் பார்வையற்றோருக்கு ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்புவரை இலவசமாக பிரெய்லி புத்தகங்கள் அச்சிடப்பட்டு வந்தன. தற்போது, இயந்திரங்கள் சரிவர இயங்காததால் 1,130 புத்தகங்கள் இந்த நிலையத்தில் அச்சிடப்பட்டும், 400 புத்தகங்கள் வெளியிலிருந்து வாங்கப்பட்டும், ஒன்று முதல் பத்தாம் வகுப்பு வரை வழங்கப்பட்டது. இதைத் தவிர, மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு வகுப்புகளுக்கு ஒலி நாடாக்கள் மூலம் பாடங்கள் பதிவு செய்யப்பட்டு 170 ஒலி நாடாக்கள் வழங்கப்பட்டன. மேலும் இவ்வருடம் பரிசோதனை முறையில் ஆங்கில பாடம் மட்டும் அச்சிடப்பட்டு 5 தொகுப்புகள் வழங்கப்பட்டன. ஒவ்வோர் ஆண்டும் சுமார் 2,000 பார்வையற்ற மாணவர்கள் பயன் பெறுகின்றனர். 1999-2000 ஆம் நிதியாண்டிற்கு ரூ. 15.54 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.6 சிறப்புப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சி

சிறப்புக் கல்வியினை மேம்படுத்தும் வகையில் பார்வையற்றோர், செவித்திறன் குறைந்தோர் மற்றும் மனவளர்ச்சி குன்றியோருக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் பயிற்சி நடத்தப்படுகிறது. இப்பயிற்சிக்கான கால அளவு ஒரு வருடமாகும்.

பூவிருந்தவல்லியில் பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள மண்டலப் பயிற்சி மையத்தில் 35 ஆசிரியர்களுக்குப் பார்வையற்றோருக்கான பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இதில், மாநில அரசால் தேர்வு செய்யப்படும் 15



ஆசிரியர்களுக்கும் சேர்த்து பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சிக்காக 1999-2000 ஆம் நிதியாண்டில் ரூபாய் 5.11 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

செவித்திறன் குறைந்தோருக்குக் கற்பிக்கும் ஆசிரியர் பயிற்சி, சென்னையிலுள்ள சிறுமலர் காதுகேளாதோருக்கான பள்ளியில் நடத்தப்படுகிறது. ஒவ்வோர் ஆண்டும் 50 ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. 1997-98 ஆம் ஆண்டு முதல் பயிற்சியின்போது மாத உதவித் தொகை ரூ.300/- வழங்கப்பட்டு வருகிறது. இங்கு, மாநில அரசால் தேர்வு செய்யப்படும் 10 ஆசிரியர்களுக்கும் சேர்த்து, பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சிக்காக 1999-2000-ல் ரூ.4.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மனவளர்ச்சி குன்றியோருக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பயிற்சி, பாலவிகார் மனவளர்ச்சி குன்றியோருக்கான பள்ளியில் நடைபெறுகிறது. பயிற்சி பெறும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 25 ஆக 1997-98 முதல் உயர்த்தப்பட்டு நடைபெற்று வருகிறது. மாத உதவித் தொகை ரூ.300/- வழங்கப்பட்டு வருகிறது. 1999-2000 ஆம் ஆண்டில் இதற்கென ரூ.1.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.7 ஊனமுற்றோருக்கான பயிற்சி

கிண்டியிலுள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் காது கேளாதோருக்குப் பயிற்சி அளிப்பதற்காக ஒரு சிறப்புப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு தற்போது பேசும் திறன் இழந்து காது கேளாத 16 மாணவர்கள் பொருத்துநர் பிரிவில் பயிற்சி பெற்று வருகின்றனர். அவர்களுக்கு மாத உதவித்தொகை ரூ.100/- வழங்கப்பட்டு வருகிறது. 1999-2000-ல் இதற்கென ரூ.2.82 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பூவிருந்தவல்லியிலுள்ள பார்வையற்றோருக்கான அரசு தொழிற் பயிற்சி மையத்தில் ஒவ்வொரு வருடமும் மொத்தம் 30 பார்வையற்றோருக்கு கீழ்க்கண்ட தொழில் பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது:

1. பொருத்துநர் மற்றும் அடிப்படை இயந்திரம் இயக்குபவர் (ஓராண்டு காலம்)
2. மின் கம்பி சுற்றுபவர் (6 மாத காலம், இரு பிரிவாக)
3. புத்தகம் கட்டுபவர் (ஓராண்டு காலம்)

பயிற்சி பெறும் மாணவர்களுக்கு இலவசமாக இருப்பிடம், உணவு வழங்குவதைத் தவிர இரண்டு ஜோடி சீருடைகளும் வழங்கப்படுகின்றன. 1999-2000-ல் இதற்கென ரூ.13.15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3.8 நவீன உற்பத்திக்கூடம்**

முட்டுக்காட்டில் இயங்கிவந்த ஊனமுற்றோருக்கான நவீன பயிற்சி மற்றும் உற்பத்திக்கூடம் மாற்றப்பட்டு தற்போது கிண்டியில் இயங்கி வருகிறது. இந்த உற்பத்திக் கூடத்தில் தற்போது ஊனமுற்றோருக்கு இலவசமாக வழங்கப்படும் மூன்று சக்கர வண்டிகள், சக்கர நாற்காலிகள் மற்றும் மடக்குக் குச்சிகள் மட்டும் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

1998-99-ஆம் ஆண்டில் இந்த உற்பத்திக்கூடம் மூலம் 1,500 மூன்று சக்கர வண்டிகளும், 150 சக்கர நாற்காலிகளும் உற்பத்தி செய்யப்பட்டன. 1999-2000-ல் இதற்கென ரூ.60.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நவீன பயிற்சி மற்றும் உற்பத்திக்கூடம் இயங்கி வந்த முட்டுக்காடு நிலத்தை பல்வகை ஊனமுற்றோருக்கான தேசிய நிலையம் ஒன்றை ஆரம்பிப்பதற்கென மத்திய அரசின் வசம் 1997-ல் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**3.9 பார்வையற்ற பெண்களுக்கான தொழிற்கூடத்துடன் கூடிய அரசு மறுவாழ்வு மையம், பூவிருந்தவல்லி**

18 வயதிலிருந்து 40 வயது வரையிலான (தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு 45 வயதுவரை) பார்வையற்ற, ஆதரவற்ற, அனாதைப் பெண்கள் இந்த இல்லத்தில் சேர்க்கப்பட்டு சாக்குக் கட்டிகள் தயாரிப்பதிலும், துணி நெய்வதிலும் இவர்களுக்கு ஆறு மாதகாலம் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக்குப்பின் இவர்களுக்கு இவ்வில்லத்திலேயே படுக்கை விரிப்புகள், துண்டுகள், கட்டுத் துணிகள். மற்றும் சாக்குக் கட்டிகள் தயாரிப்பதில் வேலை அளிக்கப்படுகிறது. இப்பொருள்கள் அரசு மருத்துவமனை மற்றும் பள்ளிகளுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. மொத்தம் 40 பார்வையற்ற பெண்கள் இவ்வில்லத்தில் பயிற்சி பெற்று பயனடைந்து வருகிறார்கள். இந்நிலையத்திற்கு 1999-2000-இல் ரூ. 4.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.





**3.10 பயிற்சி பெற்ற பார்வையற்ற மற்றும் காது கேளாதோரை சிறப்புத் தொழில் பழகுநராக அமர்த்துதல்**

பூவிருந்தவல்லி பார்வையற்றோருக்கான அரசு தொழிற் பயிற்சி நிலையத்திலும், சென்னை, கிண்டியில் இயங்கும் அரசு தொழிற்பயிற்சி நிலையத்திலும் பயிற்சி பெற்ற, பார்வையற்ற மற்றும் காது கேளாதவர்கள் அரசு மற்றும் அரசு சார்பு மற்றும் தனியார் நிறுவனங்களில் சிறப்புத் தொழில் பழகுநராக மாதம் ரூ.400/- வீதம் உதவித் தொகையுடன் சிறப்புத் தொழில் பயிற்சியில் அமர்த்தப்படுகின்றனர். தொழில் பழகும் காலம் ஓராண்டு முடிந்தபின் அவர்கள் பயிற்சி பெற்ற அதே நிறுவனத்தில் காலியிடம் எழும்போது நிரந்தரப் பணியில் அமர்த்தப்படுகிறார்கள். இதன்மூலம் 1998-99-இல் எட்டு நபர்கள் பயனடைந்தார்கள். 1999-2000-இல் இதற்கென ரூ.0.39 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**3.11 ஊனமுற்றோருக்காக மூன்று சதவிகித இட ஒதுக்கீடு**

அரசு மற்றும் பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் (அரசு மற்றும் உள்ளாட்சி நிர்வாகம்) எழும் பணியிடங்கள் / பயிற்சியிடங்களில் மூன்று சதவிகிதம் ஊனமுற்றோருக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மூன்று சதவிகிதத்தில் ஒரு சதவிகிதம் பார்வையற்றோருக்கும், ஒரு சதவிகிதம் பேசும் திறன் இழந்த காது கேளாதோருக்கும், ஒரு சதவிகிதம் கை, கால் ஊனமுற்றோருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. கல்வித் துறையில் ஆசிரியர்கள் பணியிடத்தில் பார்வையற்றவர்களுக்கு இரண்டு சதவிகிதம் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3.12 வேலையற்ற பார்வையற்றோருக்கு வேலைவாய்ப்பற்றோர் நிவாரணத் தொகை**

வேலை கிடைக்காத பார்வையற்றோருக்கு நிவாரணத் தொகை கீழ்க்குறிப்பிட்டவாறு ஐந்து வருடக் காலத்திற்கு அல்லது 40 வயது வரை (தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு 45 வயது வரை) அல்லது வேலை கிடைக்கும் வரை இதில் எது முன்னரோ அதுவரை வழங்கப்படுகிறது.

**அ. வழங்கப்படும் நிவாரணத் தொகையின் விவரம்**

| | | |
|---|---|---|
| 1. | பட்டதாரிகள்/முதுநிலைப் பட்டதாரிகள் | ரூ.300/-மாதம் ஒன்றுக்கு. |
| 2. | புகுமுக வகுப்பு/மேல்நிலை வகுப்பு தேர்ச்சி/ பட்டப்படிப்பிற்குக் கீழ் | ரூ.250/- மாதம் ஒன்றுக்கு. |
| 3. | பத்தாம் வகுப்பு மற்றும் அதற்குக்கீழ் | ரூ.200/- மாதம் ஒன்றுக்கு. |

(அ) 18 வயதிற்கு மேல் 40 வயதிற்குள் (தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு 45 வயது வரை) இருக்க வேண்டும்.

(ஆ) வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்து ஓராண்டுக்கு மேல் காத்திருப்பவராக இருக்க வேண்டும்.

1998-99-ஆம் ஆண்டில் இதன் மூலம் 1,021 ஊனமுற்றோர்கள் பயனடைந்துள்ளனர். 1999-2000-இல் இதற்கென ரூ. 29.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3.13 சுய வேலைவாய்ப்பு**

கல்வித் தகுதியோ, தொழில் திறனோ அற்ற, ஊனமுற்ற நபர்களை வருமானம் தரக்கூடிய பணியில் அமர்த்த முடியாத பட்சத்தில், அவர்கள் சுய வேலைவாய்ப்பில் ஈடுபடும்பொருட்டு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடன் பெற்றுக்கொள்ள பரிந்துரைக்கப்படுகிறார்கள். ரூ.1,000/-அல்லது மொத்தக் கடன் தொகையில் மூன்றில் ஒரு பங்கு இதில் எது குறைவோ அது அரசு மானியமாக வழங்கப்படுகிறது. 1998-99-இல் 800 பேர்கள் பயனடைந்தார்கள். 1999-2000-இல் இத்திட்டத்தில் குறைந்தபட்சம் 800 ஊனமுற்ற நபர்கள் பயனடையும்வண்ணம் ரூ.8.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3.14 ஊனமுற்றோருக்கு இலவச உபகரணங்கள் வழங்குதல்**

ஒவ்வோர் ஆண்டும் ஊனமுற்றோருக்கு இத்துறை மூலம் இலவசமாக மூன்று சக்கர சைக்கிள்கள், சக்கர நாற்காலிகள், காதொலிக் கருவிகள், கருப்புக் கண்ணாடிகள், மடக்குக் குச்சிகள். பிரெய்லி கைக்கடிகாரங்கள் சூரிய ஒளியினால் இயங்கும் பேட்டரிகள் மற்றும் கால் பாதம் பாதிக்கப்பட்ட/வளைந்த நபர்களுக்கு சாதாரண மிதிவண்டியும் அதற்கு



பிரத்யேக காலணியும் வழங்கப்படுகின்றன. 1999-2000-இல் இதற்காக ஒதுக்கப்பட்ட நிதி மற்றும் பயனடைவோரின் எண்ணிக்கையைப் பற்றிய விவரங்கள் பின்வருமாறு:—

| | உபகரணங்களின் விவரம் | 1998-99 ஆம் ஆண்டில் பயனடைந்தவர்கள் | 1999-2000 ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு | 1999-2000 ஆம் ஆண்டில் பயன்பெற உள்ளோர் |
|---|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1. | மூன்று சக்கர வண்டிகள் | 1,500 | 33.75 | 1,500 |
| 2. | சக்கர நாற்காலிகள் | 150 | 2.40 | 150 |
| 3. | காதொலிக் கருவிகள் | 1,500 | 12.00 | 1,500 |
| 4. | கருப்புக் கண்ணாடிகள், மற்றும் மடக்குக் குச்சிகள் | 1,500 | 1.35 | 1,500 |
| 5. | சோலார் பேட்டரிகள் | 1,500 | 4.80 | 1,500 |
| 6. | பிரெய்லி கைக்கடிகாரங்கள் | 428 | 3.50 | 1,000 |
| 7. | சைக்கிளுடன் கூடிய பிரத்யேக காலணிகள் | 100 | 11.40 | 400 |
| | மொத்தம் | 6,678 | 69.20 | 7,550 |

**3.15 பார்வையற்றோரைத் திருமணம் செய்துகொள்ளும் பார்வையுள்ளவர்களுக்கானச் சலுகைகள்**

பார்வையற்றவரைத் திருமணம் செய்துகொள்ளும் பார்வையுள்ளவருக்குக் கொடுக்கப்படும் சலுகைகள் பின்வருமாறு:

1. பாராட்டுச் சான்றிதழ்
2. திருமணச் செலவிற்காக ரொக்கத் தொகை ரூ. 3,000/- மற்றும்
3. ரூ.7,000/-க்கான தேசிய சேமிப்புப் பத்திரம்.

ஒவ்வோராண்டும் இத்திட்டத்தின் மூலம் 100 தம்பதிகள் பயனடைவார்கள்.

இத்திட்டத்திற்காக 1999-2000-இல் ரூ. 10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[1999 மே 3

### 3.22 செயற்கை அவயங்கள் பொருத்தும் துணை நிலையம், மதுரை

கடுமையான கை, கால் ஊனமுற்றக் குழந்தைகளுக்கான அரசுப் பள்ளியில் பயிலும் ஊனமுற்றக் குழந்தைகளின் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு செயற்கை அவயங்கள் பொருத்தும் துணை நிலையம் ஒன்று மதுரையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையத்தின் மூலம் ஊனமுற்றக் குழந்தைகளுக்கு மருத்துவ அறுவை சிகிச்சை, இயற்பியல் சிகிச்சை மற்றும் உபகரணங்கள் ஆகியவை இலவசமாக அளிக்கப்படுகின்றன. இத்திட்டத்திற்காக 1999-2000 ஆம் ஆண்டில் ரூ.7.16 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது தற்போது மதுரை மாவட்ட மறுவாழ்வு மையத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மாநில விருதுகள்

ஊனமுற்றோருக்கான சேவையைப் பாராட்டி ஊக்கப்படுத்தும் நோக்கத்துடன் ஊனமுற்றோருக்கு அரிய சேவை புரிந்தவர்களுக்கு கீழ்கண்ட மாநில விருதுகள் சுதந்திர தினத்தன்றும் அனைத்துலக ஊனமுற்றோர் தினத்தன்றும் வழங்கப்படுகின்றன.

சிறந்த மாவட்ட ஆட்சியர், சிறந்த தொழிலதிபர், சிறந்த பணியாளர், சிறந்த ஆசிரியர், சிறந்த சமூகப் பணியாளர், சிறந்த மருத்துவர், சிறந்த நிறுவனம் மற்றும் சிறந்த மாணவர் (பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலைப் பள்ளியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பார்வையற்ற மற்றும் காது கேளாதோர்க்கானது) ஆகியோருக்கு மாநில விருதுகள் வழங்கப்படுகின்றன.

### 3.23 மாவட்ட மறுவாழ்வு மையங்கள்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் செங்கல்பட்டில் மாவட்ட மறுவாழ்வு மையம் ஒன்று ஊனமுற்றவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கி வருகிறது. இததிட்டம் மைய அரசு உதவியுடன் நடத்தப்படுகிறது. 1998-99-இல் பலவகைப்பட்ட ஊனமடைந்தவர்கள் சுமார் 1,000 பேர் இதன் மூலம் பயனடைந்து வருகிறார்கள். 1999-2000-ல் இதற்கான ஒதுக்கீடு ரூ. 17.47 இலட்சங்களாகும்.

இதே போன்று மாநிலத்தில் இதர 28 மாவட்டங்களிலும் மாவட்ட மறுவாழ்வு மையங்கள் 1997-98 ஆம் ஆண்டு மாநில நிதியுடன்



1999 மே 3]

நிறுவப்பட்டுள்ளன. இம்மாவட்ட மறுவாழ்வு மையங்களின் மூலமாக ஊனமுற்றவர்களைக் கண்டறிந்து அவர்களின் ஊனத்தன்மைக்கு ஏற்றவாறு உதவிகளும் உபகரணங்களும் மற்றும் தேவையான பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன. இவை தவிர இந்த மாவட்ட மையங்கள் ஏற்கெனவே மாவட்ட மறுவாழ்வு அலுவலகங்கள் மூலமாகக் கவனித்து வந்த பணிகளையும் மேற்கொள்ளும். 1997-98-இல் 19,572 பேர் பயனடைந்துள்ளனர். தசைப்பயிற்சி 400 பேர்களும் பேச்சுப் பயிற்சி 100 பேர்களும், காது கேட்கும் கருவிகளைப் பொருத்த காது அச்சிகள் 900 பேர்களும் இதில் அடங்குவர். இதற்காக ரூ.287.92 இலட்சம் 1999-2000 ஆம் ஆண்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.24 இளம்பிள்ளைவாத நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வுத் திட்டம்

இளம்பிள்ளைவாத நோய் வராமல் தடுக்கவும், இளம்பிள்ளைவாத நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கவும் 1989 ஆம் ஆண்டிலிருந்து இந்த ஒருங்கிணைந்த திட்டம் செயல்படுத்தப்பட்டது.

இளம்பிள்ளைவாத நோய் வராமல் தடுப்பது மற்றும் இளம்பிள்ளைவாத நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பது இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும். இத்திட்டத்தில் இளம்பிள்ளை வாதத்தினால் பாதிக்கப்பட்ட நபர்கள் கண்டறியப்பட்டு அவர்களுக்குத் தேவையான மருத்துவ சிகிச்சைகள், அறுவை சிகிச்சைகள், இயற்கை முறை உடற்பயிற்சி, இலவசமாக மூன்று சக்கர சைக்கிள், சக்கர நாற்காலி, உதவி உபகரணங்கள், அக்குள் கட்டை ஆகியவை வழங்கியும், சிறப்புப் பள்ளிகளில் சேர்த்தல், கல்வி உதவித்தொகை அளித்தல், தொழிற்பயிற்சி அளித்தல், வேலை வாய்ப்பு அளித்தல், சுயவேலைவாய்ப்புக்கு அரசு மானியத்துடன் வங்கிக் கடனுக்கு பரிந்துரைத்தல், முதியோர் ஓய்வூதியம் வழங்குதல் மற்றும் பராமரிப்பு உதவித் தொகை வழங்குதல் ஆகியவை மூலமும் உதவப்படுகிறார்கள். 1997-98 உடன் முடிவடைந்த இத்திட்டத்தின் மூலம் 1,19,952 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

மருத்துவ அறுவை சிகிச்சைகள் அனைத்து மாவட்ட தலைநகர மருத்துவமனைகளின் மூலம் செய்யப்படுகின்றன.

[1999 மே 3

**3.25 அனைத்துவிதமான ஊனங்களையும் அடையாளம் காணும் விரிவான மருத்துவ முகாம்கள்**

இளம்பிள்ளைவாதத் தடுப்புத் திட்டம் மாநிலம் முழுவதும் நிறைவேற்றப்பட்ட பிறகு இளம்பிள்ளைவாத நோயினால் பாதிக்கப்பட்டவர்களை மட்டும் உள்ளடக்காமல் வாய் பேசாத, காது கேளாத, பார்வையற்ற, மனவளர்ச்சி குன்றிய, தொழுநோயால் பாதிக்கப்பட்ட அனைத்து வகை ஊனமுற்றவர்களும் பயன்பெறும் வகையில் விரிவான மருத்துவ முகாம்கள் தொடங்கப்பட்டன. 1997-98 ஆம் ஆண்டில் 17,172 பயனாளிகள் (ஊனமுற்றோர்) இம்மருத்துவ முகாம் மூலம் கண்டறியப்பட்டு உதவி உபகரணங்கள் வழங்கப்பட்டன. 1998-99-ம் ஆண்டிற்கான மருத்துவ முகாம்கள் 56 (செங்கல்பட்டு மாவட்டம் நீங்கலாக மாவட்டத்திற்கு 2 வட்டங்கள் வீதம்) நடத்தப்பட்டன. இத்திட்டத்தின்கீழ் 1999-2000-இல் ரூ.44.49 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3.26 சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியரிடையே ஊனமுற்றோரைக் கண்டறியும் கணிப்பு முகாம்**

முதன் முறையாக ஒரு புதிய முயற்சியாக சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியரிடையே ஊனமுற்றோரைக் கண்டறியும் கணிப்பு முகாம் ஒன்று 1-3-1999 முதல் 12-3-1999 வரை நடத்தப்பட்டது. இம்முகாமில் 1,672 மாணவர்கள் பரிசோதிக்கப்பட்டதில் 503 பயனாளிகள் கண்டறியப்பட்டு இவர்களுக்கு கீழ்க்கண்டவாறு மறுவாழ்வு உதவிகள் வழங்கப்படவுள்ளன.

| அளிக்கப்படும் மறுவாழ்வு உதவி | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|
| கல்வி உதவித் தொகை | 293 |
| காது கேட்கும் கருவி | 7 |
| கால் தாங்கிகள் | 143 |
| ஊன்றுகோல்கள் | 31 |
| மூன்று சக்கர சைக்கிள் | 27 |
| செயற்கை அவயவங்கள் | 1 |
| சக்கா நாற்காலி | 1 |
| மொத்தம் | **503** |



1999 மே 3]

**3.27 தேசிய உடல் ஊனமுற்றோர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்**

உடல் ஊனமுற்றோருக்கு சுய வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் ஏனைய பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்காக கடனுதவி அளித்து அவர்களுக்கு பொருளாதார மறுவாழ்வு அளிக்கும் பொருட்டு மத்திய அரசு தேசிய உடல் ஊனமுற்றோர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தினை அமைத்துள்ளது. மேற்படிக் கழகத்திலிருந்து ஊனமுற்றவர்கள் கடனுதவி பெற, தமிழ்நாட்டிலுள்ள முறைப்படுத்தும் முகமைகளாக (Channalising Agency) மத்தியக் கூட்டுறவு வங்கியின் 23 மாவட்டக் கிளைகளை மாநில அரசு நியமித்துள்ளது.

**3.28 மாநில ஒருங்கிணைப்புக்குழு**

ஊனமுற்றோர் (இணையான வாய்ப்புகள், உரிமைகள், பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு) சட்டம் 1995-ஐ மத்திய அரசு இயற்றியுள்ளது. இச்சட்டம் 7-2-1996 முதல் செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் பிரிவு 13-இன்படி ஊனமுற்றோருக்கான பல்வேறு நலத் திட்டங்களின் செயல்பாட்டினைக் கண்காணிக்க மீளப் பார்வையிட மற்றும் இதுகுறித்து ஆலோசனைகள் வழங்கிட, மாநில கொள்கைகளை வகுத்திட உதவுதல் என்பது போன்ற சட்டத்தின்கீழ் தரப்பட்டுள்ள பல்வேறு பணிகளுடன் மாநில அரசு நிர்ணயிக்கும் ஏனையப் பணிகளையும் மேற்கொள்ள மாநில ஒருங்கிணைப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையின்கீழ், 13 அரசு சார்ந்த உறுப்பினர்களையும், 5 அரசு சார்பற்ற உறுப்பினர்களையும், 3 சட்டமன்ற உறுப்பினர்களையும் கொண்டது. இக்குழு ஆறு மாதங்களுக்கு ஒருமுறை கூடி ஊனமுற்றோருக்கான பல்வேறு திட்டங்கள் மற்றும் செயல்பாடுகளை ஆய்வு செய்து வருகிறது.

**3.29 மாநில செயல்பாட்டுக் குழு**

ஊனமுற்றோர் (இணையான வாய்ப்புகள், உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு) சட்டம், 1995-இன் சட்டப்பிரிவு 19-இன்படி ஊனமுற்றோர் சட்டத்தில் அளிக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்ற மாநில செயல்பாட்டுக் குழு சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டச் செயலர் அவர்களின் தலைமையின்கீழ் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் 11 அலுவல் சார்ந்த உறுப்பினர்களும் 6 அலுவல்சாரா

உறுப்பினர்களும் உள்ளனர். இக்குழு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை [1999 மே 3
கூடி ஒருங்கிணைப்புக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகள் மீது
நடவடிக்கை மேற்கொள்கிறது. .

## 3.30. ஊனமுற்றோருக்கான ஆணையர்

ஊனமுற்றோர் (இணையான வாய்ப்புகள், உரிமைகள், பாதுகாப்பு மற்றும் முழுபங்கேற்பு) சட்டம், 1995-இன் சட்டப்பிரிவு 60-இன்படி ஒவ்வொரு மாநில அரசும் இச்சட்டத்தினை செயல்படுத்த ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் நியமனம் செய்யப்பட வழிவகை செய்கிறது. அதன்படி சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறைச் செயலாளர் அவர்கள் ஊனமுற்றோருக்கான மாநில ஆணையராக நியமனம் செய்யப்பட்டார். தற்பொழுது ஊனமுற்றோர் மறுவாழ்வு இயக்குநர் ஊனமுற்றோருக்கான மாநில ஆணையராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர், ஊனமுற்றோரின் நலனுக்கென மாநில அரசின் துறைகளால் நிறைவேற்றப்படும் அனைத்துத் திட்டம் மற்றும் செயல்முறைகளுக்கும் ஒருங்கிணைப்பாளராக இருப்பார். மாநில அரசு வழங்கும் பணம் செலவிடப்படுவதை மேற்பார்வை செய்வார். ஊனமுற்றோருக்கு அளிக்கப்பட்டிருக்கும் உரிமைகள் மற்றும் சலுகைகளைப் பாதுகாக்க வழிமுறைகளை மேற்கொள்வார். ஊனமுற்றோர் சட்டம் செயல்படுத்துவது குறித்து மாநில அரசு வரையறுத்துள்ளவாறு அரசுக்கு அறிக்கை அனுப்பி அதன் நகலினைத் தலைமை ஆணையருக்கு அனுப்புவார். ஊனமுற்றோர் சட்டம், 1995-இன்கீழ் வரையறுக்கப்பட்ட அலுவல்களை நிறைவேற்ற ஆணையருக்கு அளிக்கப்படும் அதிகாரங்கள் உரிமை இயல்நடைமுறைகள் விதித் தொகுப்பு 1908-இன்படி நீதிமன்றத்திற்கு அளிக்கப்படும் அதிகாரங்களுக்கு இணையானவை களாகும். ஆணையர், மாநில ஒருங்கிணைப்புக் குழு மற்றும் மாநில செயல்பாட்டுக் குழுக்களின் அலுவல் உறுப்பினராவார்.

## அத்தியாயம்–4

### சமூகப் பாதுகாப்புத் துறை

4.1 தமிழக அரசு சமூகப் பாதுகாப்புத் துறை வழியே புறக்கணிக்கப்பட்ட, ஆதரவற்ற சிறார்கள் மற்றும் தவறிழைத்த சிறார்களின் நலனுக்காக பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. 1986 ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் சட்டம்



1999 மே 3]
மற்றும் 1956 ஆம் ஆண்டின் ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்புச்) சட்டத்தின் கீழ் அமைந்துள்ள நிறுவனங்கள் சமூகப் பாதுகாப்புத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன. வாழ்க்கைக் களத்தில் இறங்கும் முன்னர் பயிற்சியும், பக்குவமும் பெறுவதற்குச் சிறார்களின் நலனுக்கென அமைந்துள்ள இல்லங்களில் கேடில் விழுச்செல்வம் கல்வியுடன் ஊன்றுகோலனையத் தொழிற் பயிற்சியும் வழங்கப்படுகிறது.

### 4.2 1986 ஆம் ஆண்டில் இளைஞர் நீதிச்சட்டத்தின் கீழமைந்த நிறுவனங்கள்

(அ) வழிதவறி, ஆதரவிழந்த நிலையில் வந்த சிறார்களைப் பாதுகாத்துப் பொறுப்பேற்கும் கூர்நோக்கு (குறுகிய கால) இல்லங்கள் 18 உள்ளன.

| | |
|---|---|
| அரசினர் கூர்நோக்கு இல்லங்கள்.... (சென்னை, செங்கற்பட்டு, திருநெல்வேலி, காரைக்குடி, தஞ்சாவூர், விழுப்புரம், சேலம், தருமபுரி, ஈரோடு, வேலூர் மற்றும் திருச்சி.) | 11 |
| தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் கூர்நோக்கு இல்லங்கள் (மதுரை, கோவை, சென்னை, நாகப்பட்டினம், திண்டுக்கல், விருதுநகர் மற்றும் தூத்துக்குடி.) | 7 |
| மொத்தம் | 18 |

புறக்கணிக்கப்பட்ட, ஆதரவற்றச் சிறார்கள் இளைஞர் நலக் குழுமங்கள் மூலமாகவும், தவறிழைத்தச் சிறார்கள் இளைஞர் நீதிமன்றங்கள் மூலமாகவும் இவ்வில்லங்களில் சேர்க்கப்படுகின்றனர். அரசு சாரா அமைப்புகளின் கீழியங்கும் கூர்நோக்கு இல்லங்கள் பராமரிப்பு மானியமாக அரசிடமிருந்து மாதம் ஒன்றுக்கு ஒரு இல்லவாசிக்கு ரூபாய் 200 பெறுகின்றன.

(ஆ) இளைஞர் நலக் குழுமங்கள் மற்றும் இளைஞர் நீதிமன்றங்களினால் கல்வி மற்றும் நன்னெறிப் பயிற்சிக்கென இளைஞர் மற்றும் சிறப்பு இல்லங்களுக்கு அனுப்பப்படும் சிறார்களுக்கென

1986ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் சட்டப் பிரிவுகளின்கீழ் மாநிலத்தில் 21 இளைஞர் மற்றும் சிறப்பு இல்லங்கள் உள்ளன.

| | |
|---|---|
| **அரசினர் சிறப்பு இல்லங்கள்** (செங்கற்பட்டு (ஆண்கள்)-1, சென்னை (பெண்கள்)-1 | 2 |
| **அரசினர் இளைஞர் இல்லங்கள்** [சென்னை (பெண்கள்) சென்னை (ஆண்கள்), செங்கற்பட்டு இராணிப்பேட்டை, தஞ்சாவூர், கடலூர், பஞ்சப்பள்ளி, மல்லிப்புதூர், தட்டப்பாறை] | 8 |
| **தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் இளைஞர் இல்லங்கள்** (சென்னையில் 9, திண்டுக்கல், கோவை, தருமபுரி மதுரை, சேலம்). | 14 |
| மொத்தம் | 24 |

மனநோயால் பாதிக்கப்பட்ட சிறுவர் சிறுமியர்க்கெனச் சென்னை பாலவிஹார் நிர்வாகத்தின்கீழ் ஓர் இளைஞர் இல்லம் இயங்கி வருகிறது.

### 4.3 இளைஞர் நலக் குழுமங்கள்

1986-ம் ஆண்டின் இளைஞர் நீதிச் சட்ட பிரிவுகளின் கீழ்வரும் புறக்கணிக்கப்பட்ட சிறார்கள் தொடர்புள்ள வழக்குகளை விசாரிக்க 17 இளைஞர் நலக் குழுமங்கள் இயங்கி வருகின்றன. ஒரு தலைவர் மற்றும் அலுவல் சார்பற்ற 5 உறுப்பினர்களைக் கொண்டு (மகளிர் ஒருவர் உட்பட) இந்த இளைஞர் நலக் குழுமங்கள் இயங்கி வருகின்றன.

### 4.4 இளைஞர் நீதி மன்றங்கள்

சென்னை நகரில் பன்னிரெண்டாவது பெருநகா நீதிமன்ற நடுவர், மாவட்டங்களில் தலைமைக் குற்றவியல நீதிமன்ற நடுவர், குற்றவியல் நீதிமன்ற நடுவர், உட்கோட்ட குற்றவியல் முதல் வகுப்பு நடுவர் ஆகியோர் தவறிழைத்தச் சிறார்களின் வழக்குகளைத் தீர்வு செய்து வருகின்றனர்.



### 4.5 1956 ஆம் ஆண்டின் ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டத்தின்கீழ் அமைந்த நிறுவனங்கள்

1956 ஆம் ஆண்டின் ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டத்தின்கீழ் தவறிழைத்தவர்களாகக் கருதப்படும் பெண்கள் மற்றும் சிறுமியர்க்கு மகளிர் கண்காணிப்பு/பெண்கள் பாதுகாப்பு இல்லங்கள் புகலிடம் தந்து பயிற்சி மற்றும் மறுவாழ்வு அளிக்கின்றன. இத்துறையின்கீழ் 6 மகளிர் கண்காணிப்பு/பாதுகாப்பு இல்லங்கள் கீழ்க்குறிப்பிட்ட இடங்களில் இயங்கி வருகின்றன:—

| | |
|---|---|
| சென்னை | 2 |
| மதுரை | 1 |
| திருச்சி | 1 |
| சேலம் | 1 |
| கோயம்புத்தூர் | 1 |
| மொத்தம் | 6 |

மேற்குறிப்பிட்ட அரசினர் மகளிர் கண்காணிப்பு/பாதுகாப்பு இல்லங்களுடன் இணைத்து நீதிமன்ற விசாரணைக் காலத்தில் மகளிருக்குப் புகலிடம் அளித்துப் பராமரிக்க ஏதுவாக ஆறு மீட்பு இல்லங்கள் இயங்குகின்றன.

மணமாகாத, தாய்மார்களுக்கென சென்னையில், அரசினர் மகளிர் காப்பகத்தில் அரசு சார்பில் ஒரு இல்லமும், திருநெல்வேலி, அடைக்கலாபுரத்தில் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின்கீழ் ஒரு இல்லமும் இயங்குகின்றன. மேலும் திக்கற்ற மகளிருக்கென சென்னை மைலாப்பூரில் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின்கீழ் அபய நிலையம் என்ற இல்லமும் இயங்கி வருகிறது. தன்னார்வத் தொண்டு நிறுவனங்களில் உள்ள இல்லவாசிகளுக்கு நாளொன்றுக்கு தலா ரூபாய் 4.50 உணவு மானியமாக அரசு வழங்குகிறது.

### 4.6 கல்விப் பயிற்சி

அரசின் அனைத்து சிறப்பு/இளைஞர் இல்லங்களிலும் 8 ஆம் வகுப்பு வரை கல்வி அளிக்கப்படுகிறது. செங்கல்பட்டு அரசினர் சிறப்பு இல்லம் மற்றும் சென்னை அரசினர் பெண்கள் சிறப்பு இல்லங்களிலும் 10 ஆம் வகுப்புவரை கல்வி இவ்விரு இல்லங்களிலும் கணிப்பொறிப் பயிற்சியுடன் அளிக்கப்படுகிறது. உயர் கல்வியில் நாட்டமும் தகுதியும்

உள்ள இல்லவாசிகள், வெளியில் உள்ள மேல்நிலைப் பள்ளி, கல்லூரி, தொழில்நுட்பக் கல்லூரி, தொழிற் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் தொழில் கல்லூரியில் சேர்த்து பயிற்றுவிக்கப்படுகிறார்கள். விபரம் பின்வருமாறு:–

| | |
|---|---|
| மருத்துவ பட்டப் படிப்பு | 2 மாணவர்கள் |
| பொறியியல் பட்டப் படிப்பு | 1 மாணவன். |
| மருந்தியல் பட்டப் படிப்பு | 1 மாணவன். |
| இளங்கலைப் பட்டப் படிப்பு | 5 மாணவிகள் |
| செவிலியர் பட்டப் படிப்பு | 1 மாணவி |
| தொழிற் பயிற்சிச் சான்றிதழ் படிப்பு | 10 மாணவிகள் |
| தொழிற் பயிற்சிச் சான்றிதழ் படிப்பு | 30 மாணவர்கள் |

மேலும் சிறப்பு/இளைஞர் இல்லங்களிலிருந்து வீடேகிய பிறகும் தொடர்ந்து கல்வி பயில வேண்டி இல்லவாசிகள் 3 ஆண்டு காலம் பிற்காப்பு குழுமத்தில் தங்கி பயன் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. பள்ளிக் கல்வி மட்டுமல்லாது முறைசாராக் கல்வி மூலமும் இல்லவாசிகளுக்கு கல்வி அளிக்கப்படுகிறது.

### 4.7 தொழிற் பயிற்சி

சிறார்களுக்கிடையே தன்னம்பிக்கையினை மேம்படுத்தும் நோக்கில் சமூகப் பாதுகாப்புத் துறையின்கீழ் இயங்கும் சிறப்பு/இளைஞர் இல்லங்களில் இல்லவாசிகளுக்கு கீழ்க்குறிப்பிட்ட தொழிற் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. தச்சு, புத்தகம் கட்டுதல், இயந்திரத்தச்சு, கொத்து வேலை, தையல் மற்றும் பூவேலை, சோப்புத் தயாரிப்பு, தோட்டம் மற்றும் வேளாண்மை, நெசவு, இசைக்கருவிப் பயிற்சி, பாய் நெசவு, மாட்டுப் பண்ணை, கருமாரப் பணி மற்றும் உலோகப் பணி. இவை மட்டுமின்றி பின்வரும் குறுகிய கால தொழிற் பயிற்சிகளும் இல்லவாசிகளுக்கு அளிக்கப்படுகின்றன.

1. மெழுகுவர்த்தித் தயாரிப்பு
2. காகித பொம்மைகள் தயாரிப்பு
3. மின்விசை மாவு ஆலை
4. தானியங்கி வாகனங்கள் பழுதுபார்ப்பு
5. வீட்டு மின் அலகுப் பணி
6. தண்ணீர்க் குழாய் பழுதுபார்ப்பு



7. திரை அச்சு
8. பனியன் தயாரிப்பு

சென்னை, அரசினர் பெண்கள் சிறப்பு இல்லம் மற்றும் தஞ்சாவூர் அரசினர் இல்லங்களில் உள்ள தையற் தொழிற்கூடங்களும், செங்கல்பட்டு சிறப்பு இல்லத்தில் நெசவு தொழிற்கூடமும் தஞ்சாவூர் இராணிப்பேட்டை இளைஞர் இல்லங்களில் தச்சுத் தொழிற்கூடங்களும் நவீன இயந்திரமயமாக்கப்பட்டுள்ளன. இராணிப்பேட்டை, அரசினர் இளைஞர் இல்லத்தில் மின்பற்றவைப்பு மற்றும் உற்பத்தித் தொழிற்கூடம் தொடங்கப்பட்டு மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

மகளிர் காப்பகங்கள்/பெண்கள் பிற்காப்பு நிறுவனங்களில் தையல் மற்றும் பூவேலை, பாய் நெசவு மற்றும் கை நெசவு ஆகியவற்றில் பயிற்சி வழங்கப்படுகிறது. சென்னை, அரசினர் மகளிர் காப்பகத்தில் இல்லவாசிகளுக்கு மின் சலவையகப் பயிற்சி வழங்கப்படுகிறது.

காஞ்சிபுரம் மாவட்டம் ஆத்தூரில் உள்ள சிறார்களுக்கான பிற்காப்பு நிறுவனத்தில் 20 இல்லவாசிகள் புத்தகம் கட்டுதல், கருமாரப் பணி மற்றும் வேளாண்மை ஆகிய தொழில்களில் பயிற்சி பெறுகிறார்கள். இவர்களில் முதலாம் ஆண்டு பயில்பவர்கள் மாதமொன்றுக்கு ரூ.30-ம் இரண்டாம் ஆண்டு பயில்பவர்கள் ரூ.50-ம் உதவித் தொகை பெறுகிறார்கள்.

சென்னை, அரசினர் பெண்கள் சிறப்பு இல்லத்தில் குழந்தைகள் காப்பகம் ஒன்று இயங்கி வருகிறது. 15 இல்லவாசிகள் இக்குழந்தைகள் காப்பகப் பிரிவில் பயிற்சி பெறுகிறார்கள். 20 இல்லவாசிகளுக்கு மனையியல் பயிற்சி அளிக்கப்படுகின்றது. இளைஞர்/சிறப்பு இல்லத்தில் பயிற்சி பெற்று வெளியே சென்ற முன்னாள் இல்லவாசிகள் தங்குவதற்கான ஒரு பிற்காப்பு விடுதி சென்னை அரசினர் இளைஞர்/சிறப்பு இல்ல வளாகத்தில் இயங்கி வருகின்றது. 10 இல்லவாசிகள் பயன் பெறுகிறார்கள்.

சென்னை, இராயபுரம், தஞ்சாவூர் மற்றும் கடலூர் இளைஞர் இல்லங்களில் இயங்கும் இரு சக்கரத் தானியங்கி வாகனங்கள் பழுதுபார்ப்புப் பயிற்சிக் கூடத்தில் 30 சிறார்கள் பயிற்சி பெறுகிறார்கள்.

தஞ்சாவூர் மற்றும் இராணிப்பேட்டை இளைஞர் இல்லங்களில் ஹாலோ பிளாக் சிமெண்ட் செங்கற்கள் தயாரிக்கும் தொழிற்கூடமும்,

சென்னை அரசினர் பெண்கள் இளைஞர் மற்றும் சிறப்பு இல்லத்தில் மகளிருக்கான சுகாதாரத் துண்டுகள் தயாரிக்கும் தொழிற்கூடமும், இராணிப்பேட்டை, அரசினர் இளைஞர் இல்லத்தில் திரை அச்சு தொழிற்கூடமும் தொடங்கப்பட்டு பயிற்சியளிக்கப்படுகிறது.

### 4.8 பிற்காப்பு இல்லங்கள்

இளைஞர் மற்றும் சிறப்பு இல்லங்களில் பயிற்சி முடிந்து வெளியேறும் சிறுவர்களின் பராமரிப்புக்காக மூன்று பிற்காப்பு இல்லங்கள் உள்ளன. இவற்றில் சிறுவர்களுக்கான இரண்டு இல்லங்கள் ஆத்தூர் (காஞ்சிபுரம மாவட்டம்) மற்றும் மதுரையிலும், பெண்களுக்கான ஓர் இல்லம் வேலூரிலும் உள்ளன. கல்விப் பயிற்சி மற்றும் தொழிற் பயிற்சி பெற்றுவரும் இல்லவாசிகள் பயிற்சியை முழுமையாக முடித்து வெளியேறும் வகையில், சிறப்பு இல்லங்களிலிருந்து வீடேகிய பிறகு மேலும் மூன்று ஆண்டு காலம் பிற்காப்பு இல்லங்களில் தங்கி பயன்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன் முக்கிய நோக்கம் இல்லவாசிகள் நிறைவான கல்வி அல்லது தொழிற் பயிற்சி பெறவேண்டும் என்பதே ஆகும். இவ்வகையான ஏற்பாட்டின் மூலம் பயிற்சி பெற்ற இல்லவாசிகள் தன்னம்பிக்கையுடன் இளைஞர்/சிறப்பு இல்லங்களை விட்டுச்செல்லும் மனநிலை உருவாகிறது.

### 4.9 இளைஞர் வழிகாட்டி நிலையங்கள்

சென்னை, மதுரை, வேலூர், தருமபுரி, கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின்கீழ் இளைஞர் வழிகாட்டி நிலையங்கள் இயங்கி வருகின்றன. இளைஞர் நலக் குழுமங்கள், இளைஞர் நீதிமன்றங்கள் மற்றும் அரசு சாரா அமைப்புகளால் அனுப்பப்படும் சிறுவர்/சிறுமியரின் மனநிலையை இந்நிலையங்கள் ஆராய்ந்து அவர்களின் நல்வாழ்வுக்காக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றிய பரிந்துரைகளையும், ஆலோசனைகளையும் வழங்குகின்றன.

### 4.10 மறுவாழ்வு நடவடிக்கைகள்

சமூகப் பாதுகாப்புத் துறையின்கீழ் இயங்கும் நிறுவனங்களில் பயிற்சி பெற்று வெளியேறும் இல்லவாசிகளின் மறுவாழ்வில் இத்துறை அதிகமான அக்கறை கொண்டுள்ளது.



1. இத்துறையில் தமிழ்நாடு தேர்வாணையத்தின் வரம்புக்குட்படாத பதவிகளில் முன்னாள் இல்லவாசிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் திட்டமும், திருமணம் செய்துகொள்ளும் வீடேகிய பெண் இல்லவாசிகளுக்குத் திருமண நாள் செலவாக ரூ.300/-ம் புதுவாழ்வு தொடங்க உதவித் தொகையாக ரூ.1000/-ம் வழங்கும் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை 16 பெண்கள் இந்த உதவியைப் பெற்றுள்ளனர்.

2. மகளிர் காப்பகங்களிலிருந்து திருந்தி வெளியேறும் ஒழுக்க நெறி பிறழ்ந்த பெண்கள் சுயவேலைவாய்ப்பு பெற "சமூக பாதுகாப்பு இல்லவாசிகளின் நல நிதி" ஏற்படுத்தப்பட்டு அதிகபட்சமாக ஒருவருக்கு ரூ.5000/-ம் வரை நிதியுதவி அளித்து, கறவை மாடுகள், சிறு கடைகள், தையற்கடை போன்றவை வைத்துச் சொந்தமாகத் தொழில் செய்து முன்னேற வகை செய்யப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் இதுகாறும் 142 பெண்கள் மறுவாழ்வு பெற்றுள்ளனர்.

### 4.11 துறையில் நடைமுறைப்படுத்தப்படும் இதர உதவித் திட்டங்கள்

#### (அ) தொழிற் பயிற்சி பெறும் இல்லவாசிகளுக்கு ஊக்கத் தொகை வழங்குதல்

அரசினர் இளைஞர் சிறப்பு இல்லங்களில் தொழிற் பயிற்சி பெறும் இல்லவாசிகளில் முழுத் திறமை வாய்ந்த மற்றும் ஓரளவு திறமை வாய்ந்த இல்லவாசிகளுக்கு முறையே மாதம் ரூ.50/-மற்றும் ரூ.30/- வீதம் ஊக்கத் தொகை அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தில் ரூ.0.65 இலட்சம் செலவில் ஆண்டுதோறும் 150 இல்லவாசிகள் பயன்பெற்று வருகின்றனர்.

#### (ஆ) சிறார்கள் நலனுக்கான குடும்ப உதவித் திட்டம்

வறுமையின் காரணமாக இளைஞர் இல்லங்களுக்கு அனுப்பப்படும் சிறுவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு உதவும் வண்ணம் சிறார்களை அவர்களது பெற்றோர்/உறவினரிடம் ஒப்படைத்து அவர்களது குடும்பத்திற்கு நிதியுதவி வழங்கும் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. தகுதியான சிறார்கள் ஒரு குழுவின் மூலம் தேர்வு செய்யப்பட்டு அவர்களின் பராமரிப்பு, கல்வி, உடல் நலம் இவற்றுக்கென ஓர் இல்லவாசிக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/- வீதம் உதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் ஆண்டுதோறும் ரூ. 1.20 இலட்சம் செலவில், 100 இல்லவாசிகள் பயன் பெறுகிறார்கள்.

இ) சிறார்கள் பிச்சையெடுத்தலை ஒழித்தல்

பிச்சையெடுக்கும் சிறார்களைக் கண்டறிந்து அப்பழக்கத்திலிருந்து அவர்களை விடுவித்து மறுவாழ்வு அளிக்கும் வகையில் அரசின் மானிய உதவியுடன் சென்னை செனாய் நகரில் இந்தியக் குழந்தைகள் நலச் சங்கம் எனும் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் கீழ் இளைஞர் வழிகாட்டி நிலையம் ஒன்று இயங்கி வருகின்றது.

**4.12 சாலையோரச் சிறார்களுக்கான இரவுப் புகலிடங்கள்**

சாலையோரச் சிறார்களின் நலன் குறித்து, தமிழக அரசு சிந்தித்து, முதற்கட்டமாக அவர்களுக்கு இரவு விடுதிகளை 'அமைக்கலாம் எனத் திட்டம் வகுத்தது. இவ்வகைச் சிறார்கள் தங்கள் வாழ்க்கையை பெரும்பாலும் நடைபாதை ஓரங்களிலும், பேருந்து நிழற்குடைகளிலும் நடத்துகிறார்கள். இந்நிலை, அவர்களைச் சமூக விரோதிகளிடம் தொடர்பு ஏற்படுத்தி குற்றவாளிகளாக மாற வழிவகை செய்கிறது. இச்சிறார்களுக்கு இத்தங்கும் புகலிடங்கள் மறுவாழ்வு வழங்கும் விதத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் அரசின் மானிய உதவியுடன் 23 புகலிடங்களை நடத்துகின்றன. இவற்றுள் 7 புகலிடங்கள் இந்திய அரசின் மானிய உதவியுடனும் எஞ்சியுள்ள 16 புக்லிடங்கள் தமிழக அரசின் மானிய உதவியுடனும் செயல்படுகின்றன. தமிழ்நாடு அரசு ஒவ்வொரு இல்லத்திற்கும் ஆண்டுக்கு தலா ரூ. 65,000 செலவில் முறை சாராக் கல்வி, தொழிற் கல்வி, மற்றும் ஒரு வேளை உணவுச் செலவினங்களுக்காக ஒட்டுமொத்த மானிய உதவி வழங்குகின்றது. இவ்வில்லங்கள் கீழ்க்கண்ட இடங்களில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| சென்னை | | |
| மதுரை | - | 12 |
| சேலம் | - | 3 |
| விழுப்புரம் | - | 1 |
| வேலூர் | - | 1 |
| கோயம்புத்தூர் | - | 1 |
| திருநெல்வேலி | - | 1 |
| திண்டுக்கல் | - | 1 |
| திருச்சி | - | 1 |
| இராமநாதபுரம் | - | 1 |
| | - | 1 |
| மொத்தம் | - | 23 |



சாலையோரச் சிறார்களுக்கு இரவு நேரங்களில் இப்புகலிடங்கள் பாதுகாப்பாக அமைந்துள்ளன. இவ்வில்லங்களில் சுமார் 2,600 சிறார்கள், தொழிற்பயிற்சி மற்றும் முறைசாராக்கல்வி பெற்று பயன் பெறுகின்றனர்.

**4.13 துன்புற்ற குழந்தைகள் நிவாரண மையம்**

குழந்தைகளைத் தவறான செயல்களுக்குப் பயன்படுத்துதல், மற்றும் புறக்கணிப்பதைத் தடுக்கும் நோக்குடன் சென்னை செனாய் நகரில் இந்தியக் குழந்தைகள் நலச் சங்கம் எனும் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின்கீழ் துன்புற்ற குழந்தைகள் நிவாரண மையம் ஒன்றை அரசு செயல்படுத்தி வருகிறது. குழந்தைகளைத் துன்புறுத்துவதையும் தவறாகப் பயன்படுத்தப்படுவதையும் அறிய நேரிடும் சேவை மனப்பான்மையுள்ள நபர்கள் இம்மையத்தில் முறையிடலாம். இம்மையம் தலையிட்டு அக்குழந்தைத் தவறான வழியில் பயன்படுத்தப்படுதலைத் தடுக்க நடவடிக்கை மேற்கொள்வதுடன், அக்குழந்தைக்குத் தற்காலிகமாகப் புகலிடம் மற்றும் பாதுகாப்பும் அளிக்கிறது. குழந்தைகள் பெற்றோருக்கும் ஆலோசனை வழங்கி வழிகாட்டுகிறது. குழந்தைகள் தவறான வழியில் பயன்படுத்தப்படுவதைத் தடுக்கும் நோக்கத்துடன் பொதுமக்களிடையே விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்கிறது. இத்திட்டத்தின் மூலம் 100 குழந்தைகள் பயன் பெறுகிறார்கள்.

**4.14 குழந்தைகளுக்கானத் தொலைபேசி உதவித் திட்டம்**

இது துன்புறும் சூழ்நிலையில் உள்ள சிறார்கள் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள வசதி செய்யும் திட்டமாகும். துன்புறும் சூழ்நிலையில் உள்ள குழந்தையோ அல்லது குழந்தையின் துன்புறும் சூழலைக் காண நேரும் நபரோ 1098 என்ற எண்ணுக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளலாம். இத்தொலைபேசி எண் இதற்கென சிறப்பாக ஒதுக்கிடு செய்யப்பட்டதாகும். இது நாடு முழுவதற்கும் பொதுவான தொலைபேசி எண்ணாகும். இதைப் பயன்படுத்த கட்டணம் எதுவும் செலுத்தத் தேவையில்லை. துன்பச் சூழலில் உள்ள அக்குழந்தைக்கு தேவையான அனைத்து உதவிகளும் செய்து தரப்படும். இதற்கென அரசு மற்றும் அரசு சாரா அமைப்புகள் அடங்கிய ஒருங்கிணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டம் மைய அரசின் நிதியுதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலமாக செயல்படுத்தப்படும். தொலைபேசிக் கருவிகள் நிறுவுதல், தொலைபேசி அழைப்புகளை ஏற்கும் இரு மையங்களுக்கு

இணைப்புகள் ஏற்படுத்துதல் போன்ற பணிகள் தொலைத் தொடர்புத் துறையினரால் ஏற்கெனவே முடிக்கப்பட்டுவிட்டன. இத்திட்டம் ஏப்ரல் 1999-ல் துவங்கப்பட்டுவிடும். இத்திட்டத்தை ஒருமுகப்படுத்தும் பணியை சமூகப் பாதுகாப்புத் துறை மேற்கொள்ளும்.

இத்திட்டத்தை மேற்பார்வை செய்யவும் கண்காணிக்கவும் மாநகர அறிவுரை குழுமம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்குழுமம் யுனிசெஃப் சார்பாளர், அரசு சாரா அமைப்புகள், இந்திய அரசின் தகவல் துறை, ரயில்வே, தொலைத் தொடர்புத் துறை, சென்னை மாநகராட்சி, மாநில அரசின் சமூக நலத் துறை, குழந்தைகள் மருத்துவமனை, காவல் துறை, ஆகிய துறைகளின் அலுவலர்களை உறுப்பினர்களாகக் கொண்டிருக்கும். சமூகப் பாதுகாப்புத் துறை இயக்குநர் இக்குழுமத்தின் தலைவராக இருப்பார்.

## 4.15 சிறப்பு பராமரிப்பு மையங்கள்

இளைஞர்/சிறப்பு இல்லங்களில் பயிலும் ஆதரவற்ற அனாதைச் சிறார்களுக்கு அன்பும், அரவணைப்பும் அளிக்கும் வகையில் 2 சிறப்பு பராமரிப்பு மையங்கள் (சிறுமியர்க்கு 1 சிறுவர்களுக்கு 1) துவங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. சென்னை அரசினர் பெண்கள் சிறப்பில்லத்தில் ஒரு மையமும் இராணிப்பேட்டை அரசினர் இளைஞர் இல்லத்தில் ஒரு மையமும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படுகின்றன. ரூ.1.20 இலட்சம் செலவில் 100 சிறார்கள் பயன்பெறுகிறார்கள். சிறுவர் மற்றும் சிறுமியர்களைப் பராமரிக்க இல்லத்தாய்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## 4.16 பயிற்சி பெற்ற இல்லவாசிகளுக்கு தொழிற்கருவிகள் வழங்குதல்

அரசினர் இளைஞர்/சிறப்பு இல்லங்கள் மற்றும் மகளிர் காப்பகங்களில் பல்வேறு தொழில் மையங்களில் பயிற்சி பெற்று வெளியேறும் இல்லவாசிகளுக்கு உதவி வழங்கும் திட்டத்தை அரசு செயல்படுத்துகிறது. கீழ்க்கண்ட 12 தொழிற் பிரிவுகளில் பயிற்சி பெற்ற 45 இல்லவாசிகளுக்கு அவர்கள் சுயமாகத் தொழில் தொடங்க தேவையான தொழில் கருவிகள் மற்றும் உபகரணங்கள் வழங்க அரசு வழிவகை செய்துள்ளது.

| தொழிற் பிரிவுகள் | உதவித் தொகை |
|---|---|
| 1. தச்சு | 2,000 |
| 2. நெசவு | 1,000 |



| | |
|---|---|
| | 1,000 |
| 3. புத்தகம் கட்டுதல் | 500 |
| 4. தோட்டம் மற்றும் வேளாண்மை | 500 |
| 5. கொத்துப் பிரிவு | 2,500 |
| 6. தையல் | 1,000 |
| 7. பூத்தையல் | 1,000 |
| 8. உலோக வேலை | 1,000 |
| 9. பாய் நெசவு | |
| 10. வீட்டு மின் இணைப்பு மற்றும் | 1,000 |
| குழாய் நீர் இணைப்பு | 1,000 |
| 11. மின் பற்றவைப்பு | 2,000 |
| 12. இரண்டு சக்கர வாகனப் பராமரிப்பு | |

1998-99-ம் ஆண்டில் ரூபாய் 28,000 செலவில் 17 இல்லவாசிகள் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்துள்ளனர்.

## 4.17 திட்ட முன்னேற்றம் மற்றும் கணிப்பாய்வுப் பிரிவு

யூனிசெப் உதவியுடன் 1991-ம் ஆண்டில் சமூகப் பாதுகாப்புத் துறை இயக்ககத்தில் திட்ட முன்னேற்றம் மற்றும் கணிப்பாய்வுப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. சமூகப் பாதுகாப்புத் துறையினால் செயலாக்கப்படும் குழந்தைகள் நலத் திட்டங்களைக் (நிறுவனங்கள் மற்றும் நிறுவனங்களில் சாராத பணிகள்) கண்காணிப்பதுடன் மட்டுமின்றி நிறுவனங்களில் குழந்தைகளுக்கு வழங்கப்படும் சேவை குறைந்தபட்ச தரத்திலேனும் இருக்குமாறு உறுதி செய்தலும் இப்பிரிவின் நோக்கங்களாகும்.

துயருறும் சூழ்நிலையில் உள்ள சிறார்கள் சார்ந்த கருத்தரங்குகள் நடத்துதலோடு தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் செயல்படுத்தப்படும் சாலையோரச் சிறார்களுக்கான நலத் திட்டங்கள், போன்ற பணிகளையும் திட்ட முன்னேற்றம் மற்றும் கணிப்பாய்வுப் பிரிவு கவனித்து வருகிறது.

## 4.18 போதை மருந்தினைத் தவறாகப் பயன்படுத்துதலைத் தடுக்கும் திட்டம்

கீழ்க்காணும் திட்டங்களை செயல்படுத்தத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மைய அரசின் நிதி உதவி பெறுகின்றன.

| நிதி உதவிக்கான திட்டங்களின் தலைப்பு | | தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) விழிப்புணர்வு மற்றும் தடுப்புக் கல்வி | .. | 3 |
| (2) போதை மருந்து விழிப்புணர்வு ஆலோசனை மற்றும் உதவி மையம் | .. | 14 |
| (3) போதைக்கு அடிமையானவர்களுக்கு சிகிச்சையளித்தல் மற்றும் மறுவாழ்வளித்தல் | .. | 9 |
| (4) போதைத் தடுப்பு முகாம் | .. | 1 |
| மொத்தம் | .. | 27 |

இத் திட்டங்களின் செயல்பாட்டினை ஆய்வு செய்வதில், சமூகப் பாதுகாப்புத் துறை இயக்குநர் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கும் மைய அரசிற்குமிடையே மாநில ஒருங்கிணைப்பாளராக செயல்படுகிறார். 1998-99-ம் ஆண்டில் 27 தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் கருத்துருக்கள் நிதி உதவிக்காக மைய அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

## அத்தியாயம்-5

### முதியோர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் :

5.1. இந்தத் திட்டம் முதியோர்களுக்குச் சமூகப் பாதுகாப்பு அளிக்கக் கூடிய முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். உற்றார், உறவினர் ஆதரவின்றி வாழ வழியற்றவர்களுக்குச் சமூகப் பாதுகாப்பு அளிக்கும்பொருட்டு கீழ்க்கண்ட ஐந்து இனங்களின்கீழ் இத்திட்டத்தை மாநில அரசு செயல்படுத்தி வருகிறது.

1. முதியோர் உதவித் தொகை (பொது) திட்டம் (1-4-1962 முதல் செயல்படுத்தப்படுவது).

2. முதியோா உதவித் தொகை (ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர்) திட்டம் (1-11-1974 முதல் செயல்படுத்தப்படுவது).

3. முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற விதவை) திட்டம் (1-6-1975 முதல் செயல்படுத்தப்படுவது).

4. முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள்) திட்டம் (15-3-1981 முதல் செயல்படுத்தப்படுவது).



5. முதியோர் உதவித் தொகை (கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்றப் பெண்கள்) திட்டம் (25-4-1986 முதல் செயல்படுத்தப் படுவது).

ஆதரவற்ற முதியோர்களுக்கு மாதந்தோறும் வழங்கப்படும் உதவித் தொகை 1-4-1962-ல் ரூ.20 ஆக வழங்கப்பட்டு வந்தது. அவ்வப்போது இவ்வுதவித் தொகை படிப்படியாக உயர்த்தப்பட்டு 31-3-1998 வரை ரூ.100 வழங்கப்பட்டதை உயர்த்தி 1-4-1998 முதல் மாதம் ஒன்றுக்கு ரூ.150 வீதம் வழங்கப்பட்டு வருகிறது.

தகுதி படைத்த அனைத்து விண்ணப்பங்களுக்கும் உச்சவரம்பின்றி முதியோர் ஓய்வூதியத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்கென 1999-2000-ஆம் ஆண்டிற்கு ரூ.141.19 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 5.2. முதியோர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் :

#### (1) முதியோர் உதவித் தொகைத் (பொது) திட்டம்

பிழைப்புதவி இல்லாமலும், ஆதரவு இல்லாமலும் உள்ள அனைத்து ம்ுதியோர்களுக்கும் ஓய்வூதியம் வழங்க இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு 1-4-1962 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆதரவற்ற மீனவர்களும், நெசவாளர்களும் இத்திட்டத்தின்கீழ் பயன்பெறுவர். தொழுநோய், மனநோய், பாரிசவாய்வு மற்றும் அவயம் இழந்து வருவாய் ஈட்ட முடியாத நபர்கள் உதவித் தொகை பெற குறைந்தபட்ச வயது வரம்பு 60 ஆகும். மற்ற ஆதரவற்ற நபர்களுக்குக் குறைந்தபட்ச வயது வரம்பு 65 ஆகும். மிகவும் முதியவராகத் தோற்றமளிப்பவர்க்கு வயதுச் சான்றிதழ் சமர்ப்பிக்கத் தேவையில்லை என்றும், இவற்றில் ஐயம் ஏற்படும் நபர்களுக்கு இவர்களின் பொருளாதார நிலைமை, வயது மற்றும் இருப்பிடம் குறித்து கிராமப் பஞ்சாயத்து மற்றும் நகரப் பஞ்சாயத்துத் தீர்மான நகலைச் சமர்ப்பித்தல் போதுமானது என்று 27-4-1998இல் அரசு ஆணையிட்டுள்ளது.

#### மத்திய அரசின் பங்கு :

தற்பொழுது முதியோர் உதவித் தொகைத் (பொது) திட்டத்தின்கீழ் பயன்பெறும் 65 வயது முடிந்த பயனாளிகளுக்கு மாதந்தோறும் வழங்கப்பட்டுவரும் உதவித் தொகை ரூ.150 இல் மத்திய அரசின் பங்கு ரூ.75 ஆகும்.

**(2) முதியோர் உதவித் தொகைத் (ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர்) திட்டம்:**

ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர்களும் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறும் வகையில் விரிவுபடுத்தப்பட்டு 1-11-1974 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. உடல் ஊனத்தின் அளவு 50 சதவிகிதம் அல்லது அதற்கு மேலுமுள்ள ஆதரவற்ற உடல் ஊனமுற்றவர்கள் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறத் தகுதியுடையவராவர். தொடக்கத்தில் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறுபவர்களின் வயது வரம்பு 55 ஆக இருந்ததைப் பின்னர் 6-10-1975 முதல் 45 ஆக தளர்த்தப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியர், மாவட்ட மருத்துவ அலுவலர் மற்றும் மாவட்டச் சமூக நல அலுவலரைக் கொண்ட குழு ஒன்று 19-12-1980 இல் ஏற்படுத்தி, அக்குழுவானது ஊனமுற்றோரிடமிருந்து ஓய்வூதியம் கோரி பெறப்படும் மனுக்களை ஆய்வு செய்து ஊனத்தின் கடுமையான தன்மைக்கேற்ப ஊனமுற்றோருக்கு வயது வரம்பின்றி ஓய்வூதியம் வழங்கும் வகையில் பரிந்துரை செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டது. அப்பரிந்துரையின்பேரில் ஊனமுற்றோர்களுக்கு உதவி வழங்கப்பட்டு வருகிறது. இவ்வுதவி தொழுநோயாளிகளும் பயன்பெறும் வகையில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இரு கால்களும் இழந்த ஊனமுற்றவர்களைப் பொறுத்தமட்டில் அவர்கள் மருத்துவச் சான்றிதழ் சமர்ப்பிக்கத் தேவையில்லை என்று 27-4-1998இல் அரசு ஆணையிட்டுள்ளது.

**(3) முதியோர் உதவித் தொகைத் (ஆதரவற்ற விதவை) திட்டம்:**

ஆதரவற்ற விதவைகளும் பயன்பெறும் வகையில் 1-6-1975 முதல் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. ஆரம்பத்தில் இத்திட்டத்தின்படி பயன்பெறும் பயனாளிகளின் குறைந்தபட்ச வயது வரம்பு 45 என நிர்ணயிக்கப்பட்டிருந்ததைப் பின்னர் 27-4-1978 அரசாணைப்படி 40 ஆக தளர்த்தப்பட்டது. மேலும், இத்திட்டத்தின்கீழ் பயன்பெறும் பயனாளிகளின் வயது வரம்பினை நீக்கி 25-4-1990 இல் ஆணையிடப்பட்டது. தகுதியின் அடிப்படையில் மறுமணம் செய்யாமல் விதவையாக உள்ள ஆதரவற்றப் பெண்களுக்கு 18 வயது நிரம்பிய



வாரிசு இருந்தாலும் அவர்களுக்கும் இத்திட்டத்தின்கீழ் உதவித் தொகை வழங்க 2-6-1998இல் அரசு ஆணையிட்டுள்ளது. விதவைப் பெண்களுக்கு அளிக்கும் உதவித் தொகை குறித்து சம்பந்தப்பட்ட நபர்கள் குறித்த அறிக்கையை கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர்களிடமிருந்து பெறுவதற்குப் பதிலாக உள்ளூர் கிராமப் பஞ்சாயத்து மற்றும் நகரப் பஞ்சாயத்துத் தீர்மான நகலைச் சமர்ப்பிக்கும்படி 27-4-1998இல் ஆணையிடப்பட்டுள்ளது.

**(4) முதியோர் உதவித் தொகைத் (ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள்) திட்டம்:**

இத் திட்டம் 1981 ஆம் ஆண்டிலிருந்து ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்களும் பயன்பெறும் வகையில் விரிவுபடுத்தப்பட்டது. இவர்களுக்குக் குறைந்தபட்ச வயது 60 ஆக நிர்ணயிக்கப்பட்டது. முதியோர் உதவித் தொகைத் (பொது) திட்டத்தில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகள் இவர்களுக்கும் பொருந்தும்.

**(5) முதியோர் உதவித் தொகைத் (கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்றப் பெண்கள்) திட்டம்:**

25-4-1986 முதல் 30 வயது நிரம்பிய, கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்றப் பெண்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கணவனுடன் ஐந்து ஆண்டுகளுக்குக் குறையாமல் எவ்விதத் தொடர்பும் இல்லாமலும் அல்லது நீதிமன்றத்திலிருந்து விவாகரத்துச் சான்றிதழ் பெற்றவரும் இத்திட்டத்தின்கீழ் உதவித் தொகை பெறத் தகுதி உடையவர் ஆவர். கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்றப் பெண்களுக்கு 18 வயது நிரம்பிய வாரிசு இருந்தாலும் இத்திட்டத்தின்கீழ் உதவித் தொகை வழங்க 2-6-1998 இல் ஆணையிடப்பட்டுள்ளது. கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்றப் பெண்களுக்கு அளிக்கும் உதவித் தொகை குறித்து சம்பந்தப்பட்ட நபர்கள் குறித்த அறிக்கையை கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர்களிடமிருந்து பெறுவதற்குப் பதிலாக உள்ளூர் கிராமப் பஞ்சாயத்து மற்றும் நகரப் பஞ்சாயத்துத் தீர்மான நகலைச் சமர்ப்பிக்கும்படி 27-4-1998 இல் ஆணையிடப்பட்டுள்ளது.

## 5.3 உதவித் தொகை வழங்கும் முறை

மேற்கண்ட திட்டத்தின்கீழ் உதவித் தொகை ஒப்பளிப்பு அதிகாரம் ஆரம்பத்தில் கோட்டாட்சியருக்கு அளிக்கப்பட்டது. பின்னர் ஒப்பளிக்கும் அதிகாரம் நலிந்தோர் நலம் வட்டாட்சியர்களுக்கு 1989 முதல் வழங்கப்பட்டுள்ளது. இதனால் உதவித் தொகை வழங்குவதில் ஏற்படும் கால தாமதம் தவிர்க்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் உதவித் தொகை பெறுபவர்களின் முகவரிக்கு சிறப்பு வட்டாட்சியரால் அனுப்பப்படுகிறது. இதற்கான பண அஞ்சல் கட்டணச் செலவையும் மாநில அரசே ஏற்றுக்கொள்கிறது. முதியோர் உதவித் தொகை பட்டியல்கள் எழுதி வழங்கும் முறைகளில் உள்ள பணிச் சுமையைக் குறைப்பதுடன் அதில் ஏற்படும் தவறுகளைத் தவிர்க்கும் நோக்கத்துடன் அரசுக் கணிப்பொறி மூலம் பண அஞ்சல் படிவத்தைத் தயாரித்து தொகையினை விரைந்து அனுப்ப அரசு அனுமதி வழங்கியுள்ளது.

## 5.4 முதியோர் உதவித் தொகை பெறுபவர்களுக்கு வழங்கப்படும் இதர உதவிகள்

### (1) இலவச வேட்டி/சேலை வழங்குதல்

முதியோர் உதவித் தொகை பெறும் பயனாளிகளுக்கு ஆண்டுக்கு இருமுறை பொங்கல் மற்றும் சுதந்திர நாளன்று ஆண்களில் நபர் ஒன்றுக்கு ஒரு கைத்தறி வேட்டியும், பெண்களில் நபர் ஒன்றுக்கு ஒரு கைத்தறிச் சேலையும் 1979 முதல் இலவசமாக வழங்கப்பட்டு வந்தது. 1992-93 ஆம் ஆண்டிலிருந்து சுதந்திர நாளுக்குப் பதிலாக தீபாவளி மற்றும் பொங்கலுக்கு இலவச வேட்டி/சேலை தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

### (2) முதியோர் உதவித் தொகை பெறுவோருக்கு இலவச சத்துணவு மற்றும் அரிசி வழங்குதல்

முதியோர் உதவித் தொகை பெறுபவர்களுக்கும் நாள்தோறும் மதிய சத்துணவு இலவசமாக சத்துணவுக் கூடங்களில் வழங்கப்படுகிறது.



(அ) சத்துணவுக் கூடங்களில் மதிய சத்துணவு சாப்பிடாத முதியோர் உதவித் தொகை பெறுவோருக்கு வாரந்தோறும் நபருக்கு ஒரு கிலோ அரிசி இலவசமாக வழங்கப்பட்டு வந்தது. தற்பொழுது மாதம் ஒருமுறை 4 கிலோ அரிசி மொத்தமாக வழங்க 26-9-1997-இல் ஆணையிடப்பட்டுள்ளது.

(ஆ) சத்துணவுக் கூடங்களில் மதிய சத்துணவு சாப்பிடும் முதியோர் உதவித் தொகை பெறும் நபர்களுக்கு வாரந்தோறும் நபருக்கு அரை கிலோ அரிசி இலவசமாக வழங்கப்பட்டு வந்தது. தற்பொழுது மாதம் ஒருமுறை 2 கிலோ அரிசி மொத்தமாக வழங்க 26-9-1997-இல் ஆணையிடப்பட்டுள்ளது.

முதியோர் உதவித் தொகை பெறுவோர் எண்ணிக்கை

| | 1997-98 | 1998-99 |
|---|---|---|
| 1) முதியோர் உதவித் தொகைத் (பொது) திட்டம் | 3,36,207 | 3,49,796 |
| 2) முதியோர் உதவித் தொகைத் (ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர்) திட்டம் | 34,554 | 39,015 |
| 3) முதியோர் உதவித் தொகைத் (ஆதரவற்ற விதவை) திட்டம் | 2,81,073 | 3,29,247 |
| 4) முதியோர் உதவித் தொகைத் (ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள்) திட்டம் | 70,001 | 73,946 |
| 5) முதியோர் உதவித் தொகைத் (கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்றப் பெண்கள்) திட்டம் | 50,896 | 51,291 |
| மொத்தம் .. | **7,72,731** | **8,43,295** |

## தொகுப்புரை

மகளிர் மேம்பாட்டிற்கும் மழலையர் வளர்ச்சிக்கும் ஊனமுற்றோர் உயர்வுக்கும் நலிந்தோர் நலனுக்காகவும் பாடுபடும் இத்துறை பல்வேறு சிறப்புத் திட்டங்களை நிறைவேற்றுவதோடு, அத்திட்டங்களின் பயன்கள் உரியவர்களை உரிய காலத்தில் அடைவதற்குத் தேவையான எல்லா முயற்சிகளையும் எடுக்கும் என்று இம்மாமன்றத்தில் உறுதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1999 மே 3

# இணைப்பு

## 1999-2000 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டப் பணிகளின் விவரப் பட்டியல்

| வ. எண் | திட்டப் பணிகளின் விவரம் | நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| | **ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறை** | |
| 1. | மாவட்ட மறுவாழ்வு மையங்கள் பதினான்கிற்கும், மதுரையில் உள்ள கடுமையான ஊனமுற்றோருக்கான பள்ளியிலும் சாய்வுப் பாதை வசதி செய்து கொடுத்தல். | 0.90 |
| 2. | ஊனமுற்றவர்களுக்குச் சான்றிதழ் மற்றும் ஆலோசனை வழங்கும் மருத்துவர்களுக்கு மதிப்பூதியம் வழங்குதல். | 5.00 |
| 3. | 8 அரசினர் சிறப்புப் பள்ளிகளில் சமையல் எரிவாயு வசதிகள் செய்து கொடுத்தல். | 4.00 |
| 4. | வாய்பேசாத, காது கேளாதவர்களுக்குக் கணினி ஒளி அச்சுத் தொழில் பயிற்சி அளிப்பதற்காக அரசு சாரா அமைப்புகளுக்கு மானியம் அளித்தல். | 2.00 |
| 5. | பூவிருந்தவல்லி பார்வையற்றோர் பள்ளியில் இசைப் பயிற்சி ஆசிரியர் பதவி ஒன்றை ஏற்படுத்துதல். | 0.42 |
| 6. | தாம்பரம் அரசு காது கேளாதோர் பள்ளியைச் சேர்ந்த பாலர் பள்ளிக் குழந்தைகளுக்குத் தங்கும் வசதி ஏற்படுத்துதல். | 0.33 |
| 7. | ஊனமுற்றோருக்குச் சுய வேலைவாய்ப்பிற்காகப் பெட்டிக் கடைகள் வழங்குதல். | 2.50 |
| 8. | ஊனமுற்றோர் மறுவாழ்வு இயக்ககத்தில் நிகரி வசதியும் மின்னஞ்சல் தொலைபேசி இணைவக செதியும் செய்து கொடுத்தல். | 2.36 |
| 9. | ஊனமுற்ற 400 பேர்களுக்கு இலவசமாக மிதிவண்டியும் செயற்கைக் கால்/கால் ஊன்றுக் கட்டைகள் வழங்குதல். | 11.40 |
| | **சமூக நலத் துறை :—** | |
| 10. | கடலூர் மற்றும் திருநெல்வேலி சேவை இல்லங்களில் கணினிப் பயிற்சி தொடங்குதல். | 17.90 |



1999 மே 3]

| வ. எண் | திட்டப் பணிகளின் விவரம் | நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| | சமூக நலத் துறை—தொடர்ச்சி | |
| 11. | குழந்தைகளைத் தத்து எடுத்தலை ஊக்குவித்தல் | 5.00 |
| 12. | மகளிருக்கான சட்டம் குறித்த கல்வி அறிவு மற்றும் விழிப்புணர்வுப் பயிற்சித் திட்டம் | 1.50 |
| 13. | ஆண் பெண் பண்பு உணர் திட்டம் | 3.45 |
| 14. | மாநில மகளிர் ஆணையத்தின் மூலம் கருத்தரங்கு மற்றும் முகாம்கள் நடத்துதல் | 1.00 |
| 15. | அரசு அனாதை இல்லங்களில் தங்கியிருப்போர்க்கு யோகா மற்றும் தற்காப்புக் கலை வகுப்புகளை நடத்துதல். | 1.50 |
| 16. | அனாதைக் குழந்தைகளைச் சுற்றுலா அழைத்துச் செல்லுதல் | 4.20 |
| 17. | சமூக நல இயக்ககத்தில் உள்ள கணினிகளின் திறன்பாட்டினை மேம்படுத்துதல். | 2.00 |
| 18. | பத்து மாவட்டச் சமூக நல அலுவலகங்களுக்குக் கணினிகளுக்கு வகை செய்தல் | 12.50 |
| 19. | சேவை இல்லங்களுக்குத் தையல் இயந்திரங்களை வாங்கி வழங்குதல். | 1.04 |
| 20. | சேவை இல்லங்களுக்குத் தட்டச்சுப் பொறிகள் வாங்கி வழங்குதல். | 3.22 |
| 21. | ஐந்து அரசினர் அனாதை இல்லங்களுக்கு அறைகலன்கள் வழங்குதல். | 3.50 |
| 22. | சேவை இல்லங்களில் இருப்பவர்களுக்கு யோகா மற்றும் தியானம் பற்றிய வகுப்புகள் நடத்துதல். | 0.80 |
| 23. | ஐந்து துணி வெட்டு மையங்களுக்குத் துணி வெட்டு இயந்திரங்கள் வாங்குதல். | 3.00 |
| 24. | சத்துணவு மையங்களுக்கு எடை போடும் இயந்திரங்கள் வாங்கி வழங்குதல். | 1.00 |
| 25. | அரசினர் அனாதை இல்லங்களில் உள்ள குழந்தைகளுக்கு இலவசமாக காலணிகள் வழங்குதல். | 2.75 |

| வ. எண் | திட்டப் பணிகளின் விவரம் | நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| | **சமூக பாதுகாப்புத் துறை :—** | |
| 26. | அரசு சாரா அமைப்பின்கீழ் இயங்கும் 13 இளைஞர் இல்ல இல்லவாசிகளுக்குப் பராமரிப்புச் செலவு உயர்த்தி வழங்குதல். | 20.00 |
| 27. | பாதிக்கப்பட்ட நிலையில் உள்ள சிறுமிகளுக்கு அரசு சாரா அமைப்புகளின் கட்டுப்பாட்டின்கீழ் இடைநிலை இல்லம் தொடங்குதல். | 2.33 |
| 28. | சமூகப் பாதுகாப்பு இயக்ககத்தில் உள்ள கணினி அறைக்குக் குளிர்ப்பதன வசதி செய்து கொடுத்தல். | 2.20 |
| 29. | இளைஞர் சிறப்பு இல்லங்களில் இருந்து வீடேகிச் செல்லும் இல்லவாசிகளுக்குத் தொழிற் பயிற்சி மறுவாழ்வு இல்லத்தைத் தொடங்குதல். | 9.58 |
| 30. | தவறிழைக்கும் இளங்குற்றவாளிகளைக் கட்டுப்படுத்தத் தண்டனை அளிக்கும்முன் நல்வழிப்படுத்தும் திட்டம். | 1.00 |
| 31. | சென்னை இராயபுரத்தில் உள்ள அரசினர் இளைஞர் இல்லத்தில் உள்ள பணியாளர்கள் குடியிருப்பில் சிறப்புப் பழுதுபார்ப்புப் பணிகள் செய்தல். | 2.50 |
| | **தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம்** | |
| 32. | வாழ்க்கைத் தொழிற் பயிற்சித் திட்டங்கள். | 7.50 |
| 33. | தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம். | 4.00 |
| 34. | மகளிர் மனமகிழ் மையங்கள் | 4.75 |

221807

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.